A-PDF Merger DEMO : Purchase from www.A-PDF.com to remove the watermark




தந்தையின் அறையை நோக்கிச் சென்ற சுசித்ராவின் ரோஜா வண்ண உதடுகளில் இளம் புன்னகையொன்று தோன்றுவதும் மறைவதுமாகக் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடிக் கொண்டிருந்தது!

புன்னகையின் தோற்றத்துக்கும் மறைதலுக்கும் பொருத்தமாக, அவளது கண்களிலும், ஒளி பளிச்சிட்டு, மங்கி என்று வேறுபட்ட உணர்ச்சிகளைக் காட்டிக் கொண்டிருந்தது!

விஷயம் என்னவென்றால், அவளுக்கே குருப்ரசாத்தின் பேச்சில் முழு ஒப்புதல்... நூற்றுக்கு நூறு ஒத்த மனம் இருக்கிறதா என்று சந்தேகமாக இருந்தது!

ஆனால், சந்தேகம் இப்போதுதான்!

சற்று முன்வரை... கேட் அருகே காரை நிறுத்தித் திரும்பி, வெற்றிக்கு அறிகுறியாகக் கட்டை விரல் உயர்த்திக் காட்டி விடைபெற்றுக் கண்ணுக்கு மறையும் வரை, அவன் சொன்னது, அவளுக்கும்... சரியாகத்தான் தோன்றியது! கிட்டத்தட்ட!

இந்த வயதில், ஓர் இளைஞன் பக்கத்தில் இருந்து கொண்டு, உருகி உருகிப் பேசினால், அப்படித்தானோ என்று நம்பத் தோன்றி விடுமோ என்று இப்போது சந்தேகம் வந்தது!

ஏனெனில், பெருமளவு சுதந்திரம் தந்தே வளர்த்திருந்தபோதும், எப்படியோ இது போன்ற அனுபவங்கள் அந்த வீட்டின் இரு பெண்களுக்கும் நேர்ந்தது இல்லை!

எனவே, இன்னும் சில வினாடிகளில் தந்தையிடம் சொல்ல வேண்டும் என்று நினைக்கையில், சுசித்ராவின் மனம் சற்றுக் குழம்பியது!

சற்றென்ன? நிறையவே!

முதலில் இதை என்னவென்று சொல்வது?

படிப்பு முடிந்துவிட்டது, கல்யாணம் செய்து வையுங்கள் என்றா? அல்லது குரு சொன்னது போல, அவன் மேல் ஆசை., அவனோடு சந்தோஷமாக வாழ விரும்புகிறேன் என்றா?

என்னவோ, கொஞ்சம் அலைகிற மாதிரி, அவளுக்கு அந்த வார்த்தை அமைப்புக் கொஞ்சமும் பிடிக்கவில்லை! அத்தோடு, அது முழு நிஜமும் இல்லை!

எப்போதுமே வெளிப்படையாகப் பேசுகிறவள் என்பதால், குருப்ரசாத்திடமே, அவள் அதைச் சொல்லவும் செய்தாள்! ஆனால், அவனுக்கு, அவளிடம் இருக்கும் காதல், அதை ஈடு செய்துவிடும் என்றான் அவன்!

ஒரு வகையில் அது சரிதானோ என்றுதான், சுசித்ராவுக்கும் தோன்றியது! கணவனோ, மனைவியோ அவரை விரும்புகிற துணை கிடைப்பதுதான் அதிர்ஷ்டம் என்பார்கள்! குரு அவளை மிகமிக விரும்புவது என்னவோ சர்வ நிச்சயம்தான்! பின் என்ன?

இது போன்ற விஷயங்களை, மகள்கள் அம்மாவிடம் சொல்வதுதான் இயல்பாக இருக்கும்! இங்கேயும் சொல்லலாம்! அன்னையிடம் சொல்லக் கூடாது என்றும் இல்லை!

இப்படிக் கல்யாணம் என்று நிச்சயமாகச் சொல்லிவிட்டால், அதைத் திட்டமிட்டு, வெகு சிறப்பாகத் தாயார் நடத்திவிடுவாள்!

ஆனால், இப்படி, இவனைத் திருமணம் செய்யலாமா என்று கேட்பதற்கு, அன்னை சரியான ஆள் கிடையாது!

ஆனால், எதிலும் தந்தையின் கணிப்பு சரியாக இருக்கும்!

இப்படி, இப்படிச் செய்தால், இப்படி, இப்படித்தான் நடக்கும் என்று கணக்கிட்டு அவர் செய்த எதுவும் சோடை போனதில்லை! சாதாரண நிலையில் இருந்து, நகரின் பெரிய பணக்காரர்களுள் ஒருவராக அவர் ஆனது அப்படித்தான்!

எப்படியோ, அவருடன் பேசும்போது, மனதில் இருக்கும் எல்லாவற்றையும் கொட்டா விட்டாலும்கூட, உள்ளிருக்கும் குழப்பம் தானாக விலகி, மனம் தெளிவடைந்து விடும்!

பெரிய குழப்பமும் இல்லைதான்!

குரு சொல்வது போல, இருபத்தோரு வயது முடிந்து, மேலும் ஓர் ஆண்டு ஆகிவிட்டது எனும்போது, சட்டப் படியும், வைத்திய சாஸ்திரம் கூறும் ஆரோக்கிய முறைப்படியும்கூட, சுசித்ரா திருமணத்துக்குத் தகுதியானவள்தான்!

படிப்பும் ஒரு நிலையை அடைந்தாயிற்று! மேலே படிக்கக் கூடாது என்பதில்லை! ஆனால், இப்போதும், அவளது கல்வி நிலையைக் குறைவாகச் சொல்ல முடியாது!

திருமணம் செய்து கொண்டு, சந்தோ...ஷமாக இருக்கலாம்தான்!

ஆனால், இப்போதும், அவள் சந்தோ...ஷமாகத்தானே இருக்கிறாள்? பிறகெதற்கு, சந்தோஷமாக இருப்பதற்காகத் தனியாக ஒரு திருமணம்?

ஆனால், எப்படியும் ஒருநாள் கல்யாணம் செய்து கொண்டு, அம்மாவைப் போல அவளும் ஒரு குடும்பத் தலைவியாக வாழத்தான் வேண்டும்! இப்போது அவள் மேல் உயிரை வைத்திருக்கும் ஒருவனை மணந்துகொண்டு, அதைச் செய்தால் என்ன?

ஆனாலும், அப்படி என்ன அவசரம்?

குழப்பம் இல்லாவிட்டால், இந்தக் கேள்வியே எப்படித் தோன்றும் என்று, இப்போது தோன்றியது.

இதற்குப் பதில் அறியாத நிலையில்தான், சுசித்ரா தந்தையின் முன் சென்று அமர்ந்தது!

அவளை ஒரு தரம் கூர்ந்து நோக்கிவிட்டு, "வாழ்த்துக்கள், சித்து! நல்ல ராங்க் வாங்கியிருக்கிறாய் போல!" என்றார் சேதுமாதவன்.

என்ன ராங்க்? ஓ, படிப்பு!

அதற்காக வாழ்த்துச் சொல்லி விட்டுத்தான், படிப்பு முடிந்து விட்டதால், திருமணம் செய்து கொள்ளலாம் என்று குருப்ரசாத் அவளிடம் கேட்டது!

யோசனையில் ஆழ்ந்த மகளை மீண்டும் ஒருதரம் ஆழப் பார்த்துவிட்டு, "மேலே என்ன செய்யப் போகிறாய்? அதிலேயே மேல் படிப்பா? ஆனால் அதைவிட..." என்று சேதுமாதவன் நிறுத்தவும், சுசித்ரா ஆவலும் படபடப்புமாக அவரைப் பார்த்தாள்!

அப்பாவும், திருமணம் செய்து கொள் எனப் போகிறாரா? அப்படியானால், அவள் கேளாமலே, பிரச்சினை தீர்ந்துவிடும்!

ஏனெனில், குருப்ரசாத்தை வேண்டாம் என்று மறுப்பதற்குக் காரணம் எதுவுமில்லை!

படிப்பு இருக்கிறது., பார்வைக்கு நல்ல தோற்றம் இருக்கிறது., அடிக்கடி வந்து போய், குடும்பத்தோடு நன்றாகவே பழகிவிட்டவன்! அவனுடைய குடும்பப் பின்னணியிலும் குறைவில்லை! மத்திய அரசாங்கத்தில் பெரிய வேலை பார்த்து ஓய்வு பெற்றவர், அவனுடைய தந்தை!

பணம்தான் கொஞ்சம்... அதுவும் கொஞ்சமேதான் குறைவு என்று தந்தைக்குத் தோன்றக் கூடும்! கொஞ்சம் பழசாகத் தோன்றினாலும், கார் வரை வைத்திருக்கிறானே!

ஆனால், சேதுமாதவன் எப்போதுமே, ஒரு மனிதனை மதிப்பதற்குப் பணத்தை அளவுகோலாகக் கருதியதில்லை! அவரே, தன்னுழைப்பால் உயர்ந்தவர்தானே?

அத்தோடு, அவர் சேர்த்து வைத்திருப்பது, சேர்த்துக் கொண்டிருப்பது எல்லாமே, அவளுக்கு மட்டும்தானே? இதை வளர்த்தால் போதாதா?

அவள் ஆவலாகப் பார்க்கையில், "படித்த படிப்பை வீணாக்காமல், ஏதாவது வேலை பார்த்தால் என்ன?" என்று கேட்டார் பெற்றவர்!

விழிகள் வட்டமாய் விரிய, ஆச்சரியமே உருவாகிப் போனாள் சுசித்ரா! ஏமாற்றத்தை விட, அவளுக்கு ஆச்சரியம்தான் அதிகமாக உண்டாயிற்று! "வே...வேலையா? நா..ன்..நானாப்பா?" என்று வியப்புடன் வினவினாள்.

"ம்! உன்னைத்தான் சொன்னேன்! ஆனால், அதில், இப்படிக் கண்ணை விரிக்கிற அளவுக்கு உலக அதிசயம் என்னடா, இருக்கிறது? நான் ஒன்றும் உன்னை, நிலவைப் பிடித்து வரச் சொல்லவில்லையே!" என்று கேட்டார் அவர்!

"அ...அதில்லைப்பா. ஆனால், எ...எதற்காக என்று யோசித்தேன்! இப்போது நான் வேலை பார்க்க வேண்டும் என்று, என்ன அவசியம்ப்பா?",என்று மெள்ள சுதாரித்துக் கொண்டு, தந்தையிடம் காரணம் கேட்டாள் பெண்.

சேதுமாதவனின் முகத்தில் இருந்த மலர்ச்சி லேசாக மங்கியது போல ஒரு பிரமை, மகளுக்கு உண்டாயிற்று!

ஆனால், அது பிரமைதானோ என்று தோன்றுமாறு உடனே முறுவலித்து, "எந்த ஒரு செயலையும் பயனற்றுச் செய்யலாமா, சுசி? மூன்றும் இரண்டுமாக ஐந்தாண்டுகள் படித்திருக்கிறாய்! உழைத்துப் படித்தாய் என்று எனக்குத் தெரியும்! வெறும் ராங்க் வாங்குவதற்கு மட்டுமா, அந்த உழைப்பும், படிப்பும்? நீ அந்த மாதிரி வெளிப் பகட்டு காட்டுகிறவள் அல்லவே! படித்த படிப்பு..." என்ற அவர் பேச்சில் மகள் குறுக்கிட்டு, "செய்வனத் திருந்தச் செய்ய வேண்டும் என்று நீங்கள்தான், எனக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறீர்கள்? அப்புறம் உழைத்துப் படிக்காமல் விட முடியுமா? ஆனால், நான் வேலை பார்த்துப் பணம் சம்பாதித்துதான் ஆக வேண்டும் என்று என்ன அவசியம், அப்பா? இதற்கு நீங்கள் இன்னும் பதில் சொல்லவில்லையே!"

"சொல்ல விட்டால்தானே?" என்று தந்தை வைத்த சிறு குட்டு, அவரது முறுவலில் மறைந்தது!



மிரண்ட சின்னப் பிள்ளை போன்ற பாவனையில் சுசித்ரா கையால் வாயைப் பொத்திக் கண்ணை உருட்டவும், சன்னமாய்ச் சிரித்துவிட்டு, அவர் தொடர்ந்தார்!

"வேலை பார்ப்பது, பணம் சம்பாதிப்பதற்காக மட்டும்தான் என்று, உன்னிடம் யார் சொன்னது? பலருடன் பழகும் வாய்ப்புக் கிடைப்பது எவ்வளவு பெரிய சொத்து தெரியுமா? ஓர் அலுவலகத்தில் பணிபுரியும் பத்துப் பேரும் பத்து விதமாக இருப்பார்கள்! உனக்கு மேல் அதிகாரியாக இருப்பவர் இன்னொரு விதமாக இருப்பார்! இவர்களை எல்லாம் சமாளித்து, அங்கே நல்ல பேர் எடுத்துவிட்டால்... நல்ல பேரே எடுக்கா விட்டாலும்கூட, நாளைக்குத் திருமணமாகிப் போகிற இடத்திலும் அங்கிருப்பவர்களைப் புரிந்துகொண்டு, பிரச்சினையற்று, நல்லபடியாக வாழ, ஒரு நல்ல முன் அனுபவம் கிடைக்கும்! ஆனால் அதற்கெல்லாம் பொறுமை வேண்டும்..." என்றவர் தலை சரித்து மகளைப் பார்த்துவிட்டு, "ஊகூம்., அது சந்தேகம்தான்!" என்றார்.

"எது சந்தேகம்?"

"வெளி அலுவலகத்தில், மற்றவர்களைச் சமாளித்து நீ பணி புரிவது! உன்னால் முடியாது என்று, இரண்டே நாட்களில், வேலையை விட்டுவிட்டு வெளியேறி விடுவாய்!" என்று சவால் குரலில் கூறினார் பெற்றவர்!

"நான் ஒன்றும்..." என்று தொடங்கியவள் சட்டெனப் பேச்சை நிறுத்தித் தந்தையைக் கூர்ந்து பார்த்தாள்.!

யோசனையோடு, "என்னப்பா, நான் வேலை பார்ப்பது, மற்ற எதையும் விட, ரொம்ப முக்கியம் மாதிரிப் பேசுகிறீர்கள்?" என்று வினவினாள்.

"மற்ற எதையும் என்றால்? எதெதைக் குறிப்பிடுகிறாய்?"

பொதுவாகத் தந்தையிடம் எதையும் மறைத்து, சுசித்ராவுக்குப் பழக்கமில்லை.

எனவே, லேசாக முகம் சிவந்தபோதும், "இப்போது திருமணம் வேண்டாம் என்று நினைக்கிறீர்களா, அப்பா?" என்று அவரிடம் நேரடியாகக் கேட்டாள் அவள்.

கவனத்துடன் வாத்தைகளைப் பயன்படுத்தி, "மனித சுபாவம் பற்றி இன்னும் கொஞ்சம் அறிந்து கொண்டால், குடும்ப வாழ்வு சிறப்பாக அமையும் என்பது என் கருத்து!" என்றார் சேது.

அவரது கண்களை நேராகப் பார்த்து, "குருப்ரசாத்தை நான் இன்னமும் சரியாக அறிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறீர்களா, அப்பா? அல்லது, அவர் நல்லவரில்லை என்கிறீர்களா?" என்று, மீண்டும் வெளிப்படையாகவே கேட்டாள் பெண்.

குருப்ரசாத்தைப் பற்றிக் குறைவாக எதைச் சொன்னாலும், காரண காரியங்களோடு அதை எதிர்த்து வாதாட அவர் தயாராக இருப்பது புரிந்து, அவர் அவளது கேள்வியையே ஆட்சேபித்தார்!

"என்னம்மா நீ? அந்தப் பையனை நான் பார்த்திருப்பதே, மாலைச்

சிற்றுண்டிக்கு நான் எப்போதாவது வீட்டுக்கு வந்து, அதே சமயம் அவனும் வந்தால்தான்! அந்த மாதிரி அபூர்வமாக, அதிலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமாகப் பார்த்துப் பழகுவதை வைத்து ஒருவரைப் பற்றி எப்படி அபிப்பிராயம் சொல்ல முடியும்? அவன் வீடு, குடும்பம், அவனுக்கு மேலே, கீழே உள்ள மற்றவரிடம் அவன் பழகும் முறை எதுவும் தெரியாமல் அவன் நல்லவன், கெட்டவன் என்று எப்படிச் சொல்வது?" என்று வாழைப்பழத்தில் ஊசியை நுழைத்தார் பெற்றவர்.

பொதுப்படையாகப் பேசுவது போலக் கூறினாலும், மகளின் திகைப்பைத் தந்தையின் கூரிய கண்கள் கண்டுகொண்டன! ஏனெனில், அவளுமே, குருப்ரசாத்தைப் பார்ப்பதும், பழகுவதும் இதே வேளைகளில் மட்டும்தானே?

அத்தோடு அவர் குறிப்பிட்டவற்றுள் எதைப் பற்றியும் சுசித்ராவும் சரிவர அறிந்திருக்கவில்லை என்பதும் நன்றாகவே தெரிந்தது! ஆனால், ஏதேனும் குறைபாடுகள் இருப்பதாக அவர் குறிப்பிட்டாலும், அதை ஒத்துக் கொள்ளாமல் அவனுக்காக அவள் வக்காலத்து வாங்கத் தயாராக இருந்தாள்!

காரணம், அந்தக் குருப்ரசாத்திடம் இப்போது அவளுக்கு இருக்கும் நம்பிக்கை! மயக்கம் கூடவே மனித இயல்பு!

அதை விடப் பாதகம் என்னவென்றால், அவனுக்குச் சாதகமாக அவள் பேசக் கூடிய வார்த்தைகளே, அவள் மனதில் மெய் போல அழுத்தமாகப் பதியவும் கூடும்! அதுவும் மனித இயல்புதான்!

எனவேதான் அவனைப் பற்றித் தனக்கு எதுவுமே தெரியாது என்று முடித்துவிட்டார் தந்தை! ஆனால் தன் கருத்தை வேறு விதமாக, "நீ வேலைக்குப் போவது, குருப்ரசாத்துக்குப் பிடிக்காமல் போகலாம்!" என்று கூறினார்.

"ஏனோ?" என்று ஆத்திரத்துடன் கேட்டவளுக்கு, அவரது குறிப்பு தானாகவே புரியலாயிற்று!

அவருடைய மகள் முட்டாளாக இருக்க முடியுமா?

இந்த மூன்று மாத இடைவெளியில், சுசியின் மனம் மாறிவிட்டால் என்ன செய்வது என்று குரு யோசிப்பானாம்!

அதெப்படி யோசிப்பான்?... ஒரு வேளை யோசிப்பானோ?

ஆனால், அவளிடம் அவ்வளவு நம்பிக்கை இல்லாமல் அவன் எப்படி மணக்கப் கேட்பான்? திருமணம் என்பது, எதிர்காலத்தையே ஒப்படைப்பது அல்லவா?

அதைச் சொல்லத் தொடங்குமுன், "இன்றைய தலைமுறைக்குப் பொறுமை குறைவாம்! நான் சொல்லவில்லை! ஆராய்ச்சியில் கண்டுபிடித்து இருக்கிறார்களாம்!" என்று வேறு சொன்னார் தந்தை.

அவரது குறிப்பைப் புரிந்துகொண்டு, "நான் எவ்வளவு நாள் வேலை பார்த்தால், எங்களுக்குப் பொறுமை உண்டு என்று நீங்கள் ஒப்புவீர்கள், அப்பா?" என்று கேட்ட மகளை, யோசனையோடு நோக்கினார்.



சேது மாதவனின் அலுவல் அறை வாயிற் புறமாக இருந்தது! சில சமயங்களில், அவர் இரவிலும் தொழிற்சாலைக்குச் செல்ல நேரும்! அப்போது, வீட்டினரின் தூக்கம் கலையாமல், சத்தமின்றி இங்கே வந்து, தேவைப்பட்ட ஃபைல்களை எடுத்துக் கொண்டு, அப்படியே கிளம்பிப் போய்விடுவார்! ஆனால், இன்று அதுவே வசதியாகி, குருப்ரசாதின் கட்டை விரல் உயர்த்துதலை ஜன்னல் வழியே அவர் காண நேர்ந்தது!

வீட்டுக்குள்ளேயே யாரை ஜெயிக்க இந்தச் சைகை என்று அவர் யோசிக்கயிலேயே, ஒரு பத்து நிமிஷம் தனியாகப் பேச முடியுமா என்று மகள் கேட்கவும், சைகை ரகசியம் புரிபட்டுப் போயிற்று!

ஆனால், விஷயம் இவ்வளவு தூரத்துக்கு வந்திருப்பது அவருக்கு அதிர்ச்சிதான்!

குருப்ரசாத்தைப் பற்றித் தனிப்பட அவருக்கு வெறுப்பு ஏதும் கிடையாது!

ஆனால், அவருடைய ஆசை மகளுக்கு அவன் ஏற்ற கணவனா என்றால், அவருக்கு அதில் ஐயம் இருந்தது! அவள், அவருடைய ஒரே வாரிசாயிற்றே?

அவன் காட்டிக் கொண்ட அதிகப்படி நல்ல தன்மை அவரை உறுத்தியது! அவன் நல்லவன் என்று அடுத்தவர் அல்லவா சொல்ல வேண்டும்? அவனே சொல்லிக் கொண்டால் எப்படி?

அவரது சந்தேகம் தவறாகவும் இருக்கலாம்! கூடாது என்றில்லை!

தொழிலில் பெரு வெற்றி பெற்றதினாலேயே தான் முற்றும் உணர்ந்தவர் என்கிற திமிர் சேது மாதவனுக்குக் கிடையாது! ஆனால், அந்தப் பையனைப் பற்றி நன்கு அறியுமுன், ஒப்புதலாக எந்தவிதமான வாக்குறுதியையும் மகளிடம் அளிக்க அவர் தயாரில்லை!

அதை அளித்து, அவள் மனதில் அந்த எண்ணத்தை உறுதிப்படுத்தவும் அவருக்கு விருப்பமில்லை. அதே சமயம், நேரடியான மறுப்பும் சரியில்லை! அது எதிர்ப்புணர்வைத் தூண்டி விடும்! சுசித்ரா பிடிவாதக்காரி!

மகளின் மனம் பற்றியுமே, அவருக்கு நிச்சயம் இருக்கவில்லை.

அப்படி அவள் மனம் முழுமையாக ஈடுபட்டிருந்தால், அவருக்கு ஒரேயடியாகத் தெரியாமல் இருந்திராது! திருமணம் பற்றிப் பேசவே வந்திருந்த போதும், மகள் காதல் மயக்கத்தில் இருப்பதாக அவர் எண்ணவில்லை!

ஆவலும் பயமுமாகத் தவிப்பதற்குப் பதிலாக, அவள் முகத்தில் யோசனை தெரிந்ததே!

அந்தப் பையன், அவளை அழகாக வற்புறுத்தியிருக்கக்கூடும்! இந்த வயதில், பார்க்க நன்றாக இருக்கும் ஒரு வாலிபன், உனக்காக உயிரை விடுவேன் என்றால், ரொம்பவே நம்பத் தோன்றும்தான்!

எனவே, தெளிவுபடுத்திக்கொள்ளும அவகாசம் அவருக்கு மட்டுமல்ல, மகளுக்குமே தேவை என்று அவருக்கு நிச்சயப்பட்டு விடவேதான், சேதுமாதவன் பேச்சை இப்படித் திசை திருப்பியிருந்தார்!

நல்லகாலமாக, சுசித்ராவும் புத்தியோடு ஒத்து வந்தாள்!

தந்தையின் தயக்கத்தை, முந்திய தலைமுறையின் மூடப் பிடிவாதம் என்று கருதாமல், தனக்காகவே என்று ஏற்க முன்வந்தாளே. அதுவே இந்தக் காலத்தில் பெரிய விஷயம்தான்!

ஆனால், அவள் ஒரு போதும் முட்டாளல்ல! கூடவே, சுசி ஒன்றை இப்படித்தான் என்று எண்ணிவிட்டால், அவளை மாற்றுவது மகாக் கடினம்!

அப்படிப் பார்த்தாலும், அவள் மனதில் இன்னமும் முழு உறுதி ஏற்படவில்லை என்பது நிச்சயம்! ஆனால், ஓரளவுக்கு அவன் பக்கம் சாய்வு இருக்கிறது! தப்புத் தவறுதலாக வார்த்தைகளை விட்டு, அதைத் தூண்டி விட்டுவிடக் கூடாது!

"என்னப்பா, பதிலையே காணோம்? நான் குருவை மறப்பதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்று யோசனையா?"

"நீ நியாயமாகப் பேசுகிறவள் என்று நினைத்தேனே! நான் உன் வேலையைப் பற்றியல்லவா யோசித்துக் கொண்டிருந்தேன்!"

"ஓ. சாரி, சாரி, சாரிப்பா! எல்லா சராசரி அப்பாவையும் போல உங்களையும் ஒரு வினாடி நினைத்துப் பேசிவிட்டேன்! சாரிப்பா!" என்று, அவரைத் தவறாக நினைத்ததற்கு வருத்தம் தெரிவித்தாள் மகள். "எனக்கு வேலை கிடைப்பது கஷ்டமாப்பா? ஆனால் ஒன்று! நம் தொழிற்சாலை, அலுவலகத்தில் என்றால் வேண்டாம்ப்பா! நீங்கள் சொன்ன மாதிரியான அனுபவம், அங்கே கிடைப்பது கடினம்!" என்று, மறுப்பைத் தொடர்ந்து காரணமும் சொன்னாள்.

சேதுமாதவனுக்கு உள்ளூரத் திருப்தி உண்டாயிற்று! மகள் வேலை பார்ப்பதைத் தீவிரமாக எண்ணத் தொடங்கிவிட்டாள்! இனி மாறமாட்டாள்!

அவளை ஒட்டியே, "ஆமாம். முதலாளி மகள் என்று மரியாதை கொடுக்கத் தொடங்கி விடுவார்கள். நீ வேலை பார்ப்பதின் அர்த்தமே வீணாகிவிடும்! ஆனால், எங்கே வேலை செய்தாலுமே, உன் பின்னே இவ்வளவு பணம் இருப்பது தெரிவது சரியில்லைதான். நா..ன்..என் நண்பரிடம் பேசிவிட்டுச் சொல்கிறேன், சுசி! நம்மைப் போலவே, ஆட்டோமொபைல் உதிரிப் பாகங்கள் தயாரிப்பவர்தான்!" பெரிய தொழிற்சாலை! அவன் ஒரு தேவை விளம்பரம் வெளியிட்டிருந்த நினைவு இருக்கிறது! ஆனால், அவர் வேலை கொடுத்தால், அத்தோடு சரி. வேறு எந்தச் சலுகையும் எதிர்பார்க்க முடியாது!" என்று அவர் முடித்த வினாடியே, "தேவையில்லை!" என்றாள் மகள்.

"என் வேலைக்கான மரியாதை மட்டும் எனக்குக் கிடைத்தால் போதும்!" என்றாள் வேகத்துடன்!

முறுவலித்துவிட்டு, "நீயே மறந்துவிட்ட உன் இன்னொரு கேள்விக்கும் பதில் சொல்லிவிடுகிறேன். இந்த வேலையை நீ தொடர்ந்து மூன்று மாதங்கள் செய்தால் போதும்! செய்வன திருந்தச் செய்வாய் என்ற நம்பிக்கை இருப்பதால், எப்படிச் செய்ய வேண்டும் என்று குறிப்பிடவில்லை!" என்று சேதுமாதவன் கூறி முடிக்கவே, அவர் மகளின் முகமும் மலர்ந்தது!



# அத்தியாயம் 2

இந்த வேலை விஷயம், குருப்ரசாத்துக்கு கொஞ்சமும் பிடிக்கவே இல்லை! என்ன மாதிரித் தகப்பன், இந்த சேதுமாதவன்?

தான் ரொம்ப இளைஞன் என்று எண்ணமா? மகளுக்குக் கல்யாணம் செய்துவிட்டால், தன்னைக் கிழவன் என்று சொல்லிவிடுவார்கள் என்ற அச்சத்தில் மகளின் திருமணத்தைத் தள்ளிப் போட முயற்சிக்கிறாரோ என்று கூட, அவனுக்கு ஒரு தரம் தோன்றிற்று!

ஆனால், மனிதர் தன்னை இளமையாகக் காட்டிக்கொள்ள முயன்றதே இல்லை! உடல் பயிற்சி, உணவில் கவனம் காட்டி உடலைக் கச்சிதமாக வைத்திருப்பாரே தவிர, இன்னமும் அடர்த்தியாக இருந்த சிகைக்கு டை கூட அடிக்க மாட்டார்!

அவருக்குச் சற்று ஐஸ் வைக்கும் முயற்சியாக, ஒரு தரம் முடிக்கு மட்டும் டை போட்டால், அங்கிள் இருபதுகளில் உள்ள இளைஞனாகவே ஆகிவிடுவாரே, செய்து பார்க்கலாமே என்று அவன் ஐடியாக் கொடுத்தபோது, அந்தப் பேச்சே கூடாது என்று ஒரேயடியாக மறுத்துவிட்டார் அவர்!

அவரது முன் சிகை நரை, அவரது கடும் உழைப்பையும், தொழில் வளர்ச்சியையும் காட்டுவதாம்! பார்ப்போரின் மரியாதையை ஈட்டித் தருகிற அதை, ஒருபோதும், அவர் மறைக்கவே மாட்டாராம்!

அவரது கனத்த குரலில் அவர் கூற, மகள் அவரைப் பெருமிதமாக நோக்க, "ஆமாம், ஆமாம்! அங்கிள் சொல்வதும் சரிதான்! எனக்குக் கூட, உங்களை முதல் முதலாகப் பார்த்தபோதே, கையெடுத்துக் கும்பிட வேண்டும்போல இருந்தது!" என்று அவன்தான் வழிந்து சரிக்கட்ட வேண்டியதாயிற்று!

"என்னத்தைக் கும்பிடுவது? எனக்கென்னவோ, அப்பா பயத்தில்தான் சாயம் பூசவில்லை என்று தோன்றுகிறது! தலைக்குப் பதிலாக முகத்தில் பூசிவிட்டால்? கை நடுங்குகிற வயது ஆகிறதுதானே?" என்று கணவரைக் கடைக் கண்ணால் பார்த்து சிரித்தாள் மஞ்சுளா.

"இருக்கும் இருக்கும். கை ஆடுகிறது.. இந்தப் பொட்டைக் கொஞ்சம் சரியான இடத்தில் ஒட்டி விடுங்களேன் என்று நாளைக்குக் கேட்பாயல்லவா, அப்போது இதை உனக்கு நினைவு படுத்துகிறேன், பார்!" என்று சேது மாதவன் பதில் கொடுக்க, பதறி, "பொய், பொய்!" என்று அவர் மனைவி கத்த, "ஐயய்யோ என்னம்மா இது? சிக்கென்று, எங்களுக்கு அக்கா மாதிரி இருக்கிறீர்கள் என்று பெருமைப்பட்டால், அநியாயத்துக்கும் பாட்டியாகி இருப்பீர்கள் போலத்

தெரிகிறதே!" என்று சுசித்ரா கிண்டலடிக்க, அங்கே ஒரே சிரிப்பு. அது அடங்கவும் தொடர்ந்து அவளே, "பாவம் என்று இல்லாமல், அப்பா சமயத்தில் சொல்லிக் காட்டுகிறாரே! இனிமேல் பொட்டு வைப்பதற்கு அப்பாவிடம் தொங்காதீர்கள் அம்மா! உங்களுக்குப் பிரச்சினை இல்லாமல், ஒவ்வொரு வேளையும், நானே வந்து, ஓசைப்படாமல் பொட்டு வைத்து விடுகிறேன்!" என்று தாயாருக்கு ஆதரவாகப் பேசுவது போலக் காலை வார, சற்று நேரம் அங்கே அலையலையாய் ஒரே சிரிப்பு!

மஞ்சுளா சிநேகிதியான ஒரு பெண்மணி, ஹைகோர்ட் நீதிபதி ஒருவருடைய மனைவி, தன் பேரன் பேத்தியுடன் வந்திருந்தவள் கை கொட்டிச் சிரித்தாள்! கூடச் சிரித்தவர்கள் இன்னும், சில நண்பர்கள்... எல்லோரும் பெரிய இடத்துப் பிள்ளைகள்! ஈசிஆர் ரோடில் இருக்கும் பங்களாவரை காரில், லட்ச ரூபாய் பைக்கில் வந்திருந்து, சும்மா பேசிச் சிரித்துப் பேசிப் பொழுது போக்கிச் செல்கிறவர்கள்!

இந்த மாதிரிக் கூட்டத்தின் நடுவே இருப்பதுதான், குருப்ரசாத்துக்குப் பிடிக்கும்!

செலவு செய்யும் பணத்தைப் பற்றி எண்ணிப் பார்க்கத் தேவையற்ற கூட்டம்!

ஆனால், அதற்காக மட்டும்தான், அவன் சுசித்ராவோடு பழகினான் என்று சொல்ல முடியாது! இவ்வளவு பணம் அந்தஸ்து என்பதெல்லாம், அவனுக்குப் பிறகுதான் தெரியும்.

ஒருநண்பனின் திருமணத்தில் சுசித்ராவின் அறிமுகம் கிடைத்தபோதே அவனுக்கு வானத்தில் பறப்பது போன்ற உணர்ச்சி! பெண்ணுக்குத் தோழியாம்! சும்மா அரட்டை, கிண்டல்களில் பங்கு கொள்வது மட்டுமில்லாமல், அவள் பெண் வீட்டாருக்கு உதவி செய்வதைப் பார்த்தவன், பாதி தன்னையறியாமலேதான், அவளைப் பின்பற்றினான்!

கூடச் சேர்ந்து செய்தவனைப் பார்த்து அவள் முறுவலிக்க அப்படியே பழக்கம் தொடர்ந்தது!

இன்றைக்குக் குடும்பத்தில் ஒருவனைப்போலக் கூடச் சேர்ந்து உட்கார்ந்து, உண்டு சிரித்துப் பேசி மகிழும் அளவுக்கு!

ஆனால் குருவுக்கு இது மட்டும் போதுமானதாக இல்லை! இந்தக் குடும்பத்தின் ஓர் அங்கமாகவே மாறிவிட அவன் ஆசைப்பட்டான்!

நிறையப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளவும்!

தன்னுடைய நாலைந்து பேரப் பிள்ளைகளுடைய தந்தைக்குத் தன் தொழிலில் ஒரு முக்கியமான இடத்தைத் தர, சேதுமாதவன் விரும்பமாட்டாரா, என்ன?

அதிலும், ஒரே ஒரு பெண்ணைப் பெற்றவர்!

சும்மாவே சுசித்ராவின் அழகும், குணமும், பழகும் முறையும் அவனுக்குப் பிடிக்கத்தான் செய்யும்! ஆனால், மகள், மருமகனுக்குச் செய்யும் கடமை,



சேதுமாதவனுக்கு இருக்கிறதுதானே? நியாயப்படி அவர் செய்வதை, ஏன் வேண்டாம் என்பது?

சொல்லப் போனால், அவரது சொத்தில் பாதியே, அவளுக்கு உரியதுதானே?

இப்படியெல்லாம் தனக்குள் சொல்லி, சுசித்ராவை விடாமல் கரைத்து, அவள் தந்தையிடம் சம்மதம் கேட்க அனுப்பிவிட்ட பிறகுதான், அவனுக்கு நிம்மதியாக மூச்சு விடவே முடிந்தது.

மேலே மேலே படித்து, அவள் என்ன செய்யப் போகிறாள்? அவளைப் பாராமல் அவனால் இருக்கவே முடியவில்லை! அவளை விட்டு, இங்கிருந்து போகவே, அவனுக்குப் பிடிக்கவில்லை!

அவனிடம் ஏதாவது குறையிருக்கிறதா? அவளுக்கும், அவனைப் பிடிக்கும்தானே?

இப்படி எத்தனையோ சொல்லி, அவளைக் கரைத்து முடித்து, அப்பாடி என்று நிம்மதியாய் இருந்தால், இடி போல இப்படிக் கெடுக்கிறாரே!

பிறகென்ன?

இருபத்தொன்று முடிந்து, அடுத்த ஆண்டையும் முடித்துவிட்ட பெண்களுக்குத் திருமணம் செய்து கண் குளிரப் பாராமல் வேலைக்கு அனுப்புகிற தகப்பனை என்ன சொல்லித் திட்டலாம்?

பெரிதாக, எதைச் சொல்லவும் அவனால் முடியவில்லை!

ஏனெனில், "வயதாகி விட்டாலே சின்னவர்களின் அவசரம் பெரியவர்களுக்குப் புரிவதில்லை!" என்று அவன் கேலி போல ஏதோ சொல்லப் போக, "என் தந்தையின் விருப்பம், நான் உலகத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பது! அதைவிட அதிகமாக எந்த அவசரமும் இருப்பதாக எனக்குமே தெரியவில்லை! அத்தோடு, என் தந்தைக்கு அதிகம் வயதாகிவிடவும் இல்லை!" என்று சுசித்ரா அழுத்தமாகக் கூறிவிட, அதற்கு மேல் வற்புறுத்தி அவனால் ஒன்றும் சொல்ல முடியாது போயிற்று!

ஆனாலும், சும்மா வேடிக்கை போல, "மூன்று மாதத்துக்குள் உன் மனதை மாற்றிக் கொண்டு விடாதே, சுசி. என்னால் அதைத் தாங்கவே முடியாது!" என்றான் அவன் உணர்ச்சியோடு.

தந்தையின் சந்தேகம் சரியேதானா? மாற்றுவதா? அப்படியானால், இவனுக்கு முழு நம்பிக்கை இல்லையேதானா? பின் எப்படி அவன் திருமணத்துக்குக் கேட்கலாம்?

சிறு கோபத்தை அடக்கிக் கொண்டு "அதைக் காலம்தான் சொல்ல வேண்டும், குரு!" என்று பதில் சொல்லி அவனை அதிர வைத்தாள் அவள்!

"ஏ...ஏ.. என்ன பேச்சு இது, சுசி? இன்னும் மூன்று மாதத்தில், நம் திருமணம் நிச்சயம்! அதை மனதில் பிடிவாதமாக வைத்துக் கொண்டு மற்ற எதையும் செய்!" என்றான், சற்று அழுத்தமான குரலில்!

அவனை வியந்து நோக்கிவிட்டுத் தோளைக் குலுக்கினாள் சுசித்ரா!

இதற்கு என்ன அர்த்தம் என்று கேட்க, அவனுக்குப் பயமாக இருக்கவே, உள்ளூர சேது மாதவனைத் திட்டியதோடு சும்மா இருந்தான் அவன்!

குருப்ரசாத்தைப் போலவே, இன்னொருவனுக்கும் சுசித்ரா வேலை செய்வது கொஞ்சமும் பிடிக்கவேயில்லை!

அவன்தான் சத்யாகர்! அவளுக்கு வேலை தரவேண்டியவன்!

சத்யாகர் அன்று, மிகவும் எரிச்சலுற்றிருந்தான்.

இப்போது வேலைக்குத் தேர்ந்தெடுக்க போவது, அவனுக்கான செயலாளரை! ஆனால் யாரை நியமிப்பது என்பதில், அவனுக்கு எந்தவித உரிமையும் கிடையாது என்றால், அது என்ன நியாயம்?

இத்தனைக்கும் முதலில் இருந்தே அப்படிச் சொல்லியிருந்தாலாவது பரவாயில்லை!

தேவை விளம்பரம் கொடுத்ததில் இருந்து, விண்ணப்பித்த பத்துப் பேரையும் நேர்கண்டு, அலசி ஆராய்ந்து ஒருவரைத் தேர்ந்தெடுக்கும் வரை முழு சுதந்திரம் கொடுத்துவிட்டு, அப்படித் தேர்ந்தெடுத்த ஒருவரிடமும் தொண்ணூறு சதவீதம் வேலை நிச்சயம் என்று தெரிவித்த பிறகு, வேறு யாரையோ வரச் சொல்லிவிட்டேன்., அவளை வேலையில் அமர்த்து என்று நிறுவனத் தலைவர் சொன்னால், அவனுக்கு எப்படி இருக்கும்?

பொதுவாக, வினாயகம் சார் அப்படி எதிலும் மூக்கை நுழைக்கிறவர் கிடையாது!

இந்தக் கடைசி நேரத்தில் வந்து, இப்படிச் சொல்வதானால், அவருக்கே மறுக்க முடியாத நிலையாக இருக்க வேண்டும்! ஏதோ பெரிய இடத்து சிபாரிசு! மந்திரி, அரசாங்கத்து உயர் அதிகாரி... இப்படி! மறுத்தால் பிரச்சினை ஆகக் கூடும்!

அதாவது, இந்தப் பெண்தான் அவனுக்குச் செயலாளர் ஆகப் போகிறாள்!

ஆனாலும், அவளுக்குத் தகுதிகள் இல்லையென்றால், அப்படிப்பட்ட ஒருத்தியை சேர்மன் வற்புறுத்தித் தலையில் கட்டமாட்டார்!

யார் தலையிலும்! ஏனெனில் அதனால் வேலை கெடும் என்று அவருக்குத் தெரியும்! எல்லா முதலாளிகளையும் போல, வினாயகத்துக்கும், வேலை சரிவர நடப்பதுதான், மிகமிக முக்கியம்!

தகுதியில்லை என்று காட்டிவிட்டால், பொறுப்புகள் அதிகம் அற்ற ஏதாவது வேலையில் அவளைப் போட்டு, சிபாரிசுக்காரரை சமாளித்து விடுவார்!

எனவே, அந்தப் பெண்ணின் தகுதியின்மையைத்தான், சத்யாகர் தேடிப் பிடிக்க வேண்டும்!

இதே கருத்தை மனதில் வைத்துக்கொண்டு நேர்முகப் பேட்டிக்கு வந்த சுசித்ராவின் நடை, உடை, பாவனைகளில் முதல் குற்றங்களைத் தேடிய சத்யாகர் சற்றுத் திகைத்தான்!

ஏனெனில், பின்னோக்கி வாரி, வெறும் கறுப்பு நிற பாண்டினால் கட்டியிருந்த கற்றைக் கூந்தலில் இருந்து, காலில் கச்சிதமாகப் பொருந்தியிருந்த செருப்பு வரை, எந்தக் குறையையும், அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை!



அதிகப்படியும் இல்லை! குறைவும் இல்லை! அதே போல, அசட்டையும் தெரியவில்லை! எல்லாமே அவளுக்காகவே தனிப்பட அமைத்தவை போன்று அவளோடு பொருந்தியிருந்தன!

தனிப்பட அமைத்தவையேதான்! அதற்காகக் கொடுக்கப்பட்ட தையல் கூலியில், விலை குறைந்த இரண்டு சுடி செட் வாங்கி விடலாம் என்பது, நல்ல வேளையாக சத்யாகருக்குத் தெரியாது! அவள் அணிந்திருந்த செருப்புகள் கூட, அப்படித் தைக்கப் பட்டவையே!

பார்க்கப் பளிச்சென்று அவள் அழகாக இருந்தது, சத்யாகருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை! இந்தக் காலத்தில் கிடைக்கும் அழகு சாதனங்களும் பார்லர்களும், யாரை வேண்டுமானாலும் அழகிகளாக்கிக் காட்டி விட முடியும் என்று அவனுக்கும் தெரியும்!

சொல்லப் போனால், இந்த வேலைக்கு மிக முக்கியமான தகுதியின்மையாக அவன் மனதுள் கருதியிருந்ததே, அழகாக இருப்பதைத்தான்!

அடுத்தது, இருபதுகளில் இருப்பதை!

இரண்டும் இருந்தால், வேலைத் திறமை சற்று முன்னேப் பின்னே இருந்தாலும், யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள் என்பதாக, ஓர் அசட்டு எண்ணம் இந்தப் பெண்களுக்கு!

கிடைத்த நேரத்தில் எல்லாம், உதட்டுச் சாயம், பவுடர் என்று அலங்காரத்தைச் சீர்ப்படுத்துவதும், உடையை அங்கங்கே இழுத்து விடுவதும்... அதற்கு அப்புறம்தான் வேலையைப் பற்றி நினைத்துப் பார்ப்பதே!

என்ன தப்பு செய்தாலும், அழகைக் காட்டி சமாளித்துவிடலாம் என்ற திமிர்!

அவனுடைய பழைய செயலாளர் செய்த பிழையை நினைக்கும்போது, இப்போதுகூட, அவனுக்கு ஆத்திரத்தில் முகம் சிவக்கும்!

எப்பேர்ப்பட்ட பிழை!

அப்போது, அதிகமாக போனஸ் வேண்டும் என்று, யூனியன் தகராறு பண்ணிக் கொண்டிருந்தார்கள்! தங்கள் பலத்தைத் தங்களுக்குப் பாதகம் இன்றி, நிறுவனத்துக்குக் காட்ட வேண்டும் என்ற எண்ணத்தில், எல்லோரும், மொத்த மொத்தமாக லீவு போட்டுவிட்டு, வீட்டில் இருந்துவிடுவதாகத் திட்டம் போட்டார்கள்! சம்பளத்தோடு கூடிய விடுமுறை அவர்களுக்கு இருந்தது! எனவே, இப்போது அவர்கள் ஒட்டு மொத்தமாய் மட்டம் போட்டால், அவர்களுக்கு நஷ்டப்படாது என்பதோடு, நிறுவனம் ரொம்பவே கஷ்டப்பட்டுப் போகும் என்கிற நிலை!

ஆனால், உளவுக்கு ஆள் வைக்காத பெரிய நிறுவனம் ஏது?

நிர்வாகத்துக்கு, விவரம் எட்டிவிட்டது. எனவே, ஒவ்வொரு பிரிவின் தலைமைப் பொறுப்பாளருக்கும் சுற்றறிக்கை போயிற்று. மறுநாளைக்கு கீழ்

மட்டத்தில் யாருக்கும் விடுமுறை வழங்கக் கூடாது என்று முக்கியமான குறிப்புடன்!

விஷயம் ரகசியம் என்பதால், சத்யாகருடைய செயலாளராக அப்போது இருந்த வனிதாவே அறிக்கையைக் கொண்டு சென்றாள்!

ஒரு முக்கியமான பிரிவு மட்டும், இதில் விடுபட்டுவிட்டது!

கெட்டிக்காரத்தனத்தினால், பெரிய பதவியில் அமர்த்தப்பட்ட இளைஞன் தருண். முதல் வேலை! உத்தியோகத் தொடர்பாக வெளி மாநிலங்களில் சுற்றிவிட்டு, அன்றுதான் திரும்பி வந்திருக்கிறான்! சுற்றறிக்கை வரும்போது, அவன், தன் அலுவல் அறையிலேயே இல்லை!

வந்ததுமே, பயண விவரம் பற்றிய குறிப்புகளை எடுத்துக்கொண்டு, பொது நிர்வாகியைச் சந்திப்பதற்காக அவனது பகுதியைவிட்டு வெளியே சென்றிருக்கிறான்.

அவன் இடத்துக்குத் திரும்பி வந்தபிறகு, அவனிடம் சென்று அறிக்கையைக் காட்ட, வனிதா மறந்துவிட்டாள்!

பலனாக, மறுநாள் அந்தப் பிரிவில் மட்டும் மற்ற யாரும் வேலைக்கு வரவில்லை! ஒவ்வொருவர், ஒவ்வொரு காரணம் சொல்லி விடுப்பு கேட்கவும், அவனே பாதிப் பேருக்கு விடுமுறை கொடுத்து அனுப்பியிருக்கிறான்! பாதிப்பேர் விடுப்பு கேட்டுக் கடிதம் அனுப்பிவிட்டு இருந்துவிட்டார்கள்!

அவனும் சேர்ந்து செய்தான் என்று, நிர்வாகம் கொதித்துவிட்டது!

அவனை ஏன் பதவி இறக்கம் செய்யக்கூடாது என்று கேட்டு நோட்டீஸ் வரவும், காரணமே புரியாமல், முதலில் பையன் மிரண்டு போனான்!

அந்த மாதிரி அறிக்கை தனக்கு வரவே இல்லை என்று அவன் சொன்னதை, இங்கேயும் முதலில் யாரும் நம்புவதாக இல்லை!

சத்யாகருக்குத்தான் சந்தேகமாக இருந்தது!

தருணிடம் உண்மை தெரிந்ததோடு, அவன் அன்றுதான் டூர் முடித்துத் திரும்பி வந்ததும், 'பெர்சனல் மானேஜர்' என்கிற முறையில், அவனுக்குத் தெரியும்! பெரும்பாலும், அவனில் தன்னைக் காண்பவன் அவன்!

அப்படியிருக்கத் தருண் எப்படிப் பொய் சொல்வான்?

வனிதாவைக் குடைந்ததில், உண்மை வெளிப்பட்டது!

ஆனால், லேசில் சொல்லவில்லை! "நீ அறிக்கையை எடுத்துப் போனபோது, அவன் தொழிற்சாலையிலேயே இல்லையே, எப்படிக் காட்டியிருப்பாய்?" என்று ஒரு பொய்யான கிடுக்கிப்பிடி போட்டு, நிஜத்தை வரவழைத்தான், சத்யாகர்!

அப்போதும், "அவன் எப்படியோ போய்த் தொலையட்டும்! இதை, இப்படியே விட்டுவிட்டால், அதற்காக என்ன செய்யவும் தயார்." என்று அருவருப்பூட்டும் விதமாக, அவள் உடம்பை நெளித்துக் காட்டவும்தான், சத்யாகருக்கு மிகவும் வெறுத்துப் போயிற்று!

இந்த அளவுக்குப் போகிறவள், வாய்ப்புக் கிடைத்தால், என்னென்ன



செய்வாளோ?

அந்தப் பக்கம், அரண்டு போய், நிர்வாகத்தினரிடம் நம்பிக்கை இழந்து, வெளியேறவே தயாராக இருந்த தருணையும் தட்டிக் கொடுத்து, அமைதிப்படுத்த வேண்டியிருந்தது!

கடைசியாக, வனிதாவை வேலையிலிருந்து விலக்கி, தருணின் பயண வெற்றிகளுக்காக அவனுக்கு ஓர் ஊக்க போனஸ் கொடுத்து நிலைமையைச் சமாளிக்க நேர்ந்தது!

அப்போதும், ஊக்க போனஸ் பற்றி, முதலாளி வினாயகத்துக்குச் சற்று வருத்தம்தான்! இது ஒரு பொது முன்னுதாரணம் ஆகிவிடக் கூடாதே என்ற கவலை அவருக்கு!

அவரிடமும், தருணின் தகுதி பற்றிச் சொல்லி அமைதிப்படுத்த வேண்டியதாயிற்று!

இத்தனையும் அந்தப் பெண் வனிதாவின் மடத்தனத்தினால்!

வனிதாவுக்கு முன் சத்யாகருடைய செயலாளராக இருந்தவள், இன்னமும் மோசமாக, அவனுக்கே காதல் கடிதம் கொடுத்தாள்! கண்டபடி போஸ் கொடுப்பாள்!

இரண்டு பெண்களுக்குமே பொதுவாக இருந்த குறைகள், அழகும், இளமையும்!

அதற்காகவே, இரண்டு 'குறை'களும் இல்லாத ஒரு பின் முப்பது வயதுப் பெண்மணியை இப்போது அவன் தேர்ந்தெடுத்திருந்தான்!

ஆனால் கடைசியாக, பழைய இருவரையும் விடவும், அழகான ஒருத்தியைச் செயலாளராக நியமிக்க வேண்டியதாகி விட்டது என்று, அறையின் திரை மடிப்புகளின் வழியே சுசித்ராவை ஆராய்ந்தவாறு எண்ணமிட்ட சத்யாகர், சட்டெனத் திடுக்கிட்டான்!

அவளுக்கு வேலை கொடுப்பதாக, அவன் இன்னமும் கடைசி முடிவு எடுக்கவில்லையே! பிறகெப்படி, இப்படி நினைத்தான்?



## அத்தியாயம் 3

செயலாளராக அந்தப் பெண்ணை எப்படி நினைத்தான் என்ற விந்தை ஒரு புறமிருக்க, அந்தப் பெண் சுசித்ராவைப் பற்றியும் ஏதோ உள்ளூர ஏதோ அவனை உறுத்தியது!

என்னவோ அவளைச் சரிவர எடை போட முடியாத மாதிரியான குழப்பம்!

சத்யாகர் இந்த வேலையில் சேர்ந்து, இது வரை, இந்த மாதிரிக் குழப்பம் அவனுக்கு நேர்ந்தது இல்லை!

ஒரு பெரிய நிறுவனத்தின் 'பெர்சனல் மானேஜர்' என்றால், அதற்குரிய அத்தனை தகுதிகளும் அவனுக்கு இருந்ததால்தான் அந்தச் சிறு வயதிலேயே, அந்த அளவுக்கு, அவனால் உயர முடிந்தது! ஒரு பார்வையில் ஒருவரை முழுக்க அறிந்துவிட முடியாது என்றாலும், இந்த ஆள் இப்படி என்று ஓரளவுக்கு அவனால் கணித்துவிட முடியும்.

ஆனால் அவனால், அந்த புதுப்பெண்ணை, இப்படித்தான் என்று வெறும் பார்வையால் கணிக்க முடியவில்லை என்பது, அவனுக்குச் சற்று எரிச்சலூட்டியது!

அவளை உள்ளே வரச்சொல்லி, அவளது தகுதிச் சான்றுகளை ஆராய்ந்தால், அதிலும் குறை தெரியவில்லை அவனுக்கு!

அது மட்டுமின்றி, அவளது புராஜெக்டாகச் சுசித்ரா செய்ததும், மனித இயல்பு, அதன் மேம்பாடு பற்றியதே! கம்ப்யூட்டர் பழக்கமும் இருந்தது!

எனவே, சுசித்ராவின் கல்வி பற்றிச் சொல்லி, விநாயகம் சாரிடம் அவளைத் தட்டிக் கழிப்பதற்கு இல்லை!

அடுத்து, வேலை அனுபவம்!

கிட்டத்தட்ட இந்த நிறுவனத்தைப் போன்றதேயான 'எஸ்எம் இண்டஸ்ட்ரீஸ்'சில் இரண்டு மாத காலம் பணி புரிந்திருக்கிறாள்! வெறும் பயிற்சியாக!

"வெறும் பயிற்சியாக என்றால் என்ன அர்த்தம்? என்ன மாதிரிப் பயிற்சி?"

"சும்மா நடைமுறை பற்றி, பொதுவான வேலை முறை பற்றியதாக என் பணிப் பயிற்சி இருந்தது." என்று தெளிவாகப் பதில் வந்தது!

ஆனால், எதிர்பாராத விதமாக, "அதெப்படிப் பயிற்சியாக மட்டும் வேலை கொடுத்தார்கள்? உறவு, நட்பு, சிபாரிசு எந்த வகையில் சேர்த்துக் கொண்டார்கள்?" என்று சத்யாகர் கேட்கவும், சுசித்ரா ஒரு கணம் திணறிப் போனாள்!

உண்மையான உறவு முறையைச் சொன்னால், இவளுக்கெல்லாம் எதற்கு வேலை என்று தோன்றும்! அத்தோடு, பெரும் பணக்காரப் பெண் என்பது வெளியே தெரிவது, நல்லதில்லை என்று தந்தை கூறியிருக்கிறார்!

ஒரேயடியாகப் பொய்யும் சொல்ல முடியாமல், "சொ..ந்தம்தான்! ஆனால்..." என்று முடிக்காமலே நிறுத்திவிட்டாள்! அவள் விரும்பிய விதமாகவே, சேதுமாதவன் அவளுக்குத் தூரத்து உறவென்று என்று மட்டுமே சத்யாகர் எண்ணினான்.

"தொடர்ந்து அங்கேயே வேலை பார்க்கலாமே?" என்று மறுபடியும் கேட்டான் அவன். "திறமைக்கு மதிப்புக் கொடுப்பவர் சேதுமாதவன் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்! அத்தோடு, அதிகப்படி வசதியாக, ஏதோ ஓர் உறவும் இருக்கிறது!"

இதற்கு, அவளிடம் பதில் இருந்தது!

"உறவுதான் பிரச்சனை!" என்றாள் அவள்.

அவன் புருவம் உயர்த்திக் கேட்கவும், "சேர்மன், உறவைத்



தொழிற்சாலைக்குள் மதிக்க மாட்டார் என்றாலும், மற்றவர்கள் மனநிலை அப்படியிராது., இயல்பாக நடத்த மாட்டார்கள்., வாங்குகிற சம்பளத்துக்கு உண்மையாக வேலை செய்ய முடியாது என்று உணர்ந்தே, வெளியே வேலை தேடி வந்தேன்!" என்றாள் அவள்.

இதுவும் ஒரு வகையில் உண்மையே! தந்தையின் நிறுவனத்தில் வேலை செய்தால், உண்மையான அனுபவம் கிடைக்காது என்று அவளே சொன்னது மெய்தானே?

சுசித்ரா எதிர்பாராத விதமாக, அவளது இந்தக் காரணம், சத்யாகரை அவள்பால் இளக வைத்தது! ஒட்டு, உறவென்று பொய் சொல்லிய சலுகை தேடும் இந்தக் காலத்தில், அது வேண்டாம் என்று விலக்கி, உழைத்துப் பிழைக்க வந்திருக்கும் இந்தப் பெண், எவ்வளவோ மேலானவள்தான்! ஆனாலும்... அழகாக இருக்கிறாளே!

"விநாயகம் சார் உன்னைப் பற்றிச் சொன்னபோது, நான் கிட்டத்தட்ட வேறு ஒரு பெண்மணியைத் தேர்ந்தெடுத்திருந்தேன். சாவித்திரி இந்த வேலைக்கு எல்லா வகையிலும் பொருத்தமான பெண்மணி!" என்றான் அவன் உணர்ச்சி துடைத்த குரலில்!

அப்படியென்றால், தந்தைக்காக, இந்த நிறுவனத் தலைவர், அவளை, இவன் தலையில் கட்டுகிறார்! அது, இவனுக்குப் பிடிக்கவில்லை!

முகம் சிவக்க "சாரி!" என்று, சட்டென எழுந்துவிட்டாள் சுசித்ரா! "இங்கே வேலை காலி இருப்பதாக நினைத்து வந்துவிட்டேன்! உங்கள் நேரத்தை வீணடித்ததற்கு மன்னியுங்கள்!" என்று ஃபைலுக்காகக் கையை நீட்டினாள்.

பைலைக் கொடுத்து விட்டிருக்கலாம்! நடப்பைச் சொன்னால், விறைத்துக் கொண்டு போய்விட்டாள், பொறுமையில்லாதவள் என்று முடித்துமிருக்கலாம்!

ஆனால் ஃபைலில் பிரித்திருந்த பக்கத்தை மீண்டும் பார்வையிட்டுவிட்டு, "இந்த வேலை பார்ப்பது, உனக்கு அவசியமா?" என்று கேட்டான் சத்யாகர்.

வேலை உனக்கு அவசியமா என்று, அவன் கேட்கவில்லை! வேலை பார்ப்பது அவசியமா என்றுதான் கேட்டான்! வேலை பார்க்கும் அனுபவம், அவளது வாழ்க்கைக்கு மிகவும் அவசியம் என்பது உண்மைதானே?

இதுவும், ஒரு வகையில் ஒரு சின்ன ஏமாற்று வேலைதான் என்றாலும், அவன் என்னத்தையாவது எண்ணிக்கொண்டு, எதையாவது சொன்னால், அதற்கெல்லாம் அவள் உள்ளர்த்தம் ஊகித்து, உண்மையான பதிலைக் கூற வேண்டிய கட்டாயம் இல்லை என்று தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டு, "ஆமாம்." என்று மெல்லிய குரலில் இயம்பினாள்.

முன்பு தேர்ந்தெடுத்த சாவித்திரியை எண்ணி, உள்ளூர இரங்கியபடியே, "திங்களன்று வந்து வேலையில் சேர்ந்துவிடு." என்று சுசித்ராவிடம் கூறினான் சத்யாகர்.

இவளுக்கும் பாவம், தேவைதானாமே! அத்தோடு, அந்த சாவித்திரிக்கு வேலையில் நிறைய முன் அனுபவம் இருப்பதால், சீக்கிரமே வேறு வேலை

கிடைத்துவிடும்!

இவளுக்கானால் வேலை கிடைக்கத் தாமதம் ஆகும். பாவம்!

அந்தத் திங்கள் கிழமையே வேலையில் சேர்ந்துவிடுமாறு கூறி, வேலைக்குரிய நியமனக் கடிதத்தை அவள் கையில் கொடுத்தே, சுசித்ராவை அனுப்பினான் சத்யாகர்!

கடிதத்தை அப்படியே கிழித்துப் போட்டுவிட்டு, ஹாயாக வீட்டில் இருக்கச் சொன்னான், அவளுக்காக அவள் வீட்டு வாசலிலேயே காத்திருந்த குருப்ரசாத்!

"எப்படியும், நமக்குத் திருமணம் ஆன பிறகு, நீ வேலை பார்க்கப் போவதில்லை! வேலை செய்து, நீ பொருளீட்டுவதை, திருமணத் தகுதியாக நான் எண்ணப் போவதும் இல்லை! அப்புறம், எதற்காக இந்த வீண் வேலை?"

எவனெவன் ஏவலையோ செய்வதற்கு, அவனுடைய வருங்கால மனைவி பிறக்கவில்லை., அவன் சொன்னதைச் செய்தால் போதும் என்று ஓர் அதட்டலோடு முடித்தான் அவன்!

என்னமோ, அவனுக்காகத்தான் அவள் உயிரோடு இருப்பதே என்பான் போலிருக்கிறதே!

சட்டென, அவனை நிமிர்ந்து பார்த்தாள் சுசித்ரா.

அந்த வினாடியிலேயே, அதிகப்படியாக உரிமை காட்டிப் பேசிவிட்டோமோ என்ற எண்ணம், அவனுக்கும் தோன்றி விட்டது போலும்!

குருப்ரசாத்தின் கண்களில் பயத்தைக் காணவும், சுசித்ரா இளகினாள்.

சில நாட்களுக்கு முன்பாக, அப்பா சரியென்றால் இருவரும் மணந்துகொள்ளலாம் என்று அவனிடம் ஒத்துக் கொண்டவள்தானே? அந்த எண்ணத்தில், தனக்கு ஏதோ உரிமை இருப்பதாக எண்ணி அவன் பேசலாமில்லையா?

ஆனால், அவளுடைய தந்தை, திருமணத்தைப் பற்றி ஒன்றுமே சொல்லவில்லை... அல்லது மறைமுகமாகச் சொன்னாரோ? அவர் தள்ளிப் போட்டதன் பொருளே, மறுப்போ?

அல்லது, இந்த மூன்று மாத காலத்தில், அவள் மனதில் கொஞ்ச நஞ்ச சந்தேகம் இருந்தாலும், அது தெளிவாகிவிடும் என்று எண்ணினாரோ?

அப்படித்தான் இருக்கும்! ஏனெனில் குருவை அவர் மறுப்பதற்குக் காரணம் இல்லை! அதே சமயம், அவனை உடனே மணந்தே தீர வேண்டும் போல, அவளுக்கும் வேகம், தவிப்பு எதுவுமில்லை!

எனவே, பொறுத்திருந்து பார்த்துதான் இதை முடிவு செய்ய வேண்டும்!

அத்தோடு, தந்தை சம்மதித்தால் என்று அவள் சொன்னதை மறந்து, அவன் அதிக உரிமை பாராட்டுவதும் சரியில்லைதான்!

அதை முகத்தில் அடித்தாற்போல அவனிடம் சொல்லவும் மனமற்று, "பாருங்கள் குரு, இந்த வேலையைப் பார்ப்பதும், பாராதிருப்பதும் என் சொந்த விருப்பத்தைப் பொறுத்தது! திருமணத்துக்கும், அதற்கும் முடிச்சிடாதீர்கள்!" என்றாள் அவள் நிதானமாக!



"சரி. உன்னிஷ்டம்!" என்று விட்டுக் கொடுத்தான் அவன். "ஆனால், நீயே சொல்வது போலத் திருமணத்துக்கும் இதற்கும் தொடர்பு வேண்டாமே! திருமணம் செய்து கொண்டு, அப்புறமாக இந்த வேலைக்குப் போகலாமில்லையா? அல்லது, திருமண நிச்சயத்தையாவது ஊர் கூட்டி விழாவாக நடத்தி விடலாம்!" என்று வலியுறுத்திப் பேசினான்.

"ஏனோ? இதற்கெல்லாம் அப்படியென்ன அவசரம்?"

"அவசரம் என்ன? திருமணம் என்பது, நாம் ஏற்கனவே எடுத்த முடிவுதானே? இடையில் எவனாவது புகுந்துவிடுவானோ என்ற பயம் இல்லாமல், எனக்கும் நிம்மதியாக இருக்கும்!" என்று அவன் விளையாட்டுப் போலச் சொன்னாலும், அவனிடமிருந்து வெளிவந்தது உண்மை என்று அவளால் உணர முடிந்தது!

நம்பிக்கை கொஞ்சமும் இல்லை!

"ஓ!" என்று யோசனையோடு அதை ஜீரணித்தாள் சுசித்ரா.

நம்பிக்கை இல்லாததால்தான் அவள் கைநழுவிப் போய்விடாமல், கட்டிப் போட முயலுகிறான்!

அதாவது, அவளது மனம் பற்றி, இவனுக்கும் நிச்சயமில்லை!

அவளுடைய தந்தைக்கும் இல்லை!

அவளுக்குமே, இப்போது கொஞ்சம் சந்தேகம்தான்!

எல்லோருக்குமே ஐயம்தான் எனும்போது, அது தெளிவாகாமல், திருமணம் செய்வது, பெரிய தப்பு!

குருப்ரசாத்தை நேராகப் பார்த்து, "திருமண விஷயத்தில் அவசரம் கூடாது ப்ரசாத்! இப்போதைக்கு, நான் வேலைக்குப் போவது, உறுதி! அப்பா சொன்ன இந்த மூன்று மாதங்கள் கழியட்டும்! அதன் பிறகு, இருவருக்கும் திருமணம் அவசியம் என்று தோன்றினால், செய்து கொள்வோம்! இல்லையென்றால், நண்பர்களாகப் பிரிந்து விடுவோம்!" என்றாள் அவள்!

அதிர்ச்சியுற்று, "அந்த வார்த்தை சொல்லாதே!" என்று அலறினான், குருப்ரசாத்! "என்றைக்கு இருந்தாலும், நீ என்னைத்தான் மணந்துகொள்ளப் போகிறாய்! இது நிச்சயம்! எனக்குத் தெரியும்! நீயும் மறக்காதே! இல்லாவிட்டால், நான் விபரீத முடிவுக்கு வர நேரிடும்!" என்றான் அவன் ஆத்திரத்துடன் உரக்க.

மிரட்டலா? போயேன் என்று சொன்னால் இவன் என்ன செய்வான் என்று உள்ளூர எண்ணம் ஓட, "உள்ளே போகலாம், வாருங்கள் குரு! எனக்குப் பசிக்கிறது!" என்று அவனைச் சுற்றிக் கொண்டு வீட்டுப் படியேறினாள் சுசித்ரா!

ஒரு கணம் திகைத்துவிட்டு, அவளைப் பின்தொடர்ந்தான் அவன்.

உள்ளே வருமாறு அழைக்கத்தானே செய்தாள்? அப்படியானால், அவள் மனதில் ஆசை இருக்கிறது என்றுதானே அர்த்தம் என்றது, அவன் மனது! அந்த இழை அறுந்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!

ஜோக்குகள், கதைகள் என்று சிரிக்கச் சிரிக்கப் பேசி அன்றைய மாலைப் பொழுது உற்சாகமாகக் கழிய குருப்ரசாத்தான் காரணமாக இருந்தான்!

ஆனால், சற்றுத் தாமதமாக வீடு திரும்பிய சேதுமாதவனைக் கண்டதுமே,

வேலை நியமன உத்திரவைத் தூக்கிக் காட்டியபடி, "அப்பா, நான் உங்களோடு நிறைய்யப் பேச வேண்டுமே!" என்று சுசித்ரா அவர் பின்னோடு ஓடவும், கலகலப்பு குறைந்து, குருவும் கிளம்பிவிட்டான்.

"நான் மிக நன்றாக வேலை செய்ய வேண்டும், அப்பா! இன்னொருத்தருக்கு என்று கிட்டத்தட்ட முடிவு செய்ததை மாற்றி, எனக்கு இந்த வேலையைக் கொடுத்திருப்பதாக, மிஸ்டர் சத்யாகர் சொன்னார்! அதனால்..."

பேசியபடியே, தந்தையோடு செல்ல, குருப்ரசாதின் காதில் விழுந்தது, இவ்வளவுதான்!

ஆனால், கேட்ட அளவில், அவன் மனம் உலைக்களமாகக் கனன்றது!

இன்னொருவருக்கான வேலையை, இவளுக்கு மாற்றிக் கொடுத்தானாமா? ஏன் கொடுக்க மாட்டான்?

அழகான பெண்! பணக்காரி! விடுவானா, என்ன?

உத்தமன் போலக் காட்டிக் கொள்ள, நன்றாக வேலை செய்ய வேண்டும் என்று சொன்னான் போல! திருட்டுப் பயல்! வேலையை செய்யாவிட்டால் கூட, இவளுக்கு வேலை கொடுத்திருப்பான் என்று இந்த வீட்டு முட்டாள்களுக்கு எங்கே தெரியப் போகிறது?

எல்லாம், அவனைக் கேட்டால், புட்டுப் புட்டு வைத்திருப்பான்!

இனி மெல்ல இவளைக் கணக்குப் பண்ண முயற்சிப்பான்!

உச்சி குளிரப் பாராட்டி, குடும்பத்துக்குள் நுழைந்து, எல்லோருக்கும் குல்லாப் போட்டு, குடும்பத்தின் ஓர் அங்கம் போலக்காட்டி... அப்புறம் அவளைப் பிடிக்க முயற்சிப்பான்!

எவ்வளவு கஷ்டப்பட்டு, ஐந்து மாதங்களாக அவன் செய்த வேலை!

இனி என்ன ஆகும் என்று தெரியாமல், குருவுக்கு ஒரே தவிப்பாக இருந்தது!

ஆனால், சுசித்ராவை எச்சரிக்கவும் அவனுக்குப் பயமாக இருந்தது! எச்சரிக்கும்போது, அவள், அவனையே அப்படி இனம் கண்டுவிட்டால்?

அப்புறம், ஒரேயடியாக ஒதுக்கி விடுவாளே!

மாட்டாள் என்பதற்கு இல்லை! ஏனெனில், சுசித்ரா ஒரு மாதிரி புத்திசாலி!



## அத்தியாயம் 4

கொஞ்சமும் மனமில்லாவிட்டாலும், சுசித்ரா புத்திசாலி என்று சத்யாகரும் விரைவிலேயே ஒத்துக் கொள்ள நேர்ந்தது!

கொடுத்த வேலையை ஒழுங்காகச் செய்ததால் மட்டுமல்ல! அதற்குத் திறமை மட்டும் இருந்தால் போதும்!

கிளி கூடத்தான் சொன்னதைச் சொல்கிறது!

அந்த அளவில், அவள் சொன்னதைச் சரியாகவே செய்தாள்!



அது போக, அவள் மூளையைப் பயன்படுத்தத் தெரிந்தவளாகவும் இருந்தாள்!

அன்று உற்பத்திப் பிரிவில் ஒரு கோஷ்டித் தகராறு வெடிக்கிற நிலை!

சத்யாகரோ, நிறுவனத் தலைமை வைத்தியரோடு, வைத்தியப் பகுதிக்கு மருந்துகள் சப்ளை பண்ணும் இடத்தில் உட்கார்ந்திருந்தான். சில மருந்துகளின் தரம் சரியில்லை என்பதாக ஒரு புகார்!

தான் குறிப்பிட்ட கம்பெனி மருந்து வரவில்லை என்றார் வைத்தியர்!

அந்த நிறுவனமே வேலை நிறுத்தத்தில் இருப்பதால், கிட்டத்தட்ட சமமான மருந்துகளை அனுப்பியதாக மருந்து விற்பனையாளர் சமாதானம் கூறினார்!

"அதெப்படி? கிட்டத்தட்டச் சமமானதும், உரிய சரியான மருந்தும் ஒன்றாகிவிடுமா? நோய் உரிய விதமாக எப்படிக் குணப்படும்?" என்று டாக்டர் எகிற, "ஒன்றுமே இல்லாததற்குக் கிட்டத்தட்டச் சமமானது ஒன்று இருப்பது மேல் அல்லவா? சிகிச்சையைத் தொடங்கவேனும் முடியுமே!" என்று மருந்துகள் அனுப்பியவர் திருப்ப, அங்கேயே பிரச்சினையாக இருந்தது!

இருவரையும் சமாளித்து, டாக்டர் குறிப்பிட்ட கம்பெனி மருந்து இல்லையென்றால், மாற்று மருந்தைப் பற்றி, டாக்டருக்குத் தெரிவித்து, அவர் அனுமதியின் பேரில் அனுப்பும்படியாக ஓர் ஏற்பாட்டுக்கு இருவரையும் ஒத்துப் போக வைப்பதில் சத்யாகர் ஈடுபட்டிருந்தான்.

தொழிற்சாலையிலோ, தகராறு கிளப்பிய இருவரும் அவரவர் கோஷ்டி சேர்த்துக் கொண்டு, அடுத்தவர் மன்னிப்புக் கேட்டாக வேண்டும் என்று வந்து நின்றனர்!

இரு பிரிவினரையும் தனித் தனியே உட்கார வைத்துவிட்டு, சத்யாகரை செல்லில் பிடித்தால், மிக முக்கியமான பேச்சின் நடுவே இருப்பதால், ஃபோனை வைத்துவிடுமாறு சொல்லிவிட்டான் அவன்.

பார்த்த அளவில், தாக்கிக்கொண்ட இருவருக்கும் தனிப்பட்ட சச்சரவு ஏதோ இருக்க வேண்டும் என்றுதான் சுசித்ராவுக்குத் தோன்றியது! அதைப் பெரிதாக்கி, அடுத்தவனை மண்டியிட வைக்கும் முயற்சி!

தந்தை கற்றுக் கொடுத்ததையெல்லாம் நினைவுக்குக் கொண்டு வந்து யோசித்துவிட்டு, இரு பிரிவினருக்கும் இனிப்பாக டீ கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டு, அவர்கள் வேலைப் பிரிவின் ஃபோர்மேனைப் போய்ப் பார்த்தாள் அவள்.

வேலை நின்றிருந்த எரிச்சலில் இருந்தவரிடம், இதை வளர விட்டு வேலைக்குக் குந்தகம் ஏற்பட விட்டால், அடுத்து வரும் போனஸ் பிரச்சினையில் நிர்வாகம் இணக்கமாக இருக்குமா என்று ஒரு கேள்வியைக் கிளப்பிவிட்டாள்! இது, அவரை நேரடியாகப் பாதிப்பது அல்லவா?

அவ்வளவுதான். அவர், இரு பிரிவினருடனும் தனித்தனியே பேசி, எல்லோரையும் வேலையைத் தொடருவதற்கு இழுத்துப் போய்விட்டார்!

சண்டையிட்ட இருவரும் மட்டும் சற்று நேரம் நின்று பார்த்தார்கள்! ஆனால்,
ஆதரவுக்கு யாரும் இல்லை என்று தெரிந்ததும், அவர்களும், வாலைச் சுருட்டிக்
கொண்டு போய், அவரவர் வேலையில் ஈடுபடலாயினர்!
ஒரு பெரும் பிரச்சினையை எதிர்பார்த்து வந்த சத்யாகருக்கு வழக்கம்போலத்
தொழிற்சாலையில் மெஷின் ஓடுவதைக் கண்டதும் உள்ளூர ஒரே ஆச்சரியம்!
விஷயம் அறிந்தபோதோ, இன்னமும் அதிக வியப்புதான்!
ஃபோர்மனைப் பார்க்க வேண்டும் என்று, சுசித்ராவுக்கு எப்படித்
தோன்றியது?
அவளிடமே கேட்டான்!
ஒரு கணம் திகைத்துப் போனாள் அவள்!
இது போன்ற விஷயங்களைத் தந்தை கற்றுத் தந்தார் என்று இவனிடம்
எப்படிச் சொல்வது?
ஒவ்வொரு தொழிற்சாலையிலும், முக்கியமான மூன்று பிரிவுகள் உண்டு!
தொழிற்சாலை நடப்பு, தொழிலாளர் பொறுப்பு, விற்பனைப் பிரிவு என்று! அதில்
ஒவ்வொன்றிலும் பல உள் பிரிவுகள் உண்டு. அவை... என்று கற்றுத் தந்தாரே!
அதைச் சொன்னால், அப்புறம், அந்தத் தந்தை யார் என்று வராதா?
அதிலும், கிட்டத்தட்ட இதே வகைத் தொழில்!
அவசரமாக யோசித்து, "காற்றில் வால் ஆடலாம். ஆனால், அதை
மேற்கொண்டு ஆட்டுவதும் அடக்கி வைப்பதும் தலைதானே? இங்கே,
இவர்களுக்கு மேலே உள்ள தலை யார் என்று யோசித்தேன்! அவ்வளவுதான்!"
என்று முறுவலித்தாள் அவள்!
பளீரென்ற முறுவல்!
தன்னையறியாமல், கூடச் சேர்ந்து புன்னகை செய்தான் சத்யாகர்!
சுசித்ராவுக்கும் திகைப்புதான்!
அவன் முகத்தில், அவள் பார்த்த முதல் சிரிப்பு! அதுவும்கூடச் சற்று விரிந்த
முறுவல்தான்! ஆனால், வெளேரென்ற வரிசைப் பற்கள் பளபளக்க, அதற்கேற்பக்
கண்கள் பளிச்சிட, அவன் முகமே பளீரென்றது!
புன்னகையோடு அவன் தன்னிடத்துக்குச் செல்லவும்தான், என்னவோ
பட்டிக்காட்டான் மிட்டாய்க் கடையைப் பார்த்தது போல என்பார்களே, அது
போல நின்றுவிட்டோமோ என்று சுசித்ராவுக்குக் கூச்சமாகிப் போயிற்று!
ஆனால் நல்லவேளையாக, அவன் நின்று கவனிக்கவில்லை!
தொழில்கூடத்தில் உள்ள ஒவ்வொரு ஃபோர்மன், அவர் பொறுப்பில் உள்ள
ஆட்கள், அவர் கவனிக்கும் வேலை பற்றிய முழுமையான குறிப்பு ஒன்று,
மறுநாள் அவளது மேஜைக்கு வந்தது! சமயத்தில் அவளுக்குப் பயன்படக் கூடும்
என்று ஓர் ஓரத்தில் சத்யாகர் எழுதியிருந்தது, அவளைக் கவர்ந்தது!
நேரடியாக ஒன்றும் சொல்லாவிட்டாலும், மறைமுகமாக அவளைத் தட்டிக்
கொடுத்திருக்கிறான்! பிரச்சினையை அவள் சமாளித்த விதம் பிடித்திருந்ததால்,

வருங்காலத்தில் இது போன்ற சிக்கல்களை அவளாகவே தீர்க்கலாம் என்று அவளை நம்பி பொறுப்பைக் கொடுக்கிறான்.

உள்ளூரப் பெருமிதத்தோடு அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவளை மதிய உணவுக்கு அழைத்துச் செல்ல மல்லிகா வந்தாள்!

வந்த முதல் நாளில் இருந்து இந்த ஒரு வாரமாக, மதிய உணவை இருவருமாகச் சேர்ந்துதான் சாப்பிடுவது!

முதல்நாள் அவளைக் காண்டீனுக்கு அழைத்துப் போய் என்ன மாதிரி உணவு வாங்குவது, எதெது நன்றாக இருக்கும் என்றெல்லாம் மல்லிகா கற்றுக் கொடுத்தபோது, சுசித்ராவுக்கு மிகவும் நெகிழ்ச்சியாக இருந்தது! தனியாக வந்திருந்தால் இந்தக் கூட்டத்தில் ஒன்றும் புரியாமல் திணறிப் போயிருப்பாள்!

ஆனால், அதற்காக அவள் நன்றி தெரிவிக்கத் தொடங்கிய போதுதான், மல்லிகா அழைத்துப் போக வந்ததே, சத்யாகரின் உத்திரவின் பேரில் என்று அவளுக்குத் தெரிய வந்தது!

"இன்றுதான் புதிதாக வேலையில் சேர்ந்திருக்கிறாள். காண்டீன் காட்டி இங்கே கடைப்பிடிக்கும் வழிமுறைகளையும் காட்டிக் கொடு." என்ற அவளிடம் சொன்னானாம்!

கேட்டதும், சுசித்ராவுக்கு ரொம்பவே ஆச்சரியமாக இருந்தது!

காலையில் சரியாக ஒன்பதரை மணிக்கு அலுவல் அறைக்குள் வந்தபோது, அங்கிருந்த கம்ப்யூட்டர், மேஜை, நாற்காலிக்கும் அவளுக்கும் அவன் வேறுபாடு கண்டானா என்பதே சந்தேகமே! பிறகு, அன்றாட வேலைமுறையை அவன் பட்டியலிட்ட போதும், அதே உணர்வுதான் அவளுக்கு!

அவளை ஒரு ஜடப்பொருளாக நடத்தியவனுக்கு, அவளுக்கும் பசிக்கும் என்று நினைவு இருந்திருக்கிறதே!

ஆனால், புதிதாக வேலையில் சேரும் எல்லோருக்குமே இந்த உதவி கிடைக்கும்படி சத்யாகர் பார்த்துக் கொள்வான் என்றாள் மல்லிகா.

காண்டீனில் எப்படி டோக்கன் வாங்க வேண்டும்? எப்படி, எந்த வரிசையில் நின்று உணவுப் பொருட்களை வாங்க வேண்டும் என்றெல்லாம் மல்லிகா அவளுக்குக் கற்றுக் கொடுத்தாள்.

"இங்கே, அவ்வப்போது பணம் கொடுத்து வாங்குவதும் உண்டு! நம் 'ஐடி' கார்டைக் காட்டிக் கணக்கிலும் வாங்கலாம்! ஆனால், எல்லாம் இந்தப் பக்கம் மட்டும்தான்! நிர்வாகப் பகுதி அலுவலர்களுக்கு மட்டுமான பகுதி இது! தொழிலாளருக்கு அந்தப்பக்கம்!..."

"இப்படித் தனித்தனியே பிரித்து வைத்தால், தொழிலாளர்கள் குறைப்பட மாட்டார்களா?" என்று சுசித்ரா கேட்டாள்.

"இம். குறைப்படுவார்கள்தான்! ஆனால், சேர்ந்து அமர்ந்து உண்பதிலும் அவர்களுக்குத் தகராறுதான். அதனால், இப்படிப் பிரித்துவிட்டார்கள்! அத்தோடு, அவர்களுக்கு 'ஷிஃப்ட் 'முடிந்து வரும்போது, கூட்டம் கூட்டமாக வருவார்கள்!

இங்கே போல, நாலைந்து பேர் மட்டும் நின்று எடுத்துக் கொடுப்பது முடியாது!
அத்தோடு, சாப்பாட்டு முறையிலும், உடல் உழைப்பு அதிகம் என்பதால்,
அவர்களுக்குப் பசி தாங்குவதாக, அளவு கொஞ்சம் நிறைய இருப்பதான
அயிட்டங்களாக, உப்பு காரம் சற்று அதிகம் போட்டுத் தயார் செய்து
வைத்திருப்பார்கள்!" என்று மல்லிகா விவரம் சொன்னாள். "எல்லாம், உங்கள்
பாஸ் சத்யாகர் சாருடைய ஏற்பாடுதான். அதற்குமுன் சாப்பாட்டு ஹாலில்
எப்போதும் தகராறாகத்தான் இருக்குமாம்!"

வீட்டில் இது பற்றி சேதுமாதவனிடம் அவள் சொன்னபோது, "இந்த சத்யாகர்
கெட்டிக்காரனாகத் தெரிகிறதே! உப்பு, காரம் விஷயம் சொன்னேன்! உடல்
உழைக்கிறவர்களுக்கு வியர்த்து உடல் உப்புகள் குறையும்! ஈடு செய்ய இலகு
வழி! நம் தொழிற்சாலையில், தனியாக உப்பு வைக்க சொன்னேன்! ஆனால்,
சுவையில்லை என்று முணுமுணுப்பு! இந்த வழி முயற்சிக்க வேண்டும்!" என்றார்
அவர்!

பாராட்டுவதில் அவரது வழி!

சத்யாகரின் வகைப் பாராட்டும் சுசித்ராவுக்குச் சிறப்பாகத்தான் தோன்றியது!

விஷயம் அறிந்த மல்லிகாவும் "பரவாயில்லையே! 'வசிஷ்டர் வாயால்
பிரும்மரிஷி' என்பார்களே, அது போன்ற பாராட்டு, இது!" என்றுதான்
சொன்னாள். கூடவே, "ஆனால், இதற்காக எந்தச் சலுகையையும் எதிர்பார்த்து
விடாதேப்பா. அப்புறம் ஏமாந்து போவாய்!" என்றும் எச்சரித்தாள் அவள்.

"மாட்டவே மாட்டேன்!" என்று மலர்ந்த முகத்துடன் கூறியவாறு
கம்ப்யூட்டரை அவள் மூடிக் கொண்டிருந்தபோது, "சத்யா சார் இல்லையா?"
என்று கேட்டபடி, தருண் அவசரமாக வந்தான்!

"சேர்மனோடு ஏதோ மீட்டிங் என்று போயிருக்கிறார்! என்ன சொல்ல
வேண்டும்?" என்று சுசித்ரா விசாரித்தாள்.

"அவருக்குத் தெரியும்! போபாலில் முக்கிய வேலை இருக்கிறது! ஆனால்,
சென்னையை விட்டு வெளியூருக்குப் போக முடியாது என்று அசோக்
சாதிக்கிறான்! இங்கே இருந்து கொண்டு அங்குள்ள விற்பனைக்கு எப்படி
ஒப்பந்தம் போட முடியும்? எங்கள் பிரிவில் மற்ற எல்லோரும் டூர் போய் வந்தாகி
விட்டது! இரண்டு தரம்! இவன் மட்டும் ஒரு தடவை கூடப் போக முடியாது
என்றால், மற்ற எல்லாருக்கும் எரிச்சல் வந்து, உள் கலகம் வெடிக்கும்! வீட்டில்
யாருக்கும் உடம்பு சரியில்லையா என்றால், அப்படியும் இல்லையாம்! அசோக்கை
என்ன செய்வது என்று, சத்யா சாரை முடிவெடுக்கச் சொல்லுங்கள்!" என்று
சுருக்கமாகப் பிரச்சினையைத் தெளிவு படுத்தியவன், மேற்கொண்டு நில்லாமல்,
வேகமாகத் திரும்பிச் சென்றுவிட்டான்!

சத்யாகரின் மேஜைக்கு அருகில் இருந்த மல்லிகாவிடம், மேஜையில் இருந்த
அவனது குறிப்புப் புத்தகத்தை எடுத்துத் தரச் சொல்ல எண்ணி அவளைப் பார்த்த
சுசித்ரா திகைத்துப் போனாள்!

அவ்வளவு தவிப்பு அந்த முகத்தில்! என்ன காரணமாக இருக்கக் கூடும்?



## அத்தியாயம் 5

மல்லிகாவைக் கவனியாதது போலத் தானே சென்று, சத்யாகரின் மேஜை
மேல் இருந்த குறிப்புப் புத்தகத்தை எடுத்துத் தருணின் பெயரையும், அவன்
வந்த காரணத்தையும் சுருக்கமாக எழுதி வைத்துவிட்டுத் திரும்பினால்,
அதற்குள் மல்லிகாவும் ஒருவாறு தன் முகத்தைச் சீர்ப்படுத்தி வைத்திருந்தாள்.

எதையும் காணாதது போல சுசித்ரா நடித்தாலும், அவளுக்கு உள்ளூரக்
குடைச்சலே!

மல்லிகாவுக்கு என்ன பிரச்சினை?

அதுவும், அவ்வளவு நேரம் நன்றாகவே பேசிக் கொண்டிருந்தவளுக்கு?

தருண் வந்தது தவிர வேறு ஒன்றும் நடக்கவில்லையே!

கடவுளே! தருண்!

இந்தப் பெண் தருணை நேசிக்கிறாள்!


**வழுக்கையில் முடிவளர 25 நாட்கள்**

**உலக மங்கையரின் மனம் கவர்ந்த**
**கொல்லிமலை மூலிகை கூந்தல்தைலம்**

உங்கள் கூந்தலின் பாதுகாவலன், கருமையான அடர்த்தியான கூந்தலைப் பெற மூலிகை கூந்தல்தைலம் இது.

- 25 நாட்களில், வலுக்கைத்தலையில் முடிவளர்வதைக் காணலாம்.
- செம்பட்டை, இளநரை, பூச்சிவெட்டு 25 நாட்களில் தீர்வு.
- முடிஉதிர்வதை தடுத்து, அடர்த்தியான கூந்தல் பெறலாம்.
- பேன், பொடுகு, ஈரு, பூச்சிவெட்டு 10 நாட்களில் குணமாகும்.

**தமிழ்நாடு ஹெல்த்கேர் சென்டர் அங்கீகாரம் பெற்றது**

**உங்கள் முக அழகை பெற மூலிகைப் பவுடர்**

சிவப்பாக அழகான முகம்பெறவும், முகப்பரு, கருவளையம், கரும்படை, முகச்சுருக்கம், தடுக்கப்படும். பக்கவிளைவற்ற 100% மூலிகை மருந்து ஒரே ஒருமுறை உபயோகித்து பாருங்கள் உணர்வீர்கள்.

**முகவரி: Dr. கே. ராஜசேகரன், 1/6 பாத்திமா நகர், நாஞ்சிக்கோட்டை ரோடு, தஞ்சாவூர். போன்: 04362-239314, 9360342993.**

தமிழ்நாடு முழுவதும் டாகடரை சந்திக்க

ஒவ்வொரு மாதமும் 4-ம் தேதி திருச்சி, 11-காரைக்கால், கடலூர்-10, பாண்டி-17, விழுப்புரம்-18, திருப்பூர்-22, ஈரோடு-23, கோவை-30 போன்ற நாட்களில் உங்கள் பகுதிகளில் நேரில் டாகடரை சந்திக்கலாம் மேலும் தொலைபேசி, தபால்மூலம் ஆலோசனையும்...

மனதிற்குள் தருணைக் கொணர்ந்து பார்த்த சுசித்ராவுக்கு ரொம்பவே மனம் சோர்ந்து போயிற்று! இரண்டு பேருக்கும் எப்படிப் பொருந்தும்?

கொஞ்சம் உயரம் குறைவு என்பது தவிரக் கிட்டத்தட்ட சத்யாகர்தான் அவனும்!

நடை, உடை பாவனையில் கம்பீரம், நிமிர்வு, வேலையில் ஈடுபாடு!

மல்லிகாவை அவன் அருகே நிறுத்தி வைத்துப் பார்த்தால்...

மல்லிகாவைப் பிடிக்கும் என்றாலும், சுசித்ராவுக்கே பொருத்தமாகத் தெரியவில்லை!

சற்றுக் களைத்த நலுங்கிய தோற்றம்! கொஞ்சம் தொளதொளப்பான சற்று நிறம் மங்கிய ஆடைகள்! 'கண்டிஷனர்' போட்டுக் கோதி விட்டால், அவளது நெளி கூந்தல், அலையலையாக விழுந்து அழகாகத் தோன்றக் கூடும்! ஆனால், சும்மா வாரி விடக் கூட நேரம் இல்லாதது போல, எப்போதும் அவள் கூந்தல் கொஞ்சம் கலைந்து பறந்துகொண்டுதான் இருக்கும்!

எப்படியும் திரும்பிப் பார்க்கத் தூண்டுகிற தோற்றமில்லை!

இரண்டு பேருக்கும் எப்படி ஒத்து வரும்?

தருணும், மல்லிகாவைத் திரும்பிப் பார்க்கவே இல்லை!

பாவம் என்று உள்ளூர வருத்தப்பட்டாள் சுசித்ரா! ஆனால், இதில் அவள் செய்வதற்கு ஒன்றுமில்லையே!

மனதை மாற்றும் முயற்சியாக, இரண்டு மூன்று நாட்களாக, சத்யாகரை அலுவல் அறையில் காணவே முடியவில்லை என்றாள் சுசித்ரா!

"அது... அனேகமாக சேர்மன் சாரிடம் பேசப் போயிருப்பார் என்று நினைக்கிறேன்!" என்றாள் மல்லிகா.

வேண்டும் என்றே சத்யாகர் சென்ற இடத்தைச் சொல்லாமல் விட்டிருந்த சுசித்ரா "ஆ...ஆமாம்! ஆனால் அது உனக்கு எப்படித் தெரியும்?" என்று வியப்புடன் வினவினாள்.

"அது ஒன்றும் பெரிய ரகசியம் இல்லையே! இந்த நிறுவனத்தின் ஆண்டுவிழாக் கொண்டாட்டம் அடுத்த மாதம் வருகிறதல்லவா, அதற்கு என்னென்ன செய்யலாம் என்று, அதைப் பற்றிப் பெரியவருடன் பேசப் போவார் என்பது எல்லோரும் அறிந்த ரகசியம்தானே?" என்று உணர்ச்சி வெளிப்படாத குரலிலேயே விவரம் சொன்னாள் மற்றவள்.

ஒரு கொண்டாட்டத்தைக் கூட உற்சாகமே இல்லாமல் சொல்கிறாளே, தருண் இவளை இவ்வளவா பாதித்திருக்கிறான் என்று உள்ளூர எண்ணியவளுக்கு, இவள் இப்படி உம்மென்று இருந்தால், அவனும்தான் இவளை எப்படித் திரும்பிப் பார்ப்பான் என்றும் தோன்றியது!

மல்லிகாவை எப்படியேனும் உற்சாகப்படுத்தி விடும் நோக்கத்துடன், "கொண்டாட்டம் என்றால் எப்படி, மல்லிகா? விருந்து, கச்சேரி... இப்படி இருக்குமா? அல்லது வேடிக்கை விளையாட்டுகள்... இப்படி இருக்குமா?" என்று மேலும் துருவினாள் சுசித்ரா.

அலுவலகத்தின் மேஜை நாற்காலிகளோடு இன்னொரு பொருளாக அல்லாமல், தருணும் இவளும் வேறு மாதிரி எங்காவது சந்திக்க முடிந்தால்...

ஆனால் மல்லிகாவின் தோள்கள் மேலும் தொய்ந்தன.

"முன்னெல்லாம் இரவில் விருந்தும், அந்த ஆண்டின் சிறந்த பணிகளுக்காகப் பரிசு வாங்குவதும் மட்டுமாக இருக்கும்! சத்யா சார் வந்த பிறகு, விளையாட்டுப் போட்டிகள், அறிவுப் போட்டிகளோடு கூடவே விருந்துமாக, விழா ரொம்ப நன்றாக இருப்பதாகப் பேசிக் கொள்வார்கள்!" என்றாள் மரத்த குரலில்.

"பேசிக் கொள்வார்கள் என்றால்? நீ போனது இல்லையா?"

"இல்லை." என்ற சுருக்கமான பதிலோடு, பேச்சை மாற்ற முயன்றாள் மல்லிகா.

ஆனால், சுசித்ரா துருவித் துருவிக் கேட்கவும், அவள் தயக்கத்துடன் தன் நிலை பற்றிச் சொன்னாள்.

"என் தம்பிக்கு குணப்படுத்த முடியாத ஒரு வியாதி, சுசி. அவன் சரியாக நடந்ததே இல்லை! மருந்து மசாஜ் என்று நிறையச் செலவு பிடித்த மருத்துவம்! எப்போதுமே, வீட்டில் வசதி சற்றுக் குறைவுதான். அதிலும், அப்பா போன பிறகு, வீட்டில் பணமே இருப்பதில்லை. அம்மா, நான் எல்லோருமே ஆண்டுக்கணக்கில் உழைக்கக் கூடிய துணிகளைத்தான் வாங்குவது! நல்ல துணி பற்றி நினைக்கக் கூட முடியாது! ஆண்டு விழாவுக்கு எல்லோருமே உன்னது போலச் சிறப்பாக உடையணிந்து வருவார்கள்! சிலர் தகதக என்று கூட வருவார்களாம்! நான் எப்படி இதில்..." என்று ஒற்றை விரலால், தன் உடையைக் காட்டிப் பெருமூச்சு விட்டாள்.

படுக்கையறை போக, அதே போலப் பெரிதாக ஓர் உடை மாற்றும் அறை! அதில் ஒரு பக்கச் சுவர் முழுவதுமாய் 'வார்ட்ரோப்' மாதிரி அமைத்து, முழுவதுமாய் நிரப்பியிருந்த அவளது உயர் ரக ஆடைகளின் வரிசை சுசித்ராவின் மனதில் வலம் வந்தன! என்னென்ன வண்ணங்கள், என்னென்ன டிசைன்கள் என்று பலது அவளுக்கே நினைவு இல்லை! அவற்றிலும் ஓரிரு முறையே அணிந்து, பிடிக்கவில்லை என்று ஒதுக்கியவை பல உண்டு! இடத்தை அடைக்கின்றன என்று இவையெல்லாம், கொஞ்ச நாளில், ஏதாவது தொண்டு நிறுவனங்கள் நடத்தும் கருணை இல்லங்களுக்குப் போகும்!

அங்கே கூட முழுமையாகப் போய்ச் சேர்வது இல்லை., மிக நல்ல துணிவகைகள், வழியிலேயே காணாமல் போய்விடும் என்றும்கூடச் சொல்லக் கேட்டதுண்டு! ஆனால், நல்லதை நினைத்துக் கொடுத்தது கொடுத்தாகிவிட்டது., அதைத் திருடினால், அவரவர் பாவம் என்று விட்டேற்றியாக எண்ணுவதோடு சுசித்ரா விட்டுவிடுவாள்!

இப்போது, இருப்பனவற்றுள் முடிந்த அளவு எளிமையாகத் தோன்றுவன பார்த்து அணிந்து கொண்டு வேலைக்கு வருகிறாள்!

ஆனால், இங்கே இந்த நல்ல பெண், சற்று நல்லதான உடை இல்லை என்று, உள்ளேயே முடங்கிக் கிடக்கிறாள்!

தன் பிழை போல, மனம் குன்றிப் போனாள் அவள்!

அவள் முகத்தைப் பார்த்துவிட்டு, "சாரி சுசி! என் கஷ்டத்தைப் பற்றி, நான்

உன்னிடம் சொல்லியிருக்கக் கூடாது! சரியாகச் சொல்லப் போனால், இதை நாங்கள் கஷ்டமாகக் கருதுவதே கிடையாது! கண்ணனின் பேச்சில், சிரிப்பில்... அவன் சுகமாகத் தூங்கினால் அதைப் பார்த்துக் கூட, அம்மாவும் நானும் ரொம்பவே சந்தோஷப்பட்டுக் கொள்வோம்! அதிசயமாய், இது போன்ற சில சமயங்களில்தான்..." என்று வாக்கியத்தை முடிக்காமலே பேச்சை முடித்தாள் மல்லிகா.

இது போன்ற சமயங்களோடு, இப்போது தருணும் என்று எண்ணினாள் சுசித்ரா!

இந்த ஒரு வாரத்தில் இரு பெண்களுக்கும் இடையே ஓரளவு நெருக்கம் வளர்ந்திருந்த போதும், இருவருமே குடும்ப விஷயங்கள் பேசியது இல்லை!

சுசித்ராவுக்குத் தன் செல்வ நிலை பற்றி யாரிடமுமே சொல்ல வேண்டாம் என்ற எண்ணம். மல்லிகாவுக்குத் தன்கஷ்டம் தன்னோடு என்பது.

இப்போது கேட்ட அளவில் சுசித்ராவின் மனம் தவித்தது!

"உன் தம்பியின் மருத்துவத்துக்கு ஏதாவது உதவி கிடைக்குமா என்று இங்கே விசாரித்தாயா, மல்லிகா? வரி விலக்குக் கிடைக்கும் என்று, நிறைய நிறுவனங்களில் இது போன்ற விஷயங்களுக்காகப் பண உதவி செய்கிறார்களே! முயற்சித்தீர்களா?" என்று மல்லிகாவிடம் விசாரித்தாள்.

ஆண்டுதோறும், ஒரு குறிப்பிட்ட தொகையை சேதுமாதவன் இப்படிக் கொடுப்பது, அவள் அறிந்ததே! சமீபத்தில்கூட, ஓர் இதய அறுவை சிகிச்சைக்காகப் பெருந்தொகையை அதுபோலக் கொடுத்திருந்தார்! வரிக் கழிவுக்கான தொகை தாண்டிவிட்டிடாலும், பாவம் என்று கையிலிருந்து கொடுத்ததாகச் சொன்னார்!

"சேர்மன் எனக்கு வேலை கொடுத்ததே பெரிய விஷயம்! அதற்கு மேல் அவரைத் தொல்லை செய்யக் கூடாது என்று நினைத்தோம்! அத்தோடு, கண்ணனுக்கு அலோபதி வைத்திய முறை அவ்வளவாக ஒத்துப் போகவில்லை! ஆயுர்வேதம், சித்தா என்று மூலிகை மருத்துவம் பார்க்கிறோம். எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்கிற மாதிரி! அதை, என்னவென்று கணக்கிட்டுக் கேட்க முடியும்? தொண்டு நிறுவனங்களிலேயே, இந்த மாதிரிக்குப் பணம் தர முடியாது என்கிறார்கள்... சரிசரி, என் கதையை விடு, சுசி. என்னை மறந்து, நீ சந்தோஷமாகப் போய்விட்டு வா!" என்று முடித்தாள்.

ஆண்டுவிழாவைப் பற்றிய சுற்றறிக்கையை அன்று சத்யாகர் சொல்லச் சொல்ல அன்று குறிப்பெடுத்த போதுதான், இந்த விழாவிற்காக மல்லிகா ஏன் ஏங்கினாள் என்று சுசித்ராவுக்கு முழுமையாகப் புரிந்தது!

விழா நடப்பது, நிறுவனத்துக்குச் சொந்தமான பண்ணைப் பகுதியில்தான்! பசுமையாகப் பராமரித்து வந்தார்கள்! இயற்கை எழில் கொஞ்சும் இடம். குடும்பமாக எங்கோ சென்றபோது, அந்த இடத்தைக் காட்டி, சேதுமாதவன் பாராட்டிக் கூறியிருக்கிறார்! நாவூறும் உணவு வகைகள். விளையாட்டுப் போட்டிகள்! பரிசுகள்! கட்டணம் நூறு ரூபாய்!

ஆகக்கூடிய செலவைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, கட்டணம் மிகவும் குறைவாகவே சுசித்ராவுக்குத் தோன்றியது!

ஆனால், உடை மட்டுமில்லாமல், இந்த நூறு ரூபாய்க் கட்டணமும் மல்லிகாவை மருட்டியிருக்க வேண்டும்!

இவை எல்லாம் தெரிந்தபின்னும், சந்தோஷமாக எப்படிப் போவது?

மாலையில் வீடு திரும்பி, உடம்பு கழுவி உடை மாற்றிய சுசித்ரா, வார்ட்ரோபின் அத்தனை கதவுகளையும் திறந்து வைத்து, வெறித்துப் பார்த்தபடி நிற்பதைக் கண்டு, அவளைத் தேடி வந்த அவளுடைய தாயார் மஞ்சுளா திகைத்தாள்!

"ஏய், என்ன சித்து, ஒரு மாதிரி நிற்கிறாய்?" என்று கவலையுடன் வினவினாள்.

"ஒன்றுமில்லை..." என்று தொடங்கிய மகளுக்கு, மல்லிகா பற்றித் தாயிடம் சொல்லத் தயக்கமாக இருந்தது!

எத்தனையோ தரும காரியங்களில் பங்கேற்றபோதும், இது போன்ற எண்ணங்கள், அன்னைக்குப் பிடிக்காது!

"நாமாக யார் பொருளையும் பறித்ததில்லை! இயன்ற அளவு உதவியும் செய்கிறோம்! அதற்குமேல், இதில் குற்றக் குறுகுறுப்புக்கோ, வருத்தத்துக்கோ, என்ன தேவை இருக்கிறது? அப்படி உணர்வதே முட்டாள்த்தனம்" என்பாள்.

அதுவும், சிந்தித்தால் சரியாகத்தானே தெரிகிறது!

மல்லிகாவின் சொத்தைப் பிடுங்கி, சுசித்ரா இத்தனையையும் வாங்கிக் கொள்ளவில்லை!

ஆனாலும் மனது கஷ்டப்படாமல் சுசித்ராவால் இருக்க முடியவில்லை!

"என்னடி, கேட்டால் பதில் சொல்லாமல் சும்மா விழிக்கிறாய்? முகம் வேறு வாடிக்கிடக்கிறது! என்ன சொல்லு! உன்னிடம் இல்லாததாக யாரும் அணிந்து வந்துவிட்டார்களா? சொல்லு! இப்போதே போய், வாங்கி வந்துவிடுவோம்!" என்று மகளைத் தேற்ற முயன்றாள் அன்னை!

இவளிடம் போய், என்னத்தைச் சொல்வது?

"ஐயா, அப்படி இல்லைம்மா! அலுவலகத்தில் மற்றவர்களைப் போல எளிமையாக அணிய வேண்டும் என்று பார்த்தால், அதற்குச் சரியாக எதுவும் இல்லை! அதுதான் யோசித்துக் கொண்டு நின்றேன்!" என்று சமாளித்தாள் மகள்.

"பூ! இதுதானா? இதற்குப் போய், அழுகிற மாதிரி நிற்பதா? வேண்டும் என்றால், கடைக்குப் போய், உனக்கு வேண்டிய தினுசில் ஒரு டஜன் வாங்கிக் கொள்வதை விட்டு, உம்மென்று... சற்று நேரம் மனதைக் கலக்கி விட்டாயே! கைச்செலவுப் பணம் தீர்ந்துவிட்டதா? வேண்டிய பணம் சொல்லு, தருகிறேன்!" என்றாள் பெற்றவள் கனிவாக!

"இல்லைம்மா! இருக்கிறது! நானே பார்த்துக் கொள்கிறேன்!" என்று சுசித்ரா முறுவலிக்கவும், மஞ்சுளா சமாதானமாகிப் போய்விட்டாள்.

காரை எடுத்துக் கொண்டு கடைக்குச் செல்ல ஒரு சாக்கும் கிடைத்துவிட,

உன்னிடம் சொல்லியிருக்கக் கூடாது! சரியாகச் சொல்லப் போனால், இதை நாங்கள் கஷ்டமாகக் கருதுவதே கிடையாது! கண்ணனின் பேச்சில், சிரிப்பில்... அவன் சுகமாகத் தூங்கினால் அதைப் பார்த்துக் கூட, அம்மாவும் நானும் ரொம்பவே சந்தோஷப்பட்டுக் கொள்வோம்! அதிசயமாய், இது போன்ற சில சமயங்களில்தான்..." என்று வாக்கியத்தை முடிக்காமலே பேச்சை முடித்தாள் மல்லிகா.

இது போன்ற சமயங்களோடு, இப்போது தருணும் என்று எண்ணினாள் சுசித்ரா!

இந்த ஒரு வாரத்தில் இரு பெண்களுக்கும் இடையே ஓரளவு நெருக்கம் வளர்ந்திருந்த போதும், இருவருமே குடும்ப விஷயங்கள் பேசியது இல்லை!

சுசித்ராவுக்குத் தன் செல்வ நிலை பற்றி யாரிடமுமே சொல்ல வேண்டாம் என்ற எண்ணம். மல்லிகாவுக்குத் தன்கஷ்டம் தன்னோடு என்பது.

இப்போது கேட்ட அளவில் சுசித்ராவின் மனம் தவித்தது!

"உன் தம்பியின் மருத்துவத்துக்கு ஏதாவது உதவி கிடைக்குமா என்று இங்கே விசாரித்தாயா, மல்லிகா? வரி விலக்குக் கிடைக்கும் என்று, நிறைய நிறுவனங்களில் இது போன்ற விஷயங்களுக்காகப் பண உதவி செய்கிறார்களே! முயற்சித்தீர்களா?" என்று மல்லிகாவிடம் விசாரித்தாள்.

ஆண்டுதோறும், ஒரு குறிப்பிட்ட தொகையை சேதுமாதவன் இப்படிக் கொடுப்பது, அவள் அறிந்ததே! சமீபத்தில்கூட, ஓர் இதய அறுவை சிகிச்சைக்காகப் பெருந்தொகையை அதுபோலக் கொடுத்திருந்தார்! வரிக் கழிவுக்கான தொகை தாண்டிவிட்டிடாலும், பாவம் என்று கையிலிருந்து கொடுத்ததாகச் சொன்னார்!

"சேர்மன் எனக்கு வேலை கொடுத்ததே பெரிய விஷயம்! அதற்கு மேல் அவரைத் தொல்லை செய்யக் கூடாது என்று நினைத்தோம்! அத்தோடு, கண்ணனுக்கு அலோபதி வைத்திய முறை அவ்வளவாக ஒத்துப் போகவில்லை! ஆயுர்வேதம், சித்தா என்று மூலிகை மருத்துவம் பார்க்கிறோம். எத்தைத் தின்றால் பித்தம் தெளியும் என்கிற மாதிரி! அதை, என்னவென்று கணக்கிட்டுக் கேட்க முடியும்? தொண்டு நிறுவனங்களிலேயே, இந்த மாதிரிக்குப் பணம் தர முடியாது என்கிறார்கள்... சரிசரி, என் கதையை விடு, சுசி. என்னை மறந்து, நீ சந்தோஷமாகப் போய்விட்டு வா!" என்று முடித்தாள்.

ஆண்டுவிழாவைப் பற்றிய சுற்றறிக்கையை அன்று சத்யாகர் சொல்லச் சொல்ல அன்று குறிப்பெடுத்த போதுதான், இந்த விழாவிற்காக மல்லிகா ஏன் ஏங்கினாள் என்று சுசித்ராவுக்கு முழுமையாகப் புரிந்தது!

விழா நடப்பது, நிறுவனத்துக்குச் சொந்தமான பண்ணைப் பகுதியில்தான்! பசுமையாகப் பராமரித்து வந்தார்கள்! இயற்கை எழில் கொஞ்சும் இடம். குடும்பமாக எங்கோ சென்றபோது, அந்த இடத்தைக் காட்டி, சேதுமாதவன் பாராட்டிக் கூறியிருக்கிறார்! நாவூறும் உணவு வகைகள். விளையாட்டுப் போட்டிகள்! பரிசுகள்! கட்டணம் நூறு ரூபாய்!

ஆகக்கூடிய செலவைக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, கட்டணம் மிகவும் குறைவாகவே சுசித்ராவுக்குத் தோன்றியது!

ஆனால், உடை மட்டுமில்லாமல், இந்த நூறு ரூபாய்க் கட்டணமும் மல்லிகாவை மருட்டியிருக்க வேண்டும்!

இவை எல்லாம் தெரிந்தபின்னும், சந்தோஷமாக எப்படிப் போவது?

மாலையில் வீடு திரும்பி, உடம்பு கழுவி உடை மாற்றிய சுசித்ரா, வார்ட்ரோபின் அத்தனை கதவுகளையும் திறந்து வைத்து, வெறித்துப் பார்த்தபடி நிற்பதைக் கண்டு, அவளைத் தேடி வந்த அவளுடைய தாயார் மஞ்சுளா திகைத்தாள்!

"ஏய், என்ன சித்து, ஒரு மாதிரி நிற்கிறாய்?" என்று கவலையுடன் வினவினாள்.

"ஒன்றுமில்லை..." என்று தொடங்கிய மகளுக்கு, மல்லிகா பற்றித் தாயிடம் சொல்லத் தயக்கமாக இருந்தது!

எத்தனையோ தரும காரியங்களில் பங்கேற்றபோதும், இது போன்ற எண்ணங்கள், அன்னைக்குப் பிடிக்காது!

"நாமாக யார் பொருளையும் பறித்ததில்லை! இயன்ற அளவு உதவியும் செய்கிறோம்! அதற்குமேல், இதில் குற்றக் குறுகுறுப்புக்கோ, வருத்தத்துக்கோ, என்ன தேவை இருக்கிறது? அப்படி உணர்வதே முட்டாள்த்தனம்" என்பாள்.

அதுவும், சிந்தித்தால் சரியாகத்தானே தெரிகிறது!

மல்லிகாவின் சொத்தைப் பிடுங்கி, சுசித்ரா இத்தனையையும் வாங்கிக் கொள்ளவில்லை!

ஆனாலும் மனது கஷ்டப்படாமல் சுசித்ராவால் இருக்க முடியவில்லை!

"என்னடி, கேட்டால் பதில் சொல்லாமல் சும்மா விழிக்கிறாய்? முகம் வேறு வாடிக்கிடக்கிறது! என்ன சொல்லு! உன்னிடம் இல்லாததாக யாரும் அணிந்து வந்துவிட்டார்களா? சொல்லு! இப்போதே போய், வாங்கி வந்துவிடுவோம்!" என்று மகளைத் தேற்ற முயன்றாள் அன்னை!

இவளிடம் போய், என்னத்தைச் சொல்வது?

"ஐயா, அப்படி இல்லைம்மா! அலுவலகத்தில் மற்றவர்களைப் போல எளிமையாக அணிய வேண்டும் என்று பார்த்தால், அதற்குச் சரியாக எதுவும் இல்லை! அதுதான் யோசித்துக் கொண்டு நின்றேன்!" என்று சமாளித்தாள் மகள்.

"பூ! இதுதானா? இதற்குப் போய், அழுகிற மாதிரி நிற்பதா? வேண்டும் என்றால், கடைக்குப் போய், உனக்கு வேண்டிய தினுசில் ஒரு டஜன் வாங்கிக் கொள்வதை விட்டு, உம்மென்று... சற்று நேரம் மனதைக் கலக்கி விட்டாயே! கைச்செலவுப் பணம் தீர்ந்துவிட்டதா? வேண்டிய பணம் சொல்லு, தருகிறேன்!" என்றாள் பெற்றவள் கனிவாக!

"இல்லைம்மா! இருக்கிறது! நானே பார்த்துக் கொள்கிறேன்!" என்று சுசித்ரா முறுவலிக்கவும், மஞ்சுளா சமாதானமாகிப் போய்விட்டாள்.

காரை எடுத்துக் கொண்டு கடைக்குச் செல்ல ஒரு சாக்கும் கிடைத்துவிட

மல்லிகாவின் உருவத்தை மனதில் வைத்து, அவளுக்கு ஒரு சல்வார் செட்டுக்கு ஏற்பாடு செய்தாள்.

தாயாருக்குப் பதில் சொல்வதற்காகத் தனக்கும் ஒன்று தைக்கச் சொன்னாள்.

வேலை நேரத்தில் கிடைக்கும்படியாக, சல்வார் செட்டை மல்லிகாவுக்கு அனுப்பிவிட்டு, சுசித்ரா சிறு பரபரப்புடனேயே தன் வேலையில் ஈடுபட்டாள்.

மல்லிகா இதை எப்படி எடுத்துக் கொள்ளக் கூடும்?

எதுவானாலும், மதிய உணவு இடைவேளையின்போது தெரிந்துவிடும்.

மல்லிகாவின் நட்பு தொடருமா, அல்லவா என்பது உட்பட!

ஆனால், சத்யாகர் எதையோ சொல்ல, அதைச் சுருக்கெழுத்தில் குறித்துக் கொண்டிருந்தபோது ஒரு புயலைப் போல வேகமாக உள்ளே வந்த மல்லிகா அவளை அணைத்த வேத்தில், சுசித்ராவின் கையிலிருந்த குறிப்புப் புத்தகம் எங்கோ பறந்தது!

"சுசி, சுசி! நான் உனக்கு எப்படி நன்றி சொல்வது? என்னைப் போல ஒருத்திக்கு இது ராஜயோகம்! இதைப் போய்த் தப்பாக நினைத்துக் கொள்ள வேண்டாம் என்று வேறு எழுதி வைக்க வேண்டுமா? நான் ஏன், தப்பாக நினைத்துக் கொள்ளப் போகிறேன்! ஆயிரம், பத்தாயிரம்... கோடி தாங்க்ஸ் தான் சொல்ல வேண்டும்!" என்று உணர்ச்சி மயமாகக் கொட்டித் தீர்த்தவளுக்கு, அப்புறம்தான் சுற்றுப்புறம் நினைவு வந்தது போலும்!

வியப்புடன் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த சத்யாகரை அசடு வழிய நோக்கி, "சா...சா...சாரி, சார்! வேலையில் குறுக்கிட்டதற்கு மன்னித்துக் கொள்ளுங்கள்!" என்று கெஞ்சலாக வேண்டியவள், அவள் திடுமென வந்து அணைத்ததால் சுசித்ராவின் கையிலிருந்து எகிறிப் போய்ச் சற்றுத் தள்ளி விழுந்திருந்த குறிப்புப் புத்தகத்தை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டு, "நீயும் மன்னித்துக் கொள், ஆனால், என்னால் அடக்கிக் கொள்ள முடியவில்லை! வந்து... சரி, மதியம் பேசுவோமே!" என்றவள் வந்தது போல அதே புயல் வேத்தில் மறைந்தும் போனாள்!

குறிப்புப் புத்தகத்தில் சரியான பக்கத்தைத் திருப்புகிற பாவனையில், சுசித்ராவும் சுதாரித்தாள்.

மல்லிகா அவமானமாக நினைக்காமல் சல்வாரை ஏற்றுக் கொண்டாள் என்பது, அவளுக்கு நிம்மதியைத் தந்தது! கூடவே நூறு ரூபாய் அனுமதிச் சீட்டையும் தப்பாக எண்ணவில்லை!

அவளைப் பொறுத்தவரையில் ஓர் அன்பான பெண்ணின் தேவைக்கு உதவி செய்ய முடிந்த நிம்மதி!

ஆனால், சத்யாகர் என்ன நினைப்பான்?

அவள் சற்று யோசனையோடு எதிர்பார்த்தது போலவே, "என்ன விஷயம்? மல்லிகாவுக்குத் தலைகால் தெரியவில்லையே?" என்று சத்யாகர் விசாரித்தான்.

ஆனால், சுசித்ரா தயாராக இருந்தாள். தன் வழக்கமான பளீர் முறுவலோடு, "அது எங்கள் இருவருக்கும் இடையே, ஒரு குட்டி ரகசியம்!" என்று முடித்துவிட்டு, "அப்புறம் சார்...?" என்று வேலையில் கவனம் காட்ட, அவனும்



அதில் முழுகிப் போனான்.

ஆனால், அவளுக்கு உள்ளூர ஓர் உறுத்தல்! கொஞ்ச நஞ்சமல்ல ரொம்பவே! அவனிடம் மறையாது சொல்ல முடியவில்லையே! ஊரில் உள்ள எல்லோரிடமும் அவளது விஷயங்களை மறைக்காமல் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்ட போதும், அவளது உறுத்தல் மறைவேனா என்றுவிட்டது!

சத்யாகர் கொடுத்த வேலை, ஒரு கலந்துரையாடலுக்கான அறிக்கைதான்! அறிக்கையின் சாராம்சம் ஒன்றேதான் என்றபோதும், அது அனுப்பப்பட வேண்டியவருக்குத் தக்கவாறு சிறு சிறு மாற்றங்கள் செய்ய வேண்டி இருந்ததால், கிட்டத்தட்ட எல்லாமே தனித் தனியாகவே எழுதப்பட வேண்டியதாயிருந்தது!

விஷயம் புரியாதவர்களுக்கு இது வீணான அதிகப்படி வேலையாகக் கூடத் தோன்றலாம்! சுசித்ராவும் அப்படி எண்ணுகிறாளோ என்று யோசித்தவனின் பார்வை தன்னையறியாமல், அவளிடம் சென்றது!

சுசித்ரா எப்போதுமே, வேலை அதிகம் என்பது போல வெளியே காட்டிக் கொண்டதே கிடையாது! திடுமென ஓர் அவசர வேலை என்றாலும், அதிக நேரம் இருந்து அதைச் செய்துவிட்டே செல்வதை, அவன் பார்த்திருக்கிறான்! அதற்காக, அலுப்பும் சலிப்புமாக, வேலையை மெதுவாகச் செய்து இழுப்பதும் கிடையாது என்பதையெல்லாம் சிறு வியப்புடன் உணர்ந்தான் அவன்.

இந்தச் சிறப்புகளை, அவள் இதுவரை எண்ணிப் பார்த்ததே கிடையாதே!

இப்போதும் மானிட்டரைப் பார்த்தபடி, அழகான மெல்லிய விரல்களால், கீபோர்டை லாவகமாக, ஆனால் வேகமாகவேதான் தட்டிக் கொண்டிருந்தாள் அவள். அதுவே, நளினமான ஒரு நாட்டியம் போல!

பார்த்துக் கொண்டே இருக்கலாம் போன்ற அழகான நீண்ட விரல்கள்!

விரல்களிலிருந்து பார்வையைப் பிரித்து முகத்தை நோக்கினால், வேலையில் கவனம் தவிர அங்கே வேறு எதுவும் தெரியவில்லை! சரியாகச் சொல்வதானால், அவ்வப்போது புருவங்கள் லேசாக உயர்ந்து, அறிக்கைப் பகுதிகளில் எதையோ உணர்ந்து வியப்பது போலவும் தோன்றிற்று!

அவனது சிறு சிறு மாற்றங்களையா? அது என்ன என்று அவளுக்குப் புரிகிறதா?

புரிகிறது என்றுதான் அவனுக்குத் தோன்றியது! அவளது வேலைத் தகுதிக்கு மீறிய தொழில் துறை அறிவு அவளுக்கு இருக்கிறது! மற்றபடி, அன்று ஃபோர்மனிடம் பேச வேண்டும் என்று, அவளுக்கு எப்படித் தோன்றியிருக்கும்?

பார்க்கப் பார்க்க, அவனுக்கு இன்னும் வியப்பு கூடிற்று!

சுத்தமாகப் பளபளத்த கூந்தலில் இருந்து, கண்ணை உறுத்தாதபடி, உடைக்கு ஏற்றவாறு லேசான சாயம் பூசப்பட்டிருந்த கால் விரல் நகங்கள் வரை, அப்போதுதான் பார்லரில் இருந்து வெளியே வந்தவள் போன்று திருத்தமான தோற்றம்! அனாவசிய அங்க சேஷ்டைகள் அற்ற நிதானமான போக்கு! தெளிவான பார்வை! நேர் நோக்கு! பரபரப்பற்ற பேச்சு!

வேலை செய்தபடி உட்கார்ந்திருக்கும் விதத்தில்கூட, ஏதோ மாடல் பெண்ணைப் போல எழில் சொட்டியது!

கூடவே அவளுக்கு மிகப் பொருத்தமான உடை! சுடிதார்... சல்வார்... இப்படி ஏதோ ஒன்றுதான்! ஆனால், துணியும் தைத்திருக்கும் விதமும்கூட, மாடல்கள் அணிவது போல, அவளுக்கு மிகவும் பாந்தமாக அமைந்திருந்தது!

இன்னும்... இன்னும் ஏதோ... சின்ன வயதில் இருந்து, நடை, உடை பாவனை போன்ற இப்படிப்பட்ட விஷயங்களிலே மிகுந்த கவனம் செலுத்தி வளர்ந்தவள் போன்று, ஒரு மேல் தட்டுத் தோற்றம்!

பணக்காரக் களையா? பணக்காரி இல்லை என்பது அவனுக்குத் தெரியும்! வேலை தேவை என்றாளே!

பின், எதனால் அப்படி? இந்த உடையா? பிறப்பிலேயே அமைந்த தோற்றப் பொலிவா?

அலட்டல் காட்டாத அழகோ? ஆனால் அழகுதான்! ரொம்பவே!

வைத்த கண்ணை அவளிடமிருந்து பிரிக்க முடியாதவன் போன்று அவளைப் பார்த்துக் கொண்டே இருந்தான் அவன்!

## அத்தியாயம் 6

இப்படி அவன் பார்த்துக் கொண்டிருந்தபோது, வேலையினூடே சிறு சந்தேகம் தோன்ற, அதைக் கேட்பதற்காக சத்யாகரை நிமிர்ந்து நோக்கிய சுசித்ரா அவனது பார்வையில் திகைத்துச் சட்டென முகம் சிவந்தாள்!

சமாளித்துக் கொண்டு 'என்ன' என்பதுபோல சுசித்ரா கேள்வியாக நோக்க, அவனும் அதற்குள் சுதாரித்து, "என்ன? எதற்காக இந்தக் குளிப்பாட்டல் என்று தோன்றுகிறதா?" என்று வினவினான்.

"இந்தக் கலந்துரையாடலில் ஏதோ ரொம்ப முக்கியமான விஷயத்தைத் தெரிவிக்கப் போகிறீர்கள் என்று தெரிகிறது! ஆனால், இந்த மிஸ்டர் அசோக்குக்கு அனுப்புவது மட்டும் கொஞ்சம் அதிகாரக் கட்டளை போலத் தோன்றுகிறதே!" என்று சுசித்ரா தன் சந்தேகத்தைச் சொல்ல, "கரெக்ட்!" என்று முறுவலித்தான் சத்யாகர்.

"அவனுடைய நேரடி அதிகாரிகளுக்குப் பணிய, அசோக்கிற்குத் தெரியவில்லை! தருணின் புகார் நினைவிருக்கிறதா? நிர்வாகம் கண்டிப்பாக இருக்கும் என்று அவனுக்குத் தெரிவதற்காகத்தான்!" என்று, அவன் அதற்கு விளக்கம் கொடுக்க, புரிந்துகொண்டு, "ஓஹோ!" என்று தலையாட்டியவள் சற்று யோசித்து, "எனக்கு ஒரு சந்தேகம், சார், காரணம் சொல்ல மறுக்கிறார் என்றால், உங்களுடைய இந்த அசோக்கிற்குக் காதல் பிரச்சினையோ என்று ஐயமாக இருக்கிறது! எதற்கும், நீங்கள் தனியாகக் கேட்டுப் பாருங்களேன்!" என்றாள்.

"நல்ல ஐடியா!" என்றவன் சிரித்து, "இந்த வேலையை விட நேர்ந்தாலும், காதல் தூதுவனாகப் பிழைத்துக் கொள்ளலாம்!" என்று கூற, "அதற்கென்ன சார், கையில் நாலு தொழில் இருந்தால், என்றைக்கும் நல்லதுதானே?" என்று அவள் தொடர, இருவருமே சிரித்தனர்.

நிலைமை உடனேயே இயல்பாகிப் போயிற்று.

ஆனால் சத்யாகருக்கு உள்ளூர ஓர் எண்ணம்!

பார்க்கலாம்! இந்த அலுவலகச் சூழ்நிலையை விட்டு வெளியே ஆண்டுவிழாவுக்குச் செல்லும்போது, ஆட்டம், பாட்டு என்றிருக்கும் அந்தச் சூழலிலும், இந்த நுனி நகத்தில்கூட அழுக்குப் பட்டு அறியாதவள் போன்ற இவள் எப்படி இருப்பாள்?

பார்த்தே ஆக வேண்டும் என்று எழுந்த ஆசை அவனுக்கே வியப்பை அளித்தது!

உணவு இடைவேளையின் போது, மல்லிகா மீண்டும் தோழிக்கு நன்றி சொன்னாள்!

"கைப்பை, கூந்தலுக்கு பாண்ட், வளையல், செருப்பு எல்லாம் இருக்கிறதே, சுசி! எத்தனை முறை அலைந்து திரிந்து, பொருத்தம் பார்த்து வாங்கியதோ, அதைப் போய் எனக்குத் தந்து விட்டாயே! உன் வீட்டில் திட்டமாட்டார்களா?" என்று அவள் மிகவும் கவலைப்படவும், "அலைச்சல் எல்லாம் ஒன்றும் கிடையாது, மல்லி! இதற்கெல்லாம் இப்போது ஆட்கள் இருக்கிறார்கள்! துணியைத் தந்து, இன்ன மாதிரி வேண்டும் என்று சொல்லி, அளவையும் கொடுத்துவிட்டால், அவர்களே எல்லாம் வாங்கி, தைத்துக் கொண்டு வந்து, தருவார்கள்!" என்று சொல்லும்போதே மல்லிகாவின் கண்கள் விரிவதைக் கண்டு சுதாரித்தாள் சுசித்ரா.

"அதிருக்கட்டும் மல்லிகா, அன்று முழு நாளும் விடுமுறையா? அல்லது, பாதிநாள் வேலை பார்க்க வேண்டுமா?" என்று தெரியாத விவரம் கேட்பது போலப் பேச்சை மாற்றினாள்.

"ஐயோ, சத்யா சார்தானே எல்லாம் திட்டமிடுவது? உன்னிடம் சொல்லவில்லையா?" என்று கள்ளமற்றுக் கேட்டுவிட்டு, மல்லிகா எல்லாம் சொல்ல, தேவையற்றுக் கேட்டுக் கொண்டிருந்தாள் சுசித்ரா!

'யாகாவாராயினும் நா காக்க' என்று வள்ளுவர் அவளுக்காகத்தான் சொல்லியிருப்பார் போல என்றெண்ணியபடி! செல்வச் செழிப்பில் இருக்கும் அவள் குடும்பத்தினர் உடை தைக்கும் விதம் எல்லாம் மல்லிகாவிடம் சொல்லியாக வேண்டும் என்று என்ன கட்டாயம்?

சத்யாகரின் குறை காணமுடியாத திட்டமிடலால், ஆண்டுவிழா பெரும் வெற்றியாகவே அமைந்தது!

இலகுவான விளையாட்டுப் போட்டிகள் வைத்தார்கள். 'பாஸிங் த பார்சலி'ல் அவுட்டாகிறவர்களை நகைச் சுவையாக ஏதாவது சொல்ல வைத்தது நன்றாக

இருந்தது! ஏற்கனவே, தொழிற்சாலையில், அவரவர் பிரிவில் போட்டிகள் நடத்தி, அதில் வென்றவர்கள் மட்டும் இந்தப் போட்டியில் கலந்துகொண்டதால், எல்லோருமே சிறப்பாகத் தயாரிப்படுத்திக் கொண்டு வந்து, பார்வையாளர்களை நன்றாகச் சிரிக்க வைத்தனர், பிறகு, மாஜிக் ஷோ ஒன்று நடந்தது!

அங்கங்கே ஸ்டால்களில் வேண்டிய உணவு வகைகளை, உண்போருக்குக் கொடுத்துக் கொண்டே இருந்தார்கள்! உண்பதும், பச்சென்றிருந்த தோப்பில் சுற்றுவதும்கூட நன்றாகவே இருந்தது!

வீட்டிலேயே தோட்டத்தில் சுற்றுவதில் பிரியமுள்ள சுசித்ராவுக்கு, இங்கேயும் அதுதான் அதிகம் பிடித்தது!

அதற்கு, தனக்குத் தானேகூட அவள் ஒத்துக்கொள்ள விரும்பாத இன்னொரு காரணமும் இருந்தது!

பொதுவாக, விழா ஏற்பாடுகள் சத்யாகருடையவை என்பது எல்லோரும் அறிந்த விஷயம்!

பொறுப்பைப் பிரித்துக் கொடுத்துவிட்டு மேற்பார்வை பார்த்தவனுக்கு உதவுவதாகச் சொல்லிக் கொண்டு, பல பெண்கள் அவனை மொய்த்தனர்!

இலகுவாக அவனைத் தொட்டு பின்புறம் திருப்பி அவர்கள் பேசியதைக் காண, ஏனோ அவளுக்குக் கொஞ்சமும் பிடிக்காமல் போயிற்று!

அப்படியென்ன இவன் மகாக் கண்ணபிரான், கோபிகைப் பெண்களாக அவனைச் சுற்றி வளைக்கிறார்கள்?

ஒவ்வொருவரும் செய்திருந்த அலங்காரமும், அணிந்திருந்த ஆடை, அணிமணிகளும்!

அலுவலகத்துக்கு அணிந்து வரும் வெளிர் நிற முழுக்கைச் சட்டைகளின்றி, இறுக்கிப் பிடித்த டிஷர்ட் சத்யாகருக்கு நன்றாகத்தான் இருந்தது!

ஆனால், அதற்காக?

அந்தப் பெண்களின் தலைக்கு மேலாக அவளைப் பார்த்து சத்யாகர் புன்னகை புரிந்தான்தான்! ஆனால் அவளுக்கு ஒன்றும் ரசிக்கவில்லை!

அவளும் ஒன்றும் ஏப்பை சாப்பையாக எதையோ அணிந்து வந்துவிடவில்லை!

ஒவ்வோர் அசைவிலும் துள்ளி விழும்படியாக நிறைய மடிப்புகள் வைத்துத் தைத்திருந்த ஷிஃபான் உடையில், அங்கங்கே பதித்திருந்த ஸ்வரோஸ்கி கற்கள் நட்சத்திரங்களாக மின்ன சுசித்ராவும் அழகாகவே சென்றிருந்தாள்! 'காஸ்ட்யூம் ஜுவல்லரி' என்றே நினைப்பார்கள் என்ற தைரியத்தில், காதிலும் கழுத்திலும் சின்னதாய் வைரங்கள்!

கூடவே சுற்றிய மல்லிகா, அப்படித்தான் கேட்டாள்! 'இப்போதெல்லாம் துணி விற்கும் கடைகளிலேயே இது போலப் பொருத்தமான போலி நகைகளும் கிடைக்கிறதாமே, நீ எங்கே வாங்கினாய்' என்றுதான் வினவினாள்.

எங்கே என்று சொல்வது?



பொய்ச் சங்கிலி நீண்டுகொண்டே போவதைச் சங்கடத்துடன் உணர்ந்தபடி, "அது... நினைவில்லையே!" என்றாள் சுசித்ரா.

அதையும் ஒத்துக்கொண்டு, "நீ எல்லாவற்றுக்கும் பொருத்தமாக அவ்வப்போது வாங்கி விடுகிறாய் அல்லவா? எதெது எங்கெங்கே வாங்கினாய் என்று நினைவிருப்பது கடினம்தான்!" என்று மறதிக்கு ஒரு காரணத்தையும் கண்டுபிடித்தாள் மற்றவள்!

எல்லாம் பொருந்தி, சுசித்ரா பார்க்க நன்றாகத்தான் இருந்தாள்! அதிலும் அந்தக் கோபிகைகளுள் இருவர், அவளைப் பார்த்து முகம் திருப்பிக் கொள்ளும் அளவுக்கு! அத்தோடு விடாமல், சத்யாகரின் அருகே அவள் சென்றுவிடாமல் அரணாக நின்று தடுக்கவும் செய்தார்கள்!

அவனுடைய செயலாளர் என்ற முறையில், ஏதேனும் வேலை இருக்கிறதா என்று கேட்பது அவளது கடமை என்று எண்ணியே, சுசித்ரா, சத்யாகர் பக்கம் செல்ல முயன்றது! ஆனால், இந்த மாதிரிப் போட்டியில் கலந்துகொள்ள விருப்பம் இல்லாமல் விலகிப் போய்விட்டாள்.

மல்லிகாவின் கண்களைத் தொடர்ந்தபோது, தருண் இருக்குமிடத்தைக் கண்டுகொள்ள முடிந்தது!

சும்மாப் போவது போல, மல்லிகாவைக் கூட இழுத்துக் கொண்டு, அந்தத் தருணிடம் சென்றாள் சுசித்ரா.

"என்ன மிஸ்டர் தருண், உங்கள் அசோக் இப்போது எப்படி இருக்கிறார்? மேற்கொண்டு பிரச்சினை இல்லையே?" என்று லேசாக விசாரித்துவிட்டு, அருகில் வந்த இன்னும் யாருடனேயோ பேசியவாறே, அங்கிருந்து அகன்றுவிட்டாள் அவள்.

இனி மல்லிகாதான் பார்த்துக் கொள்ள வேண்டும்!

ஆனால், அதுவரை மல்லிகாவோடு சேர்ந்து சுற்றியவள் இப்போது தனியாக உலாவ நேர்ந்தது! அது ஒன்றும் அவளுக்குக் கடினமாகவும் இருக்கவில்லை! சொல்லப் போனால், கூட்டத்தை விட்டுச் சற்று விலகி வந்துவிட்ட அவளுக்கு, எரிச்சலூட்டும் எதையும் பார்க்கத் தேவையில்லாத இந்தத் தனிமை இனிமையாகவே இருந்தது!

பார்த்துக்கொண்டே சென்றவளுக்கு ஒரு மரத்தின் தாழ இருந்த கிளை ஒன்றில் படர்ந்திருந்த கொடியும், கொடியில் மலர்ந்திருந்த பூக்களும் வியப்பளித்தன!

இந்தச் சென்னையின் தட்பவெப்பத்தில்கூட, ஆர்க்கிட் பூக்குமா? இது ஆர்க்கிடேதானா? அல்லவா?

குனிந்து ஒரு தரம் உடையைப் பார்த்தவள் அது ஒன்றும் ஆகிவிடாது என்று தோன்றவும், தாழ்வாக இருந்த கிளைகளைப் பிடித்து, மரத்தில் ஏறிவிட்டாள்!

பூ, ஆர்க்கிடேதான்!

குப்பென்ற மணமும், ஒற்றை இதழின் வேறுபாடான அழகிய அமைப்பும்

மனதைக் கவர, தாயிடம் சொல்லி, வீட்டிலும் இதை வளர்க்க முடிகிறதா என்று
பார்க்க வேண்டும் என்று நினைத்தபடியே இறங்கியவளுக்கு, ஒரு கையில் பூவும்
இறங்கலில் முழுக் கவனமும் இல்லாது போகப் பிடிப்பு சரியின்றி வழுக்
விழலானாள்!

விழும்போது அதிக அடி பட்டுவிடாமல் உடம்பைக் குறுக்கிக் கொண்டவள்,
இடையிலேயே இரு கைகள் ஏந்தவும், திகைத்துத் தலை திருப்பிப் பார்த்தாள்.

சத்யாகர்!

கோபிகைகளை விட்டு, இவன் எங்கே, இங்கே வந்தான்?

தாழ்வான கிளையே என்பதால், அதிக அடி பட்டிராது என்றாலும், விழுமு
அவன் பிடித்துக் கொண்டதால், சிறு சிராய்ப்பு கூட இல்லாது தப்பியிருக்கிறா

ஆனால், இவனுக்கு விளக்கம் சொல்வதற்கு, ஒரு சில சிராய்ப்புகளே
பரவாயில்லை என்றிருந்தது சுசித்ராவுக்கு!

வந்த இடத்தில் கையையும் காலையும் வைத்துக் கொண்டு சும்மாயிராமல்,
அவனிடம் சொல்வதற்கான விளக்கத்தை அவசரமாக யோசித்து வைத்தா
அவன், அவளைக் கீழே விடவே இல்லை!

மீண்டும் திகைப்புற்று அவனைப் பார்த்தவளுக்குத் தயாரித்து வைத்
விளக்கம் மறந்து மூச்சடைத்தது!

விளக்கம் மட்டுமா? அவ்வளவு அருகில் சத்யாகரின் முகத்தைப் பார்க்கையி
அந்த முகம் தவிர, அவளுக்கு எல்லாமே மறந்து போயிற்று!

சில கணங்கள், அவை கணங்களோ, நிமிஷங்களோ, நீடித்த அந்த மயக்
நிலை மெல்ல மாறி சுசித்ராவுக்குச் சுரணை வந்தபோது, அவனும் ஒரு திகைத்
முறுவலுடனேயே, அவளை இறக்கி நிற்க வைத்தான்!

அவளைப் பார்த்து லேசாக முறுவலித்து, "மரத்திலிருந்து கனிகள் விழு
இயற்கை! ஆனால், கன்னி விழுவதை இப்போதுதான் பார்த்தேனா, ஓ
பிரமிப்பாகி விட்டது! அந்தத் திகைப்பில் அப்படியே நின்றுவிட்டேன்!" என்று
அவளை உடனே கீழிறக்கி விடாததற்குச் சமாதானம் சொன்னான்!

அவளும் இயல்புக்குத் திரும்பிவிட, "பெண்ணா, பழமா என்று ஆராய்ந்து
முடிக்க நேரமாகியிருக்கும்!" என்று நகைத்தாள்.

அவள் பெரிதுபடுத்தாமல் இலகுவாகக் கேலி பேசிய விதம், சத்யாகருக்கு
பிடித்தது!

அசட்டு வெட்கமும் இல்லை., அனாவசிய அலட்டலுமில்லை!

வினாடி மயக்கம்! இதைப் போய்ப் பெரிதுபடுத்துவானேன் என்
சொல்லாமல் சொல்கிறாள்!

"சொன்னால் நம்புவது கடினமாக இருக்கும்! ஆனால், நான் இந்த மா
ஆராய்ச்சியில், இதுவரையிலும் ஈடுபட்டதில்லை!"

ஏனோ உடல் சிலிர்த்தது அவளுக்கு!

சத்யாகர் பொருளுணர்ந்துதான் சொல்கிறானா?



அவள் திகைப்புடன் நோக்கவும், "உண்மை சுசித்ரா! இதற்குமுன் எந்த மரத்திலிருந்தும், எந்தப் பழமும் என் கையில் வந்து விழுந்தது கிடையாது!" என்று, அதே உபமானத்தையே தொடர்ந்து, உபமேயத்தைக் குறிப்பால் உணர்த்தினான் அவன்.

அவள் தனியே வந்ததன் பாதிக் காரணம் நினைவு வர, "நம்ப முடியவில்லையே!" என்றாள் அவள்.

"ஏனோ?"

"சற்றுமுன், உங்கள் அருகில்கூட வர முடியாமல், உங்களைச் சுற்றி அரண் கட்டியிருந்த கோபிகைகள் கூட்டம்!"

"அப்படியானால், அருகில் வர முயற்சித்தாய் போல?" என்று வேறு விசாரித்தான் அவன்.

அவசரமாக விவரம் சொன்னாள் அவள். "உங்கள் செயலாளர் என்கிற முறையில் ஏதேனும் செய்ய வேண்டுமா என்று கேட்க நினைத்தேன்! ஆனால், கூட்ட நெரிசலில் சிக்கி நசுங்கிவிடக் கூடாதே என்று திரும்பிவிட்டேன்! அந்தக் கோபிகையர் கூட்டம்!"

"ஹூம்! அவ்வளவுதானா? நான் என்னமோ என்று எண்ணினேனே!" என்று பெருமூச்சு விட்டுவிட்டுச் சட்டென சிரித்தான் சத்யாகர்.

கூட நகைத்தவளைச் சிறு வியப்புடன் நோக்கி, "தூரத்து அரை வெளிச்சமும், நிலவொளியுமாக, உன் நகைகளை எப்படி நட்சத்திரங்கள் போல ஒளிர வைக்கின்றன, தெரியுமா?" என்று அதிசயப்பட்டான் அவன்.

வைரம் அப்படித்தான் ஒளிரும்! ஆனால், இதை இவனிடம் எப்படிச் சொல்வது?

சொல்லாதிருப்பதே, ஏமாற்று வேலைதான்!

சொல்லவும் தயங்கி, "உங்கள் கோபிகைகள், அங்கே உங்களைத் தேடப் போகிறார்கள்!" என்று பேச்சை மாற்றினாள் அவள்.

போகலாம் என்று கையைக் காட்டிவிட்டு, "அந்த வார்த்தையை விட மாட்டாயா? அடுத்த ஊதிய உயர்வு என் கையில் மட்டும் இருப்பதாகத் தவறாக எண்ணிய கூட்டம், அது! தப்புத் தவறாக குறிப்பெழுதி விட்டேன் என்றால் அதில் தகராறாகி விடுமோ என்ற பயம்! ஆனால், சேர்மன் சார், ஜி எம் இருவரோடும் கலந்து பேசாமல், நானாக எதையும் தீர்மானிப்பது இல்லை என தெரிந்துவிட்டால், கல் விழுந்த காக்கைக் கூட்டமாக எல்லோரும் காணாமல் போய் விடுவார்கள், தெரியுமா?" என்று, அதற்காக வருத்தப்படாமல், வெகு இயல்பாகவே அவன் கூறிய விதம் அவளுக்கு வியப்பளித்தது!

அலுவலகத்தில், வெளியில் பெண்கள் தன்னை ஆவலாகப் பார்த்ததாக, பழகி முயற்சித்ததாகக் குரு அவ்வப்போது சொல்வதுண்டு! நல்ல தோற்றத்தோடு, படிப்பு, பதவியும் இருப்பதால் அவனைப் பெண்கள் சுற்றுவது இயற்கைதான் போல என்று, அவன் பேசுவதை சுசித்ராவும் ஒப்புதலாக எண்ணுவதுண்டு.

இவனுக்கும் நல்ல பதவிதான்! சொல்லப் போனால், குருப்ரசாத்தை விட வு உயர்ந்த பதவி! ஒரு பெரிய தொழிற்சாலையையே ஆட்டுவிக்கும் பொறுப்பா பதவி! அதற்கேற்ற வருமானம்! படிப்பும் அதிகம்தான்! தோற்றமும்...

கூட நடந்தபடியே ஓரக் கண்ணால் சத்யாகரைப் பார்த்த சுசித்ரா சற்று திகைத்தாள்.

அவளே விழி உயர்த்திப் பார்க்கும் உயரத்தில், உடம்போடு ஒட்டியிருந் டீஷர்ட்டில் வலிவும் வனப்புமாக இருக்கும் இவன், பெண்கள் தன்னை அணுகுவது, வெறும் பதவி உயர்வுக்காக என்கிறானே!

அதிலும், அவளைப் பிடித்து இழுத்துப் போய்த் தூர விடாத குறையாக இடித்துத் தள்ளி விட்ட சிவப்பு சுடிதார்! அவளோடு கூடச் சேர்ந் கொண்டவர்கள்?

ஊகூம். இவன் சொல்வது தவறு!

"இந்த மாதிரிக் குறுக்கு வழியில் முயற்சிப்பதை விடுத்து, உண்மையா உழைத்தால் உயர்வு தானாக வரும் என்பதை என்னைப் பார்த்தே படிக்கலாம் அதை விட்டு, மடத்தனம் பண்ணுகிறார்கள்! அந்தப் பூவைப் போட்டுவிடு சுசித்ரா! இது, விநாயகம் சார் குடும்பத்துக்கான தனித் தோட்டப் பகுதி எழுதப்படாத சட்டமாக, இங்கே வேறு யாரும் வருவதில்லை! அதனால்தான், இந்தப் பக்கம் வருவதைக் கவனித்துப் பின்னோடு விரைந்து வந்தேன்!"

அவள் வந்தது மட்டுமில்லாமல், மரத்தின்மேல் ஏறி, பூவைப் பறித்து...

"சாரி!" என்றாள் அவள் சின்னக் குரலில்!

"எதற்காக? நீ புதிது என்பதால் உனக்குத் தெரியவில்லை! அவ்வளவுதானே சொல்லப் போனால், வெறும் இயந்திரத்தனமான அலுவலகச் செயலாளரா மட்டுமாக இல்லாமல், நீ மனித உணர்வுகளைக் காட்டியது எனக்கு சந்தோஷம்தான்! நம் பிரிவுக்கு அது ரொம்பவே அவசியம்! என்ன, சற்று அதிகமாகக் காட்டி, மூதாதையர் அளவுக்குப் போய்விட்டாய்! அவ்வளவுதான்

அடக்க மாட்டாமல் குபுக்கென நகைத்தாள் அவள்!

அவனையும் சிரிப்பு தொற்றிக் கொண்டது!

சேர்ந்து சிரித்தபடி வந்த இருவரையும் வெறித்து நோக்கியது கோபிய கூட்டம்!

"இவள் எந்தப் பார்லருக்குப் போய் அலங்காரம் பண்ணினாளோ, இயற்கை போலவே தெரிகிறதே!" என்று காந்தினாள் சிவப்பு சுரிதார்!

வென்றவர்களுக்குச் சேர்மன் விநாயகமூர்த்தி பரிசளித்துப் பேசினார்!

நிறுவனத்தில் பணி புரியும் அனைவருக்கும் நன்றி தெரிவித்ததோடு தொழிலாளர்கள் தனக்கு ஒத்துழைப்புத் தந்து நிறுவனத்தை வளர்த்த போலவே, இனி வரும் மாற்றங்களையும் ஏற்று, நிறுவனத்தோடு, வீட்டைய நாட்டையும் சேர்த்து வளப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டா தொழில் வளர்ச்சி பற்றி வெளி நாட்டில் மேல் படிப்பு படித்து வரும் மகன் திரும



வரும்போது, அவனையும், இதே போல ஆதரிக்க வேண்டும் என்றார்!

வெறும் தமிழ் நாட்டு நிறுவனமான 'விநாயகம் இன்டஸ்ட்ரீஸ்' பன்னாட்டுச் சந்தையில் பங்கு பெறும் அளவுக்குத் தரம் உயர்த்தி வளர்க்க, எல்லோரும் ஒத்த மனதோடு உதவவேண்டும் என்றவர், அதற்கான உறுதிமொழியை எல்லோரும் எடுத்துக் கொள்ள வைத்துவிட்டுப் பேச்சை முடித்தார்!

அதுவரை, எல்லா முதலாளிகளும் போலப் பேசினார் என்றுதான் சுசித்ரா எண்ணினாள்.

அன்று பல முறை நேர்ந்தது போல, அப்போதும் அவளது பார்வை சத்யாகரிடம் பாய, அவள் ஒரு விசித்திரத்தைக் காண நேர்ந்தது!

உரை முடிந்து எல்லோரும் கலையத் தொடங்கியிருந்த நேரம் அது. சத்யாகரைப் பார்த்து, 'எப்படி' என்பது போல லேசாகப் புருவங்களை உயர்த்திச் சேர்மன் வினவ, அவன் 'பிரமாதம்' என்று கண்ணசைவால் பதில் கூறியதைக் கண்டு விட்டவளுக்கு, இலைமறை காயாக, இந்த சொற்பொழிவில் என்னவோ இருக்கிறது என்று தோன்றிற்று!

சில தினங்களுக்கு முன்னதாக அனுப்பப்பட்ட சுற்றறிக்கையோடு தொடர்புடையதாக ஏதோ ஒன்றாயிருக்குமா?

அப்படித்தான் என்று விரைவிலேயே தெரியவந்தது!



## அத்தியாயம் 7

அணிந்திருந்த நகைகளைத் துடைத்து, உரிய இடத்தில் பத்திரப் படுத்திவிட்டு, குளித்து நைட்டியில் வந்து படுக்கையில் அமர்ந்த சுசிக்குப் படுத்துத் தூங்கத் தோன்றவில்லை!

மாறாக, உட்கார்ந்து யோசித்தாள்!

முக்கியமாக, ஆர்க்கிட் மலரோடு விழுந்து, சத்யாகரின் கைகளில் இருந்த அந்த சில விநாடிகள்!

பொதுவாக, அவளுக்கு வேறு யாரும் தொட்டால் பிடிக்காது!

திருமணத்துக்கே கேட்டு, அவளது சம்மதத்தை ஒரு நிபந்தனையோடு பெற்ற குருப்ரசாத், அருகில் ஒட்டி அமரவும், அவள் கையையேனும் பிடித்துக் கொள்ள முயன்றதும் உண்டுதான்.

ஆனால், தனக்கு இது போன்ற உரிமையற்ற சரசங்கள் பிடிக்காது என்று எந்த விதத் தயக்கமும் இன்றி அவளால் சொல்ல முடிந்ததும், எல்லாம் திருமணத்துக்குப் பின் பார்த்துக் கொள்கிறேன் என்று, ஒரு செல்ல மிரட்டலுடன் அவன் விலகிக் கொண்டதும் முன் நடந்த கதை!

திருமணம் என்று ஆகிவிட்டால், அப்படித்தான் இருக்கும் என்று அவளும்

ஒப்புதலாகப் புன்னகை செய்திருக்கிறாள்.

ஆனால், இன்று சத்யாகரின் கையணைவில் அதிகப்படியாக இருந்த அந்த சில வினாடிகள்... அல்லது நிமிஷங்கள்?

அவை நிமிஷங்களா, கணங்களா என்பதில், இன்னமும் அவளுக்குச் சந்தேகம்தான்!

ஆனால், இயல்புக்கு அதிகப்படி நேரம் என்பது நிச்சயம்!

அப்போது ஏன், அவன் பிடியிலிருந்து அவள் திமிறி விலகவில்லை? விலகி, அவனை ஏன் எச்சரிக்கவில்லை?

விலகும் நினைவு கூட வராமல், ஏதோ... சுகமாகத்தானே இருந்தது!

எப்படி முடியும்?

குருப்ரசாத்தை மணப்பதற்காகத் தந்தையின் சம்மதம் பெறுவதை அடிப்படையாகக் கொண்டுதான் அவள் வேலைக்குப் போனதே! இப்போது... அடிப்படையே ஆட்டம் காண்பது போல, இது என்ன?

அல்லது, குருவிடம் அவள் கொண்டிருந்த அன்பே, திருமணத்துக்குத் தேவையான அளவு வலுவானது அல்லவோ?

அல்லது குருவே சரியில்லையோ?

மனம் குழம்பும்போதே, தந்தை இதை எதிர்பார்த்திருக்கிறார் என்றும் தோன்றிற்று.

உலகம் அறிவதற்காக என்று அவர் சொன்னது, அவளையே அறிந்துகொள்வதற்காகவே இருக்குமோ?

பழைய காலத்தில், பட்டத்து இளவரசன் உலக அனுபவம் பெறுவதற்காகத் தேசாந்திரம் போவானாம்! அரச குடும்பத்தவன் என்று மதிப்பும் மரியாதையும் தரும் சொந்த நாட்டை விட்டு, சாதாரண மனிதனாக மக்களைப் பற்றி நேரடி அறிவும், அனுபவமும் பெறுவதற்காக என்று படித்திருக்கிறாள்!

அரச குடும்பத்து அளவு இல்லை என்றாலும், சுசித்ராவின் வளர்ப்பு, படிப்பு, பழக்கம் எல்லாம் ஓர் உயர் மட்டத்திலேயே, ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள்ளேயே இருந்துவிட்டது!

சேதுமாதவனுடைய மகள் என்கிற சிறப்பு இல்லாமல், சாதாரணமாக மற்ற அவரது ஒரே வாரிசு பெரும்பான்மையினரைப் போல, அவர்களோடு கலந்து பழகும்போது, தன்னைச் சுற்றி அருகில் இருப்போரைப் பற்றிக் கூட, மகள் அறிந்து கொள்வாள் என்று கருதினார் போலும்!

முக்கியமாகக் குருவைப் பற்றி! அவள் வாழ்வில், அவனது முக்கியத்துவம் பற்றி! உண்மையிலேயே, அது எவ்வளவு?

மறுபடியும் அவள் மனம் சத்யாகரிடம் தாவியது!

குருப்ரசாத்துக்கும் அவனுக்கும் சம வயதுதான் இருக்கும்.

குரு தன் வேலையைப் பற்றிப் பேசுவதே இல்லை! ஆனால், தன் உழைப்பினால் உயர்ந்திருப்பதை சத்யாகர் எவ்வளவு கர்வமாகச் சொன்னான்!



அவனது சிரிப்பை நினைத்தவாறே படுத்துத் தூங்கிப் போனாள் அவள்!

மறுநாள் மல்லிகாவைத்தான் சுசித்ரா முதலில் சந்திக்க நேர்ந்தது.

அவளுக்கு ஒரே சந்தோஷம்!

சுசித்ரா மட்டும் உதவியிராவிட்டால், அவளால் ஆண்டுவிழாவுக்கு வந்திருக்கவே முடியாதாம்! தருண் அவளை ஏறெடுத்துப் பார்த்திருக்கவும் மாட்டானாம்!

அந்த உடை அவளுக்கு நன்றாக இருப்பதாக அவன் சொன்னதும், அவளால் வாயைப் பொத்திக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லையாம்! அதனால், எல்லா உண்மைகளையும் சொல்லி விட்டாளாம்!

"எல்லாவற்றையும் என்றால்?"

"நீ உடை தந்தது, அதன் காரணம், வீட்டு நிலைமை எல்லாமே சொல்லிவிட்டேன்."

"ஓ!" என்றாள் சுசித்ரா கவலையுடன்.

அதை உணர்ந்து, "எனக்கும் முதலில் கலக்கம்தான், சுசி! ஆனால், ஒரு பொய்யில் தொடங்குவது எத்தனை நாள் நிலைக்கும்? அதனால்தான் சொல்லிவிட்டேன்! நல்ல வேளையாகத் தருண் புரிந்து கொள்கிற மனிதர்! நேற்று இரவு என்னை வீட்டுக்குக் கூட்டிப் போனது அவர்தான்!..."

வெறும் இரக்கமாக இருந்துவிட்டால்?

"பாவம் என்று பரிதாபப் பட்டிருக்கிறார் என்றுதான் நேற்றிரவு முழுவதும் நினைத்தேன்! ஆனால், இன்று காலையிலேயே தருண் எங்கள் வீட்டுக்கு வந்தார்! அம்மா, தம்பியிடம் பேசிக் கொண்டிருந்தார்! கண்ணனைப் படிக்க வைப்பது பற்றி அம்மாவிடம் பேசினார். அவனுக்கு வைத்தியம் பற்றி விசாரிப்பதாகவும் சொன்னார். அப்புறம்... அவரை வழியனுப்ப நான் வெளியே சென்றபோது, நான் கஷ்டப்பட்டால், அவருக்குத் தாங்கவில்லை என்று சொன்னார்!" என்று முடித்தபோது, மல்லிகாவின் முகம் லேசாகச் சிவந்திருந்தது!

"வாவ்!" என்றாள் சுசித்ரா. "எல்லாம் நல்லபடியாக நடக்கட்டும் என்று கடவுளை வேண்டிக் கொள்கிறேன், மல்லி!"

அன்று பிற்பகலில் வந்து, மல்லிகாவுக்காக சுசித்ராவிடம் நன்றி செலுத்தியதோடு, கண்ணனுக்குச் செய்யக் கூடிய வைத்தியம் பற்றித் தருண் அவளிடமே கலந்து ஆலோசிக்கவும், அவனைப் பற்றி சுசித்ராவுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச சந்தேகமும் பறந்து போயிற்று!

அது மட்டுமின்றிக் கண்ணனுக்குத் தானும் ஏதாவது வழியில் உதவி செய்ய வேண்டும் என்றும் மனதுள் குறித்து வைத்தாள்!

ஆனால், அதை உடனடியாகச் செயலாற்ற முடியாமல், அலுவலகம் ஒரு குமுறும் எரிமலையாய் மாறிக் கொண்டு இருந்தது!

சத்யாகரை வந்து பார்ப்போரின் கூட்டம் அதிகரித்தது!

கூட்டம் என்றுதான் சொல்ல வேண்டும்! ஏனெனில், ஒரு நாளைக்கு

அத்தனை பேரை அவன் சந்திக்க நேர்த்தது!

எல்லோரும், திரும்ப திரும்ப ஒரே விஷயத்தையே பேசினார்கள்.

தொழிற்சாலையின் தயாரிப்புப் பகுதியில் அறிமுகப் படுத்தப்படப் போகிற கம்ப்யூட்டர் பற்றித்தான் அத்தனை பேரின் பேச்சும் இருந்தது!

தருணுக்கு அது பற்றி, மிகவும் சந்தோஷம் என்றாள் மல்லிகா!

கம்யூட்டர் சோதனை இருந்தால் தரக் கட்டுப்பாடும் நன்றாக இருக்கும்., அதனால் விற்கும் வேலை எளிதாவதோடு, விற்பனையும் அதிகரிக்கும் என்றானாம்!

தொழிற்சாலைக்காக மட்டுமின்றி, இதையெல்லாம் கலந்து பேசுகிற அளவுக்கு, மல்லிகா - தருண் பழக்கம் முதிர்வதும் சுசித்ராவுக்கு மகிழ்ச்சி அளித்தது!

தயாரிப்புப் பகுதியில் மேல்நிலை அதிகாரிகள் எல்லோரும் இதை வரவேற்க, ஆள்குறைப்பு ஏற்படக்கூடும் என்று, தொழிலாளர்கள் நடுவே அச்சம் பரவியது!

ஒவ்வொரு பகுதியில் இருந்தும் பல்வேறு ஆட்களை வருவித்துப் பேசினான் சத்யாகர். அவர்கள் வருமுன் அவர்களைப் பற்றிய ஃபைல் குறிப்புகளை எடுத்துப் பார்த்துவைப்பதோடு, வந்து போன பின்னும், அவர்களது எண்ணம், போக்கு பற்றிக் குறித்துவைக்க வேண்டியிருந்தது.

ஓரளவு ரகசியக் குறிப்புகள் என்பதால், சத்யாகரும் சுசித்ராவும் அதிக நேரம் வேலை செய்ய வேண்டியிருந்தது!

ஒரிரு தினங்கள் தாமதமாக வருவது பற்றி வீட்டுக்குத் தெரிவித்துக் கொண்டிருந்த சுசித்ரா, இந்தப் பிரச்சினை தீருகிற வரையும் அவளது தாமதம் பற்றி கவலைப்படவேண்டாம் என்று, அன்று காலை உணவின்போது சொல்லிவிட்டாள்.

“ஹூம், இந்த மாதிரி உண்மையாக உழைக்கிற பர்சனல் மானேஜர் எனக்கும் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!” என்றார் சேது மாதவன், ஏக்கம் காட்டி. “கூடவே ஒரு செயலாளரும்!”

“கவலைப்படாதீர்கள் அப்பா. எனக்கும் கிட்டத்தட்ட நல்ல பயிற்சிதானே? நானே வந்து முழுதுமாய்ப் பார்த்துக் கொள்ளுகிறேன்!” என்றாள் மகள் பதிலுக்கு.

“எங்கேம்மா? இந்த மூன்று மாதம் முடிந்தால், திருமணம் செய்து கொண்டு ஓடப் போகிறவள், நீயாவது, எனக்கு உதவியாக அலுவலைப் பார்ப்பதாவது!” என்று நம்பாமையைக் காட்டும் விதமாகத் தோளைக் குலுக்கினார் தந்தை.

திகைப்புடன் அவரைப் பார்த்தாள் மகள்.

இந்த அலுவலகப் பிரச்சினையில், குருப்ரசாத்தின் நினைவே வரவில்லையே!

மணக்கப் போகிறவன் என்றால் மறக்க முடியுமா?

ரொம்பவே யோசிக்க வேண்டும் போலத் தெரிகிறதே!

யோசனையில் ஆழ்ந்திருந்தவள், தந்தை தன்னை விசித்திரமாகப் பார்ப்பதைக் கவனிக்கவே இல்லை!



“தரத்தைச் சோதிப்பதற்கு மட்டும்தான் கம்ப்யூட்டர்! மற்றபடி உற்பத்திக்கும் அதற்கும் சம்பந்தமே கிடையாது என்று எத்தனை தரம் சொன்னாலும், காதில் வாங்கமாட்டேன் என்கிறார்கள்! சும்மாவே தகராறு கிளப்புகிற கூட்டம், இதில் குளிர்காய முயற்சிக்கிறது! உண்மையான உழைப்பாளிகளின் அறியாத்தனத்தை அவர்கள் பயன்படுத்துகிற விதம்தான் இப்போது பெரிய பிரச்சினையாக இருக்கிறது!” என்றான் சத்யாகர்!

சுசித்ரா கேள்வியாக நோக்கவும், “நிறுவனம் தொடங்கிய காலத்திலிருந்து பணி புரிகிறவர்கள்! வேலைத் திறமையாலேயே உயர்ந்தவர்கள்! அவர்களுக்குத் தொழிலாளர்களிடையே ரொம்ப மதிப்பு உண்டு! அந்தப் பெரியவர்களே எதிர்க்கிறார்கள் என்றால், நிச்சயமாக நமக்கு ஏதோ கெடுதல் என்று பரவுகிறது!” என்று விளக்கினான் அவன்.

ஒரு கணம் யோசித்துவிட்டு, “யூனியன் தலைவர்களிடம் பேசியிருப்பீர்கள் அல்லவா? அவர்கள் என்ன சொல்கிறார்கள்?” என்று கேட்டாள் சுசித்ரா.

வியப்புடன் நோக்கிவிட்டு, “ஆள் குறைப்பு கிடையாது என்பதால், பெரும்பாலும் நம் பக்கம்தான்! ஆனால், பிரச்சினையை வளர்த்தால்தான் பெரிய மனிதன் ஆக முடியும் என்று செயல்படுகிறவர்கள், அவர்களிலும் உண்டு!” என்றான் அவன்.

“அப்படிப் பட்டவர்களைப் பின்பற்ற ஆள் இல்லாமல் செய்ய வேண்டும்!”

“கரெக்ட்! அதற்காகத்தான் தனித்துப் பேசலாம் என்று, சந்தானம் மாஸ்டரை இங்கே வரச் சொன்னேன்! அவரும் இதோ, அதோ என்று போக்குக் காட்டுகிறார்! நேற்று முன்தினம் இரவு எட்டு மணிக்கு வந்தாராம்!”

“எ...எட்டு மணிக்கா?!”

“நானும் இப்படித்தான் ஆச்சரியத்தைக் காட்டிவிட்டேன். உங்களை மாதிரி அழுக்குப் படாமல் சொகுசாக நாற்காலியில் உட்கார்ந்து, ஐந்தடித்ததும் ஓடி விடுகிற வேலையா, எங்களது? ‘ஷிஃப்ட்’ முடிந்து, முகம் கழுவிக்கொண்டுதானே வர வேண்டும் என்று கேட்கிறார்! அவரது ‘ஷிஃப்ட்’ முடிந்தது நாலு மணிக்கு! இத்தனைக்கும் நேற்று நான் கிளம்பும்போது மணி ஏழு! நீயே ஆறு முப்பதுக்குத்தானே போனாய்!”

அவள் கிளம்பிய பிறகும் இருந்து வேலை செய்திருக்கிறான்! பாவம்! ஆனால் இந்த ஆள்...

“முழு எதிர்ப்பில் இருப்பது போலத் தெரிகிறதே!”

“இம். பழைய ஆள்! அவர் மனதைத்தான் மாற்றியாக வேண்டும்...” என்று சத்யாகர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அவன் முன்னே இருந்த டெலிஃபோன் கிணுகிணுத்தது. எடுத்துக் கேட்டுவிட்டு, “முதலாளி வரச் சொல்லுகிறார். மகன் பேச வேண்டும் என்கிறானாம்! போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன். அதற்குள் சந்தானம் வந்தால் உட்கார்ந்திருக்கச் சொல்லு!” என்று ஓர் எட்டு எடுத்து வைத்தவன் திரும்பி, “சந்தானத்தின் மனநிலை மோசமாகி

விடாமல் பார்த்துக் கொள்!" என்றுவிட்டுப் போனான்.

சத்யாகர் வெளியேறுவதற்காகவே காத்திருந்தவர் போன்று, அவன் சென்று சில நிமிஷங்களிலேயே சந்தானம் வந்து சேர்ந்தார்! அவன் வெளியே சென்றதை, யாரோ தெரிவித்து, அதன் பின்னரே வந்திருக்கிறார்!

"என்ன? என்னை வரச் சொல்லிவிட்டு, சத்யாசார் ஊர் சுற்றப் போய்விட்டாரா?" என்று ஏளனமாகக் கேட்டார்.

இந்த அலுவலகத்துக்குள், காலில் சக்கரம் கட்டியது போலச் சுற்றியலைந்து வேலை செய்கிறவனை, ஊர் சுற்றுவதாகச் சொல்வதா என்று ஆத்திரம் சுருசுருவென எறியபோதும், அதை மறைத்து, அவரைப் பார்த்து முறுவலித்தாள் சுசித்ரா!

"உட்காருங்கள் மாஸ்டர். டீ குடிக்கிறீர்களா? சேர்மன் வரச் சொன்னார் என்றதால் சத்யாகர் சார் போயிருக்கிறார். இதோ வந்துவிடுவார்!" என்று காண்டீலிருந்து ஒரு டீ அனுப்புமாறு ஃபோனில் சொன்னாள்.

டீ வந்ததும், அவளே அதை வாங்கிக் கொண்டுபோய், சந்தானத்தின் முன் வைத்துக் குடிக்கச் சொல்லி உபசரித்தாள்.

"ம் என்னை மாதிரி தொழிலாளிங்க என்றால், டீ! மத்தவங்களுக்கு என்றால் பாதாம் பால் கொண்டு வரச் சொல்லியிருப்பீங்க!" என்றார் அவர் குத்தலாக.

ஆச்சரியமாக நோக்கி, "பாதாம் பாலா? நம் கான்டீனில் அதெல்லாம்கூட இருக்கிறதா? களைத்து நா வறண்டு போனால்கூட, அதிசயமாக ஒரு டீ வரும்! நீங்கள் என்னென்னவோ சொல்லுகிறீர்களே!" என்றாள் சுசித்ரா!

டீயைக் குடித்து முடிக்கிறவரை, சந்தானம் வேறு எதுவும் பேசவில்லை!

ஆனால், டீயைக் குடித்து முடித்ததும், புதுத் தெம்பு வந்தது போல, "பாரம்மா, இவரு எவ்வளவு பெரிய ஆஃபீசரு ஆனாலும், என்னாலே மணிக்கணக்காகக் காத்துக் கிடக்க முடியாது! என்ன ஆனாலும், 'ஒர்க்கு' இடத்துக்குள்ளார கம்ப்யூட்டரை கொண்டு வர, நாங்க யாரும் ஒத்துக் கொள்ள மாட்டோம்! அவர்கிட்டே, கண்டீஷனாச் சொல்லிவிடு!" என்று எழுந்தார் சந்தானம்.

புரியாதவளைப் போலப் புருவம் சுருக்கி, "ஏன் மாஸ்டர்?" என்று கேட்டாள் சுசித்ரா.

"ஏனா? உனக்குத் தெரியாதா? அதை உள்ளே விட்டால், நிறையப் பேருக்கு வேலை போய்விடும்!" என்று புரியாதவளுக்கு விளக்கினார் சந்தானம். "பிறகு எப்படி, அதை ஒத்துகிடறது?"

"புரியவில்லையே! நம் பொருட்களின் தரக் கட்டுப்பாட்டை மட்டும்தானே கம்ப்யூட்டர் சரிபார்க்கப் போகிறது என்றார்கள்? அதனால் உங்களுக்கு வேலை எப்படிப் போகும்?" என்று மறுபடியும் விளக்கம் கேட்டாள் அவள்.

"அப்படித்தான் தொடங்குவாங்க! இந்த வேலை சரியில்லை, இவனைத் தூக்கு., அந்த வேலை மோசம், அந்த குரூப்பையே விரட்டு என்பார்கள். இவர்களுக்கெல்லாம், ஒரு இத்துனூண்டு இஞ்ச் கூட இடம் கொடுக்கக் கூடாது!



என்றார் அவர்.

"ஆனால், சத்யா சார் வேறல்ல சொன்னார்! என்னவோ சம்பளம் அதிகம் ஆகும் என்றுதானே..." என்று யோசனையாக இழுத்தாள் அவள்...

சந்தானத்தின் கவனம் தன்னிடம் திரும்புவது தெரிந்ததும், "தரக் கட்டுப்பாடு நன்றாக இருந்தால், பொருட்களை வெளி நாட்டுக்கு அனுப்பி, உலக மார்க்கெட்டைப் பிடிக்கலாம்! அப்புறம், கொஞ்ச நாளாக இந்தப் பேப்பரில், டீவியில் எல்லாம் ஒரே பேச்சாய்க் கிடந்ததே, அந்த ரத்தன் டாட்டா, ஆதித்யா பிர்லா மாதிரி நாமும் பெரிய ஆளாகி, உலக மார்க்கெட்டைப் பிடிக்கலாம்! உலக மார்க்கெட்டைப் பிடித்தால், உலகத் தரத்துக்குச் சம்பளம் வரும்... இப்படிச் சொன்னாரே!" என்றாள்.

ஆனால் சந்தானத்தின் கண்களில் ஆவலோடு, சந்தேகமும் தோன்றவும், "இதற்கெல்லாம் பல ஆண்டுகள் ஆகும்! ஆனால், அதற்கான முதல்படி தரக்கட்டுப்பாடுதான். அதற்கே வழியில்லாவிட்டால், இன்னும் பத்துத் தலைமுறை போனாலும் இப்படியே இருக்க வேண்டியதுதான், என்று சத்யாசார் ரொம்ப வருத்தமும் பட்டார்!" என்று முடித்தாள் அவள்.

ஒரு சிறு அமைதியின் பின், "ஆள் குறைப்பு செய்ய மாட்டார்கள் என்று எழுதிக் கொடுத்தால், இதை... இந்த முயற்சியை ஒத்துக் கொள்ளும்படி, நானும் பேசுவேன் என்று சொல்லி விடும்மா!" என்று கூறிவிட்டுக் கிளம்பினார் சந்தானம்!

சில கணங்கள், தன் காதுகளையே நம்ப முடியாமல் பிரமித்து நின்றாள் சுசித்ரா!

சற்றுப் பொறுத்து அங்கு வந்த சத்யாகருக்கும் அதே ஆச்சரியம்தான்!

"வரும்போது எதிரே சந்தானத்தைப் பார்த்தேன். எல்லாம் ஓகே., செகரட்டரியிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று வாய் நிறையச் சிரித்துவிட்டுப் போகிறார்! என்ன நடந்தது?" என்று வியந்து வினவினான்!

சுசித்ரா நடந்ததைச் சொன்னபோதும், அப்புறமும், அவனது வியப்புக் குறையவே இல்லை! "இதைதானே, நாங்களும் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்! இத்தனை நாள் ஏறவே இல்லையே!" என்றான் அவன்.

கண்ணால் சிரித்து, "நீங்கள் ஒரு கப் டீயை வாங்கிக் கொடுத்து, குடிக்கச் சொல்லி உபசரித்துச் சொல்லியிருக்க வேண்டும்! அத்தோடு, நான் வரவைப் பற்றிச் சொன்னேன்!" என்று, நடந்த பேச்சை விவரித்தாள் அவள்!

"கெட்டிக்காரிதான்! குச்சியில் கட்டிய கேரட்டைக் காட்டிக் குதிரையை ஓட வைப்பது போல முயன்றிருக்கிறாய்! ஆனால், அது நீ சொன்னது உண்மையும் கூட! எப்படியோ, வேலை வெற்றிகரமாக நிறைவேறியது! அதற்கு..." என்று ஆர்வமாக அவளைப் பார்த்தான் சத்யாகர்.

அவனது பாராட்டில் கன்னம் கதகதக்க, 'என்ன' என்பது போலப் பார்த்தாள் சுசித்ரா.

"உன் அனுமதி இருந்தால்..." என்று கையை ஏந்தினாற்போல நீட்டினான் அவன்.

மேலதிகாரி பாராட்டும்படி நடந்து கொண்டதைத் தந்தையிடம் சொல்ல வேண்டும் என்று எண்ணியவாறே அவன் கை மீது கையை வைத்த சுசித்ரா, 'சத்யாகர் குனிந்து, அவளது கையில் முத்தமிடவும் பிரமித்தாள்!

வெறும் பிரமிப்பு மட்டுமல்ல!

ஓர் இனிய அதிர்வும், அலை போல அவளது உடலெங்கும் பரவி, இன்னொரு தருணத்தை நினைவுப்படுத்தியது! ஆண்டுவிழாவன்று போலவே, இன்றும் கையில் ஏந்திக் கொள்ள மாட்டானா என்று ஏங்கவும் வைத்தது!

தனக்கு ஏற்பட்ட உணர்ச்சியே, சத்யாகருக்கும் ஏற்பட்டது என்பதை சுசித்ராவால் உணர முடிந்தது!

விலகத் தோன்றாமல் அவள் நிற்க, பிடித்த கையை விடாமல் தன் புறமாக அவளை இழுத்தவன், வெளியிலிருந்து கதவைத் தட்டும் சத்தம் கேட்கவும், சுய நினைவடைந்து நெருப்புச் சுட்டவன் போலச் சட்டென அவளிடமிருந்து விலகிப் போனான்!

"வரலாம்." என்ற சத்யாகரின் அனுமதியின் பேரில் உள்ளே வந்த பெண் ஆண்டு விழாவின்போது சிவப்புச் சுடி அணிந்திருந்தவள்! இன்று இளம்பச்சை நிறம்! பெயர் மோனிகா.

ஒற்றை வார்த்தைகளால், மோனிகா வந்த காரியத்தைக் கேட்டு, அவள் கொண்டு வந்திருந்த ஃபைலை வாங்கிக் கொண்டு, அவளை உடனே திருப்பி அனுப்பிவிட்டு, சுசித்ராவின் பக்கம் திரும்பினான் சத்யாகர்.

"உன்னிடம் சற்றுப் பேச வேண்டும்!"

ஆவலாய் அவள், அவன் முகத்தைப் பார்க்க, சிறு தயக்கத்தின்பின் சத்யாகர் தொடங்கினான். "இந்தப் பணிக்கு உன்னை நியமிக்குமுன், இன்னொரு பெண்ணைக் கிட்டத்தட்டத் தேர்ந்தெடுத்துவிட்ட நிலை என்று சொன்னேனே, நினைவிருக்கிறதா?"

"ஆ...மாம்!" என்றாள் அவள் புரியாமல்.

"திருமதி சாவித்திரியை நான் ஏன் தேர்ந்தெடுத்தேன் தெரியுமா?"

"வேலையில் முன் அனுபவம் உண்டு என்று..."

"அது மட்டுமல்ல! அவரது வயது! சாவித்திரிக்கு வயது, கிட்டத்தட்ட நாற்பது! இரு பக்கமும் வேலையிலிருந்து மனம் கலைய வழியில்லை..."

சரக்கென்று தலையை நிமிர்த்தினாள் சுசித்ரா.

என்ன? இவனும் குருப்ராசத்தைப் போல எல்லோரும் இவனிடம் மயங்கி விழுவதாகப் பேசுகிறானா? ஆனால், அவளாக ஒன்றும்...

ஆத்திரத்துடன் பார்க்கும் போதே, 'இரு பக்கமும்' என்று அவன் சொன்னது மனதில் பட்டது!

அதாவது, அவன் மனமும் அவளால் சலனப்படுவதாகச் சொல்கிறானா?

என்னவோ சிலுசிலுக்க, தானும் அவனை மறுக்கவில்லையே எனறு தோன்றவும், எழுந்த வேகத்திலேயே சினம் தணிந்தும் போயிற்று!

தொடர்ந்த அவனது பேச்சும் கிட்டத்தட்ட அவளது எண்ணத்தை ஒத்துப் போயிற்று!

"... நான் வெளிப்படையாகப் பேசி விடுகிறேன், சுசித்ரா. கடைசி இரண்டு அனுபவங்களால், செயலாளராக வருகிறவள் சரியாக இருந்தால் போதும் என்றுதான் நான் இதுவரை, எண்ணினேன்! ஆனால்... ஆனால், இது போன்ற சலனம் எனக்கும் ஏற்படக் கூடும் என்று நான் நினைத்ததே இல்லை! அலுவல் இடத்தில் இந்தச் சலனங்கள் எனக்குச் சம்மதமில்லை, சுசித்ரா. அதனால்..."

"அதனால்?" என்று சின்னக் குரலில் கேட்டாள் சுசித்ரா.

வேலையை விட்டுவிட்டுப் போகச் சொல்லுகிறானா என்று நினைக்கவே அவளுக்கக் கஷ்டமாக இருந்தது! ஆனால், அவன் அப்படிச் சொல்லவில்லை.

மாறாக, "இதில், பெரும்பாலும், உன் பிழை கிடையாதுதான்! நான்தான்... ஆனால், நீயும் மறுப்புக் காட்டவில்லை என்பது உனக்கே தெரியும்!... உன்னை வேறு துறைக்கு மாற்றலாமா என்று யோசித்தேன்" என்று அவளை அதிர வைத்தவன் தொடர்ந்து, "ஆனால், இந்த வேலைக்கு நீ மிகவும் பொருத்தமாக இக்கிறாய்! பிரச்சினைகளைக் கையாளும் விதம் உனக்கு இயல்பாக வருகிறது! மீந்துள்ள அடுத்த வழி, மனக் கட்டுப்பாடு மட்டுமே! அதற்கு, என்னோடு நீயும் ஒத்துழைக்க வேண்டும்!" என்று முடித்தான் சத்யாகர்.

வேலையை விட்டுப் போகச் சொல்லவில்லை என்பதே சுசித்ராவுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது!

எனவே சம்மதமான தலையசையுடன், "உங்கள் விருப்பம்." என்றாள் அவள்.

"என் விருப்பமா?" என்றான் அவன் ஒரு மாதிரியான குரலில்!

என் விருப்பம் வேறாயிற்றே என்று சொல்லாமல் சொல்வது போன்ற அந்தக் குரலும் முகமும், ஏனோ, சுசித்ராவுக்கு மகிழ்ச்சியையே அளித்தன!



## அத்தியாயம் 8

பதவிசாக அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே வந்தபோது, சத்யாகர், சுசித்ரா இருவரும் அவரவர் இடத்திலேயே அமர்ந்திருந்த போதும், அன்று பச்சைப் பாவையாக வந்திருந்த மோனிகாவின் ஆராய்ச்சிக் கண்களுக்கு, சுசித்ராவின் முகச் சிவப்பு தப்பவில்லை!

முகச் சிவப்பு மட்டுமல்ல! அவள் அணிந்திருந்த உடையின் அடக்கம் போன்று காட்டும் அதன் தரம், அவளிடமிருந்து வந்த இதமான வாசனை... இன்னும் எல்லாமே!

இவற்றின் விலை என்ன இருக்கும் என்பதும், மோனிகா அறியாதது அல்ல!

வாங்க முடியாவிட்டாலும், 'விண்டோ ஷாப்பிங்' என்பார்களே, அதுபோல விலை உயர்ந்த பொருட்களைப் பார்த்து ரசிப்பதும், அவற்றை வாங்குவோரைப் பார்த்து வயிறெரிவதும், அவளது வாராந்திர வழக்கம்! விடுமுறை நாளான ஞாயிற்றுக் கிழமையை அவள் கழிப்பதே அப்படித்தான்!

சத்யாகருடைய புதிய செயலாளரைப் பற்றிய அலுவலக வம்புப் பேச்சில், அவளது உயர் மட்டத் தோற்றம், அவளால் அவ்வப்போது அலசி ஆராயப்படுகிற ஒன்று!

சத்யாகருடைய செயலாளர் பதவிக்காக அவளும் எவ்வளவோ முயன்றிருந்தாள். ஆனால், மோனிகாவின் தகுதிகளில் பெரிதாகக் குறை கிடையாது என்றாலும், இது போன்ற வேலையில் நிறைய அனுபவம் உள்ளவரைக் கிட்டத்தட்டத் தேர்ந்தெடுத்து விட்டதாக, அவளுக்காக சிபாரிசு செய்த தலைமைக் கணக்கரிடம் சத்யாகர் தெரிவித்திருந்தான்!

சரி, அவளுக்குச் சிறு வயது என்பதுதானே, சத்யாகரின் ஆட்சேபமாக இருந்திருக்கிறது., அதற்காக வருத்தப்படக் கூடாது., மகிழ்ச்சிதான் அடைய வேண்டும் என்று மோனிகா தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

ஆனால், பார்த்தால், அவளை விடவும் இளமையானவளாக ஒருத்தி, அந்த வேலைக்கு வந்திருந்தாள்! அநியாயம் அல்லவா?

சுசித்ராவின் அடுத்த குற்றம், அவள் அழகாக இருந்தது!

அதைவிடவும் பெரிய பிழை, அவளது அணிமணிகளின் விலையும் தரமும்!

'அய்யோ, இவளுக்கு மட்டும் எங்கிருந்து கிடைக்கிறது?' 'சம்பளம் முழுவதையும் அலங்காரத்துக்கே செலவு செய்வாள் போல' என்றும் வயிறு எரியப் பேசுதோடு இருந்தது, ஆண்டுவிழாவின் போது, சத்யாகரோடு அவள் இணைந்து வந்ததிலிருந்து 'எவன் வாங்கிக் கொடுத்தானோ', 'எதற்காகவோ' என்பது போன்ற வக்கிரமான வர்ணனைகளாக மாறியிருந்தது!

ஆனால், அவளைப் பார்த்தாலே நல்ல பெண்ணாகத் தெரிகிறது. தப்பாக எதுவும் இராது என்றும், யாராவது பணக்கார அத்தை, பாட்டி யாராவது இருந்து, இதையெல்லாம் வாங்கிக் கொடுத்திருக்கலாம் என்று சொல்கிறவர்களும் இருந்தார்கள்தான்!

ஆனால், அதை ஒத்துக் கொள்ள மோனிகாவும், அவளைப் பின்பற்றும் இன்னும் சிலரும் சற்றும் தயாரில்லை!

பெரிய தொழிற்சாலை என்பதால், அதன் பல்வேறு பகுதிகளும் தனித்தனியாக இருந்து செயல்பட, கான்டீன் போன்ற இடங்கள் தவிர, ஒருவரையொருவர் பார்ப்பதே அரிதாகத்தான் இருந்தது! அதுவும், ஒருவர் வரும் அதே நேரத்தில் அடுத்துவரும் உணவுக்குச் சென்றால்தான்!

அப்படி சுசித்ராவைப் பார்த்துவிட்டால், நாலைந்து நாட்களுக்கு மோனிகா குழுவினருக்குப் பொழுது நன்றாகப் போகும்! அவளது நடை, உடை, பாவனை, அணிமணிகள் எல்லாமே விலாவாரியாக அலசி ஆராய்ந்து வயிறெரிவார்கள்! சின்னஞ்சிறு குறை போல ஏதேனும் தோன்றினாலும், அதைப் பூதமாக்கித் திரும்ப திரும்ப பேசுவார்கள்!

இந்நிலையில்தான் கம்ப்யூட்டரைப் புகுத்தும் திட்டம் பற்றி, மோனிகா பணி புரிந்த பகுதியில் உள்ளவர்களின் கருத்துகளைத் தொகுத்து, அதை சத்யாகரிடம் கொடுக்கும்படி, அவளுடைய மேலதிகாரி அவளை அனுப்பி வைத்தார்!

மோனிகாவும் ஆவலாகத்தான் வந்தாள்.

சத்யாகரிடம் பேசவும் பழகவும் அவளுக்கு எப்போதுமே பிடிக்கும்! அவனது தோற்றத்தில் உள்ள மயக்கம்! அதிர்ஷ்டம் அடித்தால், அவனுக்கும் அவளைப் பிடித்துப் போய், அவன் மனைவியாகவே அவள் ஆகலாமே! இப்போதே அவனது சம்பளம் அரை லட்சத்துக்கும் மேல் என்றார்கள்! இன்னும் எங்கே போய் நிற்பானோ?

அப்படித் திருமணம் நடக்காவிட்டாலும், நிறுவனத்தில் அவளது எதிர்காலத்துக்கு, அவன் உதவக் கூடும் என்பதும் அவள் மனதில் இருந்தது!

எனவே, சத்யாகரைச் சந்திக்கும் வாய்ப்பை அவள் விடவும் மாட்டாள்., அப்படிச் சந்திக்கும்போது, தன்னைச் சிறப்பாகக் காட்டிக் கொள்ளவும் செய்வாள்!

இப்போது அங்கேயே உட்கார்ந்திருக்கும் சுசித்ராவோடு தோற்றத்தில் போட்டி போட்டு வெல்ல முடியாது என்பது நிச்சயம்!

ஆனாலும் முகம் கழுவி, லேசாக மேக்கப் பண்ணிக் கொண்டுதான் சத்யாகரின் அலுவலறைக்கு அவள் சென்றதே. அப்போதும், கதவைத்தட்டி, ரொம்பப் பதவிசாகக் காட்டிதான் அவள் மெல்ல உள்ளே வந்தது!

ஆனால், உள்ளிருந்த சூழ்நிலை அவளுக்கு உவப்பானதாக இருக்கவில்லை! மோனிகாவின் பதவிசை, சத்யாகர் கவனித்ததாகவும் தெரியவில்லை!

"என்ன?" என்று அவன் ஒற்றை வார்த்தையை உமிழ்ந்தபோது, மேலதிகாரி கேட்குமுன்னே முந்திக் கொண்டு இங்கே வந்திருக்க வேண்டாமே என்றிருந்தது அவளுக்கு!

ஆனால், இங்கே நடந்திருக்கக் கூடிய கதை? அது தெரியாமலே போயிருக்குமே!

நடந்ததை அவளும் பார்க்கவில்லைதான். பங்கு கொண்ட இருவருமே அதைச் சொல்லப் போவதும் இல்லையென்றாலும், அவளால் ஊகிக்க முடியாதா என்ன? அவள் விரும்பிய விதமாய் ரசமான கதையொன்று மோனிகாவின் கற்பனையில் விரிந்தது!

தன்னை மைக்ராஸ்கோப்பில் வைத்து ஒரு கூட்டம் அலசி ஆராய்வது தெரியாமல், தன் வழக்கம்போல வருவதும், ஈடுபாட்டுடன் வேலையைச் செய்வதும், திரும்பிப் போவதுமாக சுசித்ராவின் வாழ்க்கை ரம்மியமாக இருந்தது!

கிழக்குக் கடற்கரைச் சாலை பங்களாவில் இருந்து அவளது சின்ன ஏசி காரில்

கிளம்பி, கிட்டத்தட்ட முக்கால் பங்கு தூரம் அதில் பயணம் செய்து, அங்கே தெரிந்த இடத்தில் காரை நிறுத்திவிட்டு, அங்கே ஏற்கனவே நிறுத்தி வைத்திருக்கும் ஸ்கூட்டியை எடுத்துக் கொண்டு அலுவலகம் செல்வாள்.

திரும்பிச் செல்வதும் அப்படியே!

இந்த நிலையில்தான் அலுவலகத்தில் கம்ப்யூட்டரால் பிரச்சினைகள் ஏற்பட்டு, அவள் தாமதமாக வீடு திரும்பும்படி ஆகிக் கொண்டிருந்தது!

"நீ ஒரு கெட்டிக்காரக் காரோட்டி என்று தெரியும், சுசிம்மா! ஆனாலும், விநாயகத்தின் பிரச்சினை முழுதாகத் தீரும்வரை, உன் அம்மாவின் நிம்மதிக்காக!" என்று நம்பிக்கையான ஒரு டிரைவரைத் தொழிற்சாலையை ஒட்டியிருந்த ரயில் நிலையத்தின் மறு புறமாய், வெகு அருகிலேயே காருடன் காத்திருக்குமாறு சேதுமாதவன் ஏற்பாடு செய்தார்!

சுசித்ராவுக்கும் அது பிடித்தமாகத்தான் இருந்தது!

ஏனெனில், இரவு நேரத்தில் தனியாக வீடு வரை அவ்வளவு தூரம் காரை ஓட்டிச் செல்ல, அவளுக்குமே விருப்பமில்லைதான்! காலை, மாலை என்றால், அந்தச் சாலையில் காரை ஓட்டுவதே சுகம்தான்!

வெய்யிலும், வெப்பமும் குறைந்துவிட்ட பின்மாலைப் பொழுதில் ரயில் நிலையம் வரை நடந்து செல்வதே சுகமாக இருக்கவும், சுசித்ரா ஸ்கூட்டியை எடுப்பதையே நிறுத்திவிட்டாள். காலை வேளைகளிலும், பாதையோரத்தில் வரிசையாக வைக்கப்பட்டிருந்த மர நிழலில் நடந்தே அலுவலகத்துக்குப் போய்விடுவாள்.

ஒரு நாள் மாலையில் சுசித்ரா இப்படி நடப்பதை, அலுவல் தொடர்பாக எதையோ யோசித்தபடி ஜன்னல் அருகே நின்ற சத்யாகர் காண நேர்ந்தது!

பார்த்தவனால் கண்ணைத் திருப்ப முடியவில்லை!

பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணின் 'நிமிர்ந்த நன்னடை' இப்படித்தான் இருந்திருக்கும் என்ற எண்ணம் அவனுக்குத் தானாகத் தோன்றியது! மதிப்பு மரியாதையை ஈட்டிக் கொள்வதோடு, மனதைக் கவரும் அழகும் மிளிர்ந்தது!

நடை மட்டுமல்ல! நின்றாலும், அமர்ந்திருந்தாலும், எப்போதுமே, சுசித்ரா அழகாகத்தான் இருந்தாள்! நிலவின் ஒளி மாதிரி, அமைதியான அழகு!

அதற்கேற்ற மாதிரி கண்ணை உறுத்தாத, அதே சமயம் பாந்தமான ஆடை, அணிமணிகள்... ஆடைகள்!

சட்டென அவனுக்கு ஓர் எண்ணம் தோன்றிற்று.

அதன்படி, மறுநாள் சுசித்ரா வந்ததும், அவளிடம் ஓர் உதவி கேட்டான்.

""என் பெற்றோருக்குத் திருமணநாள் வருகிறது, சுசித்ரா! அப்பாவுக்கு நான் வாங்கி விடுவேன்! ஆனால், அம்மாவுக்கு வாங்கும்போது எனக்கு ஒன்றும் புரிவதில்லை! இதுவரை நான் வாங்கிய எதுவும் சரியாக அமைந்ததில்லை! உன் உடைகளைப் பார்க்கும்போது... இன்று வரை, கண்ணை உறுத்தும் விதமாக நீ அணிந்ததே இல்லை! இது போலத் தரமாக என் அம்மாவுக்கு ஏதாவது வாங்க உதவி செய்கிறாயா? மூவாயிரம் ரூபாயில்... கொஞ்சம் கூடுதலாக ஆனாலும் பரவாயில்லை? முடியுமா?"

சுசித்ராவுக்கு ஆச்சரியமாக இருந்தது!

அன்று நன்றி சொல்வதற்காகக் கையில் முத்தமிட்டவன், ஏதோ உலக மகாத் தப்பைச் செய்துவிட்டவன் போல, அதைப் பற்றி விளக்கம் கொடுத்தபிறகு, சர்வ ஜாக்கிரதையாக, ரொம்ப ரொம்ப ஒதுங்கியே போய்க் கொண்டிருந்தான்!

வந்த முதல் நாளில் போல, அலுவலகத்து மேஜை நாற்காலிகளில், வேலை செய்யத் தெரிந்த ஒன்று போன்ற பாவனை!

இதுதான் நல்லது என்று அவளுமே யோசித்து அதை ஏற்றுக் கொண்டிருந்தாலும், அவ்வப்போது அவளுள் ஓர் ஏக்கம் தலை தூக்கிக் கொண்டுதான் இருந்தது!

இப்போது அவனே, அலுவலக வேலை அல்லாத ஒன்றை... அவனுடைய குடும்ப விஷயமாக உதவி கேட்கிறானே!

உள்ளம் ஜிவ்வென்று சிறகடிக்க, குனிந்து தன் உடையை ஒரு தரம் பார்த்துவிட்டு, "இது போலச் சுடிதாரா சார்?" என்று சாதுவாகக் கேட்டாள் அவள்.

ஒரு கணம் திகைத்து நோக்கியவனிடம் சிரிப்பு வெடிக்க, அவளும் மிகுந்த மகிழ்ச்சியோடு அதில் கலந்துகொண்டாள்!

இருவருக்குமே அந்தச் சிரிப்பு ரொம்பவும் தேவைப்பட்டது போலும்! சற்று நேரம் இருவராலுமே சிரிப்பை நிறுத்த முடியவில்லை!

ஆனால், எதற்கும் ஒரு முடிவு உண்டுதானே?

சிரிப்பின் வேகம் சற்றுக் குறைந்தவுடன், "சாரி சார்!" என்று சுசித்ரா மன்னிப்புக் கேட்டாள். "நான் அப்படிப் பேசியிருக்கக் கூடாது!"

"அதில் ஒன்றும் தப்பில்லையே!" என்றான் சத்யாகர்! "நாலைந்து நாட்களாக, எதுவும் சரியில்லை, சுசித்ரா. நாம் என்ன விரோதிகளா? இல்லையே! இனக் கவர்ச்சி, காதல்... இப்படிச் சலனங்கள், அலுவலகத்தில் கூடாதுதான்! அதற்காக, முகத்தைப் பாராமல் சண்டைக்காரர்கள் போல இருந்தாக வேண்டும் என்று என்ன கட்டாயம்? நினைத்துப் பார்த்தால் அசட்டுத்தனமாகத் தெரிகிறது!" என்றான் தொடர்ந்து!

லேசாக முறுவலித்ததற்கு மேலாக, சுசித்ரா எதுவும் சொல்லவில்லை.

"உனக்கும் அதே எண்ணம்தான் என்று புரிகிறது! சும்மா சிரித்துப் பேசினாலே, சலனப்பட்டு விடுவோம் என்று இல்லையே! அதனால், இப்படிச் சாதாரணமாக இருக்கலாம். அதற்கு மேல் போகாமல் இருவருமே கவனித்துக் கொள்ளலாம்!" என்று அவளைப் பார்த்தான் அவன்.

சந்தோஷமாகத் தலையாட்டிவிட்டு, "உங்கள் அம்மாவுக்கு என்ன மாதிரி வண்ணங்கள் பிடிக்கும்?" என்று விசாரித்தாள்.

"தெரியவில்லையே" என்று கையை விரித்தான் அவன். "பச்சை, மஞ்சள்... ஆரஞ்சு, அரக்கு... இன்னும் நீலத்தில்..."

"போதும், போதும்! விட்டால், எல்லா நிறங்களையும் சொல்லி விடுவீர்கள் போல! லைட் கலர் பிடிக்குமா, அல்லது... நல்ல சிவப்பு, பச்சை என்று கட்டுவார்களா?"

மீண்டும் கையை விரித்தான் சத்யாகர்! "எல்லா நிறமும் கட்டுவார்கள். ஆனால், ஆளை அடிக்கிற மாதிரி காடியாக எதுவும் தோன்றாது! அதுதான் சொன்னேனே, நீ அணிவது போல என்று!"

அவன் சொல்வது அவளுக்குப் புரியாமலில்லை! ஆனால், எல்லா வண்ணங்களிலும், அவன் சொன்ன மாதிரி ஆளை அடிக்கிற தினுசும் உண்டு., அமர்ந்த தோற்றம் தரும் கலவையும் இருக்கும்! பச்சை, சிவப்பு என்று ஏதாவது ஒரு நிறத்தைச் சொன்னால், அதில் தேர்ந்தெடுப்பது எளிதாக இருக்கும்!

ஆனாலும் தன்னால் இயலாது என்று சத்யாகரிடம் சொல்லிப் பின்வாங்க அவளுக்கு விருப்பமில்லை!

அதிலும், அவளது ஆடை அணிகலன்களைப் பாராட்டி, அவனுடைய தாயுடனேயே ஒப்பிட்டு, அவன் இயல்பாகப் பேசும் இந்த நேரத்தில்!

எனவே, "ஓகே சார்! நான் வாங்கி வருகிறேன். பில்லைப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்! அம்மாவுக்குப் பிடிக்காத மாதிரி தோன்றினால், மாற்றிக் கொள்ளலாம்!" என்று முடித்தாள்!

தன் தாயிடமும் கலந்து கொண்டு, இளம் பச்சை கலந்த சாம்பல் வண்ணத்தில், லேசான ஜரிகை இழைகள் ஓடிய அரக்கு பார்டருடன் சுசித்ரா வாங்கி வந்த சேலை, சத்யாகருடைய தாயாருக்கு மிகவும் பிடித்துப் போனதாகவும், அவ்வளவு அழகான சேலையைத் தேர்ந்தெடுத்த பெண்ணைப் பார்க்க ஆசை என்று தாயார் சொன்னதாகவும் சத்யாகர் அவளிடம் தெரிவித்தான்.

ஆனால், அவளை வீட்டுக்குக் கூட்டிச் செல்ல, அவன் சற்றும் தயாரில்லை!

"எப்படி முடியும், சுசித்ரா? எப்படியும் அது வெளியே தெரியாமல் போகாது! எல்லா அலுவலகங்களையும் போல, இங்கும் வம்பு பேசுகிறவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்! அவர்கள் வாய்க்கு அவல் கொடுக்க எனக்கு மனமில்லை!" என்றதோடு முடித்துவிட்டான்!

அதாவது, அவளிடம் ஓர் உதவியே கேட்டாலும், அதற்குமேல் நெருக்கம் முற்றி விடக் கூடாது என்பதில் கவனமாக இருக்கிறான்!

எனவே, சத்யாகரைப் பெற்றவளைக் கனவில் காண்பதோடு, சுசித்ரா திருப்தி அடைய வேண்டியிருந்தது!

அவனையும் சேர்த்துதான்!

ஏதோ ஒரு வகையில், அவன் வீட்டுப் பக்கமாகச் சென்று, அவன் தாயைப் பார்ப்பதும், பழகுவதும் அவளால் இயலாததில்லை! ஆனால், அவனிடம் 'ஒத்துழைப்ப'தாகச் சொல்விட்டு, ஏமாற்ற அவளுக்குப் பிடிக்கவில்லை!

சும்மாவே, அவன் யார் என்கிற உண்மையை மறைத்துச் செயல்படுவதே, இப்போது அவளுக்கு மிகவும் உறுத்தலாக இருந்தது! அவள் அவ்வளவு பணக்காரப் பெண் என்று வேலை பார்க்கும் இடத்தில் தெரிவது, யாருக்கும் நல்லதில்லை என்ற ஒரு காரணத்திற்காகவே, அவள் சும்மா இருந்தாள் எனலாம்!

மூன்று மாதங்கள் கழித்து வேலையை விடும்போது வேண்டுமானால்...

ஆனால், அப்படி வேலையை விட்டுவிடவும், இப்போது அவளுக்குப் பிடிக்கவேயில்லை!

அது பற்றி நினைக்கக் கூட!

ஒரு பெரிய தொழிற்சாலையை நிர்வகிப்பதில் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளும், அவைகளை நியாயமாகவும், யாருக்கும் பாதிப்பின்றியும் தீர்ப்பதும் எவ்வளவு சுவாரசியமான வேலை!

பெரிய பெரிய பிரச்சினைகளைக்கூடப் புத்தி கூர்மையுடன் சத்யாகர் சமாளிப்பதை உள்ளூர வியப்புடன் கண்டு ரசிக்கும் இந்த வாய்ப்பு இல்லாமல், அவளால் எப்படி இருக்க முடியும்?

பிரச்சினைகளைக் கவனத்துடன் கேட்பதும், கேட்கும்போதே, கண்ணில் யோசனை படிவதும், அவரவருக்கு ஏற்ற பாவனையுடன் செயல்படுவதும், பொருத்தமாக அவனது ஒவ்வோர் அசைவும்... இவனைப் பாராமலும்தான், அவள் எப்படி இருப்பாள்?

தன்னையறியாது எழுந்த இந்தக் கேள்வியில் திகைத்து, சுசித்ரா சற்று நேரம் மிரண்டே போனாள் எனலாம்!



## அத்தியாயம் 9

அவளது சொந்தப் பிரச்சினைகள் எப்படி இருந்தபோதும், மல்லிகாவுடைய குடும்ப நிலையையும், அவளது காதலையும் பற்றி சுசித்ரா மறக்கவில்லை!

கண்ணனது பொறுப்பு தீரும் வரை மல்லிகா அவளது சொந்த வாழ்வைப் பற்றி நினைத்துப் பார்ப்பதாக இல்லை என்பது அவள் அறிந்த விஷயம்!

தருணுக்கு, மல்லிகாவிடம் ஈடுபாடு இருந்தது!

ஆனால், மனைவியின் குடும்பம் முழுவதையும் அவன் தூக்கிச் சுமக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது, சற்று அதிகப்படி என்றுதான் சுசித்ராவுக்கே தோன்றியது!

மல்லிகாவே அதை விரும்ப மாட்டாள்!

அவனுடைய குடும்பமும் தகராறு பண்ணலாம்!

பண உதவி செய்யலாம் என்றாலும் மல்லிகா அதை ஏற்பது கடினம்! இந்த ஓர் உடைக்கே, மாதா மாதமாகப் பணம் தந்து விடட்டுமா என்று கேட்டுக் கொண்டு இருப்பவள்!

மண்டையைப் பிய்த்துக் கொண்டு அவள் யோசித்துக் கொண்டிருந்தபோது, தானாக ஒரு வழி, வானத்தைக் கிழித்துக் கொண்டு வந்து விழுந்த மாதிரி அவள் முன்னே வந்து நின்றது!

தந்தை சேதுமாதவன் மும்முரமாகப் பணம் பண்ணுவதில் பெரும் பொழுதைக் கழிக்கையில், பழங்காலப் பத்தினித் தெய்வமாய் வீட்டில் போரடித்துக் கிடக்கிற ரகமில்லை அவர் மனைவி மஞ்சுளா.

குடும்பத்தை அலட்சியப்படுத்த மாட்டாள்! ஆனால், குடும்பத்துக்காகச் செலவிடும் சமயம் தவிர, மற்ற நேரத்தில் பல்வேறு பொது, அல்லது தனிப்பட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபாட்டுடன் கலந்து கொள்வாள்.

"எனக்குக் கூட, ஒரு பத்தே பத்துக் கோடி நிதி திரட்டிக் கொடும்மா. மேடை, மைக் செலவை வேணுமானால், நானே பார்த்துக் கொள்ளுகிறேன்!" என்று சேதுமாதவன் கேலி செய்வதும் உண்டு!

அல்லது நாலைந்து சமநிலை சினேகிதிகள் சேர்ந்து ஊட்டி, குன்னூர் என்று சுற்றிவிட்டும் வருவார்கள்!

இந்த முறை குற்றால அருவிகளில் தண்ணீர் இருக்கிறது என்று கேள்விப்படவும், தோழியர் வட்டம், குற்றாலம், பாபநாசம் என்று சுற்றப் போயிற்று!

திரும்பி வந்த மஞ்சுளா, மகளுக்கு மிகவும் தேவைப்பட்ட ஒரு தகவலைக் கொண்டு வந்தாள்.

குற்றால அருவி நீரில் மூலிகைகள் கலந்திருப்பதால், அதைக் கொண்டு வெறுமனே முகம் கழுவினால்கூட, புத்துணர்ச்சி கிடைக்கிறது என்று பேசுகையில், சுற்று வட்டாரத்தில் இருக்கும் ஒரு மூலிகைப் பண்ணை, அங்கு நடக்கும் மருத்துவம் பற்றிப் பேச்சு வந்திருக்கிறது!

குழுவாகச் சென்றவர்களுக்கு ஆர்வம் பிறந்துவிட, எல்லோரும் அங்கு சென்று பார்த்திருக்கிறார்கள்!

அருமையான இயற்கைச் சூழலில் பரந்து கிடந்த மூலிகைப் பண்ணையும், அங்கு சிகிச்சை நடக்கும் விதமும் எல்லோர் மனதையும் கவர்ந்துவிட்டதாம்!

பணப் பற்றாக்குறையால், அதிகம் செய்ய முடியவில்லை என்று, அங்கு வைத்தியம் நடத்திவரும் துறவி கூறவும், நேரில் கண்ட மஞ்சுளாவுக்கு மனம் உருகிவிட்டது!

கூடச் சென்ற மற்றவர்களுடன் கலந்து பேசி, அங்கேயே ஒரு தொகையைக் கொடுத்துவிட்டு, இங்கு வந்த பிறகும், கூடுதலாகப் பணம் சேகரித்து அனுப்ப, ஏற்பாடு நடக்கிறது!

கண்ணனின் மருத்துவம் பற்றி மல்லிகா கூறியது நினைவு வர, "அங்கேயே தங்கி மருத்துவம் பார்க்க வசதி இருக்கிறதா?" என்று தன் தாயிடம் சுசித்ரா வினவினாள்.

"இருக்கிறது! ஆனால், இப்போதைக்குப் பணம் இல்லாததால், அங்கே பணிபுரிய ஆட்கள் குறைவாக இருக்கிறார்கள்! பார்க்கக் கூடிய அளவுக்கு நோயாளிகளைச் சேர்த்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்." என்றாள் தாயார்!

சுசித்ராவின் மூளை வேகமாக வேலை செய்தது!

அவள் தன் திட்டத்தை மல்லிகாவிடம் சொல்ல, அவளும் அதற்குத் தலையாட்ட, அதன் பலனாக, மல்லிகா அவளுடைய தாயார் தம்பியுடன் குற்றாலத்து மூலிகைப் பண்ணைக்குப் போய்ச் சேர்ந்தாள்.

கண்ணனைப் பரிசோதித்த துறவியார் அவனைக் குணப்படுத்தி விடலாம் என்று கூறினார். மல்லிகாவுடைய தாயாருக்கு அங்கேயே வேலை கிடைத்தது. குறைவான ஊதியமே என்றாலும், மகனுக்குக் குணமாகிவிடும் என்பதே அந்தப் பெண்மணிக்குப் போதுமானதாக இருந்தது!

இருவரின் செலவும் போக, ஒரு சிறு தொகை கைக்கும் வரவே, அந்தம்மாவுக்கு ஒரே சந்தோஷம்! இனி, மகளின் தலைச் சுமையாக இருக்க வேண்டியதில்லை! மற்ற பெண்களைப் போல, அவளுக்கும் கணவன், குழந்தைகள் என்று நல்ல வாழ்வு அமைய, அவளும் பிள்ளையும் தடையில்லை!

திரும்பி வந்த மல்லிகா, சுசித்ராவுக்குத் திருப்பித் திருப்பி நன்றி சொன்னாள்.

"நான் ஒன்றும் செய்யவில்லையே" என்று சுசித்ரா மறுதலித்ததை அவள் காதிலேயே வாங்கிக் கொள்ளவில்லை!

"நீ வாங்கித் தந்த, திருமதி சேதுமாதவனின் சிபாரிசுக் கடிதம் இல்லாமல் ஒன்றும் நடந்திராது! எப்படித்தான் அவர்களிடம் போய், உனக்காகக் கூட இல்லாமல், சுமார் நாற்பது நாளே பழகிய எனக்காக சிபாரிசுக் கடிதம் கேட்டாயோ? உனக்கென்ன வந்தது என்று கேட்பார்களே என்று, உனக்குப் பயமாக இல்லையா?" என்று பல விதமாக வினவினாள்.

பெற்ற தாயிடம் என்ன பயம்?

இன்னொன்றும் நினைவு வர, சற்று யோசித்துவிட்டு, "மல்லிகா, உன்னிடம் ஒரு விஷயம் சொன்னால் மனதோடு வைத்துக் கொள்வாயா?" என்று கேட்டாள்.

"உன்னைத் தவிர எனக்குத் தோழியே இல்லாதபோது, நான் யாரிடம் சொல்வேன்?" என்றாள் மல்லிகா!

உண்மைதான். வேலை முடிந்து வீட்டுக்கு ஓடிப் போனால், தம்பியைக் கவனிப்பதிலும், வீட்டு வேலைகளிலும் தாய்க்கு உதவி செய்யவே மல்லிகாவுக்கு நேரம் சரியாக இருக்கும் என்பது, சுசித்ராவும் அறிந்ததே!

எனவே அந்தப் பேச்சை விடுத்து, "உனக்கு சிபாரிசுக் கடிதம் தந்தார்களே அந்த திருமதி சேது மாதவன், என் தாயார்." என்றாள் ஓரளவு உணர்ச்சி துடைத்த, லேசாக மரத்த குரலில்!

ஒரு கணம் ஒன்றும் புரியாமல் விழித்தாள் மல்லிகா!

பிறகே உண்மை உதயமாக, விழி விரித்து, "அவர்கள் உன் தாயார் என்றால், சேதுமாதவன் சார், உன் தந்தை!" என்றாள் அதிசயமே உருவாக.

"அப்படித்தான் கேள்வி!" என்று இலகுவாகக் கூறி, லேசாக முறுவலித்தாள் சுசித்ரா.

மல்லிகாவுக்கு அதிசயம் தீரவில்லை! "கோடீசுவரர் சேதுமாதவன் மகளுக்கு, இங்கே என்ன வேலை?" என்று ஆச்சரியத்துடன் விசாரித்தாள்!

மீண்டும் முறுவலித்து, "பழைய காலத்தில் ராஜகுமாரன் உலகம் அறிவதற்காகத் தேசாந்திரம் போவானாமே! அது போல, இங்கே நான் அனுபவ அறிவு பெறுவேன் என்பது என் தந்தையின் எண்ணம்!" என்றாள் சுசித்ரா!

"ஓ! ஓ! அதுதான் உன்னைப் பார்க்கும்போது, ஒரு... ஒரு மேல் தட்டுத் தோற்றம் தெரிந்ததா? உடை கூட... உனக்கென்றே பார்த்துப் பார்த்துப் பொருத்தமாகத் தைத்தது போல... அப்படித் தைத்ததுதான் இல்லையா? அன்றைக்குச் சொன்னது போல, இன்னின்ன மாதிரி என்று சொல்லி..."

"ம்ம். அப்படித்தான் என்று வை. ஆனால், இப்போது அதை விடு! நீ தப்பாக எடுத்துக் கொள்ளாவிட்டால், உனக்குச் சில உடைகள் கொண்டு வருகிறேன்!" என்று ஓர் இனிய முறுவலுடன் சுசித்ரா பிரியமாகக் கூறினாள்.

"தப்பாக... நீ... நீங்கள்..." என்று தொடங்கியவளை இடைமறித்து, "நான் என்றும் உன் தோழிதான், மல்லிகா! இப்போது நான் இந்த உண்மையைச் சொன்னதே, தோழிகள் இடையே ஒளிவு மறைவு வேண்டாம் என்றுதான்! அதனால், நீங்கள் வாங்கள் என்று சொல்லி, என்னை அன்னியப் படுத்தாதே!" என்று வருத்தம் தொனிக்க சுசித்ரா பேசிய விதத்தில், "ஐயோ, சாரிசாரி! சாரி, சுசித்ரா. என்னமோ திடீரென்று ஒரு கணம் நீ எங்கேயோ உயரத்தில் இருப்பது போலத் தோன்றிவிட்டது! அதனால்..." என்று அவள் கையைப் பிடித்துக் கொண்டு, மல்லிகா மன்னிப்புக் கேட்டாள்.

பிறகு, "நீயும் என்னைத் தப்பாக நினைக்கக் கூடாது! இப்போது உன் அம்மா மூலமாக நீ செய்த உதவியால், கண்ணனின் மருத்துவச் செலவு அடியோடு இல்லாது போய்விட்டது! வீட்டுச் செலவும் ரொம்பக் குறைந்து போனதால், என் வருமானத்தில், நானே இன்னும் கொஞ்சம் நல்ல துணி மணி வாங்க முடியும் என்பதால்... தப்பாக எடுக்கக் கூடாது என்று முன்பே சொல்லிவிட்டேன்! அந்தத் துணிகளை முன்னெல்லாம் செய்கிற வழக்கம் என்பாயே அது போலச் செய்யச் சொல்லி விடேன்!" என்று கெஞ்சும் குரலில் கூறி முடித்தாள் மல்லிகா!

"என் அப்பா எப்போதும் கரெக்ட்!" என்று அதிசயித்தாள் சுசித்ரா.

மற்றவள் புரியாமல் விழிக்கவும், "இந்த வேலை பார்ப்பதால், மற்றவரை எடை போடும் திறன் எனக்கு வரும்.. அதனால், திருமணத்துக்கு முன் கட்டாயம் வேலை பார்க்க வேண்டும் என்று அப்பா சொல்லியிருந்தார்! பாரேன், இப்படிச் சொல்லி நீ வாங்கிக் கொள்ள மறுப்பாய் என்று நான் நினைத்த அதே மாதிரியே, வார்த்தைகள் வரை அதேபோலச் சொல்கிறாயே!" என்று சிரித்தாள்!

"வேலை பாராமலே இருந்திருந்தாலுமே, நீ கெட்டிக்காரிதான்!" என்று தோழியைத் தாங்கிப் பேசிய மல்லிகா, திடுமென விழி விரித்து, "ஹே! அப்படியானால், சீக்கிரமே உனக்குத் திருமணம் நடக்கப் போகிறதா? நிச்சயமாகிவிட்டதா? மாப்பிள்ளை பார்த்தாயிற்றா? அல்லது, காதலா?" என்று ஆவலாகக் கேட்டாள்.

முதல் முறையாக முகத்திலிருந்த பிரகாசம் குறைய, "சேச்சே!" என்று, ஒட்டு மொத்தமாக எல்லாவற்றையும் மறுத்தாள் சுசித்ரா! "திருமணம் என்கிற நிலை வருமுன் உலகம் தெரிந்துகொள் என்று அப்பா சொன்னார்! எனக்கும் அது சரியென்று தோன்றவே, வந்து சேர்ந்துவிட்டேன்! ஆனால், நம்மில் ஒருத்தி என்றால்தான், எல்லோரும் உரிய விதமாக நடத்துவார்கள் என்பதால், நான் யாரென்று யாரிடமும் காட்டிக் கொள்ளவில்லை! நீயும் தெரிந்த மாதிரிக் காட்டிக் கொள்ளக் கூடாது!"

மல்லிகாவுடைய தாயாருக்குத் தங்குவதற்கு ஒரு சிறு இடம் கொடுத்திருந்தார்கள். அங்கேயே சமைப்பதற்கு வசதி இருந்ததால், இங்குள்ள பாத்திரம் பண்டங்களை மூட்டை கட்டிக் குற்றாலத்துக்கு அனுப்ப வேண்டியிருந்தது! விடுதிக்கு எடுத்துச் செல்லக் கூடியதற்கு, இன்னொரு விதமாக அடுக்க வேண்டியிருந்தது! எல்லாவற்றிலும் உதவி செய்ததோடு, காரைக் கொணர்ந்து, மல்லிகாவின் போக்கு வரத்துக்கும் சுசித்ரா உதவி செய்தாள்.

இதில் ஆத்திரப்பட்டவன் குருப்ரசாத்தான்!

"சும்மாவே உன்னுடன் உட்கார்ந்து நாலு வார்த்தை பேச முடியவில்லை! இப்போதோ, கண்ணிலேயே காண முடியவில்லையே! விடுமுறை நாளில்கூட இப்படியா? கல்யாணம் செய்துகொள்ளலாம் என்றுவிட்டு, இப்படித் தரிசனம் கூடத்தராமல் இருப்பது நியாயமா, சுசி?" என்று குறைப்பட்டான் அவன்.

இவன் சொல்வது எந்த அளவுக்குச் சரி? முக்கால் கிணறு போல, முக்கால் உண்மையல்லவா பேசுகிறான்! ஆனால், சேதுமாதவன் மகளை இப்படி மடக்க முடியாதே!

"திரும்பத் திரும்ப ஒரு வார்த்தையை விட்டுவிட்டே பேசுகிறீர்கள், குரு! அப்பா சம்மதித்தால் மட்டுமே திருமணம் என்றுதான் நான் முதலிலிருந்தே சொல்லி வந்திருக்கிறேன்!"

"ஆனால், உனக்கு விருப்பம் என்றால் அவர் தடை சொல்ல மாட்டார் என்று நீ, அவரிடம் கேட்கப் போனபோதே, நம் இருவருக்குமே தெரியும்தானே? அதாவது, அப்போது உனக்கு விருப்பம்தானே?"

மடக்கித்தான் விட்டான்! ஆனாலும்...

"விருப்பம் என்று சொல்ல முடியாது, குரு! அப்பா சம்மதித்தால் சரியாகத்தான் இருக்கும் என்று நினைத்தேன்! ஆனால் அப்பா சொன்னபடி வேலை பார்க்கத் தொடங்கிய பிறகு..."

அவசரமாகக் குறுக்கிட்டான் குருப்ரசாத்! "நீ வேலை பார்க்கத் தொடங்கிய பிறகு, நாம் அடிக்கடி சந்திக்க முடியாமல் போனதால் உனக்கு ஏதேதோ,

என்னவோ அந்த வேலைதான் முக்கியம் போலத் தோன்றுகிறது! கண்ணால் பாராதது கருத்தில் நில்லாது என்பதுதான், அது! கையில் இருக்கும் அன்றாட வேலை பெரிது போலத் தோன்றுகிறது! அது ஒன்றுமேயில்லை! இரண்டு நாட்கள் லீவு போட்டுவிட்டு என்னுடன் வா! உன்னை அப்படியே மாற்றிக் காட்டுகிறேன்!" என்றான் அவன் வேக வேகமாக!

இடையில் அவள் பேச, இடமே கொடுக்கவில்லை!

அப்படியும் இருக்கக் கூடுமோ என்று யோசிக்கும்போதே, பிரச்சினைகளைக் கவனத்துடன் கேட்கும் சத்யாகரின் முகம் அவளுக்கு நினைவு வந்தது! ஒரு சின்ன வேடிக்கைப் பேச்சில் சிரிப்பதும்!

ஆனால், இவனிடம் இப்போது எதையும் சொல்லவும் முடியாது., சொல்லிப் பயனும் இல்லை! அவன் சொன்னதையே சொல்லிக் கொண்டு இருப்பான்!

"லீவெல்லாம் போட முடியாது, குரு! அலுவலகத்தில் முக்கியமான வேலை இருக்கிறது! அத்தோடு, மல்லிகாவுக்கும் உதவ வேண்டியிருப்பதால், மாலையில் சீக்கிரம் வருவதுகூட முடியாது!"

குருப்ரசாத் வேறு நினைத்தான்! இப்படியே போனால், சுசித்ரா அவனை யாரோவாக எண்ணி மறந்துகூடப் போய்விடுவாள்! இந்தப் பணக்காரப் பெண்களை நம்பவே முடியாது! ஒருவன் காதல், காதல் என்று காகமாய்க் காதுக்குள் கரைந்துகொண்டே இருக்க வேண்டும்! இல்லாவிட்டால் நினைவே இராது!

அத்தோடு தோழி என்கிறாள். இவளைப் போல இன்னொரு பணக்காரியாக இருக்கலாம்! அறிமுகம் வைத்துக் கொண்டால், நல்லதுதானே?

"உன்னைப் பாராமல், உன் வீட்டுக்குப் போய், உன்னைப் பார்க்க முடியாமல் மொட்டு மொட்டென்று உட்கார்ந்திருப்பதற்கு, அந்தப் பெண் மல்லிகாவுக்கு உதவ, நானும் வருகிறேன்! உன்னைப் பார்க்கவாவது முடியும் என்பதால், இது எவ்வளவோ மேல்!" என்றான் அவன்! "அத்தோடு, உன் தோழிக்கு உதவ, எனக்குக் கசக்குமா, என்ன? கொடுத்து வைத்திருக்க வேண்டுமே"

அவனைத் தடுப்பதற்கு இல்லை என்று ஆனதும், 'உன்னிஷ்டம்' என்று விட்டுவிட்டாள் சுசித்ரா.

மல்லிகாவின் சின்ன 'அவுட்ஹவுஸ்' வீட்டைப் பார்த்ததும் குருப்ரசாத்துக்கு மிகவும் ஏமாற்றமே! ஆனால், சுசித்ரா வேலை செய்யும்போது பின்வாங்கவும் முடியாமல், கூடச் சேர்ந்து வேலை செய்தான்.

சில பெரிய பொருட்களை நகர்த்துவதும், தூக்குவதும் அவன் பொறுப்பாயிற்று!

கடைசியில், குற்றாலத்துக்குப் பார்சல்களை அனுப்பப் பதிவு செய்து விட்டு, மல்லிகாவுக்குத் தேவையான பொருட்களுடன் அவளை நல்லபடியாக விடுதியில் கொண்டு விட்ட பின்னரே, சுசித்ராவுக்கு மற்ற எதுவும் ஞாபகமே வந்தது!

மல்லிகாவின் நன்றியைப் பெற்றுக் கொண்டு, அவள் தங்கியிருந்த விடுதியிலிருந்து வெளியேறி, அவளது வீட்டு உரிமையாளரிடம் வீட்டுச் சாவியை ஒப்படைத்து அந்தக் கடைசி வேலை முடிவடைந்ததும், அவ்வளவு நேரமும் கூடவே இருந்து உதவி செய்த குருப்ரசாத்துக்கு, சுசித்ரா தன் நன்றியைத் தெரிவித்தாள்.

நிறையப் பொருட்களை எடுத்துப் போக வசதியாக இருக்கும் என்று சுசித்ரா சொன்னதால், குரு அவனது காரையும் எடுத்து வந்திருந்தான்.

"ஏதோ வேலை முடிந்ததே!" என்று அசுவாரசியமாகச் சொன்னவன், காரில் விழுந்து கிடந்த ஒரு கிழிந்த காகிதத் துண்டை நுனி விரல்களால் எடுத்துத் தூரப் போட்டான்!

தன் வெண்ணிறக் கைக்குட்டையை எடுத்து விரல்களைத் துடைத்துபடி, "இந்த மாதிரி ஆட்களோடெல்லாம், நீ ஏன் பழக்கம் வைத்துக் கொள்கிறாய், சுசி?" என்று கேட்டான்!

தன் கார்க் கதவைத் திறந்து ஏறப்போன சுசித்ரா சட்டென்று நின்று, மெதுவாகத் திரும்பிப் பார்த்து, "எந்த மாதிரி ஆட்கள், குரு?" என்று நிதானமாகக் கேட்டாள்.

தப்பாகச் சொல்லிவிட்டோம் என்று குருப்ரசாத்துக்குப் புரிந்து போயிற்று!

ஆனால், அவனும் எரிச்சலுற்றிருந்தான். ஒரு முழு நாள், அதுவும் விடுமுறை நாள் வீணாகியிருக்கிறது! அறையில் படுத்துத் தூங்கியிருந்தால் கூடப் பரவாயில்லை! சுகமாக இருந்திருக்கும்!

ஆனால், ஒரு சாதாரண... மிகவும் சாதாரண நிலையில் உள்ள ஒருத்திக்காக உழைத்துக் கொட்டியிருக்கிறது!

அதன் நடுவேயும், சுசித்ராவோடு இரண்டு ஆசை வார்த்தைகள், ஓரிரு உரசல்கள் இப்படி இருந்திருந்தாலும், எதிர்காலத்துக்கு அஸ்திவாரம் என்றாவது திருப்தியடையலாம்!

சந்தடி சாக்கில் அதற்கும் முயற்சி பண்ணலாம் என்று நினைத்துதான் வந்தான். ஆனால், கூடவே இன்னொருத்தியை வைத்துக் கொண்டு, அது முடியாமல் போயிற்று!

செல்வச் சூழலில் சந்தோஷமாகப் பொழுது போக்கவும் வழியின்றி, எந்த வித லாபமும் இல்லை என்றால், அவனுக்கு மட்டும் ஆத்திரம் வாராதா?

ஆனால், திருமணம் ஆகும்வரை, சுசித்ராவை எதிரிட்டுக் கொள்ளவும் மனமில்லாமல், "சரி சரி, விடு." என்றான் அவன்.

ஆனால், சற்றும் அசையாது நின்று, "எந்த மாதிரி ஆட்கள், குரு?" என்று மீண்டும் கேட்டாள் சுசித்ரா.

எரிச்சலை மறைத்து நயந்த குரலில், "உனக்கே தெரியாதா, சுசிம்மா? உன் தகுதி என்ன? அந்தஸ்து என்ன? இந்தப் பெண்ணிடம் இரக்கம் என்றால், ஒரு டிரைவரை அனுப்பி உதவுவது! அதை விட்டு, நீயே இப்படி இறங்கி வர

வேண்டுமா? நெற்றியெல்லாம் வேர்த்துவிட்டது, பார்!" என்று, துடைத்து விடுபவன் போலத் தன் கைக்குட்டையை நீட்டிக் கொண்டு அவள் அருகில் வந்தான்.

அவளது வெறித்த பார்வையில் அவன் தயங்கி நிற்க, "மல்லிகா என் சினேகிதி. தோழமைக்குள் தரம் வராது என்பது என் அபிப்பிராயம்!" என்றாள் சுசித்ரா தெளிவாக!

மன்னிக்க முடியாத பெரும் தவறை, குரு அப்போது செய்தான்.

"அதற்காகத்தான் தரம் பார்த்துத் தோழமையே கொள்ள வேண்டும் என்பது! உன் ஈசி ஆர் வீட்டோடு, இந்த மல்லிகா எப்படிப் பொருந்துவாள், சொல்லு! வேலைக்காரியாக வரக்கூடத் தகுதியில்லை!" என்றபோது, அவன் குரலில் பெருமிதம் இருந்தது!

நான் எப்படிப் பொருந்தியிருக்கிறேன் என்று சொல்லாமல் சொன்னது அந்தப் பெருமிதம்!

கொதித்துப் போனாள் சுசித்ரா. சினேகிதி என்று சொன்ன பிறகும் என்ன பேச்சுப் பேசுகிறான்!

அவனை ஒரு தரம் கூர்ந்து பார்த்து, "அப்படிப் பார்த்தால், உங்கள் தரம் என்ன, குரு?" என்று சுருக்கெனக் கேட்டாள்.

அவன் அதிர்ந்து விழிக்கவும், அவளுக்கு மனம் குன்றிப் போயிற்று, அவன்தான் தரம் கெட்டுப் பேசினான் என்றால், அவளுமா? "இன்று முழுவதும் செய்த வேலையில், நான் மிகவும் அசதியுற்றிருக்கிறேன்! வீட்டுக்குப் போய் நன்றாகத் தூங்கப் போகிறேன்! உங்களுக்கும் களைப்பாகத்தான் இருக்கும்! வீணாக, எங்கள் வீடு வரை காரை ஓட்டித் திரும்புவானேன்? உங்கள் இடத்துக்கே போய் ஓய்வெடுங்கள்!" என்றவள், என்ன சொல்லுவது என்று அவன் யோசித்து முடிக்குமுன், தன் காரைக் கிளப்பிக் கொண்டு போய்விட்டாள்!

மறுநாள் அலுவகத்தில், "மல்லிகாவுக்கு விடுதி வாசம் எப்படி இருக்கிறதாம்? ஏதாவது அவசரத் தேவை என்றால், கேட்டுச் சொல்லு, சுசித்ரா. அலுவலகத்தில் நிறைய முன்பணம் வாங்கிவிட்டாள். அதனால், என் சொந்தப் பணத்தில் இருந்து கடனாகத் தருகிறேன். வசதிப்பட்டபோது திருப்பித் தரச் சொல்லு!" என்று சொன்ன சத்யாகர் ரொம்பவும் உயர்ந்து தெரிந்தான்.

மல்லிகா குடும்பத்துக்குச் செய்த உதவிக்காக, அவளைத் தேடி வந்து நன்றி சொல்லிவிட்டுப் போன தருணும் அப்படித்தான் தோன்றினான்!

இவர்களுக்கெல்லாம், மல்லிகா ஒன்றும் குறைவானவளாகத் தெரியவில்லையே!

தன் அலுப்பு, களைப்பு, அவளைப் பாராத ஏக்கம், தனிமையில் பேச முடியாத தவிப்பு... என்று ஏதேதோ காரணங்கள் சொல்லி, காலில் விழாத குறையாக மன்னிப்பும் கேட்டான் குரு.

திருமணத்துக்கே கேட்டவன் எனும்போது, அவனை ஒரேடியாகக் குற்றம் சொல்ல முடியாது என்று, "சரி, சரி. விடுங்கள்." என்றாள் அவள்.

ஆனாலும், அவளது மனம் முழுமையாகச் சமாதானம் அடைய மறுத்தது!

அவனோடு பேச்சில் ஈடுபடவும் பிடிக்காமல், "அலுவல் பற்றி உங்களிடம் ஒன்று கேட்கவேண்டும், அப்பா!" என்று சேதுமாதவனின் அலுவல் அறைக்குள், அவரோடு சேர்ந்து புகுந்துகொள்வதும் வழக்கம் ஆயிற்று!

நல்லவேளையாக அவரும் அதற்குத் தடை சொல்லவில்லை! கையோடு கொண்டு வந்திருக்கும் ஃபைல்களைக் கூட மூடி வைத்துவிட்டு, மகள் சொல்வதைப் பொறுமையோடு கேட்டார்!



## அத்தியாயம் 10

சுசித்ராவின் அலுவல் பற்றிப் பேசுவதானால், சத்யாகரைப் பற்றிப் பேசாதிருக்க முடியாதே! பிரச்சினைகளை கேட்டறிவதும், தீர்வு காண்பதும், அதைத் திட்டமிட்டுச் செயலாற்றுவதும் எல்லாமே அவன்தானே?

அவன் சொன்னதைச் செய்வது மட்டும்தானே அவளது வேலை!

அசோக்கின் காதல் பிரச்சினை, சந்தானத்துடன் பேசியது என்று அவளது பங்கு ரொம்பக் கொஞ்சமே! நூற்றில் ஒரு பங்கு... ஒரே ஒரு சதவீதமே!

மகள் சொல்வதையெல்லாம் அமைதியாகக் கேட்டுவிட்டு, "கெட்டிக்காரனாகத்தான் தெரிகிறான், உன் சத்யாகர்!" என்றார் தந்தை.

"ஆமாம்ப்பா! ரொம்ப!" என்று ரொம்பப் பெருமையோடு கூறினாள் மகள்.

வினாயகம் கலந்துகொள்ளும் தொழில் துறைக் கூட்டங்களுக்கு அவ்வப்போது சத்யாக்ரையும் அழைத்து செல்வதுண்டு. தொழிலாளர் பிரச்சினைகள், மனித வள மேம்பாடு பற்றிய மற்றவர் கருத்துக்களைக் குறித்துக் கொண்டு வருவான்.

அவனது கருத்துகளைத் தொகுத்து, கம்யூட்டரில் ஏற்றி, பைல் போட்டுக் கொடுப்பாள் சுசித்ரா.

படித்துப் பார்க்கையில், மற்றவர்களின் கருத்துகளையும் விடவும், பிரச்சினைகளை சத்யாகர் கையாளும் விதம் மேல் என்று சுசித்ராவுக்குத் தோன்றும்!

அதை அவனிடமே ஒரு தரம் அவள் சொன்னபோது, சத்யாகர் வாய்விட்டுச் சிரித்தான்!

அவனது சிரிப்பை ஆவலாகப் பார்த்தவாறு, "என்ன? சிரிக்கிறீர்களே!" என்று கேட்டாள் சுசித்ரா.

"நீ சொன்னதை வினாயகம் சார், அவரைப் போன்றவர்கள்... ஜிகே மருத நாயகம், எஸ்எம். சேதுமாதவன் இவர்களைப் போல யாராவது இந்த மாதிரி

விஷயங்களை முழுமையாக அறிந்தவர் சொன்னால், அது சரியாக இருக்கும்
என்று நம்பலாம்...

திடீரெனத் தந்தையின் பெயரைக் கேட்டதும், சுசித்ரா சற்றுத் திகைத்தாள்!
அவளிடம், சத்யாகர் மதிப்பு வைத்திருப்பதும் மகிழ்ச்சியாக இருந்தது!
ஆனால், அதற்கு மேல்? தந்தையும் பாராட்டினார் என்று சொல்ல
முடியவில்லையே என்று எண்ணினாள்.
தொடர்ந்து, "...ஆனாலும் நம்மை ஒருவர்... அதுவும் ஓர் அழகான பெண்
பாராட்டினால் சந்தோஷமாக இராதா? அதுதான் சிரித்தேன்!" என்று
முறுவலோடு கூறியவனின் பார்வை அவள் முகத்தில் நிலைத்தது! பெயருக்குப்
பொருத்தமாக, சித்திரம் போல அழகுதான்! உனக்கு இந்தப் பெயர் யார்
வைத்தார்கள், சுசித்ரா?" என்று வினவினான்.
என்னவென்று பதில் சொல்வாள் அவள்?
குழந்தை பிறந்து, சேதுமாதவன் வந்து பார்த்தபோது, இவள் அழகான
சித்திரம் போல, முகத்தில் முறுவலோடு சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்தாளாம்!
அப்போதே அவர் வைத்த பெயர்தான் அது!
அதையெல்லாம், இவனிடம் விவரிக்க முடியுமா?
எனவே "எல்லாக் குழந்தைகளுக்கும் போல, அப்பாதான் வைத்தாராம்!
ஆனால் சார், இந்த மாதிரிப் பேச்செல்லாம் வேண்டாம் என்று முடிவெடுத்ததை
மறக்க வேண்டாம் சார்!" என்று சமாளித்தாள் சுசித்ரா!
அவளை விழுங்குகிறவன் போலப் பார்த்துவிட்டு, ஒரு பெருமூச்சுடன்
தலையசைத்து, "அதுவும் சரிதான்!" என்று, அவள் பிரிண்ட் போட்டுக்
கொடுத்திருந்ததைப் படிக்கத் தொடங்கினான் சத்யாகர்.
"அப்பாடி" என்று நிம்மதியடைந்தபோதும், அவனாக நெருங்கி வரும்போது
விலக்க வேண்டியதாகிவிட்டதே என்று வருத்தமாகவும் இருந்தது அவளுக்கு!
ஆனால், அந்த வருத்தம் நீங்குமாறு விரைவிலேயே ஒரு சம்பவம் நிகழ்ந்தது!
அன்று மாலையில் சற்று சீக்கிரமாக வீட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கும்
என்றும், அதனால், அவனது கையெழுத்து தேவைப்படுகிற அனைத்தையும்,
சீக்கிரமே தயார் பண்ணி வைத்துவிடும்படியும் சத்யாகர் காலையிலேயே
அவளிடம் சொல்லிவிட்டான்.
சுசித்ராவும் அவன் சொன்னது போலவே எல்லாம் தயார் பண்ணி, நாலு
மணிக்கே அவனது மேஜைமேல் வைத்துவிட்டாள்!
ஆனால், அவற்றில் கையெழுத்திட வேண்டியவன்தான் மணி ஐந்தரையை
நெருங்கியும் அந்தப் பக்கமே வரவில்லை!
[illegible] கம்ப்யூட்டரைப் பயன்படுத்துவதற்கான ஆளெடுப்பது பற்றி
[illegible] மானேஜரோடு பேசப் போனவன், அவ்வளவு நேரமாகியும்
திரும்பி வரவே இல்லை!
சுசித்ராவின் வேலை கிட்டத்தட்ட முடிந்து போயிற்று! மிச்சம் இருப்பதை

மறுநாள் கூடச் செய்து கொள்ளலாம்!
ஆனால், அவன் முகத்தைப் பாராமல் கிளம்ப மனமில்லாமல், இந்த சில்லறை
வேலைகளையும் செய்து கொண்டிருந்தாள் அவள்!
கூடவே, சீக்கிரமாக வீடு சென்றால், அவளைப் பார்த்துப் பேச என்று
குருப்ரசாத் உட்கார்ந்திருப்பானோ என்ற எண்ணமும் அவளைக் கிளம்ப
விடாமல் தடுத்தது எனலாம்!
இதற்கெல்லாம் அர்த்தம் என்ன என்று, சுசித்ராவுக்குப் புரியாமல் இல்லை!
ஆனால், அதை எப்படிக் குருப்ரசாத்திடம் சொல்வது என்று தயங்கிக்
கொண்டிருந்தாள் அவள்!
அவனை மணக்கலாம் என்று ஒரு சமயத்தில் எப்படி நினைத்தோம் என்பதே
அவளுக்கு இப்போது ஆச்சரியமாக இருந்தது!
சத்யாகரோடு அவனை ஒப்பிட்டுப் பார்ப்பது ஒருபுறம் இருக்கட்டும்!
மல்லிகாவைப் பற்றி அவன் பேசிய விதமே சரியில்லையே!
அதற்குமுன், அவனைக் குணவான், பெண்களிடம் மரியாதை உள்ளவன்
என்றெல்லாம் எண்ணினாளே!
இப்படியெல்லாம் யோசனையும், யோசிப்பதற்கு வாய்ப்புகளும் உண்டாகும்
என்றுதான் தந்தை வேலை பார்க்கச் சொன்னார் போல!
சத்யாகர் சொன்னதுபோல, அப்பாவுக்கு விஷயம் தெரிந்துதான் இருக்கிறது!
யோசித்தபடியே மறு நாளைய வேலைகளைப்பற்றிய குறிப்புகளை அடுக்கி
வைத்துக் கொண்டிருந்தவள், அந்த அலுவல் பகுதியை ஒட்டி, சத்யாகரின் கார்
வந்து நிற்கவும் ஆச்சரியத்துடன் பார்த்தாள்.
பொதுவாகக் காரைப் 'பார்க்கிங்' பகுதியில் நிறுத்திவிட்டு, நடந்து
வருவதுதான் சத்யாகரின் வழக்கம்! இப்போது, காரில் அவன் போகவுமில்லையே
என்று எட்டிப் பார்த்தால், நடுத்தர வயதைத் தாண்டிக் கொண்டிருந்த ஒருவர்,
காரிலிருந்து இறங்கி அலுவலகத்தினுள் வரலானார்.
வாயில் அருகே நிற்கும் அட்டெண்டர், அவசரமாக அவருக்கு சலாம் போடவும்,
சுசித்ராவுக்குச் சட்டென விஷயம் விளங்கிற்று!
இவர், சத்யாகருடைய தகப்பனார்!
அவசரமாக எழுந்து, எல்லாப் பொருட்களும் உரிய இடத்தில்
இருக்கின்றனவா என்று வேகமாக சரிபார்த்துவிட்டு, "வாருங்கள்!" என்று
அவரை வரவேற்றாள்.
"சத்யா சார், சேர்மனைப் பார்க்கப் போயிருக்கிறார்! வருகிற நேரம்தான். நீங்கள்
உட்காருங்கள்!" என்று அவரை உபசரித்தாள். "உ, காஃபி... என்ன கொண்டு
வரச் சொல்லட்டும்?" என்று வினவினாள்.
"ஒன்றும் வேண்டாம்மா! நீ..." என்று அவர் கேள்வியாக நோக்கவும்,
"செயலாளர். பெயர் சுசித்ரா." என்று முறுவலித்தாள்.
"நினைத்தேன்! என் மனைவிக்குச் சேலை தேர்ந்தெடுத்தவள்!" என்று

புன்னகை செய்தார் அவர்.

"நான் அவனுடைய அப்பா ராகவன். சத்யா உன்னைப் பற்றி அடிக்கடி பேசுவதை வைத்து, நானும் அவன் அம்மாவும் ஒரு கற்பனை செய்து வைத்தோம்! ஒரு படி மேலாகத்தான் இருக்கிறாய்!" என்று அவர் தொடர்ந்து கூறவும், கூச்சத்தில் அவள் முகம் லேசாகச் சிவந்து போயிற்று.

அடிக்கடி அவளைப் பற்றிப் பேசுவானாமே! என்னென்ன பேசினான் என்று அறிந்துகொள்ள ஆசையாக இருந்தாலும், அது பற்றிக் கேட்க முடியாமல், "நீங்கள் உட்காருங்கள், சார். சீக்கிரமாகக் கிளம்ப வேண்டும் என்று சத்யாசார் சொல்லியிருந்தார்! ஆனால், திடீரென்று சேர்மன் வரச் சொல்லி விட்டார். அங்கே ஏதோ நேரமாகிறது என்று நினைக்கிறேன்." என்று சத்யாகர் அங்கு இல்லாதது பற்றி விளக்கம் சொன்னாள்.

"இருக்கும். ஆனால், சீக்கிரமாக வீட்டுக்கு வருகிறேன் என்ற பிள்ளையை இன்னமும் காணோமே என்று அவன் அம்மாவுக்கு ஒரே ஆதங்கம்! அவள் ஆசையாகச் செய்த சிற்றுண்டி வீணாகிப் போகிறாம்! சிற்றுண்டிக்குப் பயந்துதான் பையன் வரவில்லை என்று நான் சொன்னால் அதைக் கேட்காமல், மகனைப் பிடித்து இழுத்து வரும்படி என்னை இங்கே அனுப்பி வைத்திருக்கிறாள்!" என்று அவர் சிரியாது கூற, சுசித்ரா குபுக்கெனச் சிரித்தாள்!

சத்யாகரின் நகைச்சுவை எங்கிருந்து வந்திருக்கும் என்று, அவளுக்கு இப்போது புரிந்தது!

அவன் பேசும்போதும், இப்படித்தான் திடும் என, அடக்க முடியாமல் சிரித்திருக்கிறாள்!

அவள் சிரித்துக் கொண்டிருக்கும்போதே, சத்யாகர் வந்துவிட்டான்!

மகனைக் கண்டதும், "சத்யா, எவ்வளவு நேரம் ஆனாலும், காத்திருந்து, உன்னைக் கையோடு கூட்டி வந்து சாப்பிட வைக்க வேண்டும் என்று எனக்கு உத்தரவு! ஆக, நீ என்னதான் முயற்சி செய்தாலும், தண்டனைக்குத் தப்பவே முடியாது.. அதனால் இந்த மாதிரி அசட்டு நழுவல் முயற்சிகளை விட்டுவிடுப்பா!" என்று கரிசனம் போல அவர் கூறவும், சத்யாகரும் சேர்ந்து சிரித்தான்.

"இதோ கிளம்பி விடலாம்பா!" என்று தந்தையிடம் சொன்னவன், அவளிடம் திரும்பி, "இன்றுதான் அம்மா அப்பாவின் திருமண நாள். ஏதோ சிறப்பு அயிட்டம் என்று நினைக்கிறேன்! உன் வேலை முடிந்துவிட்டதுதானே, சுசித்ரா!" என்று வினவினான்.

முடிந்துவிட்டது.. ஆனால் உன்னைப் பாராமல் போக மனமில்லாமல் உட்கார்ந்திருந்தேன் என்று சொல்ல முடியுமா?

"முடித்துவிட்டேன். நானும் கிளம்பிக் கொண்டுதான் இருந்தேன்!" என்று கைப்பையை எடுத்தாள் அவள்.

விடை பெறும் விதமாக முறுவலித்துவிட்டுத் திரும்பியவளை "சுசித்ரா..." என்று அழைத்து நிறுத்தினான் சத்யாகர்.

அவள் மீண்டும் திரும்பவும், "ஒரு பத்து நிமிஷம் எங்கள் வீட்டுக்கு வந்து போக முடியுமா? என் அம்மா உன்னைப் பார்க்க மிகவும் ஆசைப்பட்டார்கள்! காரில் போனால் பத்தே நிமிஷங்களில் வீடு வந்துவிடும்! ஆறு மணிக்குள் திரும்பி விடலாம்! வாயேன், ப்ளீஸ்!" என்று அழைத்தான் சத்யாகர்!

அவனுடைய அன்னையைப் பார்க்க, எப்போதுமே சுசித்ராவுக்கு ஆசைதான்.

அவனது வீடு, சூழ்நிலை எல்லாம் பார்க்கலாம்!

ஆனால்...

சிறு தயக்கத்துடன் அவள் நின்றபோது, "வாயேன்மா! எங்களுக்கு எல்லாம் பையன்கள் என்பதால், பெண் குழந்தைகள் என்றால், இவன் அம்மாவுக்கு மிகவும் பிடிக்கும்! கல்யாண நாளும் அதுவுமாக உன்னைப் பார்த்தால் மிகவும் சந்தோஷப்படுவாள்!" என்று ராகவன் தானும் அழைத்தார்.

அதற்கு மேல் தயங்கினால் பிகு பண்ணுவது போல இருக்கும் என்று எண்ணித் தலையாட்டினாள் சுசித்ரா.

சத்யாகரின் வீடு அழகாக இருந்தது!

அவனுடைய தாயாரும் அவளை மிகவும் ஆவலாகவே வரவேற்றாள்.

"பாரம்மா. நீ வாங்கித்தந்த சேலையைத்தான் கட்டியிருக்கிறேன்! எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது!" என்ற சிவகாமியையும், சுசித்ராவுக்கு மிகவும் பிடித்துப் போயிற்று!

ஆனால், "அனியாயம் பண்ணாதீர்கள், அம்மா! சேலையைத் தேர்வு செய்தது மட்டும்தான், சுசித்ரா. வாங்கச் சொன்னது, வாங்கியது, எல்லாம் உங்கள் அருமைப் புத்திரனான நானேதானாக்கும்!" என்று, தாயின் பேச்சை ஆட்சேபித்தான் சத்யாகர்!

"ஆமாம் ஆன்ட்டி! அவர் சொல்லுவது சரிதான்." என்று அவனை ஒட்டிப் பேசிவிட்டு, "சேலை உங்களுக்கு மிகவும் நன்றாக இருக்கிறது!" என்றாள் சுசித்ரா.

"ஆனாலும், இப்படித் தற்புகழ்ச்சி செய்துகொள்ளக் கூடாதும்மா!" என்று சத்யாகர் கூறவும், ஒரு கணம் திகைத்துவிட்டு, "சேலையை நான் மட்டுமாகத் தேர்வு செய்யவில்லை! என் அம்மாவும் ஐடியாக் கொடுத்தார்கள்!" என்றாள் சுசித்ரா.

"அப்படியானால், உன் அம்மாவுக்கும் நான் நன்றி தெரிவித்தாக வேண்டும்" என்று சொல்லு! நேரில் பார்க்கும்போது, ஞாபகமாகச் சொல்ல வேண்டும்!" என்று அவனுக்கே தெரியாமல், அவளுக்கு ஒரு சின்ன அதிர்ச்சி கொடுத்தான் சத்யாகர்.

குனிந்து கைக்கடிகாரத்தைப் பார்க்கிற பாவனையில் அவன் சமாளிக்கவும் அதைக் கவனித்து "நேரமாகிறதா? அப்படியானால் தண்டனையைத் தொடங்கி விடலாமா?" என்று ராகவன் கேட்க, "செய்வோமப்பா!" என்றான் மகன் வேகமாக.

"தண்டனையா?!"

"சாப்பிடுவதைத்தான் சொல்கிறார்கள். எனக்கு மிச்சம் வையாமல் பாத்திரத்தை வழித்து விழுங்குவதில் ஒன்றும் குறையிராது! ஆனால் பேசுவதைப் பாரேன்!" என்று செல்லமாகக் குறைப்பட்டவாறு உணவை எடுத்து வைத்தாள் அன்னை!

ஒரு தரம் பரிமாறிவிட்டு, உணவுப் பொருட்களைச் சாப்பாட்டு மேஜையின் மத்தியில் வைத்துக்கொண்டு நாலுபேருமாகச் சேர்ந்து பேசிக்கொண்டே உண்டனர்.

இரண்டு இனிப்பு, இரண்டு காரம் என்று மாலை வேளைக்கு அதிகப்படிதான்.

"ஆனால், இந்தப் பையன் இரவில் ரொம்ப லேசாகத்தான் சாப்பிடுவான். இன்று மதியமும் வர முடியாது என்றுவிட்டான். அதனால்தான் இப்போது தீட்டிவிட்டேன்!" என்றாள் தாயார்.

அவளை வீட்டில் எப்படிக் கூப்பிடுவார்கள் என்று கேட்டு, சுசி என்றதும், அதுவும், சுத்தம், நெருப்பு என்று பல நல்ல அர்த்தங்கள் உள்ள பெயரே என்று சிலாகித்தார்கள்!

சத்யா என்ற பெயருக்கு ஏற்ப, அவனுக்குப் பொய் சொன்னால் கோபம் வரும் என்றபோது, சுசித்ராவுக்கு உள்ளூர ஒரு கலக்கம் ஏற்பட்டது! ஆனால், காரணம் தெரியும்போது சரியாகிப் போகாதா?

"எனக்குப் பெண் குழந்தைகள் என்றால் ஆசை! மற்ற இரண்டும், வெளி நாட்டில் இருந்துகொண்டு, இப்போதைக்குத் திருமணம் கிடையாது என்றுவிட்டான்! நீயாவது கல்யாணம் பண்ணிக் கொண்டு ஒரு மருமகள் வர ஏற்பாடு செய் என்றால், இவனும் கேட்கவே மாட்டேன் என்கிறான்!" என்று குறைப்பட்டாள் பெற்றவள்!

காஃபியைக் கப்புகளில் ஊற்றியபடியே தாய் பேச, தாயின் தலைக்கு மேல், சுசித்ராவைப் பார்த்துக் கேள்வியாய்ப் புருவம் உயர்த்தி முறுவலித்த விதத்தில், அவளது இதயம் ஜிவ்வென்று உயரப் பறந்தது!

கலகலப்பாகப் பேச்சு எங்கெங்கோ சுற்றிச் சுழன்றது!

பேச்சும் சிரிப்புமாகப் பொழுது கரையத் திடுமெனப் பார்த்தால், மணி ஏழை நெருங்கிக் கொண்டிருந்தது!

"அச்சோ! கவனிக்கவே இல்லையே! சாரி சுசித்ரா. வா. நான் உன்னை உன் வீட்டிலேயே கொண்டு விட்டு விடுகிறேன்." என்று, அவளுக்கு அடுத்த அதிர்ச்சி கொடுத்தான் சத்யா.

வீட்டிலா? அவளது வீட்டை இப்போது பார்த்தால்...

அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல், "வேண்டாம் சார். நம் ரயில் நிலையத்தில் என்னை விட்டுவிடுங்கள். அங்கே யாராவது வந்திருப்பார்கள். அதனால் இந்த ரயில் நிலையத்தில் விட்டுவிட்டால், நானே போய்க் கொள்வேன்." என்றாள் சற்றுப் பிடிவாதமான குரலில்.

"ஏன்? உன் வீட்டுக்கு நான் வரக் கூடாதா?"

"அப்படியில்லை, சார். இன்றைக்கு உங்கள் வீட்டில் ஒரு முக்கியமான நாள். சும்மாவே அலுவலக வேலையில், பெற்றோருடன் இருக்க வேண்டிய நேரம் நிறையப் போய்விட்டது! இன்னும் என்னால் வேறா? அதனால்தான் சொன்னேன்!" என்று பொய்க்கு மேல் பொய்யா என்று உள்ளூரக் குன்றலுடன் சமாளித்தாள் அவள்.

ரயிலில் ஏறி, வேண்டிய நிலையத்தில் இறங்கினால், அங்கே வீட்டிலிருந்து யாராவது வந்து கூட்டிப் போவார்கள் என்பது போன்ற கருத்தில் சத்யா தன்னை அருகிலிருந்த ரயில் நிலையத்தில் இறக்கி விடுகிறான் என்று, சுசிக்கு நன்றாகவே தெரிந்தது!

பொய்தான்! அவனுக்குப் பிடிக்காத பொய்தான்! ஆனால், ஒன்றிலிருந்து ஒன்றாக தொடரும் இந்தப் பொய்ச் சங்கிலியின் அடிப்படை குற்றமற்றது அல்லவா?

இவ்வளவு பெரிய தொழிற்சாலையில் பணி புரியும் அத்தனை பேரின் குறை நிறைகளைப் புரிந்துகொண்டு செயல்படுகிறவன், அவளையும் கட்டாயமாகப் புரிந்துகொள்வான்!

அன்று சுசித்ரா வீடு சென்றதும், மஞ்சுளா, மகளை நன்றாக வறுத்தெடுத்துவிட்டாள்!

இருட்டத் தொடங்கியும் சுசித்ரா வரவில்லை என்றதும் காருடன் காத்திருந்த காரோட்டி, வீட்டுக்கு ஃபோன் செய்து என்ன செய்வது என்று கேட்டிருக்கிறான்.

ஆறு, ஆறரை என்றாலே, ஏதாவது ஒரு வகையில் சுசித்ரா காரோட்டியிடம் விவரம் சொல்லிவிடுவாள். அன்று ஏழு மணி தாண்டியும் ஒரு தகவலும் இல்லாமல் போகவும், அவன் பயந்து, வீட்டில் சொல்லியிருக்கிறான்.

அலுவலகம் சொல்லும்போதே சுசித்ரா செல்ஃபோனை 'ஆஃப்' செய்துவிடுவாள் என்பதால், அவளைத் தொடர்பு கொள்ளவும் வழியில்லாது போயிற்று!

மஞ்சுளா உடனே சேதுமாதவனிடம் சொல்லி, வினாயகத்தின் தொழிற்சாலையில் விசாரிக்கும்படி கோர, இன்னும் அரைமணி நேரம் பார்த்துக்கொண்டு அதற்கு ஏற்பாடு செய்வதாக அவர் கூறியிருக்கிறார்!

இந்த விவரத்தை மஞ்சுளா டிரைவரிடம் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, ரயில் நிலையத்தை விட்டு சுசித்ரா வெளி வருவது தெரிந்துவிட, எஜமானியம்மாவிடம் அதைத் தெரிவித்துவிட்டுக் கார்க் கதவை சுசித்ராவுக்காகத் திறந்துவிட்டான் காரோட்டி!

செல்லும்போதே அவன் ஓரளவு விவரம் தெரிவித்துவிட்டதால், தாயின் கவலை, அதனால் விளைந்த ஆத்திரத்துக்கு சுசித்ரா தயாராகத்தான் இருந்தாள்.

ஆனால், நடந்ததைச் சொன்னபோது, தாயின் சினம் அதிகரித்தது அவள் எதிர்பாராதது!

அவளது ஆலோசனைப்படி வாங்கிய சேலை மிகவும் பிடித்து வீட்டுக்குக் கூப்பிட்டார்கள் என்றதுகூட, மஞ்சுளாவின் கோபத்தைக் கொஞ்சமும் தணிக்கவில்லை!

"அதென்ன மேலதிகாரி வீட்டுக்குப் போவதும், அங்கே பேச்சில் நேரம் போனது தெரியாமல் இருப்பதும்? எங்கிருக்கிறாய், என்ன என்று தெரியாமல், இங்கே எல்லோரும் எவ்வளவு கவலைப்பட்டுப் போனோம்! அதை யோசிக்கத் தெரியாது? முதலில் அந்தக் கண்ணராவி வேலையை விட்டுத் தொலை!" என்று அதிலேயே நின்றாள்.

நல்லவேளையாகச் சரியான நேரத்தில் வந்து சேர்ந்த சேதுமாதவன்தான் மகளைக் காப்பாற்றினார் எனலாம்!

எல்லா விவரங்களையும் கேட்டறிந்துவிட்டு, "சரி, சரி! இந்த ஒரு தரம் விடும்மா! இதுவரை என்றைக்காவது, சுசி இப்படித் தகவல் கொடுக்காமல் நாமதமாக வந்தது உண்டா! உன்னையே எடுத்துக்கொள், எத்தனை முறை என்னுடன் பேசிக் கொண்டிருப்பதில் மற்ற வேலைகளை மறந்து, கோட்டை விட்டிருக்கிறாய்! அதுபோல..." என்ற கணவரைக் குறுக்கிட்டு, இன்னமும் அதிகக் கோபத்துடன் "உங்களுடன் நான் பேசுவதும், இவள் அந்த அலுவலக ஆளுடன் பேசுவதும் ஒன்றா? அதுவும், அவன் வீட்டுக்குப் போய்!" என்று சீறினாள் மனைவி.

ஓசைப்படாமல் நழுவிப் போய்விடுமாறு மகளுக்குச் சைகை செய்துவிட்டு, மனைவியை ஆறுதல் படுத்தினார் சேதுமாதவன்.

கூந்தலைக் கோதிவிட்டு, "விடும்மா! இன்றைய இளசுகள் என்னென்னவோ செய்கிறார்கள்! எஸ்எம்எஸ்சிலும் இன்டர்நெட்டிலுமே கேவலப்பட்டுப் போகிறார்கள்! அதைப் பார்க்கும்போது, நம் பெண் எவ்வளவு சுத்தமான வைரம், தெரியுமா?" என்று எடுத்துச் சொன்னார்!

"தெரியும்ப்பா! என் சினேகிதிகள்கூட, இந்த விஷயத்தில் நான் ரொம்ப அதிருஷ்டக்காரி என்பார்கள்..."

"ம்ஹூம்? வேறு எந்த விஷயத்தில் நீ அதிருஷ்டக் கட்டையாம்?" என்று கிண்டலாகக் கேட்டார் சேதுமாதவன்.

பெருமிதமாக நோக்கி, "எதிலேயும் இல்லை என்ற உங்களுக்கே தெரியும்! இனியும் இப்படியே இருக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை! அந்த குரு பையன் நல்ல மரியாதை தெரிந்தவன்., இவள் காலாலிட்ட வேலையைத் தலையால் செய்கிற அளவு சுசியிடம் பைத்தியமாகவும் இருக்கிறான்., கல்யாணம் செய்தால் வீட்டோடு மாப்பிள்ளையாக வைத்துக் கொள்ளலாம் என்று பார்த்தேன்! நீங்களானால், இந்த நேரம் பார்த்து சுசியை வேலைக்கு அனுப்பி, அதைக் கெடுத்து விட்டீர்களே!" என்று குறைப்பட்டாள் மனைவி.

"ஓ, அதுவா?... பார்ப்போம்! இதெல்லாம் இன்னும் கொஞ்சம் யோசித்துச் செய்வது நல்லதில்லையா? சரிம்மா, எனக்குப் பசிக்கிறது! ஏதாவது லேசாகக் கொண்டு வரச் சொல்கிறாயா? அல்லது, நான் முகம் கழுவி வந்தால், சாப்பிட்டே விடலாமா?" என்று மனைவியின் மனதை வேறுபுறம் திருப்பி விட்டார் கணவர்!

சில தினங்களுக்குப் பின், சேர்மன் அழைக்கிறார் என்று சென்ற சத்யாகர், மதியம் திரும்பிய பின்னரே திரும்பி வந்தான்!

உற்சாக நடையுடன் வந்து, இருக்கையில் இலகுவாக அமர்ந்து ஒரு முறுவலோடு சொன்னான். "இன்று சேர்மனும் நானும் யாரோடு மதிய உணவுக்குப் போனோம் தெரியுமா? எஸ் எம் இன்டஸ்ட்ரீஸ் சேர்மன் மிஸ்டர் சேதுமாதவனோடு!"

திகைத்து விழித்தாள் சுசித்ரா!

"ஓ!" என்றது தவிர. அவளால் ஒன்றுமே சொல்ல முடியவில்லை!



## அத்தியாயம் 11

சுசித்ராவின் வியப்பை இயல்பாக ஏற்றான் சத்யாகர்.

"ஆச்சரியமாக இருக்கிறதில்லையா? கிட்டத்தட்ட ஒரே மாதிரிப் பொருட்களைத் தயாரிப்பவர்கள். இரண்டு பேருமே, உழைத்து முன்னுக்கு வந்தவர்கள்! அதிலும் பெரிய அளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள்! எந்த அளவில் போட்டி வரக் கூடும்? ஆனாலும், நம் சேர்மனும் மிஸ்டர் சேதுமாதவனும் நண்பர்களாகவே இருக்கிறார்கள்! ஒருவருக்கொருவர் டிப்ஸ் கொடுத்துக் கொண்டு இருவரும் பேசியதைக் கேட்கையில் எனக்கே ஆச்சரியம்தான்! தொழிலும் நட்புக்கு முக்கியத்துவம் கொடுத்து, ஒருவர் தயாரிக்கும் அதே பொருளை அச்சு அசலாக அதே போல அடுத்தவர் தயாரிப்பதும் இல்லையாம்! தான் ஆர்டர் எடுத்து வரும் சிலதை நம் தொழிற்சாலையில் தயாரிக்க முடியாது என்று சேர்மன் சொன்னதாகத் தருண் குறையாகச் சொல்வதுண்டு! அதன் காரணம் இப்போதுதான் புரிகிறது!" என்றான் சத்யாகர்.

அவன் வீட்டுக்குச் சென்று வந்ததில் இருந்தே, சத்யாகர் அவளிடம் மிகவும் கலகலப்பாகத் தடையற்றுப் பேசுவது வழக்கமாயிருந்தது!

கொஞ்சம் நெருக்கம் தொனிக்கவும்!

அதே விதமாகத்தான், அவன் இப்போதும் பேசினான்! ஆனால் சுசித்ராவுக்குத்தான் அதில் முழுமையாகக் கலந்து கொள்ள முடியவில்லை!

ஆனால், வீட்டுக்குப் போய்த் தந்தையிடம் கேட்க வேண்டும்!

என்ன நினைத்துக் கொண்டு, அவள் வேலை செய்யும் நிறுவனத்து முதலாளியோடு இந்தக் குலாவல் குலாவுகிறார்?

மனதிற்குள் சுசித்ரா கறுவும்போதே, "ஒரு நாள், அவரது தொழிற்சாலையைப்

பார்க்க வருமாறு, என்னை அழைத்திருக்கிறார், சுசித்ரா! சேர்மனும் போய்ப் பார்க்கச் சொன்னார். இந்தக் கம்ப்யூட்டர் பிரச்சினை, கிட்டத்தட்ட முடிந்துவிட்டது என்றாலும், அது முழுமையாக முடிந்தபின் வருகிறேன் என்று சொல்லியிருக்கிறேன்!" என்று மேலும் விவரம் சொன்னான் அவன்.

அவளுடைய நேர் மேலதிகாரியோடு, தனியாக வேறு சல்லாபமா?

"என்ன பேச்சையே காணோம்? போட்டி நிறுவனம் என்றா? இரு தலைகளுமே அப்படி நினைக்கக் காணோம்! நாம் எதற்காகப் போட்டியாக எண்ணுவது?"

"ஆ...ஆமாம்..." என்று தடுமாற்றத்துடனேயே கூறியவள் பேச்சை மாற்றும் முயற்சியாக, டைப்பிஸ்ட் மாலா திருமணத்துக்கு இதுவரை ஐயாயிரம் ரூபாய் சேர்ந்திருக்கிறது, சார்! நிறுவனம் ஐயாயிரம் கொடுக்கும் என்றீர்களே! சேர்த்துப் பத்தாயிரம் ஆகிறது!" என்றாள்.

"பரவாயில்லையே, கெட்டிக்காரிதான்! ஐயாயிரமும், ஐயாயிரமும் சேர்த்துப் பத்தாயிரம் என்று சரியாகச் சொல்லி விட்டாயே! நீ மட்டும் உதவிக்கு இல்லை என்றால், நான் என்ன கதி ஆகியிருப்பேன், சொல்லு!" என்று அவன் கண்ணை உருட்டிக் கிண்டலடிக்கவும், மற்றது மறந்து கலீரெனச் சிரித்தாள் அவள்!

கூடச் சேர்ந்து சிரித்துவிட்டு, "மாலா திருமணத்துக்கு அலுவலக பஸ்சிலேயே போய்விட்டு வர அனுமதி கேட்டுவிட்டேன். நிர்வாகப் பிரிவில் எல்லோரும் போய் வரலாம். சுசி... எனக்கு ஓர் ஆசை! உன்னைச் சேலையில் பார்க்க வேண்டும் என்று! ஆனால், உன்னிடம் பட்டுச்சேலை இருக்கிறதா?" என்று கேட்டான் சத்யாகர்.

அவளிடம் இந்தக் கேள்வியா? அவளது உடை மாற்றும் அறையில், ஒரு வார்ட்ரோப் முழுவதுமாகத் தொங்கும் பட்டுச் சேலைகள் நினைவு வர, அவளுக்கு ஏனோ தொண்டை அடைத்தது! எதையும் சொல்ல மாட்டாமல் வெறுமனே தலையாட்டினாள்!

அத்தோடு விடாமல், "ஆனால், கட்டத் தெரியுமா? இப்போதெல்லாம் நிறையப் பெண்களுக்குச் சேலை கட்டவே தெரியாது என்கிறார்களே! உனக்குத் தெரியாது என்றால், என் வீட்டுக்கு வந்துவிடு. அம்மா உதவி பண்ணுவார்கள்." என்றான் அவன்.

அவளுக்கா சேலை கட்டத் தெரியாது? பள்ளி 'ஃபேர்வெல்' நாளுக்குச் சேலை கட்ட வேண்டும் என்று, மகளுக்கு பியூட்டி பார்லர் ஆளை வரவழைத்து சேலை கட்டக் கற்றுக் கொடுத்தாள் தாயார்! சுசித்ரா, முதலில் ரொம்பவும் திணறிப் போனாள்! பள்ளி 'ஃபேர்வெலி'ன் போதுகூட, 'இப்படிப் பின் பண்ணாதே' என்று ஓர் ஆசிரியை சுசித்ராவின் பின்னை அகற்றிவிட, சேலையைச் சுருட்டி மடக்கிக்கொண்டு அவள் பட்டபாட்டைப் பிறகு சொல்லிக் சொல்லிச் சிரிப்பதுண்டு! அதற்காகவே, அவ்வப்போது சேலை கட்டச் சொல்லித் தாயார் கட்டாயப் படுத்துவதும் உண்டு!

சத்யாவிடம் எல்லாமே சொன்னால், புரிந்து ரசிக்கக் கூடியவ...
ஒன்றும் சொல்ல முடியாமல், "கட்டத் தெரியும்." என்று மட்டும் சொன்னாள் அவள்.

ஏற்கனவே சொல்ல நேரும் பொய்யும் புளுகும் போதாதா? இந்த அப்பா பண்ணுவது வேறு!

வீட்டுக்குப் போனதும் கட்டாயம் அப்பாவிடம் பேசியே தீர வேண்டும்!

ஆனால், மாலையில் வீடு சென்றால், பெற்றோர் இருவரும் அமர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தனர்.

சுசித்ராவைக் கண்டதும், "வாவாவா! என்று மகளை வரவேற்ற மஞ்சுளா, "உன் அலுவலக வேலை தவிர, மற்றது எதுவும் மனதில் ஏறுமா, என்ன?" என்று கேலி போலக் கேட்டாள்.

"என்னம்மா, அப்படி நான் எதைக் கவனிக்கவில்லையாம்?" என்று மகள் சிணுங்கினாள்.

"என்னவா? இது உண்மையான விலைக் கழிவு நேரம் என்பது, எனக்குக் கொஞ்சமாவது நினைவு இருக்கிதாக்கும்? உண்மையைச் சொல்லு!" என்று சவால் விட்டாள் தாயார்!

பதில் சொல்ல மாட்டாமல் அசடு வழிந்தது, மகளுக்கு!

ஆண்டுதோறும், இந்தச் சமயத்தில் உருப்படியான பெரிய நகைகள் செய்வதற்காகப் பணம் கொடுப்பது, சேதுமாதவனின் வழக்கம்!

அவரைப் பொறுத்த வரையில், பணம் எடுப்பதற்கு இதுதான் சமயம் என்று இல்லாவிட்டாலும், குடும்பத்தினர் வழக்கமாக வாங்கும் பெரிய கடைகளில், உண்மையான விலைக்கழிவு தரும் சமயம் அது! வாங்கும் பொருட்களுக்கு ஏற்ப, பல்லாயிரம் ரூபாய்கள் மிச்சப்படுவதுண்டு!

அதே பொருள் இந்த விலைக்குக் கிடைக்கும்போது, அனாவசியமாக அதிக விலை கொடுப்பானேன் என்பது, அவரது கருத்து!

ஆனாலும், விலை குறைவு என்பதற்காக, பிடிக்காததை வாங்கும்படி சொல்ல மாட்டார்.

எதிலும், நூறு சதவீதம் திருப்தி இல்லாமல் எதையும் செய்யக் கூடாது என்பது அவரது கொள்கை!

நகை, உடைகளில் மட்டும் அல்லாமல், வாழ்க்கையிலும் அப்படி இருப்பதற்காகத்தான், திருமணத்துக்குப் பிடி கொடுக்காமல் பேசி, அவளைச் சீண்டிவிட்டு வேலைக்குப் போகச் சொன்னார் என்று, இப்போது, சுசித்ராவுக்கு சர்வ நிச்சயமாகத் தோன்றிற்று!

மகளின் சிந்தனையில் குறுக்கிட்டு, "சுராஜ்" வைர நகைக் கடைகளிலும், 'சௌந்தரியத்'திலும் விலைக் கழிவு அறிவித்து விட்டார்கள்! சீக்கிரமாகப் போகாவிட்டால், நல்ல டிசைன்கள் எல்லாம் விற்றுப் போய்விடும் என்று தெரியும் அல்லவா? அதனால் நாளையிலிருந்து லீவு போட்டுவிடு! என்று

அன்னை கூறவும், சுசித்ரா திடுக்கிட்டாள்!

லீவு போடுவதா? லீவு போட்டால், சத்யாவை எப்படிப் பார்ப்பது?

ஏதோ, ஞாயிற்றுக் கிழமை என்றால், வேறு வழியில்லாமல், விதியே என்று அவனைப் பாராமல், கஷ்டப்பட்டு வீட்டில் இருக்கிறாள்!

வார நாட்களிலும் அப்படி இருக்கச் சொன்னால், எப்படி முடியும்?

லீவு போட முடியாது என்று சொன்னால், அன்னைக்குக் கோபம் வரும்! அவள் வேலைக்குப் போவது முதலில் இருந்தே பிடிக்காதவள்!

சற்று யோசித்துவிட்டு, "என்னம்மா நீங்கள்! என்னை விட, எனக்கு எது நன்றாக இருக்கும் என்று உங்களுக்குத்தானே, நன்றாகத் தெரியும்? நீங்களே பார்த்து வாங்கி விடுங்களேன்!" என்றாள் கொஞ்சுதலாக!

தந்தை முறுவலோடு நோக்க, "அதெப்படிடா? நீயும் பார்த்தால்தானே சரியாக இருக்கும்?" என்று மறுத்தாள் தாய்.

மேற்கொண்டு சொல்வதறியாது சுசித்ரா விழிக்கையில், சேதுமாதவன் உதவிக்கு வந்தார்! "சுசி அலுவலகத்தில் பெரிய வேலை நடப்பதால், லீவு தருவது கடினம்! ஒன்று செய், மஞ்சு! நீ பார்த்துத் தேர்ந்தெடுத்துவிடு! ஞாயிறன்று, அவள் பார்த்து முடிவு செய்து விடட்டும்! நிறைய வாங்குவோம் என்பதால், கடைகளிலும் மறுக்க மாட்டார்கள்!" என்றார், அவர்!

மனைவிக்கு மறுக்க இடம் கொடாமல், அதே மூச்சில் மகளிடம் திரும்பி, "ஞாயிற்றுக் கிழமையும் வேலை, அது, இதென்றுவிடாதே!" என்று குரலில் கண்டிப்புக் காட்டிச் சொன்னார்.

"ஆமாம்! அப்பா சொல்வதையாவது தடை சொல்லாமல் செய்!" என்றாள் மஞ்சுளாவும்.

ஏதோ வேலையாக மஞ்சுளா எழுந்து சென்றதும், மகளை ஒரு தரம் கூர்ந்துவிட்டு, "எனக்கொரு யோசனை, சுசி. உன் மூன்று மாதமும் அதே சமயம் முடிந்துவிடும். இப்போது உன் திருமணத்தை நடத்தினால், இந்த நகை, துணி வாங்குவதில் மிச்சப்படுவதை மண்டபம், சாப்பாட்டுச் செலவுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாமே என்று படுகிறது! இனி, எங்கள் தள்ளாத காலத்துக்கும், கொஞ்சம் சேர்க்க வேண்டும் அல்லவா?" என்று பலவீனமான குரலில் இழுத்துப் பேசினார் சேதுமாதவன்.

தந்தைக் கேற்ப, "ஆமாமாம்! உங்களுக்கு சும்மாவே ரொம்பவும் செலவுக்குக் கஷ்டமில்லை? இப்படி ஏதாவது பீராய்ந்தால்தானே, வீட்டுச் செலவையே சமாளிக்க முடியும்?... ஐயோ, போங்கப்பா. என்னதான் உங்களுக்குச் சில லட்சங்கள் மிச்சமாகும் என்றாலும், அதற்காக நான் கண்டதையும் வாங்கிக் கழுத்திலும், கையிலும் மாட்டிக் கொள்ள முடியாது., இப்போது கல்யாணம் செய்யவும் முடியாது! நான் தொடர்ந்து வேலை பார்க்கப் போகிறேன். எனக்குத் திருமணம் இப்போது வேண்டாம்!" என்று சலுகைக் குரலில் தெரிவித்தாள், மகள்.

"ம்ம்ம்... அப்படியா[illegible] சொல்லப் போகிறாயா?" என்று மகள் முகத்தை [illegible] குருப்ரசாத்திடம் சொல்லப் போகிறாயா?" என்று மகள் முகத்தைப் போலப் பார்த்துக் கேட்டார் பெற்றவர்!

சட்டென அவள் முகம் வாடியது, அவரது கண்களுக்குத் தப்பவில்லை!

"என்னம்மா, பதிலையே காணோம்? கல்யாணம் என்றதும் வெட்கமா? பெற்றோரிடம் கூட வெட்கம், நாணம் எல்லாம் வருகிறது என்றால், வியப்பாக இல்லை? ஆனால், மனதில் உறுதியாகத் தெரிந்துவிட்டால், அப்புறம் தள்ளிப் போடுவது நியாயமே கிடையாது! இவன்தான் என்ற தெளிவுதானே முக்கியம்! மற்றபடி, பணம், காசு, இன்று வரும்., நாளை போகும்! வாழ்க்கை இவனோடுதான் தெளிவாகத் தெரிந்து உறுதிப்பட்டுவிட்டால் வேறு என்ன வேண்டும்?" என்று, அந்த உறுதியையும், தெளிவையும் மீண்டும் சற்று அழுத்திச் சொன்னார்!

உறுதி, தெளிவு!

குருப்ரசாத்தைப் பொறுத்த வரையில், அவளுக்கு, அது முதலிலேயே இல்லையே!

அவன் காதோரம் சொல்லிக்கொண்டே இருந்தது போல, ஒரு காலத்தில் அப்படி ஆகக்கூடும் என்ற நம்பிக்கைதானே, முதலில் இருந்தே!

இப்போது தெளிவாகத் தெரிவதோ, அப்படி ஒரு போதும் ஆகாது என்பது மட்டும்தான்!

"அப்பா, நான் ஒரு போதும், ப்ரசாத்தை மணக்கப் போவது இல்லை." என்றாள் சின்னக் குரலில் சுசித்ரா.

தன் நிம்மதியைக் காட்டிக் கொள்ளாமல் "ஓ!" என்றார் அவர்!

தன் பிரச்சினையிலேயே உழன்றவளாக, "ஆனால், இதை எப்படி அவரிடம் சொல்வது என்றுதான் சங்கடமாக இருக்கிறது!" என்றாள் பெண். "சொன்னால், லேசில் ஒத்துக் கொள்ள மாட்டாரே என்று இருக்கிறது!"

உதட்டோர முறுவலை அடக்கிக் கொண்டு, "ஒரு வழி இருக்கிறது! ஆனால், அதைச் சொன்னால், நீயே ஒப்புவாயோ, என்னவோ?" என்றார் சேதுமாதவன்.

புரியாமல் நோக்கி, "என்னப்பா? என்ன வழி?" என்று அவரைப் பார்த்துக் கேட்டாள் அவள்.

"ஒரு பொம்மைக்காக அழும் குழந்தையிடம், அதன் மனதை மாற்ற என்ன செய்கிறோம்?"

அப்போதும் தலையசைத்து, "இன்னொரு பொம்மையைக் கொடுத்த..." என்றவளின் விழிகள் அகன்றன. "என்னப்பா சொல்லுகிறீர்கள்? குருவுக்கு இன்னொரு பெண்ணை அறிமுகப்படுத்தினால் போதும் என்கிறீர்களா?" என்றாள் நம்பாத பார்வையுடன்.

தந்தையின் கணிப்பு தப்பு என்று சுசித்ராவுக்குத் தோன்றியது. குருப்ரசா[illegible] அப்படிப் பெண்ணுக்காக அலைகிறவன் என்றால், வேறு

முயன்றிருப்பானே! அவளது நட்பு வட்டத்திலேயே பல பெண்கள் உண்டு! யாருமே, அவனைத் தப்பாகச் சொன்னதில்லை என்பதோடு, அவளுக்கு உண்மையானவன் என்றுதான் குறிப்பிடுவார்கள்! வெளிப்படையாகவே!

அதிலும் அந்த 'வீரா' சோடாக் கம்பெனிப் பெண் ப்ரீதிக்கு அவனிடம் ஒரு மயக்கமே உண்டு! "குருவோட கண்ணுக்கு, உன்னைத் தவிர வேறு யாரும் பெண்ணாகவே தெரிவதில்லை! இது ஒரு தினுசு காமாலை" என்று புலம்புவாளே!

"அதுதான் சொன்னேனே, நீயே ஒப்புவது சந்தேகம் என்று! ஆனால், கிட்டத்தட்ட அதே போன்ற இன்னொரு பொம்மையைக் கொடுத்தால், குழந்தை அழுகையை நிறுத்தி விடும்!" என்ற சேதுமாதவன், இந்த விஷயத்தில் இவ்வளவு பேசியது போதும் என்று எண்ணியவர் போல, "அப்புறம் வேறென்னடா? உன் அலுவலகம் எல்லாம் எப்படி இருக்கிறது?" என்று விசாரித்தார்!

இந்தக் கேள்வியில், அதுவரை மறந்திருந்த விஷயம் நினைவு வர, ஆத்திரத்துடன் தந்தையைக் கேட்டாள் அவள். அவர் எப்படி சத்யாகரைச் சாப்பிடக் கூட்டிப் போகலாம்?

அவருக்கு வேடிக்கையாக இருந்தது போலும்! சிரித்துவிட்டு, "என்னம்மா இது? நானும் வினாயகமும் அவ்வப்போது சேர்ந்து சாப்பிடுவதுதான்., சாப்பிட்டபடி 'பிசினஸ்' பேசுவதுதான்! இன்று, இன்னொருவரைக் கூட்டி வரட்டுமா என்று கேட்டான் சரி... மிஞ்சி மிஞ்சி அப்படி என்ன செலவாகி விடப் போகிறது என்று நினைத்து வரச் சொன்னேன்! வரப்போவது, உன் சத்யாகர் என்று எனக்கு என்ன தெரியும்?" என்று கேட்டார்!

நடந்தது இது மட்டும் அல்ல என்று சுசித்ராவுக்குத் தோன்றியது! ஆனால், அப்படி இல்லை என்பதற்கும் எந்த ஆதாரமும் இல்லை!

தந்தையை நேராகப் பார்த்து, "நிஜமாகத் தெரியாதா, அப்பா?" என்று கேட்டாள் பெண்.

மீண்டும் சிரித்து, "பெயரைக் கேட்டதும், உன் சத்யாகரோ என்று தோன்றத்தான் செய்தது!" என்றார் அவர்.

வேறு ஒன்றும் சொல்லத் தோன்றாமல், "உன் சத்யாகர் என்று சொல்லாதீர்கள், அப்பா!" என்று கோபம் காட்டினாள் சுசித்ரா.

"ஓ! உன் மேல் அதிகாரி சத்யாகர் என்று மரியாதையுடன் முழு அடைமொழி கொடுத்துதான் சொல்ல வேண்டுமா? இனிக் கவனம் வைத்துக் கொள்ளுகிறேன்! ஆனால், பையன் கெட்டிக்காரன்மா! வினாயகம் சொன்னது ரொம்பச் சரி! சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பிருந்த என்னைப் பார்க்கிற மாதிரியே தோன்றிற்று! அதே வேகம்! துடிப்பு! அவரைப் போல... இவரே நமக்குக் கிடைத்தால், எவ்வளவோ நன்றாக இருக்கும்!" என்றார் சேதுமாதவன்.

சத்யாகரைப் பற்றிய புகழாரத்தில் உள்ளூர மகிழ்ந்தவளாய் "உங்களுக்கு ஆசையாகத்தான் இருக்கும்! ஆனால் அவர் அப்படி வரமாட்டார்! வினாயகம் சாரும், அவரை விட்டு விட மாட்டார்!" என்றாள் சுசி.

"பார்க்கலாம். நாளைக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும்?" என்று வேதாந்தம் பேசினார் சேதுமாதவன்! "

சேதுமாதவனிடம் மரியாதையும் மதிப்பும் வைத்திருந்தான் சத்யாகர். அவ்வப்போது அவனது பேச்சிலிருந்தே அது மிகவும் நன்றாகத் தெரிந்தது!

அந்த சேதுமாதவன், அவனை இவ்வளவு புகழ்ந்தார் என்று தெரிந்தால், அவன் எவ்வளவு மகிழ்ச்சி அடையக் கூடும்!

ஆனால், தன்னால் இப்போது அவனிடம் அதைச் சொல்ல முடியாதே என்று நினைக்கும்போது சுசித்ராவுக்கு வருத்தமாக இருந்தது!

இந்தப் பொய்த்திரையை எப்போது விலக்குவது? எப்படி விலக்குவது?

அதைப் பற்றிச் சிந்திக்கையில், பொறுமையற்றும், அதே சமயம் பயமாகவும் சுசித்ரா உணர்ந்தாள்! ஒரு வேளை, அந்தப் பொய்யை அவன் பெரிதாக எண்ணிவிட்டால்?

சேதுமாதவன் சத்யாகரைச் சந்தித்தது திட்டமிட்டதாக இருக்கலாம்.! ஆனால், தற்செயலாகவே, அந்தக் குடும்பத்தின் மற்ற ஓர் அங்கத்தையும் கூட, அவனைச் சந்திக்க நேர்ந்தது!

தொழிற்சாலையில் தரக் கட்டுப்பாட்டுக்கான கம்ப்யூட்டரைக் கையாள அதில் வல்லுனர் இருவரை நியமித்ததோடு சத்யாகரின் பொறுப்பு முடிந்துவிட, சேதுமாதவனிடம் ஒப்புக் கொண்டபடி, அவரது தொழிற்சாலையைப் பார்ப்பதற்குக் கிளம்பிப் போனான் அவன்.

தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்தபின், தன் நகர்ப்புற அலுவலகத்துக்கு அவனை சேதுமாதவன் கூட்டி வந்திருந்தார்!

அவரது தனியறையில் அவரோடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில், அவருடைய மனைவியையும் தோழிகளையும், சத்யாகர் சந்திக்க நேர்ந்தது!

எங்கேயோ வெளியே சுற்றிவிட்டு வந்தவர்கள்- ஷாப்பிங் என்று அவர்களது பேச்சிலிருந்து, சத்யாகர் ஊகித்தான்.

காதில் விழுந்த வகையில், சேதுமாதவனுடைய மனைவி கையில் வைத்திருந்த பணம் முழுவதையும் செலவழித்து விட்டார்கள்! கிரெடிட் கார்டுகளை எடுத்துவர மறுந்துவிட்டார்கள்! எனவே, குடும்பத் தலைவரிடம் பணம் வாங்கிப் போவதற்காக, அலுவலகம் வரை வந்திருக்கிறார்கள்!

பேச்சு தடைப்பட்டதிலேயே, சத்யாகருக்குக் கொஞ்சம் எரிச்சல்தான்.

காரணம் அறிந்தபோது, அது, இன்னும் கொஞ்சம் கூடிப் போயிற்று!

சேதுமாதவன் கஷ்டப்பட்டுச் சம்பாதிப்பதை, இவர்கள் என்ன உரிமையில் வேட்டு விடுகிறார்கள்?!

ஒரு வார்த்தை மறுத்துப் பேசாமல், ஒரு லட்ச ரூபாய்க் கட்டு இரண்டை எடுத்துக் கொடுத்த சேதுமாதவன், மனைவி மற்றவர்களுக்கு சத்யாகரை

அறிமுகம் செய்து வைத்தார்.

பல காலம் பழகி வைத்தது போன்ற நேர்த்தியுடன் இனிய புன்னகையோடு உரிய விதமாக அவனுடன் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டு, அவனிடம் விடை பெற்றுக் கிளம்பினர்!

கூடச் சென்று, எல்லோரையும் வழியனுப்பிவிட்டுத் திரும்பி வந்து, விட்ட இடத்திலிருந்து அவனுடன் பேச்சைத் தொடர்ந்தார் சேதுமாதவன்!

"கொஞ்சம் வயதாகி விட்டதாலேயோ என்னவோ, எல்லாவற்றையும் பார்ப்பது, இப்போது கொஞ்சம் கடினமாக இருக்கிறது! உங்களைப் போல ஓர் இளைஞர் கிடைத்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும்." என்று சேதுமாதவன் கூறியபோது, அவரிடம் பரிதாபம் ஏற்பட்டபோதும், அவரது பாராட்டில், உள்ளூரப் பெருமிதமாகவும் உணர்ந்தான் அவன்!

மனதில் பதியும் அனைத்தையும் அவளிடம் பகிர்ந்து கொள்ளும் சமீபத்திய வழக்கப்படி, சேதுமாதவனோடான இந்தச் சந்திப்பு பற்றியும், சத்யாகர் சுசித்ராவிடம் சொன்னான்.

அவருடைய மனைவியைப் பார்த்தது உட்பட!

"முதலில் எவ்வளவு செலவு செய்தார்களோ தெரியவில்லை! அலுவலகத்துக்குப் பணம் கேட்டு வந்தார்கள்! என்ன என்று ஒரு வார்த்தை கேளாமல், இரண்டு லட்சம் ரூபாயைக் கொடுத்து அனுப்பினார்! சேதுமாதவன் சார் கஷ்டப்பட்டுச் சம்பாதித்தால்; பிறப்புரிமை மாதிரி அந்தப் பணத்தைச் செலவிடுகிறர்களே, என்று இருந்தது! கொஞ்சம்... செலவாகிறதே என்று கொஞ்சம் வருத்தப்பட்டிருக்கலாமே! அது கூட இல்லாமல்... திமிர் என்று நினைக்கிறேன்!"

திமிரா?

தாயைப் பற்றி சத்யாகர் பேசிய விதம், சுசித்ராவுக்கு வருத்தத்தை அளித்தது!

எனவே, "குடும்பம் என்றால், அதன் அங்கத்தினர் அனைவருக்குமே, கடமையைப் போல உரிமையும் உண்டுதானே? இப்போது உங்கள் அம்மா தானாகச் சம்பாதிக்கவில்லைதானே? ஒவ்வொன்றுக்கும் உங்கள் அப்பாவிடம் கேட்டுக்கொண்டா செலவு செய்கிறார்கள்?" என்று கேட்டாள் அவள்.

"ஆனால், அம்மா அவசியமற்றுச் செலவழிக்க மாட்டார்களே!"

"தேவை என்பது, ஒவ்வொரு வீட்டுக்கும் வேறுபடுவது! அவர்கள் எதற்காக என்ன செலவு செய்தார்கள் என்று உங்களுக்கு என்ன தெரியும்? சேதுமாதவன் சாரே அது பற்றி ஒன்றும் சொல்லவில்லை எனும்போது... அதுவும் அவசியமானதாகவே இருக்கலாமே!" என்று விடாமல் வாதித்தாள் சுசி.

சத்யாகரும் தப்பாக எடுத்துக் கொள்ளாமல், விஷயத்தைப் புரிந்து கொண்டவன் போலப் புருவம் உயர்த்தி, "அடேயப்பா! பெண்களைச் சொன்னால் பிடிக்கவில்லைபோல? பயங்கரமாக வக்காலத்து வாங்குகிறாயே!" என்று வியந்தான்.

கூடவே, "ஆனால் நீ சொல்வதிலும் உண்மை இருக்கிறது. சரி! அவர்களது வீட்டு நிலவரம் தெரியாமல், நான் குற்றம் சொல்லியிருக்கக் கூடாது! இதுவும் ஒரு பாடம்தான். நல்ல பேச்சில் குறுக்கே வந்தார்களே என்ற எரிச்சலில் ஏதேதோ எண்ணத் தோன்றியது போலும்! இந்தத் தப்பை இனி செய்யக் கூடாது!" என்றான் அவன்!

சத்யாகர் தன்னைத் தானே திருத்திக் கொண்ட விதம் அவளது நெஞ்சைத் தொட்டது!

முன்னிலும் அதிகமாக அவனிடம் நேசம் உண்டாயிற்று!

வீட்டுக்குப் போனால், அங்கே இன்னொரு விதமான சூழ்நிலையை எதிர்கொள்ள நேர்ந்தது!

"உன் மேல் அதிகாரி சத்யாகரைப் பார்த்தேன்!" என்றாள் தாய். "ஆனால், கொஞ்சம் மண்டைக்கனம் அதிகம் என்ற நினைக்கிறேன்! என்ன ஒரு அமர்த்தலாகப் பேசினான், தெரியுமா?"

"மண்டைக்கனம் எல்லாம் ஒன்றுமில்லை!" என்றாள் சுசி ஆத்திரத்தோடு! "தானாக உழைத்து முன்னுக்கு வந்த தன்னம்பிக்கை! சுயகௌரவம்! அதைப் போய்க் குறை சொல்வதா?" என்று தாயையே குறை சொன்னாள்.

ஏதோ நல்ல விதமாகவே எடுத்துக்கொண்டு, "அப்பப்பா! என்ன பயங்கரமாக வக்காலத்து வாங்குகிறாய்! உன் உன்னத மேலதிகாரியை இனி ஒரு வார்த்தை சொல்வதில்லை, விடு!" என்று ஒதுக்கினாள் மஞ்சுளா!

சத்யாகர் சொன்ன அதை வார்த்தைகள்! அப்படியானால், பெற்றவள் மீது சுசிக்கு இருக்கும் அதே அன்பு, சத்யாகர் மேலும் அவளுக்கு இருக்கிறதா?

"சுசி...!" என்ற தாயாரின் அழுத்தமான அழைப்பில், நடப்புக்குத் திரும்பி, "ம்ம். சாரிம்மா. சொல்லுங்கள்!" என்று சுசித்ரா சற்றுப் பணிந்து கேட்க மற்றவள் தொடர்ந்தாள்.

"நாளைக்கு ஞாயிற்றுக்கிழமை உனக்கு விடுமுறை நாள்தானே? என் சினேகிதிகளும் நானுமாக, 'சௌந்தர்யத்'தில் சிலது எடுத்து வைத்துவிட்டு வந்திருக்கிறோம். எல்லாம் பார்த்து, உனக்குப் பிடித்ததை மட்டும் எடுத்து வந்துவிடு! அப்புறம் பக்கத்திலேயே 'சுராஜ்'ல் ஒரு வைர செட் ஆர்டர் கொடுத்தோம்! டிசைன் சரிதானா என்றும் பார்த்துவிடு! உனக்கு வேறு ஏதாவது பார்க்க வேண்டும் என்றாலும் பார். இப்படியே வேலை வேலை என்று தள்ளிப் போட்டுக்கொண்டே போனாயானால், அடுத்து வரக் கூடிய முக்கியமான விசேஷங்களில் எல்லாம், நீ பழசுகளில்தான் நிற்க நேரும்! அதனால், இந்த லீவு நாளைச் சோம்பேறித்தனமாகக் கழிக்காமல், அப்பா சொன்ன விதமாகச் செய்! உனக்குப் பார்ப்பதை... இல்லை, உன் தேர்வு சரியாகத்தான் இருக்கும். அதனால், வாங்கியே வந்துவிடு. என்னைப் போல மறந்துபோய்விடாமல், கார்டுகளை எடுத்துப் போ! எதற்கும்..." என்று கணவரைப் பார்த்து, "சுசியிடம் கொஞ்சம் பணமும் கொடுங்கள் சேது! பணம், நகை எல்லாவற்றையும் வைத்துக்

கொண்டு. அவள் தனியே காரை ஓட்டிக் கொண்டு போக வேண்டாம்! நீங்கள் கிளப்பிற்குப் போகிற வழியில் சுசியைக் கூட்டிப் போய்க் கடையில் விட்டுவிட்டுப் போங்கள். நீங்கள் கிளப்பில் இறங்கிக் கொண்டு காரை அனுப்பினால், வடிவேல் அவளை வீட்டில் சேர்த்துவிட்டு, மறுபடியும் உங்கள் உபயோகத்துக் காரைக் கொண்டு வந்து விடுவான்! என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டாள் இல்லத்தரசி.

கைகட்டி வாய் பொத்திப் பணிவு போலக் காட்டி, "சொல்லுவதற்கு என்னம்மா இருக்கிறது? நீ கிழித்த கோட்டை நான் என்றைக்காவது தாண்டியிருக்கிறேனா? நீ சொன்னபடியே செய்கிறேன்!" என்றார் சேதுமாதவன்.

வீட்டோடு இருக்கும் சமையல்காரம்மா உட்பட எல்லோரும் நகைக்க, "ஆமாம், அப்படித்தான் சொல்வதையெல்லாம் அப்படியே கேட்டு விடுகிறீர்களாக்கும்! சுசிக்குத் திருமணத்தை முடித்து விடலாம் என்றால், காதிலேயே போட்டுக் கொள்ள மாட்டேன் என்கிறீர்களே!" என்று குறைப்பட்டாள் மஞ்சுளா.

சுசித்ரா விறைத்து நிமிர, "காதில் போடுவ்தா? காதைக் குத்தினால்தானே போட முடியும்? இந்த வயதில் காது குத்துவது ரொம்பக் கஷ்டம், மஞ்சு!" என்று வேடிக்கை போலவே அவர் சொல்ல, சிறு திகைப்புடன் பார்த்தாள் மனைவி.

ஆனால், உடனேயே சிரித்து, "சுசி கல்யாணமா? சுண்டைக்காய் விவகாரம்! முதலில் நாளைக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று சொல்லு! எப்பாடு பட்டாவது, அதைத் திரட்டித் தர முயற்சிக்கிறேன். அந்தத் துணிக்கடை... அதன் பேரென்ன? சௌந்தரியம்தானே? அதற்கு... ஒரு முக்கால் போதுமா? அப்புறம்..." என்று சேதுமாதவன் தொடங்க, மஞ்சுளாவின் கவனமும் அதில் நிலைத்தது!

தாயின் திட்டப்படியே மறுநாள் நகை, துணிக் கடைகளுக்கு, சுசித்ரா போய் வந்தாள்.

ஆனால், அது அவளது வாழ்வில் ஒரு பிரளயத்தை ஏற்படுத்தப் போகிறது என்று அப்போது அவள் சற்றும் அறிந்திருக்கவில்லை!



## அத்தியாயம் 12

தாயார் சொன்னதைச் சற்றும் மறுக்காமல் சுசித்ரா செய்ததற்கு இன்னொரு காரணமும் இருந்தது.

அன்று ஞாயிற்றுக்கிழமை! குருப்சாத்துக்கும் விடுமுறை நாள். அவள் தனியாக வீட்டில் இருப்பது தெரிந்தால், பேசிப் பேசிப் பழைய மாதிரி அவளைச் சரிக்கட்டி விடலாம் என்ற எண்ணத்தில் அவன் இங்கே வீட்டுக்கு வந்து நிற்கக் கூடும்!

ஒரு தரம் செய்ததுதானே?

தன்னைப் போலவே, அவனுக்கும் தோட்டத்தில் சுற்றுவது பிடிக்கும் போல
என்று எண்ணியது மடத்தனமோ என்று சுசித்ராவுக்கு இப்போது தோன்றியது!

பேசிப் பேசி அவளைக் கரைப்பதற்காகத்தான், அவனோடு கூடவே
நடந்தானோ?

அலங்காரத்தில் கொஞ்சமும் குறைவில்லாத பொம்மையைக் கொடுத்தால்...
தந்தை சொன்னது நடந்தால், அவளுக்கும் நிம்மதிதான்!

செய்து பார்க்க வேண்டும்!

ஆனால், அது வெறும் 'கூ மந்திரக்காளி'யில் நடப்பது அல்ல!

எப்படியும், அன்று ப்ரசாத்தைச் சந்தித்து அவனது வாதாடல்களைக் கேட்டு
சகிக்கிற மனநிலை அவளுக்கு இல்லவே இல்லை!

எனவே தாயாரின் விருப்பத்துக்கு ஒரு சின்ன முணுமுணுப்பில்கூட
ஆட்சேபம் காட்டாமல் சுசித்ரா தந்தையின் பெரிய காரில், அவரோடு கிளம்பிச்
சென்றாள்.

'சௌந்தரியம்', 'சுராஜ்' இரண்டுமே, நகரின் பணக்கார 'ஷாப்பிங்' மையத்தில் அமைந்தவை! ஒன்று துணிவகை. அடுத்தது நகைக்கடை. உயர்ந்த வகை மட்டும்தான் இருக்கும்! முன்பெல்லாம், நேரப்படி திறந்து, நேரப்படி கடை எடுத்து வைத்து விடுவார்கள்.

ஆனால், தற்சமயம் ஞாயிறு விற்பனை கொடி கட்டிப் பறக்கவும், காலத்தோடு ஒட்டி, அந்தப் பகுதியினரும், ஞாயிறன்று கடை திறக்கத் தொடங்கியிருந்தார்கள்!

சத்யாகர், அவனுடைய குடும்பம், வீடு என்று மகளைப் பேச வைத்துக்
கேட்டவாறே, சேதுமாதவன் பயண நேரத்தைக் கழித்தார்!

நகைக்கடையின் முன் கார் நின்று, காரோட்டி ஓடி வந்து கதவைத் திறந்ததும்,
"தனியாக வந்திருந்தால், ரொம்பவும் போரடித்துப் போயிருக்கும்மா!" என்று
கூறியதோடு நில்லாமல், மகளோடு தானும் இறங்கி அவள் கூடவே
கடைக்குள்ளும் சென்றார்.

தாயார் எடுத்து வைத்திருந்த நகை டிசைனை சொல்லி பிடித்திருப்பதாகச்
என்றுவிட்டு சுசித்ரா திரும்பினால், சேதுமாதவன் அவள் கையைப் பிடித்து
நிறுத்தினார்.

கடையில் இருந்த ஒரு கழுத்தாரத்தை எடுக்கச் சொல்லி, மகளை அணிய
வைத்துப் பார்த்து, அதையும் பில்லில் சேர்க்கச் சொல்லிவிட்டு, ஒரு பெரிய
கட்டுப் பணத்தையும் அவளிடம் கொடுத்துவிட்டு, அதன் பின்னரே அவர்
கிளம்பினார்!

சில தந்தையரைப் போல அல்லாமல், மனைவி மகளுக்கு நிறைய வாங்கிக்
கொடுக்க விரும்புகிறவர், அவர்!

தந்தையின் தோளில் ஒரு தரம் செல்லமாக தலையால் முட்டிக் கையை

அழுத்தித் தன் நன்றியைச் சுசித்ரா தெரிவிக்க, மகளின் தலையை வருடிக் கொடுத்துவிட்டு, சேதுமாதவன் அங்கிருந்து வெளியேறினார்!

சீருடை அணிந்த காரோட்டி கதவைத் திறந்துவிட, அதிலிருந்து சுசித்ரா இறங்கியதிலிருந்து, நடந்த அனைத்தையும் ஒரு பெண் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

அவள் மோனிகா!

வாராந்திர வழக்கம்போலப் பணக்காரர்கள் அதிகம் வந்து போகும் கடைகளை நோட்டமிட்டபடி அவள் சுற்றியபோதுதான் அந்த நீளக் காரை அவள் பார்த்தது!

இப்படி ஒரு காரில் வந்து, இந்தக் கடைகளில் பொருட்களை வாங்கினால், நன்றாகத்தான் இருக்கும் என்று எண்ணியவாறு, காரோட்டி அவசரமாக இறங்கி வந்து கார்க்கதவைத் திறப்பதை, அசுவாரசியமாகத்தான் அவள் பார்த்தது!

ஆனால், காருக்குள்ளிருந்து சுசித்ரா இறங்கவும், அவளது விழிகள் தெறித்து விழுந்து விடும்போல் ஆயின!

சுசித்ராவும், ஆளே வித்தியாசமாக இருந்தாள்.

வடிவான இடுப்பையும், தொடைகளையும் கலை நயம் மிக்க சிற்பம் போல எழிலுற எடுத்துக் காட்டும் விதமாகக் குழைந்து இழைந்த உயர் ரகத் துணியாலான பாட்டம்ஸ்! அதில், கணுக்காலைச் சுற்றிக் கண்ணுக்குத் தெரியாத பொடிக் கற்களால் அலங்கார வேலை! அந்தப் பூவேலைக்குப் பொருத்தமாக, அவள் அணிந்திருந்த டாப்பும் கண்ணுக்குக் குளிர்ச்சியாய் ஒளிக் கற்றைகளை வீசியது! பொருத்தமாக, ஒரு கையில் மட்டும் ஒடுக்கமாய் ஒரு கைக்கடிகாரம்! பளபளவென்ற பிளாட்டினப் பட்டை! காதுகளில் நீளமாய்த் தொங்கிய வைரங்கள்!

அப்படியானால், அலுவலக ஆண்டு விழாவன்று இவள் அணிந்திருந்தவையும், வைரங்கள்தானா? அந்த ஜொலி ஜொலித்ததே!

இவளுக்கு மட்டும் எங்கிருந்து இவையெல்லாம் கிடைத்தன?

மோனிகாவின் கேள்விக்குப் பதில் சொல்கிறவர் போன்று, சேதுமாதவன் காரிலிருந்து இறங்கினார். கம்பீரமான அப்பா நடிகர் தோற்றம்!

அவர் யாரென்று மோனிகாவுக்குத் தெரியாவிட்டாலும், காரிலிருந்து இறங்கிய இருவருக்கும் இருந்த நெருக்கம் நன்றாகத் தெரிந்தது!

மற்றபடி, அவ்வளவு நெருங்கித்தான் இருவரும் நடந்து போக வேண்டுமா? என்னவோ, அவளுக்கு வழி தெரியாது போல, தோளோடு பிடித்துக் கூட்டிப் போகிறானே, அந்தக் கிழவன்!

இவளும் ஏதோ இளித்து இளித்துப் பேசுகிறாள்!

சட்டென்று அவளைக் கண்டுகொள்ள முடியாத தூரத்தில், மோனிகா, மற்ற இருவரையும் பின் தொடர்ந்து கவனித்தாள்.

அவர்களது பேச்சும் காதில் விழுந்தால் நன்றாக இருந்திருக்கும்! ஆனால் அதற்கு வழியில்லாவிட்டாலும், அவளுக்குத்தான் ஊகிக்கத் தெரியுமே!

பிரமாதமாய்!

ஏதோ நகையைப் பார்ப்பதும், தலையாட்டுவதும், இன்னொரு நகையை அணிவதும், அந்த மனிதன் பணம்... அடேயப்பா! எவ்வளவு பணம்! குறைந்தது ஏழெட்டு லட்சமேனும் இருக்கும்! அவ்வளவு பணத்தை எடுத்து அவன் கொடுப்பதும், இவள் பல்லைக் காட்டி வாங்கிக் கொள்வதும், செல்லப் பூனைக்குட்டி போல, இப்படி ஒரு பொது இடத்தில் அவள் முட்டி மோதி விளையாடுவதும்... இதெல்லாம் என்ன?

ஏதோ பெரிய மர்ம முடிச்சு அவள் முன்னிலையில் அவிழ்ந்து கொண்டிருப்பது போன்ற உணர்வு அவளுக்கு! இணுக்கு கூட விட்டு விடாமல், கவனிக்க வேண்டும்!

எல்லோரையும் போல, அவளும் ஃபோட்டோ எடுக்கும் வசதியோடு கூடிய செல்போன் வாங்கி வைத்திருந்தால், எவ்வளவோ வசதியாக இருந்திருக்கும்! ஆனால், அவளது பொருளாதார நிலைமை அதற்கு இடம் தரவில்லை!

ஆனால், இந்த சுசித்ரா!

மோனிகாவை விடக் கொஞ்சம் கூடுதலாக அவளது வருமானம் இருக்கக் கூடும்! இப்படி, வைரத்திலும் பிளாட்டினத்திலும் புரளுகிறாளே.

ஒழுங்கான சம்பாத்தியத்தில் அது முடிகிற காரியமா?

ஆனால், இப்படித் தொத்தும் கிளியாக ஒரு கிழவனின் தோளைப் பற்றிக் கொண்டால், எல்லாமே சாத்தியம்தான்!

ஆனால், ஒழுக்கத் திருவுருவம் போல, அலுவலகத்தில் என்ன ஒரு வேஷம்!

தான் பார்த்ததையெல்லாம் யாரிடமாவது சொல்ல வேண்டும் போல, மனம் துறுதுறுத்தது அவளுக்கு!

ஆனால் அது இப்போது கூடாது!

இன்னும் பல ஆதாரங்களைச் சேகரிக்க வேண்டும்! சரியான நேரத்தில், பாம்பை அடிப்பது போல, நிமிர முடியாதபடி தலையில் நச்சென்று வைக்க வேண்டும்! அவளை எழுந்திருக்கவே முடியாதபடி அடித்துப் போட்டுவிட வேண்டும்!

அப்புறம் வேலையை விடுவது தவிர, சுசித்ராவுக்கு வேறு வழி இராது!

அப்படி சுசித்ரா வெளியேறிவிட்டால், அந்த வேலை மோனிகாவுக்கேதான் அவளுக்கு மட்டும்தான். அதே போல, சத்யாகருடன் நெருங்கிப் பழகு வாய்ப்பும் அவளுக்கே கிடைக்கும்.

அப்புறம், இந்த சுசித்ராவால் செய்ய முடிந்தது, அவளால் முடியாதா?

அவனது சம்பளமே ஐம்பதாயிரம் ரூபாய்! வீட்டுக்கு, போக்கு வரத்துக் என்று படிகள் வேறு! ஏற்கனவே சொந்த வீடு, கார்!

உள்ளே போய் உட்கார்ந்து கொண்டு, கிழடுகளை எங்காவது 'ஹோ பார்த்து விரட்டி விட்டால் தீர்ந்தது!

அப்புறம்... தயிர்க்காரி மாதிரி கனவு காணத் தொடங்கியவள் திடு

உணர்வு வந்து பார்த்தால், நின்ற இடத்தில் சுசித்ராவைக் காணோம்!

ஐயய்யோ, விட்டுவிட்டோமே என்று பதறித் தேடினால், பணம் கொடுக்கும் இடத்தில்தான் நின்றாள்!

கல்லாவில் அவள் எடுத்து வைத்த ஆயிரம் ரூபாய்க் கட்டுகள் எட்டு! எட்டு லட்சம் ரூபாய்!

மரியாதையுடன் எழுந்து நின்று பணத்தை வாங்கி உள்ளே வைத்த கடை உரிமையாளர், பவ்யமாக ஒரு நீள நகைப்பெட்டியைத் திறந்து காட்டி, மூடிக் கொடுக்க, அதை அப்படியே வாங்கிக் கைப்பையுள் திணித்துக் கொண்டு, சுசித்ரா கிளம்பினாள்.

கிளம்புமுன், கடை உரிமையாளரைப் பார்த்து, அவளது வழக்கமான ஓர் இளிப்பு!

என்னமோ, அந்த இளிப்பில் ஆண்கள் அத்தனை பேரும் அவள் காலடியில் விழுந்து விடுவார்கள் என்பது போல!

அது நிஜமும் என்பது போலத்தானே தெரிகிறது!

ஏற்கனவே, ஒரு கிழவனும், ஒரு குமரனும் விழுந்தாயிற்று!

இந்தக் கடைக்காரர்கூட, அவள் கொடுத்த பணத்தை எண்ணிப் பாராமலே உள்ளே வைத்தானே!

எட்டு லட்சம் ரூபாய்! அதில் ஏழெட்டு நோட்டுகளை சுசித்ரா உருவியிருந்தால், அவனுக்கு என்ன தெரியும்?

அவனெல்லாம் ஆயிரம் ரூபாயைக் கொடுத்தால், பத்துத் தரம் எண்ணுவான்கள்!

சுசித்ராவைப் போல, செதுக்கிய சிலை மாதிரித் தோன்றும்படியாக, ஏழாயிரம், எட்டாயிரம் ரூபாய் விலையில் சரியாகச் சொல்வதானால், அந்த உடையின் விலை, ஏழாயிரத்து, எழுநூறு ரூபாய்! ஒரு தரம் ஆசைப்பட்டு, கிட்டத்தட்ட இதே போல ஒன்றை விலை கேட்டு, மோனிகா தெரிந்து கொண்டிருந்தாள். பத்துத் தரம் அவள் விலை கேட்ட பிறகு, அய்யோ பாவம் என்று விலை சொன்ன விற்பனைப் பெண், மோனிகாவின் விழிகள் விரிந்த விதத்தைப் பார்த்துவிட்டு, 'நீ வேறே ஏம்மா, வீணாத் தொல்லை செய்கிறே' என்று எரிச்சல் பட்டதுகூட, அவளுக்கு அப்படியே நினைவு இருந்தது! இந்த விலையில் எதையாவது அணிந்துகொண்டு சிம்ரன் மாதிரி வந்து நின்றால், கொடுக்கிற காசை எண்ணக் கூடத் தோன்றாதோ என்னவோ!

வயிறு காந்த, சுசித்ராவைத் தொடர்ந்தால், அவள் 'சௌந்தரிய'த்துக்குள் சென்றுவிட்டாள்.

அங்கேயும் அதிக விலைச் சேலைகள் வைத்திருக்கும் பக்கம்தான்!

சாதாரண விலையில் உள்ளதைப் பார்க்கக் கூட அம்மையாருக்குப் பிடிக்காது போல!

இங்கேயும், அவள் வாங்கியவை, ஒரு லட்சத்தைத் தாண்டிவிட்டது. இரண்டு கிரெடிட் கார்டுகளைக் காட்டி, அவள் கையெழுத்திட்டுக் கொண்டிருக்கும் போதே, துணிப் பார்சலைத் தூக்கிப் போக, அந்தச் சீருடைக் காரோட்டி வந்துவிட்டான்!

கார்வரை தூக்கிப் போனால், இவளது பூவுடல் நொந்து விடுமாக்கும்.

சும்மாவே தன் வேலையைத் தட்டிப் பறித்தவள் என்பது போல, சுசித்ராவிடம் அவளுக்கு வெறுப்பு உண்டு!

அவள் அழகாக இருந்தது, அடுத்த ஆத்திரம் என்றால், தன்னைப் போல மாதச் சம்பளம் வாங்குகிறவளின் உயர் ரக ஆடை அணிகளைப் பார்த்து, எப்போதுமே பொறாமைப் படுவாள்!

இப்போது, சுசித்ரா அவைகளை எப்படி வாங்குகிறாள் என்று அவள் ஊகித்த விதத்தால், சுசித்ராவிடம் அருவருப்பும், அதே சமயம் அவளுக்கு இவ்வளவா என்ற கொதிப்பும் சேர்ந்து அவளுக்கு வெறியேற்றின!

இவ்வளவு மோசமான ஒருத்தி, நல்லவள் போல நடித்து, சத்யாகரையும் பிடித்து வைத்திருக்கிறாளே! அவளுக்குக் கிழவனின் பணமும் வேண்டும்! கூடவே சத்யாகரின் இளமையும் வேண்டும் போல!

இவளது கேவலமான பிழைப்பு புரியாமல், அவனும், அவளைத் தன் வீடு வரை கூட்டிப் போயிருக்கிறான்!

மனதின் எரிச்சல் அதிகரித்த அளவில், மோனிகாவின் உடம்பு முழுவதுமே தீயாய் எரிந்தது!

அவளது வெறுப்பின் வேகம் தாக்கியதோ என்னவோ, காரில் ஏறப்போன சுசித்ரா நின்று திரும்பி, மோனிகா இருந்த பக்கமாகப் பார்த்தாள்!

ஆனால், அவள் திரும்பத் தொடங்கியதுமே, சடக்கெனத் திரும்பி, சுசித்ராவுக்கு முதுகு காட்டியவாறு, எதையோ கவனமாகப் பார்ப்பதுபோல மோனிகா நின்றுவிட, மற்றவள் மீண்டும் காரில் ஏறி அமர்ந்து சென்றுவிட்டாள்!

சற்றுப் பொறுத்து, மோனிகா ஓரக் கண்ணால் பார்த்தபோது, அந்த நீளக் கார் அங்கே இல்லை!

இப்போது என்ன செய்வது?

'வின்டோ ஷாப்பிங்' செய்வதில் ஆர்வம், அடியோடு மறைந்து போயிற்று!

நல்லதாக எதைப் பார்த்தாலும், பணத்தைப் பற்றிய எண்ணமே இல்லாமல் வாங்கிய சுசித்ராவின் நினைவு வந்து நெஞ்செரியச் செய்தது!

அந்தப் பணக்கார மனிதன், சுசித்ராவுடைய தந்தையாக இருக்கக் கூடும், மகளாக அவரது பணத்தை அவள் உரிமையோடு செலவு செய்திருக்கலாம் என்ற எண்ணம், ஒரு தரம் கூட, மோனிகாவுக்கு வரவே இல்லை!

அப்படி யாரும் எடுத்துச் சொல்லியிருந்தாலும், அவ்வளவு பணக்காரி, இன்னோர் அலுவலகத்தின் பர்சனல் மானேஜருடைய செயலாளராகக் காலை ஒன்பதரையிலிருந்து மாலை ஐந்தரை, ஆறு வரை உழைப்பாளோ, எல்லாம் பொய் என்று ஒதுக்கி விட்டிருப்பாள்!

சத்தியம் செய்தால்கூட, நம்பியிருக்க மாட்டாள்!

இந்த மன நிலையில் இருந்தவளுக்கு, இதைச் சும்மா விடக் கூடாது! ஏதாவது செய்தாக வேண்டும் என்று மனம் துடித்தது!

என்ன செய்வது என்று பக்கத்தில் இருந்த பார்க்கில் உட்கார்ந்து மோனிகா வெகு நேரம் யோசித்தாள்.

நீ இப்படி என்று சுசித்ராவிடம் நேரடியாக மோத, அவளுக்குத் தைரியம் இருக்கவில்லை! எப்போதுமே தப்பு செய்கிறவர்கள், மாட்டிக் கொண்டால் சமாளிப்பதற்கு ஒரு வழியையும் தயாராக வைத்திருப்பார்கள்!

ஆனால், இதை இப்படியே விடவும் முடியாது! இரண்டு உலகங்களின் சுகத்தையும் அவளது பிறப்புரிமை போல சுசித்ரா அனுபவிக்க விட்டுவிட்டு, மோனிகாவால் சும்மா இருக்கவும் முடியாது!

அப்புறம், அவள் புழுங்கியே செத்துவிடுவாள்!

இப்போதைக்கு, சூழ இருப்போரிடம் சுசித்ராவுக்கு இருக்கும் நல்ல பெயரை, மெல்லக் கெடுக்கலாம்!

அவளது தோற்றப் பொலிவும், அமரிக்கையான நடவடிக்கைகளும், பொருத்தமான ஆடைகளும் சுசித்ராவுக்கு நிறைய விசிறிகளை ஏற்படுத்தியிருந்தன! முக்கியமான, வாயைப் பிளக்க வைக்கும் அந்த மேல்மட்டத் தோற்றம்!

அது எப்படி வந்தது என்று சொல்லி, முதலில் அந்த விசிறிக் கூட்டத்தைக் கலைக்க வேண்டும்!

கவனித்துப் பார்த்தால், சுசித்ராவின் பிழைக்கு இன்னும் சில ஆதாரங்களையும் கண்டுபிடிக்கலாம்.

மறுப்பதற்கு வாய்ப்பில்லாத வகையில் சத்யாகரின் காதுகளுக்கு இதைக் கொண்டு போய்விட்டால், அவனும் அவளை வெறுத்துவிடுவான்!

அப்படி மட்டும் நடந்துவிட்டால், இன்றைய நிலையில் அதுவே, தனக்கு ஒரு பெரிய வெற்றிதான் என்று மோனிகா கருதினாள்!

அதற்கேற்ற வாய்ப்பும் விரைவிலேயே அவளுக்குக் கிடைத்தது!

இப்படித் தனக்கொரு விரோதி இருக்கிறாள் என்பதே தெரியாமல், சுசித்ரா மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தாள்.

அலுவலக வேலையாகக் குருப்ரசாத் வெளியூர் சென்றிருந்ததால், வீடு நிம்மதியாக இருந்தது!

அலுவலகத்திலும், சத்யாகரின் ரசனை மிகுந்த பார்வையும், பேச்சும் அவளை உச்சி குளிர வைத்தன!

அவனுடைய தாயாருக்கும் அவளைப் பிடித்துப் போய்விடவே, அவ்வப்போது, மகனோடு சேர்த்து, சுசித்ராவுக்கும் அந்த அம்மாள் ஏதாவது அனுப்பிக் கொண்டிருந்தாள்!

அதைக் கொடுக்கும்போது, "எப்படியோ என் அம்மாவை மயக்கிவிட்டாயே!" என்பான் சத்யாகர்! 'என்னையும்தான்' என்று, அவனது ஆசைப் பார்வை கூறும்!

இதற்கிடையே வினாயகத்துடன் வெளியே சென்ற சத்யாகர், மீண்டும் ஒரு தரம் சேதுமாதவனைச் சந்தித்துவிட்டு வந்தான்!

தடவைக்குத் தடவை, சேதுமாதவனிடம் அவனுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகமாகத்தான் செய்தன!

அதைப் பற்றி அவன் வெளிப்படையாகப் பேசும்போது, அதே போல ஒளிவு மறைவு இல்லாமல் பேச முடியாத காரணத்தால், இந்தச் சந்திப்புகள் சுசித்ராவுக்குச் சங்கடத்தையே அளித்தன!

ஆனால், அது பற்றி தந்தையிடம் சொன்னாலோ, அவர் மகளிடம் பிடி கொடுத்துப் பேசாமல் விலாங்கு மீனாக நழுவினார். "நான் என் நண்பனைப் பார்த்துப் பேசும்போது, அந்தப் பையன்... அவன் பேரென்ன, சத்யாகர்தானே, அவனும் கூட வந்தால், நான் என்னம்மா செய்வது? அவன் இருந்தால் உன்னுடன் பேச மாட்டேன் என்று வினாயகத்திடம் முகத்தை முறிக்க முடியுமா?" என்று அவளிடமே கேட்டு, அவள் வாயை அடைத்தார்!

இன்னொரு முறை சத்யாகர் வரும் வழியில் அவரது கார் ரிப்பேராகி நிற்க, கடைசியில் அவன் காரிலேயே தொழிற்சாலைக்குச் சென்றிருக்கிறார்!

அங்கே ஏதோ ஒரு பிரச்சினை பற்றி, அவனிடமே என்ன செய்யலாம் என்று, கருத்துக் கேட்டிருக்கிறார்!

"அவ்வளவு பெரிய தொழிலதிபர்! அவருக்குத் தெரியாததா? அவர் முன்னிலையில் எனக்கு எப்படியும் இறுக்கம் இருக்குமல்லவா? அது தளர்ந்து, நான் இயல்பாக இருப்பதற்காக, என்னிடம் ஐடியாக் கேட்டார்!" என்றான் சத்யாகர்.

அதைச் சொல்லி, "கார் எப்படி ரிப்பேராயிற்று?" என்று வினவினாள் பெண்!

"அதைக் காரிடம்தான் கேட்க வேண்டும்!" என்றார் பெற்றவர்!

"அப்பா ப்ளீஸ்! தினமும் உங்கள் காரை வடிவேல் எப்படியெல்லாம் சரிபார்ப்பார் என்று எனக்குத் தெரியும்!"

லேசாக முறுவலித்துவிட்டு, "என் தொழிற்சாலைக்கு ஒரு நல்ல பர்சனல் மேனேஜர் வேண்டும் என்பது என் ஆசை!" என்றார் அவர்.

"அப்பா!" என்று திகைத்தாள் பெண்! "வினாயகம் சார், அப்படியெல்லாம் சத்யாகரை விட்டுவிட மாட்டார் அப்பா!"

தனக்குத் தானே யோசிப்பது போல, "பின்னே ஏன் என்னோடு பேசும்போது, வினாயகம் அடிக்கடி அந்த சத்யாகரை கூட்டி வருகிறான்?" என்று கூறியவர், "உனக்கு ஏதாவது புரிகிறதாம்மா?" என்று மகளைக் கேட்டார்.

உண்மையில், சுசிக்கு இதில் தலை கால் புரியவில்லைதான்!

ஆனால், அவளது பிரச்சினை அவளே அன்றாடம் அனுபவிப்பது அல்லவா?

"அப்பா, உங்களுக்கே தெரியும், அங்கே நான் யார் என்று தெரியாது, என்பது சும்மாவே அந்தப் பொய் கொஞ்சம் உறுத்தலாக இருக்கிறது! இதில், உங்களைப்

பார்த்தது பற்றி சத்யா பேசும்போது, ரொம்பவும் ஏமாற்றுவது போல எனக்குக் கஷ்டமாக இருக்கிறதுப்பா!"

"ஆஹா! வினாயகத்தின் நிறுவனத்தில் வேலை நடக்கிறது என்று நினைத்தேன்! ஆனால், என்னைப் பற்றிய பேச்சுதான் நடக்கிறது என்று நீ சொல்லித்தான் தெரிகிறது!" என்று சிரித்தார் பெற்றவர்! "வினுவிடம் சொல்லி வைக்க வேண்டும்!"

ஆனால், சுசிக்குச் சிரிப்பு வரவில்லை. "என்னப்பா நீங்கள்! நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன், நீங்கள் என்ன பேசுகிறீர்கள்!" என்று அலுப்புடன் சிணுங்கினாள்.

"பேசுவதற்குப் பெரிதாக என்னம்மா இருக்கிறது? வேலை பார்ப்பது நீ! வேலையைத் திருப்திகரமாகச் செய்வது முக்கியமே தவிர, நீ யார் மகள் என்பது பெரிய விஷயம் அல்ல! அத்தோடு, உனக்கு இந்த வேலை பார்ப்பது ஒன்றும் கட்டாயமில்லை! நான் சொன்ன அந்த மூன்று மாதமும் முடியப் போகிறது! வேலையில் நல்ல பெயரும் வாங்கிவிட்டாய்! அந்த வகையில், நீ என்னிடம் ஜெயித்துக் காட்டி விட்டாய்! நான் விரும்பிய அனுபவமும் உனக்கு வேண்டிய அளவு கிடைத்துவிட்டது! இனி என்ன? பொய்... அதைப் பொய் என்று சொல்ல முடியாது., உண்மையை மறைத்தது பிடிக்கவில்லை என்றால், அந்த சத்யாகரிடம் நிஜத்தைச் சொல்லிவிடு!"

"ஆனால், அவர் தப்பாக நினைத்தால்?"

"நினைக்கட்டும்! அவன் என்ன நினைத்தால், உனக்கென்னம்மா?"

என்னவா? அவளைப் பொறுத்த வரையில், இன்றைக்கு உலகத்திலேயே முக்கியமானது, சத்யாகரின் அபிப்பிராயம்தானே?

ஆனால், அதைச் சொல்ல முடியாமல், "என்னப்பா நீங்கள்? கூடவே இருந்து வேலை செய்யும் மேல் அதிகாரி, நம்மை மட்டமாக நினைத்தால், கஷ்டமாக இராதா? என்று மாற்றிச் சொன்னாள்."

ஆனால் "கால் கடிதாசு! வேலையை விட்டுவிடு! அவ்வளவுதானே?" என்றுரைத்து அவளைத் திடுக்கிட வைத்தார் அவர்!

"ஐயோ, அப்பா! எனக்கு இந்த வேலை பிடித்திருக்கிறதே!"

"இதே போன்ற வேலைதானே? சென்னையில் எத்தனையோ நல்ல, நல்ல நிறுவனங்கள்! இன்னொரு நிறுவனத்தில், இதே வேலைக்கு நான் உத்திரவாதம்!"

இன்னொரு நிறுவனமா? அங்கே சத்யாகர் இருப்பானா? மென் பட்டாக வருடும் அவனது பார்வையும், சிரிப்பும்...

ஆனால், தந்தையிடம் அதைப் பற்றி எப்படிப் பேசுவது?

அதுவும், இன்னொருவனை மணக்க அவரிடமே அனுமதி கேட்டு, மூன்று மாதங்கள் முடியுமுன்பு! குருப்ரசாத்திடம் திருமணம் முடியாது என்று வேறு சொல்ல வேண்டும்! கடவுளே! எத்தனை பிரச்சினைகள்!

ஓரக் கண்ணால் மகளைப் பார்த்து, "என்னடா, வேறு வேலைக்கு ஏற்பாடு செய்யட்டுமா? தெரிந்த இன்னொரு நிறுவனத்தில்கூட, வேலை காலியாகிறதாம்! நாளைக்கே வேண்டுமானாலும் அதற்குச் சொல்லி வைத்து விடலாம். செய்யவா?" என்று கேட்டு, அவளை மேலும் அதிர வைத்தார் சேதுமாதவன்.

"ஐயோப்பா, நீங்கள் சும்மா இருந்தாலே போதும்! நானே பார்த்துக் கொள்வேன்!" என்று முடித்தாள் பெண்.

நல்லவேளையாக, அவரும், அது பற்றி மேலே பேசாமல் விட்டுவிட்டார்!



## அத்தியாயம் 13

டைப்பிஸ்ட் மாலாவின் திருமணத்துக்கு, சத்யாகர் கேட்டபடி சேலை கட்டுவது என்று உடனே தீர்மானித்துவிட்ட சுசித்ரா, வெகு கவனத்துடன் சேலையைத் தேர்ந்தெடுத்தாள்.

இளம் பச்சையில், லேசாகச் சிவப்பு இழையோடிய இரு வண்ணச் சேலையில் இடையிடையே சின்னச் சின்னத் தங்கப் பொட்டுகளுடன், இரு கரைகளிலும் சின்னக் கோடாக ஜரிகை பளபளத்தது! கழுத்திலும், காதுகளிலும், மெல்லிய ரூபி நகைகள்.

பார்வைக்கு எளிமையாகத் தோன்றினாலும், அந்த ரூபி செட்டின் விலை அதிகமே! ஆனால், விஷயம் தெரிந்து, ரொம்பவும் கவனித்துப் பாராவிட்டால், நகைகளின் உண்மை மதிப்பு தெரியாது! ஆனால், அணிந்திருப்பவளுக்கு ரொம்பவே அழகு சேர்த்தது நகை!

வழக்கமான கூந்தல் அலங்காரத்தில் தலை நிறைய நெருங்கத் தொடுத்த பூச்சரங்கள்!

தாயின் விருப்பப்படி, மற்ற உடைகளைப் போலவே, சேலைகளையும் அணிந்து பழகியிருந்ததால், சுசிக்குச் சேலை சிரமமாக இருக்கவில்லை! எப்போதும் போலத் தன் வழக்கமான எழிலோடு வளைய வந்தாள் அவள்!

"உன்னைப் பார்க்கவே, மிகவும் நன்றாக இருக்கிறது, சுசி!" என்று மனதாரப் பாராட்டினாள் மல்லிகா!

அவளும், அவளே புதிதாக வாங்கிய ஒரு பிரின்டெட் ஷிஃபானில் பூந்தோட்டமாகக் கண்ணைக் குளிர்விக்க, அதைச் சுசித்ரா சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அங்கே தருண் வந்து சேர்ந்தான். விரைவிலேயே, அவனும் மல்லிகாவும் அருகருகே அமர்ந்து சுற்றுப்புறம் மறந்து பேசலாயினர்.

அன்று ஒரு ஞாயிற்றுக் கிழமை. எல்லோருமாக அலுவலகத்துக்கு

வந்துவிட்டால், அலுவலக வண்டியில் திருமணத்துக்குச் சென்றுவிட்டு, குறிப்பிட்ட நேரத்தில் அங்கிருந்து கிளம்பி எல்லோரையும் அதே பஸ்ஸில் அவரவருக்கு வசதியாக பஸ், ரயில் நிறுத்தங்களில் விட்டு விடுவதாக ஏற்பாடு.

கடைசி நேரத்தில், சேர்மனுடைய மகன், வெளி நாட்டிலிருந்து சத்யாகருடன் ஏதோ ஃபோனில் பேச வேண்டும் என்று அழைத்ததால், மற்றவர்கள் அலுவலக வண்டியில் செல்லுமாறும், சேர்மன் வீட்டிலிருந்து சத்யாகர் சொந்தக் காரில் வந்து, திருமண மண்டபத்தில் அவர்களோடு சேர்ந்து கொள்வதாகவும் தகவல் வந்தது!

தன் சேலையை முதலில் அவன் பார்க்கவில்லையே என்று, சுசித்ராவுக்குச் சற்று வருத்தம்தான்!

ஆனால், எல்லோருமாக, பஸ்சை விட்டு இறங்கும்போதே அவனும் வந்து சேர்ந்துவிட, அவளைப் பார்த்தபடி, அப்படியே நின்றுவிட்டான் அவன்! அதுவே பாராட்டுதானே?

எல்லோரும் இறங்கிச் செல்ல இடம் கொடுத்து விலகிய போதும், பிறர் கவனத்தை ஈர்க்காத விதமாக அவள் அருகில் வந்து, "ரொம்பப் பிரமாதம்! நீயும் நானும் மட்டுமாகத் தனியாக இல்லையே என்று ஏக்கமாக இருக்கிறது!" என்று அவள் காதோரம் முணுமுணுத்துவிட்டுத்தான் விலகிப் போனான் அவன்!

அவன் ஏங்கிய தனிமை கிடைத்திருந்தால் என்ன செய்திருப்பானாம் என்று எண்ணும்போதே, சுசித்ராவுக்கு முகம் சிவந்து போயிற்று!

பார்த்த விழி திருப்ப முடியாமல் தவித்த அடுத்த ஆள், மோனிகா!

அவளுக்கு ஓரளவு சுசித்ரா அணிந்திருந்தவைகளின் விலை தெரியும்!

சத்யாகர், சுசித்ராவின் அருகில் சென்று முணுமுணுத்ததையும், அவள் முகம் சிவந்து பூரித்ததையும் பார்த்துக் கொண்டே இருந்தவளுக்கு, உள்ளே பொங்கிப் பெருகிய கொதிப்பை அடக்குவது, மிகவும் கடினமாகப் பட்டது!

அடக்க முடியவில்லை என்றே சொல்லலாம்!

எவ்வளவு கேவலமாகச் சம்பாதித்த பொருட்களைக் கொண்டு, எப்படி இன்னொருத்தனைப் பிடிக்கிறாள்! இதை எப்படிச் சும்மா விடுவது?

இந்த மாதிரி நகைகளும் துணியும் கிடைத்தால், எல்லோரும்தான் ரதிகளாக மினுக்கலாம்!

விடுவிடென்று சுசித்ராவின் அருகில் சென்று, "உன் ரூபி... ரூபி மாதிரியே ஜொலிக்கிற இந்த நெக்லசைக் கழற்றித் தருகிறாயா, சும்மாப் பார்த்துவிட்டுத் தருகிறேன்!" என்று கேட்டாள்.

அவளது திட்டமே வேறு!

நெக்லசைப் பார்க்கிற சாக்கில், அதில் கடைப் பெயர் இருப்பதைக் கண்டு பிடித்து, எல்லோர் முன்னிலையிலும் போட்டு சுசித்ராவின் குட்டை உடைத்துவிட வேண்டும்!

எப்படியும், அவளை இன்று தலை குனிய வைத்தே தீர வேண்டும்! இல்லாவிட்டாலும், நகையின் கொக்கிகளைச் சரிபார்ப்பது போல எப்படியாவது அதை உடைத்து, அதை அவள் திரும்ப அணியவிடாமல் பண்ணி விட வேண்டும் என்று மனதிற்குள் எண்ணியே, மோனிகா நகையைக் கேட்டது!

குறைந்த பட்சமாக இன்றேனும் கழுத்தில் ஒன்றுமில்லாமல் இருக்கட்டுமே!

ஆனால், இது போன்ற சூழ்நிலைகளுக்கும் சிலர் தயாராக இருக்கக் கூடும் என்று அவளுக்குத் தெரியாது!

தாயாரின் வழி காட்டுதலில், சுசி அப்படித்தான் வளர்ந்திருந்தாள்.

எனவே, "சாரி, மோனிகா. தயவு பண்ணித் தப்பாக எடுத்துக் கொள்ளாதீர்கள்! இது போன்ற விழாக் காலங்களில், அணிந்திருக்கும் பொருட்களைப் பார்ப்பதற்காகக் கழற்றிக் கொடுப்பது சரியில்லை என்று என் அம்மா சொல்லியிருக்கிறார்கள். 'நான் பார்க்கிறேன், நானும் பார்க்கிறேன்' என்று கை மாறுவதில் தொலைந்துவிடக் கூடும் என்பார்கள்! அத்தோடு, அந்த நேரத்தில் வெறும் கழுத்தோடும் நிற்க நேரும் அல்லவா? அதனால், பிறகு எப்போதேனும் உங்களுக்குக் காட்டுகிறேன். இப்போது வேண்டாம்!" என்று சுசித்ரா மரியாதையாகவே மறுக்கவும், செய்வதறியாமல் மோனிகா விழித்தாள்.

இல்லையில்லை., நான் பார்த்துவிட்டுப் பத்திரமாகத் தந்துவிடுகிறேன்., நீ வெறும் கழுத்தோடு நின்றாலும் பரவாயில்லை என்று சொல்ல முடியாதில்லையா?

"ச...சரி. அப்புறமாகப் பா...ர்... பார்த்துக் கொள்கிறேன்!" என்று வழியத்தான் வேண்டியிருந்தது!

உடனே நிமிர்ந்து, "ரொம்பவும் விலை உயர்ந்த நகைகளை அணிந்து பழக்கமாக்கும்?" என்று கேட்டாள் அவள். வேண்டும் என்று கேட்கிறாள்!

இவளுக்குத் தன் மீது என்ன கோபமாக இருக்கும் என்ற உள்ளூர யோசித்ததைக் காட்டிக் கொள்ளாமல், "பத்து ரூபாய்ப் பொருள் என்றாலும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்தானே?" என்று சுசித்ரா முறுவலிக்கவும், "நல்ல கொள்கை!" என்று சத்யாகரும் கூற, அந்தப் பேச்சு அப்போதைக்கு முடிந்தது!

ஆனால், மோனிகாவின் உள்ளத்துக் காந்தல் வடிகால் இல்லாமல் இன்னும் அதிகம் ஆயிற்று!

அத்தனை பேர் நடுவில்... அதுவும் சத்யாகர் பார்த்திருக்க, அவளிடம் நகையைக் கழற்றித் தர, சுசித்ரா மறுத்திருக்கிறாள்!

அதுவும் தொலைந்து போகும் என்று காரணம்காட்டி!

இப்படி அப்படி என்று போக்குக் காட்டித் திருடி விடுவாள் என்றுதானே பொருள்?

அவளா திருடி?

என்ன கேவலமான ஒருத்தி, அவளைத் திருடி என்பதா? இதற்கு மேல், இவன் இப்படிக் கெத்தாக வளைய வர விடக் கூடாது!

ஏற்கனவே சுசித்ராவை இயன்றவரை மோப்பம் பிடித்து அலைந்ததில்,

அவளுக்கு ஒரு துருப்புச் சீட்டு கிடைத்திருந்தது!

அதை எப்படியாவது பயன்படுத்தி, சுசித்ராவைப் பீடத்திலிருந்து இறக்கியே ஆக வேண்டும்!

நல்ல கொள்கை என்று தலையாட்டிய அவனே, அவளைச் சீ என்று உமிழ வேண்டும்!

அதை இன்றே செய்ய வேண்டும் என்று வேகமாகத் திட்டமிட்ட அவள், தனக்கு எப்போதும் தலையாட்டும் இன்னொருத்தியையும் துணையாகப் பிடித்தாள்!

அதன்படி, அன்று அலுவலக பஸ் கிளம்பும்போது, அதில் மோனிகாவும், அவளுடைய தோழியும் ஏறவில்லை!

ஒரு சிலர், ஏற்கனவே பைக்கில் வந்த வேறு யாருடனாவது செல்வதாகச் சொல்லிச் சென்றுவிட்டிருந்தனர்.

மல்லிகா கூடத் தருணோடு அப்படித்தான் சென்றிருந்தாள்.

எனவே, குறிப்பிட்டிருந்த நேரத்துக்கு மேலே பத்து நிமிஷம் அதிகமாக நின்று, இரு முறை ஹாரனும் அடித்துப் பார்த்துவிட்டு, சத்யாகரின் அனுமதியோடு பஸ் டிரைவர் வண்டியை எடுத்துச் சென்றார்.

பஸ் கிளம்பியதும், தானும் மணப்பெண், மணமகனிடம் விடை பெற்றுக் கொண்டு சத்யாகர் கிளம்பும்போது, மோனிகாவும், அவளுடைய கினேகிதியும் ஓடோடி வந்தனர்.

"சார், பஸ் கிளம்பி விட்டதா, சார்? ஐயோ, ஐயையோ, இப்போது எப்படி வீட்டுக்குப் போவது என்று பதறித் துடித்தனர்!"

"ஏன் தாமதம்?" என்று சிறு கடுப்புடன் கேட்ட சத்யாகரிடம், எப்படிப் பெற்றோரை விட்டுப் பிரிந்து அழுது கொண்டிருந்த குழந்தையை, அதன் பெற்றோரைத் தேடிக் கண்டுபிடித்து, அவர்களிடம் சேர்ப்பித்துவிட்டு வந்ததில் நேரமாகிவிட்டது என்று மோனிகா விளக்கினாள். தொடர்ந்து, "நல்லது செய்தால் நல்லது நடக்கும் என்பதில் எனக்கு நம்பிக்கையே போய்விட்டது, சத்யா... சார்! அழுத குழந்தைக்கு உதவப் போக, பஸ்சையும் கோட்டை விட்டு, உங்கள் கோபத்துக்கும் ஆளாகிவிட்டோமே!" என்று கண்ணீர்க் குரலில் கூறினாள் அவள்.

"சரி, சரி. கல்யாண வீட்டில் வைத்து அழ வேண்டாம். இப்போது... காரில் ஏறுங்கள்! உங்கள் நிறுத்தத்தில் கொண்டு விட்டுவிட்டுப் போகிறேன்!" என்றான் சத்யாகர்.

அவளுக்கு வேண்டியதும், அதுதானே!

இந்த நாடகமே அதற்காகவே நடிக்கப்பட்டிருந்தபோதும், "எங்களால், உங்களுக்கு ரொம்பக் கஷ்டம்!" என்று பலமுறை சொல்லி ஏகப்பட்ட தயக்கத்துக்குப் பின்னராக, மீண்டும் இருமுறை காரில் ஏறுமாறு சத்யாகர் கூறிய பிறகே, தோழியுடன் காரில் ஏறி அமர்ந்தாள் மோனிகா!

ஏறிய பிறகும், "இங்கிருந்து ஆட்டோ கூடக் கிடைக்காது சார்! தப்பித் தவறிக் கிடைத்தாலும், பயங்கரமாகக் காசு கேட்பார்கள்! ஆனால், உங்களைக் கஷ்டப்படுத்துகிறோமே என்றுதான் வேதனையாக இருக்கிறது, சத்யா சார்!" என்று மோனிகா வருத்தப்பட்டாள்.

சத்யாகரின் குணத்துக்கு, பின் சீட்டில் இரண்டு பெண்களை உட்கார வைத்து, ஒரு காரோட்டி போலக் காரை ஓட்டிப் போவது பிடிக்கவில்லைதான்! ஆனால், இந்த இருவருள் ஒருத்தியை முன்னே உட்கார வைப்பது, அதை விடவும் மோசமாகும்!

எனவே, அவர்களை சீக்கிரமாக இறக்கி விடக் கருதி, "பஸ்சிலிருந்து இறங்குவதற்கு, உங்கள் இடம் எது?" என்று வினவினான்!

இதுவும், மோனிகாவின் ஆத்திரத்தையே கிளறியது!

ஏன், இதுவே சுசித்ரா என்றால் அவள் வீடு எங்கே இருக்கிறது என்றுதானே, கேட்டிருப்பான்?

ஆனால் பாவம்! அவளால்தான் வீடு எங்கே என்று சொல்லியிருக்கவே முடியாது! அப்புறம், அந்தக் கிழவனை என்ன சொல்லி அறிமுகப்படுத்த முடியும்?

"நிறுத்த வேண்டிய இடம் எது என்று கேட்டேன் மோனிகா!" என்றான் சத்யாகர் சற்று அழுத்தமான குரலில்!

"இ...இதோ சார்! அதிகத் தூரம் இல்லை! நம் தொழிற்சாலைப் பக்கத்து ரயில் நிலையம் இருக்கிறதில்லையா? அதன் பின் பக்கமாய்க் கொஞ்...சமே தூரம்தான். பாலம் வழியே ரயில் தடத்தைத் தாண்டிவிட்டால்... இப்படியேதான்... சார் சார், காரைக் கொஞ்சம் ஓரமாக நிறுத்துங்களேன்! என் காது டிராப்சின் திருகாணி எப்படியோ கீழே விழுந்துவிட்டது! பள்ளம் மேட்டில் கார் அசைவதில், அதை எடுக்க முடியவில்லை! தங்கம், சத்யா சார்!"

வேறு வழியின்றி, பல்லை இறுகக் கடித்துக் கொண்டு, ஒன்றுமே சொல்லாமல் காரை ஓரமாக நிறுத்தினான் சத்யாகர்!

மோனிகா ஓரக் கண் கொண்டு பார்த்ததில், அந்தக் க்ரீம் கலர் 'எஸ்டீம்' வழக்கமான இடத்தில் நிற்பது நன்றாகத் தெரிந்தது!

மேடம் இன்னும் வரவில்லையாக்கும் என்று அவள் ஏளனமாக எண்ணமிடும்போதே, சுசித்ரா தன் அமர்ந்த நடையுடன் வேகமாக வருவது தெரிந்தது!

குறுக்குத் தெரு ஒன்றில் இந்தக் கார் நிற்கக் கூடும் என்ற எண்ணமே இல்லாமல், அவள் வேகமாகச் செல்ல, அவளது வருகையைக் கவனித்துவிட்டு, அவளுடைய காரோட்டி அவசரமாகக் கார்க் கதவைத் திறந்து வைத்தான்.

"இதோ திருகாணி கிடைத்துவிட்டதே!... அடேடா, அதோ அந்தப் புது மாருதி எஸ்டீமில் ஏறிக் கொண்டிருப்பது, சத்யா சாரின் செக்ரட்டரி சுசித்ராதானே. ரமா? பார்!" என்று தன்னோடு கூட இருந்தவளுக்குக் காட்டுகிற சாக்கில், சத்யாகரின் கவனத்தை சுசித்ராவின் பக்கம் திருப்பினாள் மோனிகா!

சொல்லிக் கொடுத்தபடிதான், ஆனால் சுசித்ராவைப் பார்த்ததில்

உண்மையான வியப்புடன், "ஆமாம்! சு...சு...சுசித்ராவேதான்!" என்றாள் மற்றவள்.

சத்யாகரும் பார்த்துவிட்டான் என்பது அவனது உடல் விறைப்பிலிருந்து தெளிவாகத் தெரிய, மேலும் ஊதி விடுகிறவளாக, "இது என்ன, மாருதி எஸ்டீமா? போன வாரம், 'சுராஜ் நகைக் கடைக்கு வந்தபோது, இன்னும் பெரிய கார்! டயோட்டா... என்னமோ போட்டிருந்தது! சீருடை அணிந்த டிரைவர் இதே போலக் கதவைத் திறந்துவிட... யாரோ பெரிய ஸ்டார் என்று பார்த்தால், மகாராணி இறங்குகிறாள்! கூடவே அந்தக் கிழவனும்! கடைக்குள்ளே போய் இதை வாங்கிக் கொள், அதை எடுத்துக் கொள் என்று அவன் கொஞ்சியது இருக்கிறதே! சகிக்கவில்லை! இவளும், அப்படி ஒட்டிக் கொண்டு நின்றாள்!" என்று அளந்தாள் மோனிகா!

"திருகாணி கிடைத்துவிட்டதில்லையா? எங்கே இறங்க வேண்டும்?" என்று இறுகிய குரலில் சத்யாகர் எரிச்சலை அடக்க முயன்றபடி கேட்டான்!

அவனது சங்கடத்தை உள்ளூர ரசித்தவாறு, "அடுத்த தெருதான் சார்! முனையில் இறக்கி விட்டு விடுங்கள்!" என்றாள் மோனிகா.

ஆனால், அடுத்த தெரு முனை போவதற்குள், அன்று சுசித்ரா அணிந்திருந்த ரூபி செட், ஆண்டு விழாவில் அணிந்திருந்த வைரங்களின் விலை, அவளது உடைகளின் தரம், அவை என்ன மாதிரிக் கடைகளில் வாங்கப்படுகின்றன என்பன எல்லாவற்றையும், வேக வேகமாக அந்த ரமாவுக்குத் தெரிவித்தாள் மோனிகா!

பர்சனல் மானேஜர் சத்யாகர், ஒழுக்கத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பவன் என்பது பரவலாக எல்லோருக்கும் தெரிந்த விஷயம்!

ஒழுக்கத்தை மதித்ததால்தான் வனிதாவை வேலையிலிருந்து தூக்கினான் என்றும் கேள்வி! இப்போது, சுசித்ரா எவ்வளவு இழிவானவள் என்று விலாவாரியாக விளக்கியாயிற்று!

இவளை என்ன செய்கிறான், பார்க்கலாம்!

எப்படி எப்படி என்று யோசித்ததை, மிகவும் கச்சிதமாக நிறைவேற்றிவிட்ட உற்சாகத்தில், செலவைப் பற்றிப் பாராது, வீட்டுக்குச் செல்ல, முழு தூரத்துக்கும் ஆட்டோவை பிடித்தாள் மோனிகா! ரமாவிடம் பாதிப் பணம் கேட்கக் கூட, அப்போது அவளுக்குத் தோன்றவே இல்லை!

சுசித்ராவைப் பற்றிய விவரங்களை எல்லாமே, ரமாவுக்காகச் சொல்லப்படவில்லை., அவளுக்குத் தெரிவிக்கிற சாக்கில், தனக்குப் புரியவைக்கப்பட்டவைதான் என்று, சத்யாகர் அறியாமல் இல்லை!

சுசித்ராவிடம், அந்த மோனிகாவுக்கு என்ன ஆத்திரமோ, இன்று அவள் மீது சேற்றை வாரி இறைத்து, இப்படித் தீர்த்துக் கொண்டாள்!

அவனுடைய செயலாளர் பதவி விஷயமாக உண்டான காழ்ப்புணர்ச்சி கூடக் காரணமாக இருக்கலாம்! காழ்ப்புணர்ச்சியால் சொல்லப்பட்ட கற்பனைக் குற்றச்சாட்டு!

இப்படி எண்ணி ஒதுக்கி விடத்தான் சத்யாகரின் மனம் துடித்தது!

ஆனால், அப்படி அலட்சியப்படுத்த வழியின்றி, எத்தனை ஆதாரங்கள்!

தினசரி வழக்கம் போல, அந்தக் காரோட்டி, கார்க் கதவைத் திறந்துவிட்டு, அவளை ஏற்றிக் கொண்டு போனது!

அன்று பெற்றோரின் திருமண நாள் அன்றுகூட, வீட்டில் கொண்டு விடுவதாகக் கூறியபோது ஏற்காமல், என்னென்னவோ கதை சொல்லி சுசித்ரா மறுத்தது மட்டுமின்றி, இந்த ரயில் நிலையத்தில் விடச் சொன்னாளே!

வந்து கூட்டிப் போவார்கள் என்று அவள் சொன்னது, வழுக்கிக் கொண்டு போகும் ஒரு வசதியான காரில் காத்திருக்கும் காரோட்டியை என்று, அவன் என்ன கண்டான்?

அவள் அணிந்து வந்த நகைகள்! உடைகள்! எல்லாவற்றிலும் காணப்பட்ட அந்த உயர்ந்த விலைத் தோற்றம்!

உண்மையிலேயே, உயர்ந்த விலைதான்!

இப்படிப் பணத்தாலேயே பாத பூஜை செய்ய ஒருவன் இருக்கிறபோது, வேலை தேவை என்று, இங்கே வந்து, அவன் மனதை ஏன் கலைத்தாள்?

அந்தப் பணக்காரக் காதலன் கிழவன் என்று மோனிகா கூறியது நினைவு வர, அவள் கற்பனை செய்த விளக்கமே அவனுக்கும் தோன்றிவிட, அருவருப்பில் வாந்தியே வரும்போல ஆயிற்று சத்யாகருக்கு!

இருந்திருந்து இவளைப் போய், அவனது வீடு வரை கூட்டிப் போனேனே! அவனுடைய உன்னதமான பெற்றோரிடம் அறிமுகம் வேறு செய்து வைத்து...

மீண்டும் அருவருப்பில் சத்யாகரின் உடல் குலுங்கிற்று!

அவள் அறியாமல் நடந்த எதையும் அறியாமல், இரவு முழுவதும் இன்பக் கனவில் ஆழ்ந்திருந்துவிட்டு, மறுநாள் ஆவலாக அலுவலகம் சென்ற சுசித்ரா, சத்யாகரின் யாரோ போன்ற விட்டேற்றியான பாவனையில் ரொம்பவே திகைத்துத் திணறிப் போனாள்!

சுசித்ராவின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட இல்லை சத்யாகர்! பாராதது மட்டுமல்ல, பார்க்கப் பிடிக்காதது போலவும் நடந்துகொண்டான் அவன்!

அவளாக "சத்யா..." என்று மெல்ல அழைத்தபோதும், "இந்த அறிக்கை எனக்குச் சீக்கிரம் வேண்டும், சுசித்ரா! வேலையைப் பார்!" என்று நிமிராமலே சொல்லிவிட்டு, கையில் இருந்த ஃபைலையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

ஃபைலில் இருந்த ஒரு வார்த்தையைக் கூட, அவன் படிக்கவில்லை என்பது அவளுக்கு நிச்சயம்! எனவே, மென்குரலில், "என்ன சார்?" என்று விசாரித்தாள்.

ஏன்? என்ன காரணம்?

அதைச் சொல்லும் எண்ணமே இல்லாமல், அல்லது, அப்படி ஒரு காரணமே இல்லாதது போன்று, "போய் வேலையை முடி, சுசித்ரா!" என்று அழுத்தினான்

சத்யாகர்!

மேலதிகாரியாக அவன் இப்படிச் சொல்லும்போது, அவள் வேறு என்ன செய்ய முடியும்?

பேசாமல் தன் இடத்துக்குப் போனாள் சுசித்ரா!

அந்த வேலையை முடித்துக் கொடுத்துவிட்டு, வெட்கத்தை விட்டு, மீண்டும், சத்யாகரை ஏக்கத்துடன் விளித்தாள் சுசித்ரா.

ஆனால், அவளது அழைப்பு காதிலேயே விழாதது போல, "இன்னும் ஒரு கடிதம் இருக்கிறது! சுருக்கெழுத்தில் குறித்துக் கொள்கிறாயா?" என்று கேட்டு, "சீக்கிரம்! கடிதத்தை முடித்துவிட்டு, நான் ஜிஎம்மைச் சந்திக்கச் செல்ல வேண்டும்!" என்று அவளை விரட்டினான்!

எத்தனை தரம் ஒருத்தி தழைந்து போவாள்?

தொண்டையை அடைத்ததை விழுங்கிக் கொண்ட சுசித்ரா சட்டென நிமிர்ந்து, அந்த நிமிர்வுடனேயே சுருக்கெழுத்து நோட்டு, பால் பென்னுடன் அவன் எதிரே போய் நின்றாள்.

அவளது நிமிர்வையும் அலட்சியம் செய்து, கடிதத்தின் சாராம்சத்தைக் கூறி வந்த சத்யாகரின் குரல், திடுமென நின்று போயிற்று.

சில கணங்கள் காத்திருந்துவிட்டு நிமிர்ந்து பார்த்தால், அவனது பார்வை, அவளது துப்பட்டாவின் முனைப்பகுதியில் இருந்தது!

பின் குத்தப்பட்டிருந்த தோள்ப் புறத்திலிருந்து நீண்டு தொங்கிய துப்பட்டா காற்றில் அலைப்புற, அதிலிருந்த சித்திர வடிவங்கள் அழகாகத் தெரிந்தன!

இதில் அப்படியொன்றும், பளபளப்போ, ஜிலுஜிலுப்போ இல்லை என்பதற்காகவே, இந்த செட்டை எடுத்து அணிந்து வந்திருந்த சுசித்ரா காரணம் புரியாது பார்த்தாள்.

கேள்வியாக நோக்கியவளிடம், "இந்த உடை... இதே டிசைன் 'சௌந்தர்யா'வின் விளம்பரம் ஒன்றில் பார்த்தேன்." என்றான் அவன்.

எதிர்பாராத இந்தத் திருப்பத்தில், சுசித்ரா வாயடைத்து நின்றாள்!

ஆனால், அவளது பதிலுக்காகக் காத்திராமலே, "வேண்டியவர்கள் வாங்கித் தந்திருப்பார்கள்!" என்றான் அவன் சாதாரணமான குரலில்!

"ஆ...ஆமாம்!" சரியாகச் சொல்வதானால், தந்தையின் பணத்தில் வாங்கியது, அவர் வாங்கிக் கொடுத்தது போலத்தானே?

உணர்ச்சி துடைத்த முகத்துடன், அவளது முகத்தைப் பார்த்து, "உன் உடைகள் பலதும், கிட்டத்தட்ட அனைத்துமே இந்த மாதிரிப்பட்டவைத்தான் இல்லையா?" என்று கேட்டான் அவன்.

அவளது முகமே பதிலைச் சொல்லிவிட, அவனே தொடர்ந்து பேசினான். "நேற்று அணிந்திருந்தது ரூபி செட்தான்... ஆண்டு விழாவின்போது அணிந்திருந்த வைரங்கள்... அதுவும் வைரம்தானே? எல்லாமே, அ... அந்தப் பெரியவர்தான் வாங்கிக் கொடுத்தார் போல!"

பெரியவர்!

அவர் யார் என்று, எப்படியோ சத்யாகருக்குத் தெரிந்துவிட்டது போலிருக்கிறதே!

துணிவைத் திரட்டி, அவள் முன்பே அவனிடம் இதைச் சொல்லியிருந்தால், நன்றாக இருந்திருக்கும் போல!

இப்போது, குற்றவாளி மாதிரி, சங்கடமாக அல்லவா இருக்கிறது!

உணர்ச்சி காட்டாவிட்டாலும், அவனும் அது போல எண்ணுவதாகத்தான் தோன்றுகிறது!

"வந்து... வந்து, சத்யா..." என்று தயங்கினாள் அவள்.

இதை என்ன மாதிரிச் சொன்னால் சரியாக இருக்கும்?

"எஸ்..." என்று அவசரமாகத் திரும்பியவனின் முகம், அவளது தயக்கத்தில் கல்லாக மாறியது. கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "நான் கிளம்ப வேண்டிய நேரம் ஆயிற்று! முத்துக்களைச் சேர்த்துக் கோர்த்துப் பார்க்க இப்போது எனக்கு நேரம் இல்லை! கடிதம் கிட்டத்தட்டச் சொல்லிவிட்டேன். மீதிக்கு, இதைப் பார்த்து முடித்து, என் மேஜையில் கையெழுத்துக்கு வைத்துவிட்டு, நீ கிளம்பு. நான் வர நேரமாகும்!" என்று, இவ்வளவையும் அவளது முகம் பாராமலே கூறிவிட்டு, அவனது பையை எடுத்துக் கொண்டு வேகமாக வெளியே போய்விட்டான்.

'கிளம்பலாம்' என்றுகூடச் சொல்லவில்லை! 'கிளம்பு' என்று போகவே சொல்லிவிட்டான்!

இதற்கு மேல், எனக்கும் உனக்கும் ஒன்றும் இல்லை என்று வெட்டிவிட்டுவிட்ட உணர்வில், சுசித்ரா தவித்துப் போனாள்.

வேறு வழியின்றி, சத்யாகர் சொன்னது போல, அந்தக் கடிதத்தைத் தயார் பண்ணி அவனது மேஜையில் வைத்துவிட்டு, சுசித்ரா கிளம்பினாள்.

சத்யாகர் எப்போது வருவான் என்று தெரியாமல், அவனுக்காக, அங்கே காத்திருப்பது மடத்தனம். அதுவும், அவன் சென்ற விதத்துக்கு, அவன் அப்படிக் காத்திருந்தால், இளக்காரமாகவும் இருக்கும்!

அவனது கோபம் குறைவதற்காகக் காத்திருப்பதுதான் நல்லது!

ஆனால், தொடர்ந்த நாலு நாட்களில், சத்யாகரின் கோபம் கொஞ்சமும் குறையவே இல்லை., வேலை பற்றித் தவிர, சுசித்ராவிடம் அவன் நின்று பேசவும் இல்லை!

முதலில் தழைந்து போய் ஓடிஓடி வேலை செய்த சுசித்ராவுக்கும் கோபம் வந்துவிட, பணிந்து போவதை அவளும் கைவிட்டுவிட்டாள்!

அப்படி என்ன, அவள் பெரிய குற்றம் செய்துவிட்டாள்!

சொல்லப் போனால், சிறு குற்றம்தானே என்றுகூட, எண்ணிச் செய்யவில்லை!

ஒரு நியாயமான காரணத்துக்காக, ஒரு சிறு உண்மையை அவள் மறைக்க

வேண்டியிருந்தது! அவ்வளவே! ஆனாலும், சத்யாகரிடம் அந்தச் சின்னதான உண்மையைச் சொல்ல, அவளுக்கு மிகவும் தயக்கமாகவே இருந்தது!

அலுவலகம்தான் இப்படி என்றால், சுசித்ராவுக்கு, வீடும் நரகமாயிற்று!

அதற்குக் காரணம் குருப்ரசாத்!



## அத்தியாயம் 14

குருப்ரசாத் வெளியூரிலிருந்து திரும்பி வந்துவிட்டான்.

வந்ததும், வராததுமாக சுசித்ரவைத் தேடியும் வந்து நின்றுவிட்டான்.

இத்தனை நாட்களாக அவனுடைய சுசியைப் பார்க்காமல், அவனுக்குத் தூக்கமே வரவில்லையாம்! அப்படியே கஷ்டப்பட்டுத் தூங்கினாலும், ஒரே கனவாம்! தூக்கம் இல்லாமல் உடல் நலம் கெட்டு, பகலில் தூங்கி, உரிய வேலையைச் செய்து முடிக்க முடியாமல் இரண்டு வாரம் அதிகப்படியாகத் தங்கி, வேலையை முடித்துக் கொடுக்கும்படி ஆயிற்றாம்!

இவன் சோம்பேறித்தனமாகப் படுத்துத் தூங்கியதற்கு நானா பொறுப்பு என்று சுசித்ரா நினைத்ததை அறியாமல், "கனவிலும் நனவிலும், என்னை நீ எப்படியெல்லாம் பாதிக்கிறாய் என்று தெரிகிறதா, என் ஆருயிரே!" என்று வசனம் பேசினான் குருப்ராசாத்!

எரிச்சலை உள்ளடக்கி, "இப்படியெல்லாம் பேசாதீர்கள், குரு!" என்றாள் சுசித்ரா.

"ஏனோ? என் வருங்கால மனைவியிடம், நான் இதுவும் பேசுவேன்! இதற்கு மேலும் பேசுவேன்! சீக்கிரமே, அங்கிளிடமே போய், உங்கள் பெண்ணை எனக்குக் கட்டிக் கொடுங்கள் என்று நேரடியாகக் கேட்டுவிடப் போகிறேன்! அப்போதுதான் என் அவசரம் உனக்குப் புரியும்!" என்று அவளை ஒரு காதல் பார்வை பார்த்தான் அவன்!

சகிக்க மாட்டாமல் முகம் சுளித்து, "கண்டபடி உளறாதீர்கள், ப்ரசாத்! உங்களை நான் ஒரு போதும் மணக்கப் போவது இல்லை!" என்று சட்டெனச் சொல்லி விட்டாள் சுசித்ரா.

சொல்வது, செய்வது அறியாமல், சற்று நேரம் திகைத்துப் போனான் குருப்ரசாத்!

தான் அழகன் என்பதில் அவனுக்கு எப்போதுமே பெருமை உண்டு! எந்தப் பெண்ணும் தன்னிடம் மயங்கியே தீருவாள் என்பதிலும் அவனுக்கு ஐயம் கிடையாது!

இதைப் பயன்படுத்தி, தன் வாழ்க்கை நிலையை வெகுவாக உயர்த்திக் கொள்ள வேண்டும் என்று, பள்ளி இறுதி நாட்களிலேயே அவன் தீர்மானித்து வைத்திருந்தான்.

கல்லூரி நாட்களில் அந்தத் தீர்மானம் இன்னமும் வலு[...]
ஓட, உறு மீன் வரக் காத்திருக்கும் கொக்காக, தந்தையின் திரண்ட சொத்துகளுக்கு வாரிசாக வரக்கூடிய ஒரு பெண்ணைத் தேடிக் கொண்டே இருந்தான் அவன்.

சேது மாதவனுடைய மகள், அவனது கணக்கிடலுக்குப் பொருத்தமாக இருந்தாள்!

ஆனால், சுசித்ரா துடிப்பானவளாக, தன்னம்பிக்கை கொண்டவளாக இருந்தாள்! அவள் ஒன்று நினைத்துவிட்டால், அவளை மாற்றுவது கடினம் என்று உணர்ந்து, அவளை நினைக்க வைப்பதில் முனைந்தான்!

அதில் வெற்றி பெற்றுவிட்டதாகவும் எண்ணினான்!

எப்போது தந்தையிடம் திருமணத்துக்கு அனுமதி கேட்பதாகச் சொன்னாளோ, அப்புறம் அதில் ஐயம் என்ன?

உடனே திருமணத்துக்கு அனுமதி கொடுக்காத சேதுமாதவனையும், இந்த இக்கட்டான நிலைமையில், தன்னை வெளியூருக்கு அனுப்பிய அவனது அலுவலக நிர்வாகியையும் உள்ளூர சபித்தபடி, சுசித்ராவை மீண்டும் தன் பக்கம் இழுக்க முயன்றான் குருப்ரசாத்!

ஆனால், ஒரு சமயத்தில் தனக்கு சாதகமாக இருக்கும் என்று அவன் நினைத்த அவளது மன உறுதியே, இப்போது அவனுக்கு எதிராகவும் இருந்தது!

ஏற்கனவே எடுத்த முடிவுதானே என்றால், திருமண விஷயத்தில் அவ்வளவு அவசரமாக முடிவெடுத்திருக்கவே கூடாது என்றாள் அவள்.

நல்ல வேளையாக, அவளுடைய தகப்பனார் மூன்று மாதம் வேலை பார்க்கச் சொல்லி, நிதானமாக யோசிப்பதற்கு, அவளுக்குத் தேவைப்பட்ட இடைவெளி கிடைக்கும்படிச் செய்தாராம்! இந்த இடைவெளியில், அவள் தன்னை உணர்ந்துவிட்டாளாம்! அதனால் திருமணம் என்கிற பேச்சே இனிக் கூடாது.. அடியோடு விட்டுவிட வேண்டும் என்றாள் அவள்!

விட்டு... விடுவதா? தினமும் இங்கே வந்து போவதற்கு பெட்ரோலுக்கு மட்டும் எவ்வளவு செலவழித்திருப்பான்! அதெல்லாம், ஒரு பைசா பிரயோஜனம் இல்லாமல் வீணாவதா?

மீண்டும் ஒரு தரம் சேதுமாதவனை மனதார சபித்தான் அவன்.

பிறகு, ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, "நீதான் அசட்டுத்தனமாகப் போகிறாய், கண்மணி!" என்றான் வருத்தமும் பிரியமுமான குரலில். "இந்த எதிமறையான எண்ணங்களை விட்டு ஒழி! நான் சொல்லுவது நம்மை மகிழ்ச்சியோடு வாழ வைக்கும் என்ற நம்பிக்கையோடு என் பேச்சைக் கவனி! இரண்டே நாட்களில், உன்னை, என் பழைய சுசியாக மாற்றிக் காட்டுகிறேன் பார்!" என்றான் சவால் விடுவது போல!

தலையசைத்து மறுத்தாள் சுசித்ரா. உறுதியான குரலில், "இந்தப் பேச்சை விடுங்கள் என்றேன், ப்ரசாத்! நமக்கிடையே இனி அந்த மாதிரி எதுவு[ம்] சாத்தியமல்ல! பழகிய ஒரு நண்பராக மட்டும்..." என்றவளை மேலே பே[...]

முடியாமல் குறுக்கிட்டு நிறுத்தி, "அப்படிப் பேசாதே, கண்மணி! அப்புறம் என் உயிரே போய்விடும். உன்னை இழந்து என்னால் வாழவே முடியாதே! செத்துப் போவேன், செல்லம்!" என்று சோகமாகக் கூறினான் அவன்.

அவள் கைக்கடிகாரத்தைப் பார்த்துவிட்டு, "வீட்டில் சில முக்கிய வேலைகள் நிறைய இருக்கின்றன, குருப்ரசாத்! நான் உதவி செய்ய போக வேண்டும்! இங்கேயே நின்று வாதாடிக் கொண்டிருக்க எனக்கு நேரம் இல்லை! ஆனால், எத்தனை முறை, எப்படியெப்படி வாதாடினாலும், என் பதில் இதுதான்! வரட்டுமா? பை!" என்று வேகமாக வீட்டினுள் சென்றாள் சுசித்ரா.

உள்ளே ஜாலியாக ஏசியில் உட்கார்ந்து, பாதாம், முந்திரி என்று எதையாவது கொறிப்பதை விட்டு, தோட்டத்தை ரசிக்கிற சாக்கில், சுசித்ரா வீடு திரும்புகிற நேரத்தில் வெளியே வந்து நின்று, அவளை வழியில் நிறுத்திப் பேசியது எல்லாம் வீணா? அதெப்படி?

விடாமல் சுசித்ராவை வேகமாகப் பின்தொடர்ந்து சென்று, "நான் ஒரு நாளும் இதை ஒப்ப மாட்டேன் சுசி! இப்போது உனக்கு அவசரம்! இன்னொரு நாள், நாம் நிதானமாகப் பேசுவோம்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து கிளம்பினான் அவன்!

அவனது பேச்சு காதில் விழாதது போன்ற பாவனையில் வேகமாக உள்ளே சென்றபோதும், சுசித்ராவின் மனம் கனத்துப் போயிற்று!

கொஞ்சம் நிதானித்து யோசித்திருந்தால், அல்லது. முதலிலேயே தந்தையிடம் கலந்து ஆலோசித்திருந்தாலும் கூட, காதலுக்கும் கவர்ச்சிக்கும் உள்ள வேறுபாடு, அவளுக்கே புரிந்து போயிருக்கும்! அதைவிட்டு, குருப்ரசாத்தின் பேச்சுக்குத் தலையாட்டி, அவன் மனதில் ஆசையைக் கிளப்பி விட்டுவிட்டாளே!

இப்போது, அவளையே நினைத்துக் கொண்டிருக்கும் அவனை வருத்துவது, எவ்வளவு பெரிய பாவம்!

நேசம் மறுக்கப்படுவதன் வேதனை எப்படி இருக்கும் என்பது அவள் அறியாததா?

அதுதான், நன்றாகவே பட்டுக் கொண்டிருக்கிறாளே!

முன் வராண்டாவின் பக்கவாட்டில் இருந்த செருப்பு வைக்கும் அறையில், காலில் அணிந்திருந்த செருப்பைப் கழற்றிவிட்டு, வீட்டினுள் அணியும் செருப்பை மாட்டியவாறு நிமிர்ந்தவளின் பார்வையில், அவனது காரில் ஏற இருந்த குருப்ரசாத், ஜன்னல் வழியே தென்பட்டான்!

கார்க் கதவைத் திறந்தவன் காரில் ஏறாமல் என்ன செய்கிறான்?

அவளை இழந்த சோகத்தில் சோர்ந்து நிற்கிறானா?

இரக்கத்துடன் நோக்கினால், அவனது பார்வை அழகாகப் பராமரிக்கப்பட்டு வரும், தோட்டம் முழுவதையும் ஏக்கமாக வலம் வந்தது. தோட்டத்திலிருந்து. அந்தப் பெரிய பங்களா முழுவதையும்!

அந்தப் பார்வை!

கிட்டத்தட்ட அதே போன்ற இன்னொரு பொம்மை!

தந்தையின் அந்தப் பேச்சு ஏனோ நினைவு வந்தது, சுசித்ராவுக்கு!

ஆனால், திடுமென இன்னொரு பொம்மைக்கு எப்படி ஏற்பாடு செய்வது?

அது முடியாத காரணத்தினாலோ, அன்றி, குருப்ரசாத் உண்மையிலேயே, அவள் மீது அன்பு வைத்திருந்ததாலோ, தினமும் அங்கே வந்து, சுசித்ராவிடம் கெஞ்சுவதும், குழைவதுமாக, வேலை முடிந்து வீடு திரும்புவதையே, அவளுக்கு வெறுக்கடித்துக் கொண்டிருந்தான் அவன்!

தொடர்ந்த சில நாட்களில், சுசித்ராவின் மனதை ஏதோ ஒரு வகையில் பாதிக்கக் கூடிய, மிகவும் பாதித்த இரு சம்பவங்கள் நடந்தன. இரண்டுமே, அவளுக்கு அடுத்தவர் வாயிலாகத்தான் தெரிய வந்தது!

ஒன்று, சத்யாகரும் சேதுமாதவனும் இன்னொரு முறை சந்தித்தது!

சேர்மன் வினாயத்துடன் சேர்ந்து சென்றவன், தொழில் முறை 'லஞ்ச்'சாக, சேதுமாதவனுடன் சேர்ந்து உணவருந்திவிட்டுத் தாமதமாகத் திரும்பி வந்தான்.

இதில் சுசித்ராவைப் பாதித்தது என்னவென்றால், இந்த விஷயம் அவளுக்குத் தெரிய வந்தது, அவளுடைய தந்தையின் மூலமாக என்பதுதான்!

இதற்குமுன் சேதுமாதவனை அவன் சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும், ஏதோ அவனுக்குக் கிடைத்த கௌரவம் மாதிரி, அவளிடம் கூறியிருக்கிறான்! அப்போது அவன் அடைந்த மகிழ்ச்சியை அவளோடு கலந்து கொண்டும் இருக்கிறான்!

இந்த முறையும், வெளியே போய்விட்டு, சத்யாகர் திரும்பி வந்தபோது, அவன் முகத்தில் திருப்தி இருக்கத்தான் செய்தது.

ஆனால், அது என்ன, ஏது என்று அவளிடம் அவன் தெரிவிக்கவில்லை! சொல்லும் எண்ணம் இருப்பதாகக் கூடத் தெரியவில்லை!

எனவே இது ஏதோ தொழிற்சாலை சம்பந்தமாக முதலாளிக்கும், சத்யாகருக்கும் இடையே நடந்த ரகசியப் பேச்சு என்றே சுசித்ரா நினைத்திருந்தாள்!

ஆனால், தந்தை வீடு திரும்பி, இதுதான் விஷயம் என்று தெரிவித்தபோது, அவளால் தாங்கவே முடியவில்லை!

அந்த அளவுக்கு, அவளை அன்னியமாக்கி, விலக்கி விட்டானா என்று அவள் மனம் தவியாகத் தவித்தது!

ஏன் என்று கேட்டுவிடலாமா என்றுகூடத் தோன்றிற்று! ஆனால், அப்படிக் கேட்பதற்கு அவளுக்கு என்ன உரிமை இருக்கிறது? 'நீ யார் கேட்க' என்று அவனே கேட்டுவிட்டால், அப்புறம் முகத்தை எங்கே கொண்டு வைத்துக் கொள்வது?

இந்த வேலையை விட்டு விலகி விடலாமா என்று அவள் முதல் தடவையாக நினைத்தது, அப்போதுதான்!

அடுத்த சம்பவமும், அவளுக்கு இன்னொரு விதமான வேதனையாகவே முடிந்தது!

அதைக் கேட்டு வந்து, சுசித்ராவுக்குச் சொன்னவள், மல்லிகா!

மல்லிகாவைப் பொறுத்த வரையில், அவள் இப்போது மிகவும் சந்தோஷமாக இருந்தாள்!

தம்பி குணமடைந்து வருகிறான்! தாயாருக்கு ஒரு வேலை கிடைத்திருக்கிறது!

அவளது வருமானத்திலும், நன்கு உண்ண, உடுக்க முடிவதோடு, சேமிப்பும் வளர்கிறது!

இவற்றோடு, இன்னும் ஒரு பெரிய நன்மையாகத் தருண் என்ற ஒரு நல்ல மனிதனின் நேசமும் கிடைத்திருக்கிறது.

அவளுக்கு இத்தனை நன்மைகளும் நடப்பதற்கு அடிப்படையும், ஆதியுமான காரணம் சுசித்ரா என்கிற, மிகமிக நல்ல பெண்!

இப்படி மகிழ்ச்சியில் அவள் முக்குளித்துக் கொண்டிருக்கும்போது, அடுத்தடுத்த இரண்டு நாட்களாக அலுவலகத்துக்கு விடுமுறை வர, அவளும் தருணும் குற்றாலத்துக்குச் சென்று மல்லிகாவுடைய தாய், தம்பியைச் சந்தித்து வரலாம் என்று தீர்மானித்தார்கள்!

தம்பிக்குப் பிடித்தமான உணவுப் பண்டங்கள், தாயாருக்கு ஒரு சேலை என்று வாங்க, மல்லிகா, தருண் இருவரும் கடைக்குச் செல்வதாகத் திட்டமிட்டனர்.

வேலை நேரம் முடிந்ததும், முகம் கழுவிக் கொஞ்சம் பளிச்சென்று ஆவதற்காகப் பெண்கள் அறைக்குச் சென்றபோதுதான் மல்லிகா அந்தப் பேச்சைக் கேட்டாள்!

முன்னே என்ன பேச்சு நடந்ததோ, மல்லிகா பாத்ரூம் வாயிலை நெருங்கும்போதே, உள்ளே பேசிய குரல், அவள் காதுகளில் தெளிவாக விழத் தொடங்கிவிட்டது!

"... அன்றைக்கு மாலா வரவேற்புக்கு அணிந்து வந்திருந்தாளே, அந்த ரூபி செட் என்ன விலை தெரியுமா? நான் விசாரித்து விட்டேன்! ஒன்றரை லட்சமாம்!" என்று யாரோ சொன்னது, அவளுக்குத் தெளிவாகவே கேட்டது!

மாலா வரவேற்புக்கு ரூபி செட் என்றால், சுசித்ராவைப் பற்றிப் பேசுகிறார்கள்! அவளிடம் இருக்கிறது., அணிகிறாள்! அது என்னவோ பெரும் பிழை போல ஏன் பேசுகிறார்கள்?

எல்லோருக்கும் புரிய வைத்துவிடும் வேகத்திலோ, என்னவோ, முதலில் பேசியவள் சற்று ஓங்கியே பேசினாள்!

பேசியவளுக்கு வெற்றியே போல, அவள் பேச்சை நிறுத்திய சில கணங்களில்... "அடேயப்பா!," "யம்மாடீ!" என்பன போன்ற வியப்பான வார்த்தைகளும், ஒலிகளும் கேட்டன!

பாவம்! வயிற்றுப் பிழைப்புக்காக வேலை செய்யும் இந்த மத்தியதாரத்தாருக்கு, ஒன்றரை லட்சத்தில் ஒரு நகை என்றால், 'ஆ' என்றுதான் இருக்கும்!

போய் முகம் கழுவுவதற்காக மல்லிகா ஓர் எட்டு எடுத்து வைக்கையில், "ரூபியே இவ்வளவு என்றால், ஆண்டுவிழாவுக்கு அணிந்திருந்த வைரம் என்ன விலையிருக்கும்! அவள் அணிகிற உடை ஒன்றுகூட, ஐயாயிரத்துக்குக் குறைந்தது கிடையாது! எல்லாம் ராஜ பரம்பரை மாதிரிதான்! ஆனால், இதெல்லாம், அவளுக்கு எப்படிக் கிடைக்கிறது, தெரியுமா? நான் கண்ணாலே பார்த்தேன்!..." என்று தொடர்ந்த வார்த்தைகளில், அப்படியே நின்றுவிட்டாள்!

என்னவோ இருக்கிறது!

"எப்படி?" "சொல்லு, சொல்லு, எப்படியாம்?" என்ற கேள்விகளின் இடையே, எனக்கென்னவோ, அவளைப் பார்த்தால் நல்ல விதமாகத்தான் தெரிகிறது!" என்ற ஒரு குரல் மட்டும் தனித்து ஒலித்தது!

"ஹூம்! நான் சொல்வதைக் கேட்டுவிட்டு, நீ சொன்னதைத் திருப்பிச் சொல்ல முடியுமா என்று பார்!" என்ற பலத்த பீடிகையின் பின், முதல் குரல் மறுபடியும் தொடர்ந்தது!

"எல்லாம், ஒரு சபலக்காரக் கிழவன் வாங்கிக் கொடுக்கிறான்பா! கடையில் நாலு பேர் பார்க்க, இரண்டு பேரும் எப்படி நடந்து கொள்கிறார்கள், தெரியுமா? இவள், அவன் மேலே முட்டுவதும், கையை அமுக்கி விடுவதும், இவள் தோளைப் பிடித்து அந்தக் கிழவன் கூட்டிப் போவதும், கன்னத்தைத் தட்டுவதும்... சே! பார்ப்பதற்கு, ரொம்பக் கேவலமாக இருந்தது! அதை விடக் கேவலம், இதையெல்லாம் வாங்கிக் கொடுப்பதற்குக் கிழவனை வைத்துக் கொண்டு, அவள் வயசுக்கேற்ற சுகத்துக்கு, நம் சத்யா சாருக்கு வலை வீசுகிறாள்! பாவம்! அவளைப் பற்றின உண்மை தெரியாமல், சத்யாசாரும், கிறங்கி விட்டார்! நல்லவேளையாக, நான் அவருக்கு முழு உண்மையும் தெரியச் செய்தேனா, அவர் அவளை இப்போது திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை!"

அடிப்பாவி! யாரைப் பற்றி என்ன வார்த்தை சொல்லுகிறாள்!

அதுவும், சுசித்ராவின் காலைத் தொடக் கூடத் தகுதியற்ற ஒருத்தி!

என்றேனும், சுசித்ரா இப்படி அடுத்தவர்களைப் பற்றிக் கேவலமாகப் பேசுவாளா? அதுவும், நிச்சயமாக எதுவும் தெரியாமல்!

யாரைப் பற்றி, என்ன பேசுவது என்று விவஸ்தை வேண்டாம்?

அதற்கு மேல் வெளியே நில்லாமல், மல்லிகா முகம் கழுவும் பகுதிக்குள் சென்றாள்!

"யாரம்மா அது, சற்று நேரத்துக்கு முன் இங்கே சாணியடிக்கிற வேலை செய்து கொண்டிருந்தது?" என்று ஏளனமாகக் கேட்டாள்!

"யார்? அடி வருடியா? கொஞ்சம் மரியாதையாகப் பேசு மல்லிகா!" என்றாள் மோனிகா அதட்டலாக!

"ஆமாம், இவ்வளவு நேரமாக, நீ ரொம்பவும் மரியாதையாகப் பேசிக் கொண்டிருந்தாய், பார்! மற்றவர்களுக்கு, நீ கற்றுக் கொடுக்க வேண்டியதுதான்! எங்கள் அம்மா ஒரு மகாபாரதக் கதை சொல்லுவார்கள். தருமபுத்திரரையும் துரியோதனையும் ஒரோரு நாள் வெளியே அனுப்பிவிட்டு, நீ என்ன பார்த்தாய்

என்று குரு கேட்டாராம். உலகில் எல்லோரும் நல்லவர்களாக இருப்பதைப்
பார்த்தேன், என்று தருமரும், உலகத்தில் கெட்டவர்கள் மட்டுமே இருக்கிறார்கள்
என்று துரியோதனனும் சொன்னார்களாம்! உன் புத்தி எப்படியோ, அதைப்
போலத்தானே, உனக்கு மற்றவர்கள் தெரிவார்கள்?" என்றாள் மல்லிகா,
தொடர்ந்து உதாசீனமாகவே!"

"ரொம்பத்தான் தெரிந்த மாதிரிப் பேசாதே மல்லிகா! நான் பார்த்ததைத்தான்
சொன்னேன்!" என்றாள் மோனிகா விறைப்பாக.

"பார்த்திருப்பாய்! ஆனால், அதற்கு நீ தீட்டிய வண்ணம் இருக்கிறதே!
அதுதான் மகா அசிங்கம்! நினைத்துப் பார்க்கக் கூட முடியாத கேவலம்!"

"நான் பார்த்ததைச் சொன்னேன், என்றேன்! அது தப்பு என்றால், நீதான்
சொல்லேன் அது யார் என்று." என்று மல்லிகாவை மடக்க முயன்றாள் மோனிகா!

ஆனால் அசராமல், "அது, சுசியின் ரகசியம்! அதை அவள்தான் சொல்ல
வேண்டும்! ஆனால், ஒன்று. என்னை உங்கள் எல்லோருக்கும் தெரியும். நான்
எப்படி, இந்தத் தப்பை செய்ய மாட்டேனோ, அப்படி ஒரு நிலையை நாம்
எல்லோருமே நினைத்துக் கூடப் பார்க்க மாட்டோமோ அதைப் போலவேதான்
சுசித்ராவும். அதனால்., இந்தப் பேச்சை இத்தோடு விடுங்கள்!" என்று
ஆத்திரத்தோடு முடித்தாள் அவள்!

"எனக்கும் அதுதான்! அவளைப் பார்த்தாலே, ஒரு நல்ல குடும்பத்துப் பெண்
என்று நன்றாகத் தெரிகிறதே என்று நினைத்தேன்!" என்றாள் ஒருத்தி!

"சே! ஒரு நல்ல பெண்ணைப் போய், இப்படிப் பேசினோமே! அவளுக்குத்
தெரிந்தால், எவ்வளவு வேதனைப் படுவாள்?" என்று இரங்கியது ஒரு குரல்!

"வேதனையை விடு! கோபப் படமாட்டாளா? நானானால், அப்படியே குடலை
உருவிக் கிழித்துப் போட்டு விடுவேன்! தயவு பண்ணி, அவளிடம் போய்ச்
சொல்லி விடாதே, மல்லிகா!" என்று அஞ்சினாள் இன்னொரு பெண்!

"கோபமா? சுசித்ரா கோபப்பட்டு, நான் பார்த்ததே இல்லை! அனேகமாக,
இப்படிக்கூடப் பேசுவார்களா என்று ஆச்சரியப்படுவாள் என்று நினைக்கிறேன்.
உள்ளூர வருத்தப்படலாம்..." என்று மல்லிகா யோசனையோடு கூறிய விதத்தில்
பலருக்கு மனம் இளகிப் போயிற்று!

"பெரிதாகப் பேசினால் ஆயிற்றா? அந்தக் கிழவனோடு அவளைப் பார்த்தவள்
நான்! அது தப்பான உறவு இல்லை என்று, இன்னும் நிரூபணம்
ஆகவில்லையே!" என்று மோனிகா அதிலேயே நின்றது, அங்கிருந்த பலருக்கே
பிடிக்கவில்லை எனலாம்!

அவர்களெல்லாம் சுசித்ராவின் நடை, உடை பாவனைகளால் கவரப்பட்டு,
அவளிடம் மதிப்பும், மரியாதையும் வைத்திருந்தவர்கள்.

ஆனால், "அதானே?" என்று, சுசித்ரா காரில் ஏறுவதைப் பார்த்திருந்த ரமா,
மோனிகாவுக்குப் பின் பாட்டுப் பாட, ஆவலும் குழப்பமுமாக எல்லோரும்
மல்லிகாவைப் பார்த்தனர்!

சுசித்ராவின் ரகசியத்தைச் சொல்லிவிட்டால், எல்லோரும் வாயடைத்துப்
போவார்கள்! ஆனால், அது சுசித்ராவை எப்படிப் பாதிக்கும் என்று
எப்படிச் சொல்வது? அத்தோடு, அவளது ரகசியத்தை, அவள்தானே வெளியிட
வேண்டும்?

வேகமாக யோசித்து, "தாராளமாக நிரூபிக்கிறேன்! ஆனால், நீ சத்யா சாரிடம்
உண்மையை ஒத்துக் கொண்டு மன்னிப்புக் கேட்பாயா?" என்று, மோனிகாவிடம்
நேரடியாகக் கேட்டாள் மல்லிகா.

"ஆங்...!" என்று தன்னையறியாமல், இரண்டெட்டுப் பின் வாங்கினாள்
மோனிகா!

மல்லிகாவின் பேச்சைப் பார்த்தால், சுசித்ராவிடம் பிழையே கிடையாது
என்பதற்கு அவளிடம் ருசு இருப்பது சர்வ நிச்சயமாகத் தெரிகிறது! அதை அவள்
விலாவாரியாக விளக்கும்போது, இந்தப் பெண்கள் நடுவிலேயே, அவளுக்கு
மதிப்புக் குறையப் போகிறது!

இதற்கு மேலாக, சத்யாகரிடம் வேறு, சுசித்ராவைப் பற்றித் தப்பாக எண்ணி,
அதைத் தெளிவுபடுத்திக் கொள்ளாமலே அவதூறு பேசினேன் என்று ஒத்துக்
கொள்வதா? அப்புறம் அவளுள் இருக்கும் ஆயிரமாயிரம் ஆசைகள் எல்லாம்
என்ன ஆவது? சமாதியா?

சொந்த ஆசைகள் இருக்கட்டும்., அலுவலகத்திலேயே பெயர் ரிப்பேராகி,
முன்னேற்றம் தடைப்பட்டு விடுமே!

"எ...என்னது? சத்யா சாரிடம் எனக்கென்ன பேச்சு? அதுவும், அவளைப் பற்றி!
அவள் நல்லவளோ, கெட்டவளோ, அது அவளோடு போகிறது! அதைப்
பற்றியும்தான், எனக்கென்ன வந்தது? ரமா, வருகிறாயா? அல்லது இங்கேயே
வம்படித்துக் கொண்டு இருக்கப் போகிறாயா? எனக்கு வீட்டுக்குப் போக
நேரமாயிற்று!" என்றவாறே கைப்பையை எடுத்தவள், அப்படியே அங்கிருந்து
வெளியேறிப் போய்விட்டாள்.

அவள் பின்னடைந்து சென்ற விதத்திலேயே உண்மை தெளிவானாற்போல,
மற்றவர்களும் கலைந்து சென்றனர். மீறிக் கேட்ட ஓரிருவரிடம், "தப்புக்கும்
சுசித்ராவுக்கும் சம்பந்தமே கிடையாது என்று எனக்குத் தெரியும்! மோனிகா
நழுவிச் சென்ற விதத்திலிருந்து, உங்களுக்கும் அது புரிந்திருக்கும்! மற்ற
விஷயம், சுசித்ராவே சொல்வதுதான் உசிதம்." என்று மல்லிகா கூற, அவர்களும்
அதை ஒத்துக் கொண்டு, செல்லலாயினர்!

தன்னைப் பற்றி இப்படி ஒரு பேச்சு நடப்பதே சுசித்ராவுக்குத் தெரியாது!
இப்போது, அது தானாகவே, நல்ல விதமாகவே கிட்டத்தட்டத் தீர்ந்தும்
போயிற்று!

ஆனால், விஷயம் முடிந்துவிட்டது என்று விட முடியாமல், சுசித்ராவின் மு
வாட்டம்!

அதற்கும், இந்தப் பேச்சுக்கும் ஏதோ தொடர்பு இருக்க வேண்டும்! எனவே
முகம் கழுவிவிட்டு வருவதாகச் சொல்லிப் போனவளை இன்னமு

காணோமே என்று தேடிக் கொண்டு வந்த தருணை, ஓர் ஐந்து நிமிஷம் காத்திருக்குமாறு சொல்லிவிட்டு, மல்லிகா சுசித்ராவைத் தேடிச் சென்றாள்.

சற்றே சோர்ந்த நடையுடன், அலுவலகக் கட்டிடத்தை விட்டு, சுசித்ரா வெளியே சென்று கொண்டிருப்பது தெரிந்து, அவளிடம் ஓடிச் சென்றாள்.

சுசித்ராவின் அன்றையச் சோர்வுக்குக் காரணம் இருந்தது!

சத்யாகர் கொடுத்திருந்த வேலைகளை எல்லாம் முடித்து, அவனது பார்வைக்கு வைத்துவிட்டு, இன்றேனும் அவளிடம் நல்லபடியாகப் பேச மாட்டானா என்று காத்திருந்தால் அவளை நிமிர்ந்து பாராமலே போகச் சொல்லிவிட்டான்!

ஏன் இப்படி அவளைத் தூர விலக்குகிறான்?

அதிலும், அன்று அவளது அணி, மணிகளைப் பற்றிப் பேசியதிலிருந்து, ஒரேயடியாக அப்படித்தான்!

ஏன்? அவளுக்குப் பண வசதி இருப்பது, அப்படிப் பெரிய குற்றமா?

அப்படி எண்ணினால், அது அசட்டுத்தனம் இல்லை?

ஆனால், சத்யாகர் அசடன் அல்லவே!

வேலையில் சேரும்போது, பணம் தேவை போல அவள் காட்டிக் கொண்டதற்காக என்றால், இந்தத் தண்டனை ரொம்பவும் அதிகப்படி! இவ்வளவு பெரிய தொழிற்சாலையைக் கட்டிக் காத்து, சீராக நடத்துகிற முக்கியமான பொறுப்பை வெற்றிகரமாக வகிக்கும், சத்யாவுக்கு, இது தெரியதா?

அவளிடம் மட்டும் ஏன் இந்தக் கடுமை?

வருத்தமும், சோர்வுமாக அவள் நடந்து கொண்டிருந்த போதுதான், அவளை அழைத்தபடி, ஓட்டமும் நடையுமாக மல்லிகா வந்து சேர்ந்தாள்.

அவளது வேகமூச்சுகளைக் கவனித்து, முறுவலித்து, "நன்றாக மூச்செடுத்துவிட்டு, அப்புறமாகப் பேசு!" என்றாள் சுசித்ரா!

"என்னை விடு, சுசி!" என்ற மற்றவள் தொடர்ந்து, "சுசி, உன்னைப் பற்றி, ரொம்பத் தப்பாக ஒரு பேச்சைப் பரப்பியிருக்கிறார்கள்!..." என்று தொடங்கி நடந்ததைச் சொல்லி முடித்தாள். பிறகு, "இப்போதைக்கு என் பேச்சைப் பெரும்பாலும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள், சுசி! ஆனால், மறுபடியும் இதைக் கிளப்பாமல் மோனிகா விட மாட்டாள்! அதுவும் கண்ணால் பார்த்ததாக வேறு சொல்லியிருக்கிறாள்! அதனால், உன்னைப் பற்றிய உண்மையை, அவர்களிடம் சொல்லி விடலாமா?" என்று கேட்டாள்.

ஏதோ உறுத்த யோசித்தவளுக்குச் சட்டென நினைவு வர, "ஓ! அன்று 'சராஜி'ல் நான் பார்த்தது மோனிகாவைத்தானா? சந்தேகமாக நான் பார்க்கவும், திரும்பி நின்று முகத்தை மறைத்துக் கொண்டாள்! ஆனால், அப்பாவைப் போய்...சே! எவ்வளவு மட்டமான எண்ணம்! எண்ணியது மட்டுமில்லாமல், அதை ஊரெல்லாம் பரப்பி... என் மேல், அவளுக்கு அப்படி என்ன வெறுப்பு இருக்கக் கூடும்?" என்று, வருத்தத்துடன் வினவினாள்.

"உன் வேலைக்கு அவளும் ரொம்பவும் முயன்றாளில்லையா? அவளுக்கு இல்லாமல், உனக்குக் கிடைத்துவிட்டது! அந்தப் பொறாமைதான்! இப்போது உன் அப்பா பற்றித் தெரிந்தால், இன்னமும் வயிற்றை எரிவாள்! எரியட்டும்! எரிந்து, எரிந்து, அப்படியே அல்சர் வந்து துடிக்கட்டும்!"

மல்லிகா பேசிய விதத்தில் மீண்டும் லேசாக முறுவலித்தாள் சுசித்ரா. "இயன்றவரை சொல்ல வேண்டாம், மல்லிகா. மற்றபடி, உனக்கு உசிதமாகத் தோன்றுவது போலச் செய்யேன்!" என்று அலுப்பை மறைத்துப் பேசி, அவளை அனுப்பிவிட்டுத் த்ன் நடையைத் தொடர்ந்தாள்.

அலுப்புதான்!

சத்யாகர் அவளை வெறுத்து ஒதுக்கிய பிறகு, இவர்கள் யார் என்ன நினைத்தால் என்ன?

சட்டென நின்றாள் அவள்.

சத்யாகரின் வெறுப்புக்குக் க்ாரணம்... இதுவாக இருக்குமோ?

இந்த வேலைக்கு முயன்றவள் மோனிகா. இந்த வேலையில் இருந்து விரட்டுவதானால், யாரிடம் போவாள்?

வந்த வழியே திரும்பி, வேகமாக நடந்தாள் அவள்.

காத்திருக்கும் காரை நாடிச் சென்றவள் திரும்பி வரவும் ஆச்சரியத்தோடு பார்த்தா்ன் சத்யாகர்! அவள் முகத்தைப் பார்க்கையிலோ, மேலும் திகைப்புதான்!

உடம்பு ஏதும் சரியில்லையோ என்று தோன்றிவிடக் கவலையுடன் அவசரமாக எழுந்து, "என்ன?" என்று வினவினான்.

அவனது கண்களையே பார்த்தவண்ணம் அருகில் வந்து, அவள் கேட்டாள். "என்னை இவ்வளவு தப்பாக எப்படி நினைத்தீர்கள், சத்யா?" என்று.



## அத்தியாயம் 15

சுசித்ராவுக்காகக் காத்திருக்கும் காரையும், அது அவளைக் கூட்டிப் போய்ச் சேர்க்கும் இடத்தையும் பற்றி எழுந்த வேண்டாத கற்பனைகளை விரட்ட முடியாமல் சத்யாகர் தவித்துக் கொண்டிருந்த வேளை, அது!

அன்று மட்டுமல்ல! தினமுமே, அப்படித்தான்!

கண் முன்னே இருந்து சுசித்ரா வேலை செய்யும்போதும், இந்த அழகு நளினம், எழில் எல்லாமே என்னமாய் நாசமாகின்றன என்று ஆத்திரமாக, வருத்தமாக இருக்கும்!

அதற்காகவே, அவளை வேறு பிரிவுக்கு மாற்றலாமா என்று கூட சத்யாகர் யோசித்தது உண்டு! ஆனால், அது முடியாத காரியம் என்றும் அவனுக்குப் புரிந்து போயிற்று!

அவளைப் பார்த்துப் பார்த்து, சித்ரவதைப் படுவது, அவனது விதி என்று ஆகிவிட்டது!

ஆனால், என்ன தவித்தாலும், அதை அவளிடம் காட்டிக் கொள்ளாமல் இருப்பதில் மட்டும் சத்யாகர் மிகவும் கவனமாக இருந்தான்!

இந்நிலையில்தான், அன்று சுசித்ரா தயங்கித் தயங்கி நின்றபோது, நிற்க விடாமல், அவன் விரட்டியடித்தது!

பெரியவர் வாங்கிக் கொடுத்ததை, அவளே ஒத்துக் கொண்ட பிறகும், பக்கத்தில் நின்று, மலங்க மலங்க விழித்தாலே, மனம் கலங்கிப் போகிறது! அதற்கு மேல், பேச விடுவது, எவ்வளவு ஆபத்து!

அதற்காகவே அவளைப் போ, போ என்று விரட்டிக் கொண்டிருந்தான் சத்யாகர்!

போகச் சொல்லி விரட்டுவதும், அவள் முகம் வாடிச் சென்ற பிறகு, அப்படி வாட வைத்ததற்காகத் தன்னைத் தானே திட்டிக் கொள்வதும் கூட, அவனது அன்றாட வாடிக்கைதான்!

அன்றும் அதே கதைதான் நடந்தது!

சுசித்ரா சோர்ந்து செல்வதைப் பார்த்து சத்யாகர் தன்னைத்தானே நொந்துகொண்டு இருந்த வேளையில்தான் அவள் வேக வேகமாகத் திரும்பி வந்தாள்!

திரும்பி வந்து, அவளைப் பற்றி எப்படித் தவறாக எண்ணலாம் என்று, அவன் கண்ணை நேராகப் பார்த்துக் கேட்டாள்!

ஒரு கணம் திகைத்த போதும், அத்தனை ஆண்டு வேலை அனுபவம் கை கொடுக்க, கண்ணில் கவனத்துடன், "எதைத் தப்பாக நினைத்ததாகச் சொல்லுகிறாய்?" என்று பதில் கேள்வி கேட்டான் அவன்!

மன்றத்தில் வழக்காடும் பாவனையில், ஒரு கையசைவோடு, "என்னைப் பற்றி... என்னைப் பற்றிக் கேவலமாக நினைத்ததைத்தான்! நான் அப்படிப் பட்டவளாக இருப்பேன் என்று, உங்களால் எப்படி நினைக்க முடிந்தது, சத்யா?" என்று வேதனையும் கோபமுமாகக் கேட்டாள் அவள்!

ரொம்ப வருத்தத்தோடும், மிகுந்த கோபத்தோடும் தவிப்போடுத்தான் நினைத்தான்! ஆனால் இதையெல்லாம், இப்போது அவளிடம் சொல்லிப் பயனில்லை!

"ஆனால், நீயே அதை ஒப்புக் கொண்டாயே!"

"நானா?!" என்றாள் அவள் நம்ப மாட்டாமல்! "வாய்ப்பே கிடையாது!" என்று மறுக்கவும் செய்தாள்!

"நீயேதான் சொன்னாய்! எல்லா விலை உயர்ந்த பொருட்களையும், ஒரு பெரியவர் வாங்கிக் கொடுத்ததாக, அன்று நான் கேட்டபோது ஒத்துக் கொண்டாயே!"

எப்போதும் சிறு அழுத்தத்துடன் பேசும் சத்யாகர் குழப்பத்துடன் தடுமாறுவதை உள்ளூர ரசித்தபடி, "பெரியவர்கள் விலை உயர்ந்த பொருட்களை வாங்கிக் கொடுப்பதானால், தப்பான நோக்கத்தில்தான் செய்வார்கள் என்று அப்படி என்ன கட்டாயம்?" என்று எடுப்பாகக் கேட்டாள் சுசித்ரா!

"அப்படியானால், தப்பாக எதுவும் கிடையாது?"

"நிச்சயமாக!" என்றாள் அவள் உறுதியான குரலில்!

ஒரு கணம் அவளை ஆழப் பார்த்துவிட்டு, "பின்னே, அதை ஏன் அவ்வளவு தள்ளி நின்று சொல்கிறாய்?" என்று அவன் கண் சிமிட்டிக் கேட்க, இருவருக்குமே சிரிப்பு வந்தது!

"அம்மாடியோவ்! ஒன்று அப்படி, அல்லது இப்படியா? ஆபத்துப்பா! நான் போகிறேன்!" என்றாள் சுசித்ரா கிளம்புவது போலப் பாவனை செய்தாள்.

சட்டென அவள் கையைப் பற்றி நிறுத்தி, "அந்தக் கார் யாருடையது, சுசி?" என்று ஆவலாகக் கேட்டான் சத்யா!

"அது..." என்று சொல்ல வாயெடுத்த சுசித்ரா சற்றுத் தயங்கினாள்!

அதைச் சொன்னால், ஒருகால் இப்போதைய மகிழ்ச்சிகரமான சூழ்நிலையை அது கெடுத்து விடுமோ என்று ஏனோ தோன்றியது, அவளுக்கு!

அத்தோடு, அவளுடைய தந்தை விதித்திருந்த மூன்று மாதக் கெடுவும், அடுத்த இரண்டு நாட்களில் முடிந்து போகும்! அப்புறமே சொன்னாலென்ன?

"...சொல்கிறேன்! அநியாயமாய் என்னை இத்தனை நாள் வாட்டி வதைத்ததற்குத் தண்டனையாக, அதைத் தெரிந்துகொள்ள, இன்னும் இரண்டு நாட்கள் பொறுத்திருங்கள்!" என்று கொஞ்சலாக மொழிந்துவிட்டு, உற்சாகத்துடன் வீட்டுக்குக் கிளம்பினாள், சுசித்ரா!

வீட்டிலும், அவளுக்கு ஒரு பெரும் பிரச்சினை தீரும் நாளாக அமைந்தது எனலாம்!

வழக்கம் போலவே, சுசித்ரா வீட்டுக்குள் வரும் நேரம் பார்த்து, காரோடும் பாதையில் நின்று, அவளை வழி மறித்து, காரை விட்டு இறங்கச் செய்து அவளிடம் தன் மன்றாடலைத் தொடங்கினான் குருப்ரசாத்.

முன்பெல்லாம் அவன் இப்படி நிற்கும்போது, தோட்டத்தை ரசித்துக் கொண்டிருப்பதாக அவன் சொன்னதை நம்பியதும், தன்னையும், தன் குடும்பத்தாரையும் போல அவனுக்கும் செடி, கொடி என்று இயற்கையழகில் ரசனை இருக்கிறது என்று எண்ணியதையும் நினைக்கையில் அவளுக்கு அவமானமாக இருந்தது!

அவளிடம் தனித்துப் பேசுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்காக, அப்படி நடித்திருக்கிறான்!

அது தெரியாமல், ஒத்த மனம், ஒத்த கருத்து, குடும்பத்தோடு ஒன்றிப்

போகும் பாக்கு. அதனால் வேறுபாடே இராது என்றெல்லாம் நினைத்து... சே!

ஆனால், இன்று அவனிடம் திடம் இருந்தது! சத்யாகரின் அன்பு உறுதிப்பட்டு விட்டதில், எதையும் எதிர்கொள்ளும் துணிவு இருந்தது!

எனவே, தயக்கமின்றிக் காரை விட்டு இறங்கியவன், குருப்ரசாத் விரும்பியது போல அங்கேயே நின்று பேசாமல், வீட்டை நோக்கி நிதானமாக நடந்தபடியே அவனிடம் தெளிவாகப் பேசலானான்!

அவனோடு உரையாட வேண்டுமானால், கூடச் சென்றுதான் ஆக வேண்டும் என்பது போல, அவன் நில்லாது செல்லவும், வேறு வழியின்றி அவனும் நடந்தான்.

திருமணம் முடியாது என்று, சுசித்ரா தெளிவாக மறுத்துவிடவும், செத்து விடுவேன், உயிரை விட்டு விடுவேன் என்று சோக மிரட்டலில் இறங்கினான், குருப்ரசாத்.

ஆனால், "பைத்தியக்காரத்தனமாக உளறாதீர்கள், ப்ரசாத்!" என்று அவள் அழுத்தமான குரலில் அதட்டவும், செய்வது அறியாமல் திகைத்து விழித்தான்.

நன்றாக யோசித்துதான் அடுத்த முயற்சியைத் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்து, "அப்படியானால், நான் வீட்டுக்குப் போகிறேன், சுசி! உள்ளம் உடைந்துவிட்ட இந்த நிலையில், என்னால் வேறு யார் முகத்தையும் பார்த்துப் பேசக் கூட முடியாது!" என்று சோகக் குரலில் கூறி, விடை பெற முயன்றான்!

ஆனால், வரும்போதே வீட்டின் முன் நின்ற மற்ற கார்களைக் கவனித்து விட்டிருந்த சுசித்ரா அவனைப் போக விடவில்லை!

"அசட்டுத்தனமாக உளறாமல், என்னோடு வாருங்கள், குரு. உங்களை ஒரு முக்கியமான விருந்தாளிக்கு அறிமுகம் செய்ய வேண்டியிருக்கிறது!" என்று, அவனை உள்ளே அழைத்தாள்.

"இந்த உலகத்திலேயே, எனக்கு நீ மட்டும்தான் முக்கியம்! மற்ற எல்லோரும், உன் காலில் ஒட்டிய தூசியின் மதிப்புக் கூட இல்லாதவர்கள்தான்! ஆனாலும், கூப்பிடுவது நீயாயிற்றே என்று, உன்னோடு வருகிறேன்!" என்று கூடப் போனான் அவன்.

கேட்டைத் தாண்டி உள்ளே வரும்போதே, 'வீரா' சோடாக் கம்பெனியின் காரை, சுசித்ரா பார்த்து விட்டிருந்தாள். வீட்டுக் கார்களையும், விளம்பரத்துக்குப் பயன்படுத்துவது, அவர்களது வழக்கம்! சோடா பாட்டிலின் படத்தையும் பெயரையும் பார்த்தவாரே வீடு நோக்கி நடக்கையில், ப்ரீதியின் கீச்சுக் குரலும் அவளுக்குக் கேட்டிருந்தது!

'வீரா' உரிமையாளருடைய ஒரே வாரிசு ப்ரீதி! மகளைப் பிரிய மனமின்றி, வீட்டோடு மாப்பிள்ளையாக இருப்பதற்கு, அழகு, படிப்புடன் கூடிய சாதாரண நிலையில் உள்ள ஒரு பையனுக்காக, 'வீரா' உரிமையாளர் குடும்பம் அலைந்து தேடிக் கொண்டிருப்பதாகச் சில தினங்களுக்கு முன், வீட்டில் பேச்சில் வந்தது!

தந்தையின் 'அதே போன்ற பொம்மை'யும் நினைவுவர, குருப்ரசாத்தை அழைத்துப் போய், ப்ரீதிக்கு அறிமுகம் செய்து வைத்தாள் சுசித்ரா.

குருவிடமும், "'வீரா' நிறுவனத்து சோடா இப்போது தமிழ்நாடு முழுவதும் போகிறது, குரு! அவ்வளவுக்கும், இவள்தான் ஒரே வாரிசு! ஆனாலும் ரொம்ப நல்ல பெண்!" என்று ப்ரீதியைப் பற்றிச் சொல்ல வேண்டியதை, நாசூக்காகச் சொன்னாள்!

லேசாக நெளிந்தபடி, "முன்பே இவரைப் பார்த்திருக்கிறேன்! ஆனால், உன்னைத் தவிர வேறு யாரையும் இவர் பார்க்கவே மாட்டார்! யாருடனும் பேசவும் மாட்டார்!" என்றாள் ப்ரீதி, குறையோடு.

"சுசித்ரா போன்ற தேவதைகளை யார்தான் பார்க்க மாட்டார்கள்? ஆனால், உங்களிடம் பேசாத காரணம், என்னைப் போன்ற சாதாரண மனிதனிடம் நீங்கள் பேசுவீர்களோ, மாட்டீர்களோ, என்ற பயம்தான்! இங்கே உட்காரலாமா?" என்று அவளிடம் அனுமதி கேட்க, "அய்யோ, நான் பேசுவேனே! உட்காருங்கள், உட்காருங்கள்!" என்று ப்ரீதி பூரிப்புடன் நகர்ந்துகொண்டு இடம் கொடுக்க, அதே சோஃபாவில், அவள் அருகில் அமர்ந்தான் குருப்ரசாத்.

சுசித்ராவைப் போன்ற அழகி அல்லதான்! சேதுமாதவன் குடும்பத்தின் தரமும் கிடையாதுதான்! ஆனால், இங்கேயும் பணம் நிறையவே இருந்தது!

அது முக்கியம் அல்லவா?

.உள்ளம் உடைந்துவிட்ட நிலை என்பதால் வீட்டுக்குப் போவதாகச் சொன்னவன், ப்ரீதி கிளம்பும் வரை அவளோடு பேசிக் கொண்டிருந்துவிட்டு, அவளோடு சேர்ந்துதான் கிளம்பிச் சென்றான்!

உடைந்த உள்ளம் ஒட்டிவிட்டது போலும் என்று எண்ணியவாறே திரும்பிய சுசித்ரா தந்தையின் பார்வையைச் சந்திக்க நேர்ந்தது!

வினாவாகப் புருவத்தை உயர்த்தியவரிடம், "அதே போலப் பொம்மையைக் கொடுத்தேன், அப்பா!" என்று அவள் கூற, தந்தையும் மகளும் முறுவலித்துக் கொண்டனர்!

சரியானபடி பார்த்தால், சுசித்ரா அன்று மிகவும் சந்தோஷமாக இருக்க வேண்டும்!

வானத்தில் பறக்கிற மாதிரி!

என்ன, என்ன என்று தவிப்பது மாறி, பிரச்சினைகள் அனைத்தும் தீர்ந்துவிட்ட நிலையில், நிம்மதியான தூக்கம்கூட வந்திருக்க வேண்டும்!

ஆனால், என்னவோ உறுத்த, அவளால் சுகமாகப் படுத்திருக்கக் கூட முடியவில்லை!

எழுந்து சென்று மொட்டை மாடியில் நின்று, சிலுசிலுவென்ற காற்றை ரசித்தபடி அண்ணாந்து பார்த்தால், காற்றோடு சேர்ந்து வந்த மேகங்கள் நிர்மலமான அழகிய நீல வானத்தைக் கறுப்பாக்கிக் கொண்டிருந்தன!

சே! இதிலெல்லாம் ஒன்றுமில்லை! மேகம், மழை நல்லதுக்கே என்று

நகைக்கடையோ சொல்லிக் கொண்ட போதும், அவளது இறுக்கம் மறைய மறுத்தது!

அது ஏன் என்று குறிப்பிட்ட நாளன்று, தன்னைப் பற்றிய உண்மையை, அவள் சத்யாகரிடம் சொன்ன பிறகுதான் தெரிந்தது.

மறுநாள் முழுவதும், சசித்ரா சத்யாகரைப் பார்க்கவே இல்லை!

தொழிற்சாலையில் ஒரு தொழிலாளி கால் தடுமாறி, ஓடிக் கொண்டிருந்த இயந்திரத்தின் மீது விழுந்து அடிபட்டுவிட, அவனோடு மருத்துவ மனையிலேயே இருக்கும்படி ஆகிவிட்டது!

தொழிலாளிக்கு லேசான அடிதான் என்று செய்தி வந்துவிட்ட போதும், அவன் திரும்பி வரவே இல்லை! அதற்கு மறுநாளும், வேலை முடிந்து அவள் கிளம்பும்போதுதான் வந்தான்!

அவள் கூடவே ரயில் நிலையம் வரை நடந்தபடி, "முழு சிகிச்சையும் செய்து முடித்து, அதற்கு அத்தாட்சியையும் பெற்றுக் கொள்ளாமல், இடையிலே விட்டுவிட்டு வந்தால், யாராவது விஷமிகள் உள்ளே புகுந்து, குட்டை குழப்பி விட்டுவிடுவார்கள்! அதனால்தான், உன்னைப் பார்க்கும் ஆவலையும் அடக்கிக் கொண்டு, மருத்துவ மனையிலேயே உட்கார்ந்திருக்க வேண்டியதாயிற்று!" என்று அவளிடம் விவரம் சொன்னான் அவன்!

ரயில் நிலையத்தில் இரண்டு காஃபியை வாங்கி, ஒரு பெஞ்சில் இலகுவாக அமர்ந்து அருந்தியபடி, "இப்போது சொல்லு, உன் பயங்கர ரகசியத்தை! யார் அந்தப் பெரியவர்?" என்று வேடிக்கையாகக் கேட்டான் சத்யாகர்!

சொல்ல வேண்டும்தான்! ஆனால், இந்த இனிய சூழ்நிலை கெட்டுப் போய்விடுமோ என்று உள்ளூர அஞ்சியபடி, "அவர் என் தந்தை!" என்றாள் அவள் மெலிந்த குரலில்.

காஃபியை வாயருகே கொண்டு போன சத்யாகரின் கைகள் சில விநாடிகள் அசையாது நின்றன! பிறகு, "வாட்? யாரோ ஒரு நல்ல உறவினர் உன் மேல் வைத்திருக்கும் அன்பினால் உனக்கு விலையுயர்ந்த பொருட்களை வாங்கிக் கொடுக்கவில்லை, நீ சுயமாகவே பெரிய பணக்காரி என்கிறாயா?" என்று ஒரு மாதிரியாக வினவினான்.

அவன் குரலில் ஏதோ நெருட, "அப்படியில்லை, சத்யா! ஒரு பணக்காரருடைய மகள்! அவ்வளவே!" என்று, இலகுவாகவே முடிக்க முயன்றாள் அவள்!

"என்னைப் பொறுத்தவரை, இரண்டும் ஒன்றுதான்!" என்று இளக்கமற்ற குரலில் கூறும்போதே, ஏதோ தோன்றினாற்போல, "யார் அந்தப் பணக்காரர்? அவருக்குப் பெயர் ஒன்று இருக்கிறதுதானே?" அடக்கிய ஆத்திரத்துடன் கேட்டான்!

"சே...சேதுமாதவன்..." என்றாள் அவள் சின்னக் குரலில்!

"சேதுமாதவன் கார்...! ஓ, அவருடைய மகள் என்பதால்தான், விநாயகம்

சாரால் மறுக்க முடியவில்லை போல! ஆனால், என்னிடம் சேதுமாதவன் உறவில்லை என்றாயே! எவ்வளவு பெரிய பொய்!"

"இ...இல்லை, சத்யா. உறவு என்றுதான்..."

சற்று யோசித்துவிட்டு, "ஆமாம், ஆனால், நெருங்கிய உறவு இல்லை என்பது போலச் சொன்னாய். ஒரு வேளை, பெற்ற தந்தை அப்படி ஒன்றும் நெருங்கிய உறவாக உனக்குத் தெரியவில்லையோ?" என்று இளக்காரமாகக் கேட்டான் அவன்.

"சத்யா, ப்ளீஸ்! நான் பெரிய இடத்துப் பெண் என்று வெளியே தெரிய வேண்டாம் என்று நினைத்தேன். அவ்வளவுதான்... அது ஒன்றும் பெரிய தப்பில்லையே, சத்யா!"

"பெரிய பிழை, உண்மையை மறைத்து என்னை ஏமாற்றியதில் இருக்கிறது!"

"சத்யா?"

"ஆமாம்! அன்று உன்னிடம் கேட்டபோது, இந்த வேலை ரொம்பத் தேவைப்படுகிற மாதிரி நடித்தாய்!"

"நடிக்கவில்லை, சத்யா! அந்தச் சமயத்தில் வேலை எனக்குத் தேவையாகத்தான் இருந்தது! வேலை தேவை என்றேனே தவிர, வேலையால் வருகிற ஊதியம் எனக்குத் தேவைப்படுவதாக நான் சொல்லவே இல்லையே!"

"ஆனால், நான் பணத்தைத்தான் குறிப்பிட்டேன் என்று உனக்கு நன்றாகவே தெரியும்! உனக்கு முன்னதாக நான் தேர்ந்தெடுத்திருந்த சாவித்திரி அம்மாவுக்கு இந்த வேலை எவ்வளவு தேவைப்பட்டது, தெரியுமா? அவர்களது தேவை, நான் குறிப்பிட்ட பணம்! பொய் சொல்வது பிழை என்றால், ஒரு பொய்யை உண்மை போல் காட்டி ஏமாற்றுவது, பெரிய குற்றம்! அந்தக் குற்றத்தை, ஒரு முறையல்ல, பலமுறை தொடர்ந்து செய்து வந்திருக்கிறாய்!"

ஒரு நீதிபதியாய், அவளது குற்றங்களை அவன் அடுக்கிய விதம் அவளைக் கலங்க வைத்தது!

"சத்யா, விட்டுவிடுங்கள்! அதையெல்லாம் மறந்துவிடுங்கள்! நாம் இருவரும் ஒருவரை ஒருவர் நேசிக்கிறோம்! அது மட்டும்தான் உண்மை! அதை மட்டும் நினையுங்கள்!" என்றபோது, சசித்ராவின் குரல் மன்றாடியது!

ஆனால் அவன், "உண்மை நேசமா?" என்றான் ஏளனமாக! "உண்மை நேசத்தில் பொய் எங்கிருந்து வரும்? முழுக்க முழுக்க எனக்குப் பொய் முகம் காட்டிய உன் மனதில், உண்மை நேசம் எப்படி இருக்க முடியும்?"

"சத்யா?" என்று திகைத்தாள் அவள்! அவளது அன்பையே சந்தேகிக்கிறானா?

"ஆம்! உன் நேசக் கதையில் எனக்குக் கொஞ்சமும் நம்பிக்கை இல்லை! அதனால், நாம் பிரிந்து விடுவதுதான் நல்லது!"

நிதான் இருக்கும் இடத்தில், யாரோ [illegible]

குளிரில், அவளது நெஞ்சக் கூடு சில்லிட்டுப் போயிற்று!

பாதி மீதமிருந்த காஃபியைக் கொட்டிவிட்டு, சற்றுத் தொலைவில் இருந்த குப்பைத் தொட்டிக்குள், காலி பேப்பர் கப்பை, சத்யாகர் விட்டெறிந்தான்.

எழுந்து, "இதற்கு மேலும், நீ இதே வேலையில் நீடிப்பது, அவ்வளவு உசிதம் அல்ல. உன்னை, வேறு பிரிவுக்கு மாற்ற ஏற்பாடு செய்துகொள். வினாயகம் சார்தான், உன் அப்பா சொன்ன இடத்தில் நிற்கிறவர் ஆயிற்றே! நீ சொன்னாலே போதும்., செய்வார்!" என்றான்.

குத்தலைக் கவனியாதது போல, "அதை விடவும் வேலையையே விட்டுவிடுவது உசிதமாகத் தெரிகிறதே!" என்றாள் அவள் பதிலுக்கு.

அவன் அதிர்ந்து விறைப்புறுவது காணத் திருப்தியாகத்தான் இருந்தது!

ஆனால், என்ன பயன்?

அவன் தன் கருத்தை மாற்றிக் கொள்வதாக இல்லை என்பது, "அதுவும் சரிதான். இந்தச் சம்பளம்தான் உனக்கு அவசியம் இல்லையே!" என்ற அவனது பதில் குத்தில் தெரிந்தது!

வலியை மறைத்து, "மூன்று மாதங்கள் விடாமல் வேலை பார்ப்பதுதான், என் தந்தை விரும்பியது! அது, நேற்றோடு முடிந்து விட்டது, வேலையிலிருந்து நின்றாலும், நிறுத்தப் பட்டாலும், ஒரு மாதச் சம்பளம் என்பதுதானே, அலுவலக விதி? இந்த மாதத்துக்கு உரிய என் ஊதியத்தைக் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள். அந்தப் பணம் எனக்குத் தேவையில்லைதான்! நாளைக்கு ராஜினாமாக் கடிதத்தை அனுப்புகிறேன்!" என்றவள், தானும் எழுந்து, கையிலிருந்த காஃபிக் கப்பைக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டு, ரயில் பாலத்தில் படியேறலானாள்.

இப்படியே, மனதைக் கசக்கும் வலியையும் தூக்கி எறிய முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

செல்லும்போதே, அவசரப்பட்டு விட்டோமோ என்று மனம் துடிக்கத்தான் செய்தது!

ஆனால், அங்கே வேலை செய்து கொண்டு, அவனை பார்த்து ஏங்கிக் கொண்டு...

வேண்டாம்! இந்த வகையில், அவளது தன்மானமாவது மிஞ்சும்!

என்னதான் சாதாரணமாக வைத்துக் கொள்ள முயன்றும், அவளது முகத்தைப் பார்த்துவிட்டு, "என்னம்மா?" என்று பதறினான் காரோட்டி!

"தலைவலி." என்று சுருக்கமாகப் பதிலிறுத்துவிட்டுத்த தலையைப் பின்னே சீட்டில் சாய்த்துக் கண்ணை மூடிக் கொண்டாள் சுசித்ரா.

காரின் ஸ்ப்ரிங்குகளை மீறித் தாக்கி விடக்கூடாது என்று, மேடு பள்ளம் பார்த்துக் கவனமாகத்தான் காரோட்டி ஓட்டினார். ஆனால், மன வலிக்கு, அது எந்த வகையில் இதம்?



# அத்தியாயம் 16

சுசித்ரா வேலையிலிருந்து நின்றுவிட்டது பற்றி, வீட்டில் யாரும் கவலைப்படவில்லை!

சொல்லப் போனால், அவளுடைய தாய்க்கு சந்தோஷமே! மகள் வீட்டில் இருப்பாள் அல்லவா! அத்தோடு, நகை, துணி மணிகளில், சுசித்ராவின் அபிப்பிராயம் எப்போதும் ரொம்பவும் சரியாக இருக்கும்.

இது வாங்குகிற சீசனும் கூட.

ஏன், ஏன் என்று, சேதுமாதவன் மட்டும் சற்றே குடைந்தார்.

"நீங்கள் சொன்ன மூன்று மாதங்கள்தான் முடிந்துபோயிற்றே, அப்பா! அப்புறம் என்ன?" என்று எங்கோ பார்த்துச் சொன்னாள் மகள்.

"அதில்லைம்மா, உன் வேலையை நீ மிகவும் திறமையோடு பார்த்தாய் என்று எல்லோருக்கும் தெரியும். சத்யாகர்கூட, அது பற்றி ஒரு தரம் குறிப்பிட்டதாக, வினாயகம் சொன்னான். அப்படியிருக்க, உன்னை லேசில் விட்டிருக்க மாட்டார்களே என்று நினைத்தேன்!"

சத்யாகரின் கடைசி நாள் பேச்சு நினைவு வர, தன்னை அறியாமல், சுசித்ராவின் முகம் வாடியது. வேறு பிரிவுக்குப் போய்விடு என்று அவனே சொன்னானே!

தொண்டையில் அடைத்ததை விழுங்கிக் கொண்டு, "அப்படி ஒன்றும் இல்லையப்பா! தகுதியும், என்னை விடத் தேவையும் உள்ளவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள்!" என்று தந்தையிடம் சாதாரணம் போல, முயன்று பதில் சொன்னாள்.

"ம்ம்ம்... அப்படி யாரம்மா சொன்னது? உன் சத்யாகரா?"

"அவர் ஒன்றும் என் சத்யாகர் இல்லை!" என்றபோது, அவளது கவனத்தை மீறிக் குரல் தழுதழுத்துவிட்டது!

"அப்படியென்று யார் சொன்னது? உன் சத்யாகரா?" என்று, அதே கேள்வியை மீண்டும் கேட்டார் சேதுமாதவன்!

"அப்பா!" என்று திகைத்து நிமிர்ந்தவளுக்குத் தந்தையின் முகத்தைப் பார்த்ததும், மளமளவென்று கண்ணீர் பொங்கிவிட்டது!

"ஷ்ஷ்... என்னடா?" என்று மகளைத் தோளில் சாய்த்துத் தட்டிக் கொடுத்தார் பெற்றவர்.

சற்று நேரம் மௌனமாகக் கண்ணீர் வடித்தவள் எழுந்து சென்று முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து அமர்ந்தாள்! "சாரிப்பா!" என்றாள் மெதுவாக.

சுருக்கமாக அவள் சொன்னதைக் கேட்டுவிட்டு, "சத்யாகரிடம் நான் ஏதாவது சொல்லிப் பார்க்கவா?" என்று கேட்டார்.

மெல்லத் தலையசைத்து, "பிரச்சினையே, நான் உங்கள் மகள் என்பதும்,

அதை முதலிலேயே அவரிடம் சொல்லாததும்தான்! இதில்... சத்யா பிடிவாதக்காரர் அப்பா! வக்காலத்து, சிபாரிசு எல்லாம், இன்னும் அவருக்கு வெறுப்பேற்றுவதாகத்தான் முடியும்! விட்டுவிடுவோம்! உலகில் எல்லோருக்குமா, காதல் நிறைவேறுகிறது? அப்பா, முன்பு இலினாய்ஸ் சர்வகலாசாலையில் மேல் படிப்புக்காக விண்ணப்பம் அனுப்பியிருந்தேனே, நினைவிருக்கிறதா? இடம் தருவதாகக் கடிதம் வந்திருக்கிறது! போய்ப் படித்து, வேலை பார்த்து, அதிலேயே பெரிய ஆளாகப் போகிறேன் அப்பா! இதை நீங்கள் யாரும் தடுக்கக் கூடாது!" என்றாள் மகள், சற்றுப் பிடிவாதமான குரலில்!

உன்னிஷ்டம் என்பது போலத் தலையாட்டினார் பெற்றவர்!

அந்த முறை சேதுமாதவனைச் சந்திப்பதற்காக, வினாயகத்துடன் செல்லும்போது, சத்யாகருக்கு உள்ளூரக் குறுகுறுப்புதான்.

ஆனால், சுசித்ரா தந்தையிடம் எதையும் சொல்லியிருக்க மாட்டாள் என்றும் அவனுக்குத் தோன்றியது!

சொல்லியிருந்தால், அது சேதுமாதவன் மூலமாக அவனுடைய சேர்மனுக்கு வந்து, ஏதோ ஒரு வகையில், அவன் அதை உணரும்படியாகவும் நேர்ந்திருக்கும்!

அவன் அறிந்தவரையில், சுசித்ராவுக்கும், அவனைப் போலவே, தன்மானம் அதிகம்! எனக்கு, அவன் மேல் காதல்., எப்படியாவது முடித்து வையுங்கள் என்று தந்தையிடம் போய் ஒருபோதும் நிற்க மாட்டாள்!

அதனால், சத்யாகர் தயக்கமின்றியே சேதுமாதவனைச் சந்திக்கலாம்!

அத்தோடு, சேதுமாதவனைச் சந்திப்பதில், அவனுக்கே ஆர்வம் இருந்தது! விஷயமறிந்த, அமைதியான, அதே சமயம் லேசான நகைச்சுவை கலந்த பேச்சு, விறைப்பின்றியே நிமிர்ந்த தோற்றம், இலகுவான சிரிப்பு, தன் செல்வ நிலையைக் காட்டி அலட்டிக் கொள்ளாமல், சகஜமாகப் பழகுவது, எல்லாமே, ஏற்கனவே அவனைக் கவர்ந்திருந்தன.

சுசித்ராவுடைய தந்தை என்பதற்காக, அது மாறுவானேன்?

வினாயகம் சாரும், சேதுமாதவனும் உரையாடும் விதம் கூட, அவனுக்கு பிடித்தமே!

எனவே, சிறு நெருடல் இருந்தபோதும், அவன் ஆர்வத்துடனேயே சேர்மனோடு சென்றான்.

ஆனால், வழக்கத்துக்கு விரோதமாக, சேதுமாதவன் சற்றுத் தாமதமாக வந்தார்.

காத்திருக்கும் நேரத்தில், சுசித்ராவின் நடை, பாவனை எல்லாம் தந்தையிடம் இருந்து வந்திருக்குமோ என்று அவனுக்கு யோசனை ஓடியது! எப்படியும், அந்த அமைதியான கம்பீரம், அவரதுதான்! பெண்மையும், மென்மையும் தாயிடமிருந்து கிடைத்திருக்கும்!

மனதிற்குள் படமாக ஓடத்தொடங்கிய காட்சிகளை நிறுத்தி, நிகழ்வுக்கு மனதைக் கொண்டுவர, சத்யாகர் சற்று சிரமப்பட வேண்டியிருந்தது!

இயல்புக்குச் சற்று வேகமாக நடந்து வந்த சேதுமாதவன், தாமதத்துக்காகக் காத்திருந்த இருவரிடமுமே மன்னிப்புக் கேட்டார்!

"வீட்டில் சம்பந்தம் பேச வந்திருந்தார்களா, பேச்சில் கொஞ்சம் அதிக நேரம் ஆகிவிட்டது! சாரி வினு, சாரி சத்யாகர்!" என்று அவனது அதிர்ச்சியைக் கவனியாத பாவனையுடன் பேசிக்கொண்டே போனார் சேதுமாதவன்.

"உட்காருவோமா? என்னதான் சுசிக்கு இப்போது திருமணம் வேண்டாம் என்று நாங்கள் இருந்தாலும், பெண் கேட்டு வருகிறவர்களிடம் முகத்தில் அடித்தாற் போலப் பேச முடியுமா? உறவுக்காரர்கள் வேறு! நல்லவிதமாகப் பேசி, அனுப்பிவிட்டு, இப்போதுதான் வர முடிந்தது!" என்று நண்பரிடம் விவரம் சொல்லி, சத்யாகரின் இறுக்கம் தளர்வதையும், ஓரக்கண்ணால் கவனித்தார்.

இவ்வளவு இருந்தும், இது என்ன பிடிவாதம்?

ஆனால், அவர் பேச வந்த விஷயம் அதுவல்ல!

மூவருமாகச் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்துவிட்டுக் காஃபி அருந்துகிற நிலை வந்ததும், வினாயகம் எழுந்தார். "நான் இன்னொர் இடத்துக்குப் போக வேண்டும், சேது! இல்லை சத்யா. நீங்கள் என்னோடு வரவேண்டாம். இருவருமாகப் பேசிக் கொண்டிருங்கள். நான் கிளம்புகிறேன்!" என்று கூறிச் சென்றார் வினாயகம்.

இருவரின் அலுவலர்களைப் பற்றிதான் அப்போது பேசிக் கொண்டிருந்தனர்!

அதையே தொடர்ந்து, "வினாயக் அவ்வப்போது கொஞ்சம் ஆட்களை மாற்றுவான்! ஆனால் அதுவே வசதியாக, அவனிடம், உங்களைப் போல இளைய தலைமுறை ஆட்கள் நிறைய இருக்கிறார்கள்! ஆனால், என்னிடம் இருக்கிறவர்கள் எல்லோரும் பழைய ஆட்கள்! நிறுவனத்தோடு சேர்ந்து வளர்ந்தவர்கள்!" என்று நிறுத்தினார் அவர்.

"இருவரின் வழிமுறைகளும் சரிதான். உங்களுக்குப் பழகிய நம்பிக்கையான ஆட்கள் இருப்பார்கள்! சேர்மன் சாருக்கு, காலத்துக்கேற்ற மாற்றம் செய்கிற அலுவலர்கள் இருப்பார்கள்! ஆனால், நம்பிக்கைக்கு உரிய ஆட்கள் குறைவாகத்தான் இருப்பார்கள்!" என்றான் சத்யாகர்.

"ரொம்ப சரி!" என்றார் பெரியவர். "ஆனால், எனக்கு இன்னொரு பிரச்சினை! என்னிடம் தொடக்க காலத்திலிருந்து பணி புரியும் பலர், ஓய்வு பெறும் நிலையில் இருக்கிறார்கள்! நிறுவனத்து ஜிஎம் பதவிக்கே அடுத்த மாதத்துக்குள் பொருத்தமானவரைத் தேடி நியமித்தாக வேண்டும்! அதற்காகத்தான் இன்று உங்களைச் சந்திக்க விரும்பினேன்!" என்றார் சேதுமாதவன்.

சத்யாகர் ஆச்சரியமாக நோக்க, "எஸ்எம் நிறுவனத்தின் ஜிஎம் பதவியை நீங்கள் ஏற்றுக் கொள்ள முடியுமா?" என்று கேட்டார் அவர்!

சத்யாகரின் வியப்பு திகைப்பாயிற்று!

"சார், நான் உங்கள் நண்பருடைய நிறுவனத்தில் பணி செய்துகொண்டு இருப்பவன்!" என்று நினைவூட்டினான் சத்யாகர்!

"அதனால்தான், உங்கள் திறமைகள் பற்றி, முழு விவரம் எனக்குத் தெரிய வந்தது!"

லேசாகத் தலையசைத்து, "இது சரியில்லை, சார்! அத்தோடு, வினாயகம் சாரிடம் வேலை செய்ததில், தொழில் முறையில் நானும் வளர்ந்திருக்கிறேன்! என்னை வளர்த்தவரை விட்டு வருவதும் சரியாகாது!" என்றான் சத்யாகர்!

"நான் நினைத்தது போலவே, உண்மையோடு பேசுகிறீர்கள்!" என்று பாராட்டினார் சேதுமாதவன். "ஆனால், ஒன்றை யோசித்தீர்களா? என்னைச் சந்திப்பதற்கு, வினாயகமே உங்களை ஏன் கூட்டி வந்தான்? இப்போது கூட..."

விநாடிக்குள், முகம் ஜிவ்வென்று, கன்றிச் சிவந்து போயிற்று சத்யாகருக்கு! "சா...ரி சார்! அந்த... அங்கே நான் தேவையில்லை என்று நான் நினைத்தது இல்லை" என்று தடுமாறியவன் சுதாரித்து, "அவர் என்னை வெளியேற்ற நினைப்பது எனக்குத் தெரியாது." என்று சற்று நிதானமாகச் சொன்னான்.

"வினுவைத் தப்பாக எண்ண வேண்டாம், சத்யாகர்! உண்மையில், உங்களை வெளியே விடக் கூடாது என்பதுதான், அவனது விருப்பம்!" என்றார் சேதுமாதவன்.

"புரியவில்லை!" என்றான் அவன் சுருக்கமாக.

"வினுவிடம் நீங்கள் வளர்ந்தது பற்றிச் சொன்னீகளே! இன்றைக்கு நீங்கள் வினுவை விட்டு வெளியேறினாலும், உங்களுக்கு எங்கேயும் வேலை கிடைக்கும்! இப்போது வாங்குவதை விட அதிக ஊதியத்தில் கூடக் கிடைக்கலாம்! ஆனால், அது உங்கள் சேர்மனுக்கு விருப்பம் அல்ல. அதே சமயம், ஒரே உறையில் இரண்டு கத்திகளை வைக்க முடியாது அல்லவா? வினாயகத்துடைய பிள்ளை ரமேஷ், நிர்வாகப் படிப்பை முடித்துக் கொண்டு, அடுத்த மாதம் வந்துவிடுவான். இப்போதே, அங்கிருந்து கொண்டே, அவனது ஐடியாக்களைப் புகுத்துகிறவன் அவன்! விஷயம் புரிகிறதில்லையா?"

"புரிகிறது! என்னால், வினாயகம் சாருக்குப் பிரச்சினை இராது! அவர் விரும்பும்போது வெளியேறி விடுவேன்!" என்றான் சத்யாகர்!

"அது போதாதே!" என்றவர், அவன் யோசனையோடு நோக்கவும், முறுவலித்து, "முதலில், வினுவும் நானும் எப்படித் தொழிலைப் பெருக்கினோம் என்று தெரிந்து கொள்ளுங்கள். இருவருமே ஆட்டோமொபைல் உதிரிப் பாகங்களையே தயாரித்தாலும், ஒருவர் தயாரிப்பதை, அடுத்தவர் செய்ய மாட்டோம்... ஆனால், ஒரு வாகனத்துக்கு எல்லாமே தேவைப் படுகிறவைதானே! ஒன்றை வாங்க வருகிறவரை, அடுத்தவரிடம் நாங்களே அனுப்பி வைப்போம்! இந்த வகையில், இருவருமே வளர்ந்தோம்! எங்களுக்கு அடுத்த தலைமுறையிலும் இதுவே தொடர்ந்தால், இன்னும் எவ்வளவோ வளரலாம்! ரமேஷ் உங்களோடு ஒத்துப் போகிறவன்தான். அவன், எங்கேயோ இருந்து கொண்டு சொன்னதை, இங்கே நீங்கள் நிறைவேற்றி வைத்திருக்கிறீர்கள்! ஆனால், அவன் திரும்பி வரும்போது, அவனே பொறுப்பேற்றுச் செய்ய முடியும். சம பலத்துடன், நீங்கள் இங்கே இருந்தால், இரு நிறுவனங்களும், தொடர்ந்து பெருமளவில் வளர முடியும்! ஜிஎம் என்பது, நிறுவனத்தில் எனக்கு அடுத்த பதவி என்பது, உங்களுக்குத் தெரியாதது இல்லை! அதற்குரிய வருமானம், வசதிகள், நிறுவனத்தில் பங்குகள் எல்லாமே கிடைக்கும்! ஏற்றுக் கொண்டீர்கள் என்றால், எங்கள் இருவருக்குமே நிம்மதியாக இருக்கும்!" என்று நீளமாகச் சொல்லி முடித்தார்!

அவர் பேசப் பேசக் குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டிருந்தவனுக்கு, தனக்கு, இது ஒரு நல்ல வாய்ப்பு என்பது நன்றாகவே புரிந்தது!

ஆனால் கூடவே, ஒத்துக் கொள்ள முடியாததாக, ஒரு சந்தேகமும் எழுந்தது!

எனவே சேதுமாதவனை நேராக நோக்கி, "இது ஓர் அருமையான வாய்ப்புதான் சார்! ஆனால், எனக்கு ஒரு சந்தேகம். அதை மட்டும் தெளிவுபடுத்தி விட்டீர்கள் என்றால்... " என்றான் சத்யாகர்.

"என்ன அது?"

"இந்தப் பதவிக்கு என்னைத் தேர்ந்தெடுப்பதற்கு, உங்கள் வீட்டில்... வீட்டாரின் சிபாரிசு காரணமா?"

விளங்காமல் பார்த்து, "வீட்டு... வீட்டில் யார்?" என்று கேட்டார் அவர்!

அவன் உதட்டைக் கடித்துக் கொண்டு பேசாதிருக்கவும், அவரே தொடர்ந்து, "நீங்கள் சுசித்ராவைக் குறிப்பிடுகிறீர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் செயல்பாட்டைப் பற்றி அவள் அடிக்கடி சொன்னதை வைத்து, இந்த வேலை விஷயமாக உங்களிடம் எனக்கு ஓர் ஆர்வம் உண்டாயிற்று என்பது உண்மையே! ஆனால், இவ்வளவு பெரிய விஷயத்தில் சிபாரிசு செய்யும் அளவுக்கு, அவளுக்கு என்ன தகுதி இருக்கிறது, சொல்லுங்கள்? என்னுடைய மகளாக இருந்தாலும், இவ்வளவு பெரிய விஷயத்தில், நான் அடுத்தவர் தலையீட்டை எப்படி அனுமதிப்பேன், சத்யாகர்? முதல் தடவையாக, உங்கள் தகுதிக்குச் சற்றுக் குறைந்து பேசியிருக்கிறீர்கள்!" என்றார் சேதுமாதவன்.

சற்று முகம் கன்றி, "சாரி சார். எதிர்பாராமல் நீங்கள் இப்படி கேட்கவும் சிறு சந்தேகம் தோன்றி... நீங்களே சொன்னது போலத் தொழிற்சாலை விவரம் அறிந்து அவள் சிலது சாதித்ததால், ஒருவேளை அப்படி இருக்குமோ என்று தோன்றிவிட்டது" என்றான் அவன். தலையசைத்து, "தொழிற்சாலை பற்றி நான் பேசுவதை, சுசி சற்றுக் காது கொடுத்துக் கேட்பாள். அவ்வளவே! மற்றபடி, என் குடும்பத்தில் யாரும், என் மனைவிகூட, என் தொழில் தொடர்பான விஷயங்களில் தலையிடவே மாட்டார்கள்! அப்படித் தலையிட்டாலும், நான் அதற்கு மதிப்புக் கொடுக்கவும் மாட்டேன்!" என்றார் தெளிவாக! "உங்களை அழைப்பது, முழுக்க முழுக்க என் சொந்த முடிவே!"

மெல்ல முறுவலித்து, "என்னை நம்பி நீங்கள் ஒப்படைக்கும் இந்தப் பணியை நான் குறை கூற முடியாத சிறப்புடன் நிறைவேற்றுவேன், சார்!" என்று உறுதியான குரலில் கூறினான் சத்யாகர்!

"ஆனால், வினாயகம் சாருடைய மகன் திரும்பி வந்து பொறுப்பேற்கும் வரை, நான் அந்தப் பொறுப்பை விட முடியாது!" என்று அவன் தொடர்ந்து சொன்னதும் அவருக்கு மகிழ்ச்சியையே அளித்தது!

இருவருக்கும் இடையே நிகழ்ந்த பல சந்திப்புகளின் பின்னர், சுமார் ஒரு மாதம் கழித்து, சத்யாகரோடு பேசிக் கொண்டிருந்த சேதுமாதவன், அவனைத் தன் வீட்டுக்கு அழைத்தார்.

சற்றே அதிர்ந்து, "அது... அது அவ்வளவாகச் சரியாக இராது என்று நினைக்கிறேன், சார்!" என்று மறுத்தான் சத்யாகர்.

புரியாது நோக்கி, "ஏன் சத்யாகர்? 'எஸ்எம்'முடைய 'ஜிஎம்' என்கிற நிலையில்

நீங்கள் அவ்வப்போது என் குடும்பத்தாரைச் சந்திக்கிற நிலை ஏற்படும்தானே? இப்போது இது எங்கள் திருமண நாளுக்காக வீட்டில் வைக்கப்படும் ஒரு சின்ன விருந்து! இதற்கு வந்தால், இயல்பாகப் போய்விடும் அல்லவா? அத்தோடு..." என்று நிறுத்தியவரின் முகம் லேசாக வாடியது.

"என்ன சார்?" அக்கறையோடு விசாரித்தான் சத்யாகர்.

"என் மகள், உங்கள் செயலாளராக இருந்தாளே சுசித்ரா, அவளை இப்போதைக்குப் பல... குறைந்தது ஒரு நாலைந்து ஆண்டுப் பிரிவுக்கு முன், கடைசியாகச் சந்திக்க இதுதான் வாய்ப்பு!" என்றார் சேதுமாதவன் வருத்தத்துடன்.

நன்றாகவே அதிர்ந்தான் அவன். "ஏன்சார்? அத்தனை ஆண்டுகள் என்ன... ஏன் போக வேண்டும்?" என்று தடுமாற்றத்துடன் கேட்டான் அவன்.

"இலினாய்சில் படிக்கப் போகிறாளாம். அப்புறம் அங்கேயே வேலை பார்க்கப் போகிறாளாம். பெண்ணைப் பிரிந்து எப்படி இருப்பேன் என்று, என் மனைவி அழுதுகூடப் பார்த்துவிட்டாள். ஆனால், சசித்ரா பிடிவாதக்காரி! அவள் ஒன்று நினைத்துவிட்டால், யாராலும் மாற்ற முடியாது! அவள் மனம் இப்போது படிப்பில் நிலைத்துவிட்டது போலும்!" என்று பெருமூச்சு விட்டார் தந்தை!

இந்தப் பயணத்தின் காரணம் படிப்பு மட்டும்தானா?

"படிப்பை இங்கிருந்தே படிக்கலாமே!" என்றது அவன் வாய் தானாக.

அவனை ஒரு தரம் பார்த்துவிட்டு, "செய்யலாம். ஆனால், பணக்காரப் பெண் என்று பலரும் வழியத் தொடங்கி, செல்லம் கொடுத்து, அதுவே பழகிப் போகிறது! வேலை பார்க்கும்போது கூட, யார் என்று காட்டிக் கொள்ளாமல், மூன்று மாதம் வேலை செய்து காட்டு., அப்போதுதான் உலகம் தெரியும் என்று சொல்லிச் சேர்த்தேனா? இப்போது, அதே போலப் படித்து, வேலையும் பார்க்கப் போவதாகச் சொல்லுகிறாள்! என்னவோ அவளை உறுத்துகிறது என்று நினைக்கிறேன்! முழுக்க முழுக்க வேறுபட்ட சூழ்நிலை அதற்கு மருந்து என்று நினைக்கிறாளோ, என்னவோ? ஆனால், குறைந்த பட்சம் ஐந்து ஆண்டுகளாம்!" என்று, பெற்ற தந்தையாக, மீண்டும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் அவர்!

"எத்தனை மணிக்கு வரவேண்டும்?" என்று கேட்டான் சின்னவன்!

சத்யாகர் அந்த விருந்துக்கு எப்படி வந்தான் என்று சுசித்ராவுக்குத் தெரியாது!

அதுவரை... இள மஞ்சள் நிறத்தில் பச்சை வண்ணக் கற்கள் ஒட்டிய சல்வார் அணிந்து, பொருத்தமாய் மரகதமும் வைரமுமாய் நகையணிந்து, கலகலப்பாகப் பேசி அவள் நல்ல விதமாகத்தான் சமாளித்துக் கொண்டிருந்தாள்!

ஆனால், எதிர்பாராமல் சத்யாகரைப் பார்த்ததும், அவளால் ஒன்றுமே முடியவில்லை!

தொண்டை அடைத்து, நாசி விடைத்துக் கண்ணோரம் உறுத்தும்போது, யாரிடம் என்ன பேச முடியும்?

பார்வை அகலாமல் சத்யாகர் அவளைப் பின் தொடர்வதைக் கவனித்த சேதுமாதவன், அருகில் இருந்தவரோடு உற்சாகமாகப் பேசலானார்!

மனம் துடித்தது போல ஒரு மூச்சு அழுவது, இந்த நேரத்தில் முடியாது! அழுதுவிட்டு என்னதான் ஒப்பனை செய்தாலும், வெளியே தெரியாமல் போகாது!

பெரிய மூச்சுகள் எடுத்துத் தன்னைச் சமனப்படுத்திக் கொள்ள அவள் முயன்று கொண்டிருந்தபோது, கதவு திறந்து மூடும் ஒலியில் திரும்பிப் பார்த்தால், அங்கே சத்யாகர் நின்றான்.

சற்று நேரம் இருவருக்குமே பேச்சு ஓடவில்லை.

பிறகு, "மெலிந்துவிட்டாயே!" என்றான் அவன் வருத்தமான குரலில்!

"நீங்களும்தான்!" என்றாள் அவளும்.

"ஐந்து ஆண்டுகள் என்னை விட்டுப் போவாயா?" என்று குரலில் வலியுடன் கேட்டான் அவன்.

"வேறு என்ன செய்வது?" என்று தொண்டையடைக்கக் கேட்டாள் அவள்.

விரிந்த கைகளுடன் சத்யாகர் நெருங்க, அந்தக் கைகளுக்குள் சுசித்ரா விருப்பமாகவே சிறைப்பட, "இதை!" என்றான் அவன்.

சற்று நேரம், அவனது அணைப்பில் ஈடுபட்டு நின்றபோதும், அவளுள் எத்தனையோ கேள்விகள்!

மனதில் இவ்வளவு அன்பிருந்தால், இத்தனை நாள் ஏன் எட்டிக்கூடப் பார்க்கவில்லை? இன்று, இங்கே எப்படி வந்தான்? முதலில் அவளது ஐந்து ஆண்டுகள் பற்றி அவனுக்கு எப்படித் தெரியும்?

விலகி நின்று, தன் கேள்விகளை அவள் கேட்க முயன்றபோது, அவள் கையைப் பிடித்துத் தன்புறம் இழுத்தான் அவன்.

"பிரிந்திருந்தது போதும், சுசி! எதுவானாலும் இங்கிருந்தே கேள்!" என்று கையணைப்பில் அவளை வைத்தபடியே, அருகிருந்த திவானில் அமர்ந்தான் அவன்.

அவளுக்கும் அதில் மறுப்பு இல்லாததால், அவன் மார்பில் சாய்ந்தபடியே கேட்டாள்.

சொல்வதில் அவனுக்கும் தடையிருக்கவில்லை!

"யோசி, கண்மணி. நீயும்தானே, என்னுடன் தொடர்பு கொள்ளவில்லை?... பொறு! நீ எப்படி, நான் வெறுத்து விட்டதாக நினைத்திருக்கக் கூடுமோ, அதே போல நானும் கருதலாமில்லையா? பணக்காரப் பெண்! பொழுதுபோக்குக்காக வேலை செய்கிறேன் என்று விளையாடிப் பார்த்திருக்கிறாள்.., கண்டுகொண்டதால் போய்விட்டாள் என்று, நான் நினைத்ததைத் தப்பு சொல்ல முடியுமா? நீ வேதனையில் நாட்டை விட்டே போவது, இப்போதுதானே தெரியும். தெரிந்ததும் வந்தேன்!"

"ஓ! ஆனால் வெளிநாடு போவது எப்படித் தெரியும்?"

"உன் அப்பா சொன்னார்!"

"என்னது?!"

"கடந்த ஒரு மாதத்தில், உன் தந்தையும் நானும் பத்துத் தடவைகளுக்கு மேல் சந்தித்துப் பேசியிருக்கிறோம்!"

"என்னது? ஏ...ஏன்?"

"இன்னும் பத்து நாட்களில், நான் 'எஸ்எம் இண்டஸ்ட்ரீ'சின் ஜிஎம் ஆ

போகிறேனே! பேசாமல் முடியுமா?"

விழிகள் சாசராய் விரிய, "என்னது?!" என்றாள் அவள் மூன்றாவது முறையாக!

அவளது பிரமிப்பைப் பார்த்துப் புன்னகை புரிந்து, "சேதுமாதவன் சார் இது பற்றி உன்னிடம் மூச்சுக்கூட விடவில்லை போல!" என்றான் சத்யாகர்.

யோசித்துவிட்டு, "ரொம்ப முன்னால் ஒரு தரம், அவரைப் பற்றி நீங்கள் மதிப்பும் மரியாதையுமாகப் பேசும்போது, உண்மை சொல்லாமல் இருப்பது கஷ்டமாக இருக்கிறது., ஏன் சந்திக்கிறீர்கள் என்று அப்பாவிடம் கேட்டேன்... அப்போது, தொழிற்சாலைக்கு நீங்கள் கிடைத்தால்... என்று அந்த மாதிரி ஏதோ சொன்னார் என்று நினைக்கிறேன்! அப்போதே அப்பாவுக்கு இந்த எண்ணமா?!" என்று ஆச்சரியப்பட்டாள் சுசித்ரா!

ஆனால், அவன் கண்டுபிடித்தது வேறு... "அப்போதே, என்னிடம் உண்மையை மறைக்க கஷ்டப்பட்டிருக்கிறாயே! உன்னைப் போய், என்னவெல்லாம் சொல்லிவிட்டேன்!" என்று வருத்தப்பட்டான்!

"ஏமாற்றினாய், ஏமாற்றினாய் என்று அதையே நினைத்து ஆத்திரப்பட்டேன். ஆனால், செய்யாதிருக்க வேறு காரணம் இருக்கக் கூடும் என்று எண்ணிப் பார்க்கவே தோன்றவில்லை. இவ்வளவு பெரிய பணக்காரி, இப்படி உழைப்பானேன் என்று கூட யோசிக்கவில்லை. நீ ஒருதரம் கூட வேலைக்காக முகம் சுளிக்கவில்லை! உன்னைப் போய், பேச்சாலும், செயலாலும், பாரா முகத்தாலும் வாட்டி வதைத்து விட்டேனே!" என்று மீண்டும் மீண்டும் வருந்தினான்.

சுளித்திருந்த அவனது புருவங்களை நீவி விட்டாள் சுசித்ரா. "இன்னும் ஏன் வருத்தம்? அதுதான் எல்லாம் சரியாகிவிட்டதே!" என்றவள், நிமிர்ந்து, அவன் கன்னத்தில் லேசாக முத்தமிட்டாள்!

முத்தமிட்ட கன்னத்தைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "ஆஹா! ஒரு கன்னத்தில் என்னமோ கிடைத்தால், அடுத்த கன்னத்தைக் காட்ட வேண்டும் என்று, எதிலோ படித்தேன், சுசி! நல்லதைச் சொன்னால் பின்பற்ற வேண்டுமில்லையா? இம்." என்று சாதுவாய் மறுகன்னத்தைக் காட்டினான் சத்யாகர்.

"ஓ! செய்யலாமே! ஒரு கன்னத்தில் என்ன கிடைத்தால் என்பது கூட, எனக்கு நன்றாக நினைவிருக்கிறது! தரவா?" என்று கையை ஓங்கிக் காட்டியவளுக்கு, வார்த்தைக்கும் செயலுக்கும் நேர் மாறாகச் சிரிப்பு பீறிட்டு வந்தது!

**முற்றும்**